# ராஜகுமாரி விபா

(சரித்திர சம்பந்தமான நவீனம்)

மகாகவி ரவீந்திரநாத் டாகுர்

மொழிபெயர்ப்பு:

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

அல்லயன்ஸ் கம்பெனி

தபால்-பெட்டி நெ. 617.

மயிலாப்பூர் :: சென்னை-4

உரிமை பதிவு இரண்டாம் பதிப்பு ஏப்ரல்—1955

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 569
நன்கொடை எண்: 569

ரூ. 3-0-0

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், சென்னை-4

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1 | இளவரசனின் துயரம் | 1 |
| 2 | சதியாலோசனை | 11 |
| 3 | தேடுதல் | 18 |
| 4 | மனம் உருக்கும் கீதம் | 21 |
| 5 | எதிர்பாராததோற்றம் | 30 |
| 6 | கிழவனும் குமரியும் | 38 |
| 7 | விகடனும் வேந்தனும் | 46 |
| 8 | வரவேற்பு | 54 |
| 9 | விளையாட்டு வினையானது | 59 |
| 10 | கவலையும் உறுதியும் | 66 |
| 11 | தலை தப்பியது | 73 |
| 12 | தண்டனை | 82 |
| 13 | விடை பெறுதல் | 89 |
| 14 | அரண்மனை ரகசியம் | 93 |
| 15 | தயைக்கு ஏற்ற தண்டனை | 97 |
| 16 | சுரமாவின் உறுதி | 103 |
| 17 | சுரமாவின் பிரிவு | 107 |
| 18 | துயரம் | 111 |
| 19 | ரகசியத் தூது | 116 |
| 20 | உதயன் நிலை | 123 |
| 21 | சூழ்ச்சி | 126 |

| | | |
|---|---|---|
| 22 | சதியின் விபரீத பலன் | 133 |
| 23 | எதிர்பாராதது | 136 |
| 24 | மானபங்கம் | 141 |
| 25 | சிறையில் | 145 |
| 26 | கல்லும் கரையுமோ? | 151 |
| 27 | கிழவர் கேட்ட செய்தி | 155 |
| 28 | கிழவர் சொன்ன புத்தி | 159 |
| 29 | மீட்சி | 164 |
| 30 | பாட்டனும் பேரனும் | 170 |
| 31 | அரசனின் கட்டளை | 174 |
| 32 | தாயும் மகளும் | 181 |
| 33 | கட்டளை நிறைவேறியது | 184 |
| 34 | உதயனின் சபதம் | 195 |
| 35 | பிரயாணம் | 199 |
| 36 | பிச்சைக்காரியா? இளவரசியா? | 202 |




மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தமிழ்

# ராஜகுமாரி விபா

## 1

## இளவரசனின் துயரம்

இரவு வெகு நேரமாகிவிட்டது. கோடைக் காலம். காற்று வீசவில்லை. மரத்தின் இலைகளிடையே சலசலப்புக் கூட இல்லை. யசோஹரின் இளவரசன் உதயாதித்தியன் தன்னுடைய பள்ளி அறையின் சாளரத்தில் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் அவனுடைய மனைவி சுரமாவும் இருந்தாள்.

சுரமா, உதயாதித்தியனுக்கு ஆறுதல் சொன்னாள்: "ஆருயிரே! பொறுமையுடன் இருங்கள். சுகம் அநுபவிக்கும் நாளும் என்றைக்காவது வரும்."

"எனக்கு வேறு எதுவும் தேவையில்லை. நான் இளவரசனாக அரண்மனையில் பிறக்காமல் அற்பமான ஒரு குடியின் மகனாகத் தோன்றியிருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! அரசருக்கு மூத்த மகனாகப் பிறந்து, அரியணையில் வீற்று, அவருடைய பொருள், மானம், புகழ், கீர்த்தி அனைத்துக்கும் வாரிசாக ஏன் இருக்கவேண்டும்? என்ன தவம் செய்தால் விஷயங்கள் யாவும் நேராகும்?"

சுரமா இளவரசனுடைய வலது கையைத் தன் கரத்துள் அழுத்திக்கொண்டாள். வேதனை தாளாது அவள் உள்ளம் பெருமூச்செறிந்தது. அவள் தன் புருஷனுடைய வேண்டுகோளைத் தணிக்க உயிரையும் விடத் துணிந்தவள்தான். ஆனால் இந்த ஆசையைத் தீர்ப்பது அவளால் முடியாதே!

"சுரமா! அரசனுடைய வீட்டில் பிறந்ததால்தான் என்னால் சுகம் அநுபவிக்க முடியவில்லை. அப்பாவுக்கு மகன் தேவையில்லை; வாரிசுதாரன்தான் வேண்டும். அப்பா சிறு பிராயமுதலே என்னை மிகவும் சோதித்துப் பார்க்கிறார். அவர் சம்பாதித்த பெருமையையும் புகழையும் என்னால் சரியாக வைத்துக்கொள்ள முடியுமா, குலத்தை விளங்கவைக்க என்னால் ஆகுமா, அரசின் சுமையைத் தாங்க எனக்குத் திறமை உண்டா என்றெல்லாம் அவர் ஆராய்கிறார். என்னுடைய காரியங்கள், நடத்தைகளை எல்லாம் அவர் சோதனைக் கண்களாலன்றி, அன்புடன் கவனிக்கவில்லை. உறவினர், மந்திரிகள், சபையோர்கள் யாவரும் என் காரியங்களைத் தூண்டித் துருவிப் பார்த்து, என் எதிர்காலத்தைக் கணித்து வருகிறார்கள். அவர்கள் முடிவு, 'என்னால் அரசை நிலை நிறுத்தமுடியாது; நான் முட்டாள்' என்பதுதான். அவர்கள் எல்லோரும் என்னை அவமதிக்கிறார்கள். அப்பாவும் என்னை வெறுக்கிறார். என்மேல் அவருக்கு நம்பிக்கையே இல்லை. என்னைப் பற்றி விசாரிப்பதுகூட இல்லை."

சுரமாவுக்கு ரோஷமும் துயரமும் கலந்துவந்தன. கண்களில் நீர் துளிக்க அவள், "அதெப்படி நடக்கும்? உங்களை முட்டாள் என்று சொல்லும் அவர்களுக்குத்தான் அறிவில்லை" என்றாள்.

உதயாதித்தியனுக்குச் சிரிப்பு வந்தது. ரோஷத்தால் சிவந்த அவள் முகத்தை அவன் தன் கையால் தூக்கினான். இல்லை, சுரமா! உண்மையாகத்தான் சொல்லுகிறேன்:

எனக்கு அரசுரிமை வகிக்கத் திறமை இல்லை. அதற்கும் பல சோதனைகள் நடந்தாகிவிட்டது. எனக்குப் பதினறு வயதிருக்கும்பொழுது, வேலை கற்றுக்கொள்ள மகாராஜா ஹோஸேன்காலி பர்கணவை என் பொறுப்பில் விட்டார். ஆறு மாதங்களுக்குள்ளாகவே பெரிய குழப்பம் ஏற்பட்டது. வருவாய் குறைந்து போயிற்று. குடிகள் என்னை வாழ்த்தினர். வேலை பார்த்தவர்கள் என்மேல் அரசனிடம் புகார் செய்தனர். இளவரசன் குடிகளுடைய அன்பிற்குப் பாத்திரனான பின், அவனால் அரசுரிமையை நடத்துவது ஒருகாலும் முடியாது என்று அவர்கள் சபையில் ஒரே குரலாகச் சொன்னார்கள். அதுமுதல் அரசர் என்னை அவ்வளவாகப் பார்ப்பதுகூட இல்லை. 'அந்தக் கோடரிக் காம்பு, ரர்ய்கரிலுள்ள சிற்றப்பன் வசந்தராயனைப்போல் தான் ஆவான். சிதார் வாசித்துக்கொண்டு கூத்தாடி ராஜ்யத்தையே நாசம் அடிப்பான், என்று சொல்லுவதுண்டு."

"ஆயிரம் இருந்தாலும் பெற்ற தகப்பனாயிற்றே! பொறுத்துக்கொள்ளுங்கள். இன்றைக்கு அரசு தேடுவதும், பெருக்குவதும் அவர் ஒரே ஆவலாக இருக்கலாம்; அங்கே அன்பிற்கு இடமில்லை. ஆசை பூர்த்தி ஆனபின், அன்பு இடம் பெறுமல்லவா?" என்றாள் சுரமா.

"சுரமா! நீ கூர்மையான புத்தியுள்ளவள் தான், ஆனால் இந்த விஷயத்தில் நீ தவறு செய்துவிட்டாய். முதலாவதாக ஆசைக்கு ஓர் அளவில்லை. இரண்டாவதாக. அப்பாவின் அரசு வளர வளர, அதை இழக்கும் பயமும் அதிகமாகவே ஆகும். அரசுரிமை அதிகமானல், நான் அதற்குத் தகுதியற்றவன் என்றே அவர் நினைப்பார்."

சுரமா தவருக எண்ணவில்லை; ஆனால் உள்ளூற ஒரு குருட்டு நம்பிக்கைதான். அது அறிவையும் மீறிவிட்டது. இதேபோல் நடக்காதா என்று அவள் ஏங்குவாள்.

"அவமதிப்பும் அலட்சியமும் தாங்காமல் நான் நடு நடுவே ராய்கரில் தாத்தாவிடம் போய்விடுவேன். அப்பா என்னைத் தேடமாட்டார். ஆகா! அதென்ன மாறுதல்! மரஞ் செடிகளைக் காண்பேன். கிராமவாசிகளுடன் பழக முடியும். இராப் பகலாக அரச உடையை அணிய வேண்டி யிராது. தவிரவும், தாத்தா இருக்கும் இடத்தில் துயரமோ மனத்தாங்கலோ எதுவும் இருக்காது; அது உனக்குத் தெரியுமா? பாட்டும் கூத்தும் களிப்புமே எங்கும் நிறைந்திருக்கும். எங்கே பார்த்தாலும், நல்லெண்ணமும் அமைதியுமே நிலவியிருக்கும். அங்கே போனால், நான் யசோஹரின் இளவரசன் என்பதையே மறந்துவிடுவேன். அதை மறந்ததால் எனக்கு எவ்வளவு சுகம் தெரியுமா! கடைசியில் ஒரு நாள் இளவேனிலின் மென்தென்றல் வீசியது. எனக்கு வயது பதினெட்டு இருக்கும். சுற்றிலும் பார்வைக்கினிய பசுந்தோட்டம். அந்த இடத்தில் நான் ருக்மிணியைக் கண்டேன்."

"அதை நான் எத்தனையோ தடவைகள் கேட்டிருக்கிறேனே!" என்றாள் சுரமா.

"இன்னும் ஒரு முறை கேளேன். நடு நடுவே ஒவ்வொரு விஷயம் என் உள்ளத்தை வாட்டிக்கொண்டு நிற்கிறது. அதை ஒருவரிடம் சொல்லாவிட்டால் என்னால் இருக்க முடியாதே! அதை உன்னிடம் சொல்ல இன்னும் எனக்கு வெட்கமாக இருக்கிறது; கஷ்டமாக இருக்கிறது. அதனால் தான் அடிக்கடி சொல்லுகிறேன். என்றைக்கு இந்தக் கூச்சமும் தயக்கமும் விலகுமோ, அன்றைய தினமே என் பிராயச்சித்தம் முடிந்ததாக எண்ணுவேன். அப்புறம் சொல்வது எதற்கு?"

"பிராயச்சித்தம் எதற்கு? நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள்! உங்கள் தவறு அல்லவே அது! உங்களை நான் அறிவேன். பகவானுக்கு உங்கள் உள்ளம் தெரியாதா?"

"ருக்மிணியின் வயது என்னைவிட மூன்று ஆண்டுகள் அதிகமே. ஒன்றியான விதவை அவள். தாத்தா மனம் இரங்கி ராய்கரில் அவளுக்கு வசதி செய்து கொடுத்திருந் தார். எப்படி என்மனத்தை அவள்கவர்ந்தாளோ, எனக்கே தெரியாது. அப்பொழுது என் மனத்தில் இளமை சுடர் விட்டது. அதன் பளிச்சென்ற ஒளியில் எனக்கு எதுவும் விளங்கவில்லை. உலகமே ஒரு சுடராகத் தோன்றியது. ரத்தம் தலைக்கேறி, நான் எதுவும் நடக்கக் கூடியதென்றே எண்ணினேன். இதேபோல் எனக்கு முன்பு இருந்தது மில்லை; அப்புறமும் தோன்றவில்லை. சரியான வழி, தவறிய பாதை, திசை, திசைமாற்றம் எல்லாம் ஒரேவிதமாக இருந் தன. இந்த அறிவிலிக்கு எதிராக உலகமே இவ்வாறு சுடர் உருவெடுத்துத் தோன்றியதன் காரணம் கடவுளுக் குத்தான் தெரியும். இயற்கை என்னைக் கணநேரம் தவறிய பாதையில் இழுத்துச் சென்றது - கணநேரம் மட்டுமே! அதற்குள் வெளியுலகின் இந்தப் பேரிடியில், குன்றிய உள் ளம் வெட்டுண்ட மரம்போல் புழுதியில் புரண்டது. பின்னர்த் தலைதூக்கியபொழுது கறை படிந்து கிடந்தது அந்தத் தூய உள்ளம். வாழ்வு முழுவதும் அந்த மாசு அகலவில்லை. தெய்வமே! நான் என்ன செய்தேன்? ஏன் என்னை இவ்வண்ணம் பழிக்கு ஆளாக்கினீர்கள்? என் வாழ்வில் வெளேறென்றிருந்த என் மனத்தைக் கறைப் படுத்த நான் செய்த பாவந்தான் என்ன? மனத்தின் பூங் காவில் மலர்ந்த சிறு மல்லிகைகூடக் கறுத்துவிட்டது."

இவ்வாறு சொல்லும்போது உதயாதித்தியனுடைய பளிச்சென்ற முகம் கூச்ச மிகுதியால் ரத்தம்போலச் சிவந் தது; குறுவிழிகள் விரிந்தன. தலைமுதல் கால் வரையில் ஒரு சிலிர்ப்பு ஓடியது. சுரமா, களிப்பும் பெருமையும் துயர மும் ஒருங்கு தோன்ற, "என் தலையைத் தின்றதுபோல! அதெல்லாம் எதற்கு?" என்றாள்.

"மெல்ல என் உள்ளம் பழைய நிலையை அடைந்தது,

என்னைச் சுற்றிய பொருள்களும் தங்கள் உருவுடன் தோன்றின. நன்ருகக் குடித்து, கண் சிவந்து திரியும் குடியன் காணும் கனவுபோலத் தோன்றவில்லை உலகம். ஒரு லட்சியத்தின் பொருட்டு உண்டாகிய இடம் என்று தோன்றியபொழுது என் மன நிலைதான் என்ன! எங்கிருந்து விழுந்தேன் படுகுழியில்! கண் இமைப் பொழுதில் விழுந்துவிட்டேனே! தாத்தா என்னை அன்புடன் அழைத்துச் சென்ருர். அவர் முன் எப்படித்தான் அந்த முகத்தைக் காட்டினேனே! அன்றைய தினமே நான் ராய்கரை விட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று. என்னைக் கூப்பிட்டு அனுப்புவார். நான் பயத்தில் போகவே மாட்டேன். அவர் தாமாகவே என்னையும் விபாவையும் காண வருவார். ஏன் நான் வரவில்லை என்று கேட்க மாட்டார். அவருக்குக் கோபமே வராது. எங்களுடன் சிரித்து விளையாடுவார்; அப்புறம் திரும்பிச் செல்வார்.''

உதயாதித்தியன் புன்னகையுடன் சுரமாவின் முகத்தைக்காதல்ததும்ப நோக்கினுன். இனிவரப்போகும் பேச்சு என்ன என்று சுரமாவுக்குத் தெரிந்துவிட்டது அவள் உள்ளூறப் பரபரப்படைந்து, தலை குனிந்தாள். இளவரசன் தன் கைகளால் அவள் முகத்தைத் தூக்கினுன். நெருங்கி உட்கார்ந்து அவள் தலையைத் தன் தோளில் சாய்த்து, அன்பு மேலிட அவளை முத்தமிட்டான்.

“அதன்பின் என்ன நடந்தது சொல், சுரமா? காதலும் அன்பும் கனியும் இந்த முறுவல் முகம் எங்கிருந்து தோன்றியது! அந்த ஆழ்ந்த இருளைப் போக்கிய சுடர் எது? இளம் பரிதி நீ: என் ஒளிச்சுடர். நம்பிக்கையே உருவெடுத்தவள் நீ! எந்த மாய மந்திரத்தால் அவ்விருளை அகற்றுவித்தாய்?” - இளவரசன் பல முறைகள் சுரமாவின் முகத்தை முத்தமிட்டான். சுரமா வாய் திறக்கவில்லை; களிப்பு மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

இளவரசன் மேலும் சொன்னுன்: “இத்தனை நாட்கள்

பொறுத்து உண்மையான இடம் ஒன்று கிடைத்தது. நான் அறிவிலி அல்ல என்பதை நீதானே எனக்கு உணர்த்தினாய். அதை நம்பினேன். அறிவு குறுகியதல்ல, அதன் நோக்கம் உயர்வானது என்பதை உன் மூலமே நான் அறிந்தேன். முன்பெல்லாம் நான் என்னையே வெறுத்துக்கொள்வேன். எந்தக் காரியமும் செய்யத் துணியமாட்டேன். என் உள்ளம் ஒரு விஷயம் சரி என்றால், உடனே சந்தேகபுத்தி குறுக்கிடும். யார் என்ன விதமாக நடந்துகொண்டாலும் நான் பொறுத்துக்கொள்வேன். சொந்தமாக ஒன்றும் எண்ணிக்கொள்ள மாட்டேன். இப்போதுதான் நானும் ஒரு மனிதன் என்று தோன்றுகிறது. இத்தனை நாட்களாக நான் மறைந்து கிடந்தேன்; நீ என்னை வெளிப்படுத்தினாய். சுரமா! நீதான் என்னைக் கண்டுபிடித்தாய். என் உள்ளம் எதைச் சரி என்கிறதோ அதைச் செய்ய இப்போது நான் தயங்குவதில்லை. நீ என்னை நம்புகிறாய். அதனால் என்மேலேயே எனக்கு ஒரு நம்பிக்கை உண்டாகிறது. அவ்வளவு விசுவாசம் எனக்கு உன்மேல் உண்டு. எனக்குப் பலம் தரும்படியாக உனக்கு அவ்வளவு சக்தி எங்கிருந்து வந்தது?"

தயக்கம் சிறிதுமின்றிச் சுரமா தன் கணவனுடைய மார்பைத் தழுவிக்கொண்டாள். கணவன் பொருட்டுத் தன் உயிரையும் விடக்கூடிய ஆத்ம தியாகத்தின் சுடர் அவள் முகத்தில் ஒளிர்ந்தது. "எனக்கு எதுவுமில்லை. நீங்கள் மட்டுந்தான் இருக்கிறீர்கள். நீங்களே எனக்கு எல்லாம்" என்றது அவள் பார்வை.

இளம் பிராயமுதலே உதயாதித்தியன் தன் உறவினர்களுடைய அவமதிப்பை எல்லாம் பொறுத்து வந்தவன். நடுநடுவே நிலவு பரந்த இரா வேளைகளில் சுரமாவிடம் அவைகளைச் சொல்லுவதில் அவனுக்கு ஒரு பிடித்தம்.

"இப்படி எத்தனை நாட்கள்தான் இருக்கமுடியும், சுரமா? இந்தப் பக்கம் சபையோர் என்னை

அலட்சியம் செய்கிறார்கள். அந்தப் பக்கமோ அம்மா உன்னைக் கஷ்டப்படுத்துகிறாள். வேலைக்காரர்கூட உன்னை மதிப்பதில்லை. நான் எவரிடமும் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன். நீ சக்தி வாய்ந்தவள். ஆனால் என்னைப் போல் நீயும் இவைகளைப் பொறுத்துக்கொள்கிறாய். உன்னைச் சுகமாக வைத்துக்கொள்ள முடியவில்லை. என்னால் இவ்வளவு கஷ்டமும் அவமதிப்பும் உனக்கு! நீ என்னை மணம் செய்துகொள்ளாமல் இருந்தாலே நன்றாக இருந்திருக்குமல்லவா!"

"அதென்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்! இந்த வேளையில்தான் சுரமா தேவை. சுகமாக இருந்தால் உங்களுக்கு என்னால் என்ன ஆகவேண்டும்? களிப்பில் சுரமா காதற் கனி; விளையாட்டுப் பொம்மை. துயரங்களை எல்லாம் மீறிக்கொண்டு என் மனத்தில் எழும் களிப்பு இதுதான். உங்களுக்கு என்னால் ஏதாவது செய்ய முடிகிறதல்லவா! உங்கள் பொருட்டுக் கஷ்டத்தைப் பொறுப்பதிலும் ஓர் ஆனந்தம். அதை அநுபவிக்கிறேன். உங்களுடைய மனக் கஷ்டங்களையும் ஏன் நான் தாங்க முடியவில்லை என்றே நான் ஏங்குகிறேன்" என்றாள் சுரமா.

இளவரசன் சிறிதுநேரம் கம்மென்றிருந்தபின், "நான் எனக்காகக் கவலைப்படவில்லை. எனக்கு எல்லாம் பழகிப் போய்விட்டன. ஆனால் எனக்காக நீ ஏன் அவமானப்பட வேண்டும்? நீ மனைவியின் கடமைப்படி நான் கஷ்டப்படுகையில் ஆறுதல் சொன்னாய்; களைத்த பொழுது இளைப்பாற்றுவித்தாய். ஆனால் உன் கணவனாக இருந்தும், உன் அவமானத்தையும் கூச்சத்தையும் விலக்க என்னால் ஆகவில்லை. உன் தகப்பனார் ஸ்ரீபுரத்து அரசர் என் தகப்பனாருக்குக் கீழ்ப்படிய மறுத்தார். அதனால் உன்னை அவமதித்து, தாம் தலை தூக்கி நிற்பதாக எண்ணுகிறார் என் தகப்பனார். உன்னை யார் அவமதித்தாலும் அவர் காதில் போட்டுக்கொள்வதில்லை. உன்னைத்

தம் மருமகளாக வைத்துக்கொண்டதே உனக்குப் பெரிய கௌரவம் என்று நினைக்கிறார். ஒரொரு வேளை எனக்குப் பொறுக்காது. எல்லாவற்றையும் விட்டு உன்னோடு எங்கே யாவது சென்றுவிடலாமா என்று தோன்றும். இத்தனை நாள் போய்க்கூட இருப்பேன். ஆனால் நீதான் என்னைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறாய்" என்றான்.

இரவு கனத்தது; அந்தித் தாரகைகள் பல மறைந் தன. பல விண்மீன்கள் தோன்றின ஆகாயத்தில். வெளி மதிள் கதவின் அருகில் பாராக்காரர்களின் காலடி ஓசை தொலைவில் கேட்டது. உலகம் அனைத்தும் துயில் கொண் டிருந்தது. பட்டணத்து விளக்குகள் யாவும் அணைந்து விட்டன. கதவு அடைத்திருந்தது. இரண்டொரு நரிகளைத் தவிர வேறு உயிர்கள் ஒன்றையும் காணவில்லை. உதயாதித்தியனுடைய பள்ளியறைக் கதவை வெளிப்புறம் யாரோ தட்டினார்கள். இளவரசன் பரபரப்புடன் கதவைத் திறந்தான். "யார்? விபா! என்ன விசேஷம்? இந்த நள்ளிரவில் எதற்காக வந்தாய்?" என்றான்.

விபா உதயாதித்தியனுடைய தங்கை; அவள், "அண்ணா, நாசகாலம் வந்துவிட்டது" என்றாள்.

சுரமாவும் உதயாதித்தியனும் ஒரே குரலாக, "என்ன நடந்தது, சொல், விபா?" என்றனர்.

விபா பயந்துகொண்டே மெதுவான குரலில் ஏதோ சொன்னாள். சொல்லி முடித்ததும், "என்ன செய்வது, அண்ணா?" என்றாள்.

"நான் போகிறேன்" என்றான் உதயாதித்தியன்.

"வேண்டாம், அண்ணா; நீ போகாதே."

"ஏன், விபா?"

"அப்பாவுக்குத் தெரிந்தால் உன்மேல் கோபங் கொள்வாரே!"

"சீ விபா! அதையெல்லாம் யோசிக்கும் வேளையா இது!" என்றாள் சுரமா.

உதயாதித்தியன் இடுப்பில் உடைவாளை இறுகப் பிணைத்துக்கொண்டு புறப்படத் தயாரானான். விபா அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, "ஆளை அனுப்பு, அண்ணா! நீ போகாதே! எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள்.

"விபா, என்னைத் தடை செய்யாதே! தாமதமாகக் கூடாது" என்று உதயாதித்தியன் அந்தக் கணமே வெளியில் சென்றான்.

விபா சுரமாவின் கையைப் பிடித்துக்கொண்டு, "என்ன பண்ணலாம்? இது அப்பாவுக்குத் தெரிந்து விட்டால்?" என்றாள்.

"என்ன செய்வது? அன்பே அவருக்கு இல்லை. இராமற் போனாலும் நஷ்டம் ஒன்றுமில்லை."

"இல்லை; எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. அப்பா ஏதாவது கஷ்டப்படுத்தினால்?"

சுரமா பெருமூச்சு விட்டாள்; "என் நம்பிக்கை, உலகில் துணையற்றவர்க்கு நாராயணனே உறுதுணை என்பதுதான். தெய்வமே! என் நம்பிக்கையைச் சிதைக்க வேண்டாம்" என்று கடவுளை அவள் வேண்டினாள்.



# 2

## சதியாலோசனை

"மகாராஜா, நீங்கள் செய்த காரியம் சரிதானா?" என்று கேட்டார் மந்திரி.

"எந்தக் காரியம்?" என்றான் பிரதாபாதித்தியன்.

"நேற்று நீங்கள் உத்தரவிட்டது."

பிரதாபன் கசப்புடன், "நேற்று என்ன உத்தர விட்டேன்?" என்றான்.

"உங்கள் சிறிய தந்தை விஷயமாக..."

பின்னும் கசப்புடன் பிரதாபாதித்தியன், "என் சிற்றப்பா விஷயமாக என்ன?" என்றான்.

"மகாராஜா, உத்தரவிட்டது. வசந்தராய், யசோஹர் வரும் வழியில் சிமுல்தலா சத்திரத்தில் தங்கும்போது..."

"என்ன? உன் வார்த்தையை முடித்துத் தான் விடேன்" என்று முகம் சுளித்தான் பிரதாபாதித்தியன்.

"அப்பொழுது இரண்டு பட்டாணியர்களைக் கொண்டு......"

"ஆமாம்."

"அவரைக் கொல்லவேண்டும்..."

பிரதாபாதித்தியன் கோபம் அடைந்தான். "மந்திரிநீ திடுமென்று குழந்தையாகிவிட்டாயா என்ன? ஒரு விஷயத்தைச் சொல்லப் பத்துக் கேள்விகள் போடவேண்டுமா உனக்கு? ராஜ காரியத்தில் ஊக்கம் செலுத்தும் வயது உனக்குப் போய்விட்டது. இப்பொழுது மோட்ச சிந்தனை ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். என் ஓய்வு கொள்ளவில்லை?" என்றான்.

"மகாராஜா என் எண்ணத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை."

"நன்றாகப் புரிகிறது. உன்னை ஒன்று கேட்கிறேன்: நான் செய்யத் துணிந்த ஒரு காரியத்தைப்பற்றிச் சொல்லக்கூட உன்னால் முடியவில்லையா? நீ யோசித்திருக்கவேண்டும். நானே இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தால், அதற்கு ஏதாவது முக்கியமான காரணம் இருக்கும். நான் நியாய அநியாயங்களை எல்லாம் யோசித்தாகிவிட்டது."

"மகாராஜா உத்தரவு...நான்......"

"கம்மென்று நான் சொல்வதையெல்லாம் கேள்: நான் என் சொந்தச் சிற்றப்பனைக் கொல்ல முயலும்போது, உன்னைவிட அதிகம் யோசித்திருப்பேன். இதில் அநியாயம் என்ன இருக்கிறது? என் நோன்பு இது. என்னுடைய நாட்டில் மிலேச்சர்கள் வந்து ஆசாரங்களைக் கெடுக்கிறார்கள். அதனால் நாட்டின் பழைய மதங்கள் நாசமாக துருக்கின்றன. க்ஷத்திரியர் மொகலாயருடன பெண் சம்பந்தம் செய்துகொள்கின்றனர். இந்துக்கள் தங்கள் பழக்க வழக்கங்களைக் கைவிடுகின்றனர். இந்த மிலேச்சர்களை நான் விரட்டப்போகிறேன். என் நாட்டுத் தர்மத்தை ராகுவின் பிடியிலிருந்து மீட்பேன். இந்த நோன்பை முடிக்க அதிகமான பலம் வேண்டும். வங்க தேசத்தின் அரசர் யாவரும் எனக்கு அடங்கவேண்டும். யவனர்களுக்கு உதவி செய்பவர்களை அழித்தால் ஒழிய இது நடக்காது. சிற்றப்பா வசந்தராயர் உறவினர்; அவருக்கு நான் மரியாதை செய்ய வேண்டியவன். உண்மையில் சொல்லப்போனால் அவர் நம் வம்சத்தின் மாசு; அவர் தம்மை யவனர்களின் அடிமை என்று சொல்லிக்கொண்டார். அத்தகைய மனிதருடன் பிரதாபாதித்தியனுக்கு எந்தவிதமான உறவும் இல்லை. அடியுண்டால் சொந்தக் கையை வெட்டி எறிந்துவிடலாம். வம்சத்திற்கு மாசையும் வங்க நாட்டுக்கே அவமதிப்பையும் தரும் இந்த வசந்தராயரை ஒழித்து, ராயவம்சத்தையும் வங்க நாட்டையும் காப்பேன்."

"இது விஷயமாக என் எண்ணமும் அதுவேதான், மகாராஜா!"

"என்ன! நிச்சயமாகச் சொல். இன்னும் இருக்கும். இதோ பார், மந்திரி! என் எண்ணமும் உன் எண்ணமும் ஒன்றும் வரையில், உனக்குத் தோன்றுவதை எல்லாம் தயங்காமல் வெளியிடு. இந்தத் தைரியம் உனக்கு இல்லையென்றால், இந்தப் பதவிக்கு நீ தகுதி அற்றவனே! சந்தேகம் இருந்தால் சொல்லிவிடு. நான் உனக்கு என் எண்ணத்தை முற்றும் வெளியிடுகிறேன். சிற்றப்பனைக் கொல்வது எல்லாச் சமயங்களிலும் பாபம் என்று நீ நினைக்கிறாய். இல்லை என்று சொல்லாதே; உன் மனத்தில் அந்த எண்ணம் இருக்கத்தான் இருக்கிறது. இதற்கும் விடை கூறுகிறேன்: தகப்பன் சொல்லைக் கேட்டுப் பிருகு தாயைக் கொன்றார். தர்மத்துக்கு அடங்கி நான் என் சிற்றப்பனைக் கொல்வது ஏன் கூடாது?"

தர்மம், அதர்மம் சம்பந்தமாக மந்திரிக்கு உண்மையிலேயே வேறு எண்ணமில்லை. மந்திரி ஆழ்ந்து யோசித்த அளவுக்கு அரசன் சிறிதும் யோசனை செய்யவில்லை. இந்தச் சமயத்தில் தாம் சற்றுத் தயங்கினால், அரசன் தற்போது கோபங் கொண்டாலும், பின்னால் மகிழ்ச்சியே அடைவான் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இவ்வாறு செய்யாமல் இருந்தாலோ, மந்திரியின்மேலேயே அரசன் என்றைக்காவது ஒரு நாள் சந்தேகப்படும்படியான நிலைமை வரலாம்.

"நான் சொல்வது இதுதான், மகாராஜா! டில்லி பாதுஷா இதைக் கேட்டால் கோபங் கொள்வாரே!"

பிரதாபாதித்தியன் எரிந்து விழுந்தான்: "ஆமாம், கோபம் கொள்வார்! அப்பனே! கோபம் என்பது எல்லாருக்குமே உண்டு. டில்லி பாதுஷா எனக்குத் தெய்வமல்லவே; அவர் கோபம் அடைந்தால் வெடவெட வென்று நடுங்கப் லர் இருக்கிறார்கள். மான்சிங், பீர்பல், நம் வசந்தராயர்,

இவர்களோடு நீயுங்கூட இருக்கிறாய். ஆனால் உன்னைப் போல் எல்லோரையும் நினைத்துவிடாதே!"

மந்திரி சிரித்தார். "உண்மைதான், மகாராஜா! சாதாரணக் கோபமானால் பயமில்லை; ஆனால் வாளும் வேலுங் கூட இருந்தால் அஞ்சவேண்டியதுதானே! டில்லி பாதுஷாவுக்குக் கோபம் என்றால் ஐம்பதினாயிரம் சேனை என்று அர்த்தம்."

பிரதாபாதித்தியனால் இதற்குத் தக்க மறுமொழி கூற இயலவில்லை. "இதோ பார், மந்திரி! டில்லி பாதுஷாவின் கோபத்தைக் காட்டி என்னைத் தடுக்காதே! அது எனக்கு அவமானமாகவே தோன்றுகிறது" என்றான்.

"குடிகளுக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவார்கள்?"

"அவர்களுக்குத் தெரிந்தால்தானே!"

"இது எத்தனை நாள் ரகசியமாக இருக்கும்? இந்த விஷயம் வெளிச்சமானால், வங்க நாடே உங்களுக்கு எதிராகக் கிளம்பும். நீங்கள் எதற்காகக் காரியம் செய்யத் துணிந்தீர்களோ அந்த எண்ணம் அடியோடு நாசமாகி விடும். உங்களைச் சமூகத்தை விட்டே விரட்டிப் பலவிதமாகத் துன்புறுத்துவார்களே!"

"இதோ பார்; திரும்பவும் சொல்லுகிறேன்: நான் செய்யத் துணிவதை நன்றாக யோசித்துத்தான் செய்கிறேன். ஆகவே, நான் காரியம் தொடங்கும்போது, வீண் பயம் காட்டி என்னைத் தடுக்க எண்ணாதே! நான் குழந்தை அல்ல; அடிக்கு அடி தடை செய்யும்பொருட்டு நான் உன்னை வைத்துக்கொள்ளவில்லை, கைவிலங்குபோல."

மந்திரி அதற்குமேல் பேசவில்லை. இரண்டு விஷயங்களில் அரசன் அவருக்குக் கட்டளை இட்டிருந்தான். எண்ணம் ஒன்றும் வரையில் தனக்குத் தோன்றுவதை எல்லாம் மந்திரி வெளியிடவேண்டும்; எதிராகச் சொல்லி,

பயம் காட்டி அரசனைத் தடை செய்வது கூடாது. இது வரையில் இரண்டையும் மந்திரி சரிவர அநுசரிக்கவில்லை.

மந்திரி சற்றுப் பொறுத்து மறுபடியும் பேசலானார்: "மகாராஜா! டில்லி பாதுஷா........"

பிரதாபனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"மறுபடி ஆரம்பித்துவிட்டாயா! ஒருநாளில் இத்தனை தடவை டில்லி பாதுஷாவின் பெயரைச் சொல்லுகிறாயே! அதைவிடப் பகவானுடைய நாமத்தை ஜபித்தாலாவது மோட்சத்துக்கு வழி தேடிக்கொள்ளலாமே! நான் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் வரையில் டில்லி பாதுஷாவின் பெயரைச் சொல்லாதே. இன்று பிற்பகல், காரியம் முடிந்தது என்ற செய்தி வந்தபின், என் காதில் உனக்குத் திருப்தி உண்டாகுமட்டும் பாதுஷா நாம ஸ்மரணம் செய்! அதுவரையில் சற்று அடங்கி இரு."

மந்திரி மீண்டும் வாயை மூடிக்கொண்டார். டில்லி பாதுஷாவின் பேச்சை எடுக்காமல், "மகாராஜா! இளவரசர் உதயாதித்தியர்......" என்று பேச்செடுத்தார்.

"பாதுஷாவாயிற்று; குடிகளும் போனார்கள்; கடைசியில் அந்தப் பெண்பித்தனின் பெயரை எடுத்தாயா?"

"மகாராஜா! நீங்கள் எல்லாவற்றையும் தவருகவே புரிந்துகொள்கிறீர்கள். உங்கள் காரியத்தைத் தடை செய்யும் எண்ணம் எனக்கு இல்லை."

பிரதாபன் சற்றுத் தணிந்து, "என்ன சொல்ல வேண்டும் அவனைப்பற்றி?" என்றான்.

"நேற்றிரவு குதிரையில் ஏறி அவர் தனியாகச் சென்றார்; இன்னும் திரும்பவில்லை."

பிரதாபன் கசப்புடன், "எந்தப் பக்கம் சென்றான்?" என்றான்.

"கிழக்கு நோக்கி."

பற்களைக் கடித்தான் பிரதாபன்.

"எப்போது சென்றான்?"

"நேற்று நள்ளிரவு."

"ஸ்ரீபுரத்து ஜமீன்தாரின் பெண் இங்கேதான் இருக்கிறாளா?"

"ஆம், மகாராஜா."

"அவள் பிறந்த வீட்டில் இருந்தாலே நன்றாக இருக்கும்."

மந்திரி இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

"உதயாதித்தியன் அரசனைப்போலவே என்றைக்கும் இருந்ததில்லை. சிறு பிராயமுதலே குடிகளுடன் கூடிப் பழகுவதே அவன் இயல்பு. என் மகன் இப்படி இருப்பான் என்று யார் கண்டது? சிங்கக்குட்டிக்கு அதன் சுபாவத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டுமா? ஆனால், 'நராணும் மாதுலக்ரமம் (மனிதனுக்கு மாமனியல்பு)' என்று சொல்வதுண்டல்லவா! அவனும் தன் மாமனாரின் இயல்பைப் பெற்றிருக்கவேண்டும். அதையும் தவிர, ஸ்ரீபுரத்துப் பெண்ணை அவனுக்கு மணம் செய்துவைத்தேன். அதுமுதல் அவன் அடியோடு நாசமாகிவிட்டான். என் சின்னப்பிள்ளையாவது அரசாட்சிக்குத் தகுதி உள்ளவன் ஆகட்டும். நான் தொடங்கிய காரியம் முடியாவிட்டாலும், சாகும் சமயத்தில் நிம்மதியாகவாவது இருக்கவேண்டும். உதயன் இன்னும் திரும்பவில்லையா?"

"இல்லை, மகாராஜா!"

பிரதாபன் காலால் தரையை உதைத்து, "அவனுடன் ஒரு காவலாளியை அனுப்புவதற்கென்ன?" என்றான்.

"ஒருவன் போகத் தயாராகவே இருந்தான். ஆனால் இளவரசர் தடுத்துவிட்டார்."

"மறைவாக அவன் பின்னே செல்வதற்கென்ன?"

"அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகமுமில்லை."

"சந்தேகமில்லையாம்! மந்திரி, அவர்கள் செய்த காரியம் சரிதான் என்கிறாயா? வீணில் எதையாவது நீ என்னிட

சொல்லிக்கொண்டிருக்கிறாய். காவற்காரர்கள் தங்கள் வேலையில் மிகவும் அலட்சியமாகவே இருக்கின்றனர். அச்சமயம் வாயிலில் இருந்தவர்களை இங்கே அனுப்பிவை. இந்த நிகழ்ச்சியால் என் எண்ணம் ஈடேறாத பட்சத்தில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன், மந்திரி. அதோடு நீயும் பயப்படும்படி நேரிடும். இந்தக் காரியத்துக்காக எவரும் பொறுப்பாளி அல்ல என்று எனக்கு நீ புத்தி சொல்ல வந்தாய். ஆகவே, எல்லாப் பொறுப்பும் உன் தலையிலேதான்.”

பிரதாபன் காவலாளிகளைக் கூப்பிட்டனுப்பினான். சற்று ஆழ்ந்து யோசித்தபின், “ஆமாம், டில்லி பாதுஷாவின் விஷயம் என்ன?” என்றான்.

“உங்கள் பெயரில் யாரோ புகார் செய்திருப்பதாகக் கேள்வி.”

“யார்? உங்கள் இளவரசன் உதயாதித்தியனா?”

“இல்லை, மகாராஜா! அப்படிப் பேசவேண்டாம். யாரென்று எனக்கு விவரமாகத் தெரியவில்லை.”

“யார் செய்தார்கள் என்று நீ அதிகமாகக் கவலைப்பட வேண்டாம். நானே பாதுஷாவின் நீதிபதி. அவனுக்குத் தண்டனை விதிக்கத்தான் நான் ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். அந்தப் பட்டாணியர்கள் இன்னும் வரவில்லையா? உதயாதித்தியன் வந்துவிட்டானா? சீக்கிரமாகக் காவலாளியை அனுப்பிவை.”

# 3

## தேடுதல்

**த**னி வழியே இளவரசன் மின்வேகத்தில் சென்று கொண்டிருந்தான். மைபோல் அடர்ந்திருந்தது இருள்; ஆனால் வழி விசாலமாகவும் நேராகவும் இருந்ததால் பயத்திற்கு இடம் எதுவுமில்லை. குதிரையின் குளம்பொலி நாற்புறமும் எதிரொலித்தது. சில நாய்கள் வாள் வாளென்று குரைத்துத் தீர்த்தன. நரிகள் சில திடுக்கிட்டுப் பக்கத்திலிருந்த மூங்கில் புதரில் மறைந்து விட்டன. வானில் ஒளிமணிகளும் வழியோரத்து மரங்களில் மின்மினிகளுமே வெளிச்சம் கொடுத்தன. சிள்வண்டுகள் ஓயாது ஒலி செய்தன. எலும்பே உருவெடுத்த பிச்சைக்காரன் ஒருவன் மரத்தடியில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். ஐந்து கல் தொலைவு வந்தபின் இளவரசன் சாலையைவிட்டு வயல் வெளிகளில் இறங்கினான். குதிரையின் வேகத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அன்று பிற்பகலில் மழை பெய்து தரை சேறாகி இருந்தது. குதிரையின் கால்கள் ஒவ்வொரு முறையும் சேற்றில் புதைந்தன. வழியில் முன்கால்களை மடக்கிக் கொண்டு மும்முறை விழவும் செய்தது. அதன் மூக்குத் துவாரங்கள் களைப்பால் விரிந்தன; வாயில் நுரை தள்ளியது. மார்புக் கூடுகளிலிருந்து உறுமும் ஓசை வெளிவந்தது. கால் குளம்புகளின் வேர்வைநீர் நுரைத்தது. உடம்பெல்லாம் ஒரே வேர்வை. கோடைக்காலமாகவே காற்று வீசவில்லை. செல்லவேண்டிய தூரமோ மாளாது கிடந்தது. நீரும் சேறுமாகக் கிடந்த வயல் வெளிகளைக் கடந்து, இளவரசன் நல்ல ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்தான். குதிரை மீண்டும் கனவேகத்தில் சென்றது அவன்

அதன் தோள்களைத் தட்டி ஊக்கம் ஊட்டினன். "சுக்கிரீவா" என்று அவன் குரல் கேட்டதும் அது சட்டென்று காதுகளை உயர்த்தி எஜமானனை ஒருமுறை பார்த்தது. பின்னர், தன் கழுத்தை வளைத்து முகத்தைத் தாழ்த்திக் கட்டுகளைத் தளர்த்திக்கொண்டு அது விர்ரென்று ஓடத் தொடங்கியது. இருபுறங்களிலும் மரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. மேலே வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் தீப்பொறிகள் வேகமாகப் பறப்பதுபோல் தோன்றின. காற்றலைகள் காதில் 'ஊ ஊ' என்று பாயத் தொடங்கின. இரவு மூன்றாம் ஜாமம் இருக்கும். நரிகள் வீடுகளுக்கு அருகில் ஊளையிடும் நேரத்தில் இளவரசன் சிமுல்தலா சத்திரத்தின் வாயிலுக்கு வந்து சேர்ந்தான். அவனுடைய குதிரை அதே கணத்தில் உயிரிழந்து கீழே விழுந்தது. இளவரசன் குதிரையின் முதுகைத் தட்டினன்; தலையைத் தூக்கிப் பார்த்தான். "சுக்கிரீவா!" என்று பலமுறை கூப்பிட்டும் பலனில்லை. இளவரசன் ஒரு பெருமூச்சுடன் வாயிற் கதவைத் தட்டினன். திரும்பத் திரும்பப் பலமுறைகள் தட்டிய பின், அதன் சொந்தக்காரன் கதவைத் திறவாமல் ஜன்னலின் மூலம், "இந்த இரவு வேளையில் யாருங்க அது?" என்றான்.

"ஒரு விஷயம் கேட்கவேண்டும், கதவைத் திற."

"கதவைத் திறக்கவேண்டுமா என்ன? கேட்கவேண்டியதைக் கேளுங்களேன்."

"ராய்கரின் அரசர் வசந்தராய் இங்கே இருக்கிறாரா?"

"இன்று மாலை அவர் வருவதாகத்தான் இருந்தது. ஆனல் இன்னும் வரவில்லை.

இளவரசன் இரண்டு தங்க நாணயங்களை எடுத்து, "இந்தா, பிடி" என்றான்.

சத்திரக்காரன் பரபரவென்று கதவைத் திறந்து பொற் காசுகளைப் பெற்றுக்கொண்டான்

"அப்பனே! உன் சத்திரத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும்" என்றான் இளவரசன்.

"இல்லை, ஐயா! அது நடக்காது"

"இதோ பார், என்னைத் தடுக்காதே. நான் அரண்மனைக் காவலாளன். இரண்டு குற்றவாளிகளைத் தேடி வந்திருக்கிறேன்" என்று இளவரசன் உள்ளே சென்றான். சத்திரக்காரன் அதற்குமேல் தடை சொல்லவில்லை. இரண்டுமூன்று பெண்களைத் தவிர அங்கே வேறு எவரும் இல்லை. அப்பெண்கள் தங்கள் தூக்கம் கெடவே, "இப்படி என்ன பார்க்கிறான், குருட்டுப் பயல்!" என்றனர்.

சத்திரத்தை விட்டு வெளி வந்தான் இளவரசன் தற்செயலாக அவர் வராமல் இருந்தது நல்லதாகவே ஆயிற்று என்று அவன் முதலில் எண்ணினான். மறுகணமே, 'ஒரு வேளை அவர் வேறு சத்திரத்தில் தங்கியிருந்து, பட்டாணியர் அங்கே சென்றிருந்தால்?' என்று அவனுக்குத் தோன்றியது. அவன் யோசித்தவாறு தெருவில் நடக்கலானான். கொஞ்சம் தொலைவு சென்றதும், எதிரே ஒரு குதிரைவீரன் வருவது தெரிந்தது. அவன் அருகில் வந்ததும் இளவரசன், "யார் ரத்தனா?" என்றான். குதிரைவீரன் கீழே குதித்து அவனை வணங்கி, "ஆமாம், இளவரசே! இந்த நள்ளிரவில் இங்கே என்ன!" என்றான்.

"காரணம் பின்னால் தெரியும். தாத்தா எங்கே?"

"அவர் இந்தச் சத்திரத்தில்தானே இருப்பார்."

"அதென்ன! அவர் இங்கே இல்லையே!"

ரத்தன் திடுக்கிட்டான். 'முப்பது பேருடன் அவர் யசோஹரை நோக்கி வந்தார். எனக்கு வேலை இருந்தது; மாலையில் இங்கே சந்திப்பது என்றுதான் பேச்சு.'

"வழியெல்லாம் சேறு. ஆகவே, காலடிச் சின்னம் இருக்கும். உன் குதிரையைக் கொடு; நான் தேடிச் செல்கிறேன். நீ மெல்ல நடந்து வா" என்றான் இளவாசன்,

# 4

## மனம் உருக்கும் கீதம்

வழியோரம்; அரசமரத்தின் கீழிருந்த பல்லக்கு ஒன்றில் கிழவர் வசந்தராய் தனியே உட்கார்ந்திருந்தார். அருகில் ஒரு பட்டாணியனைத் தவிர வேறு எவரும் இல்லை. ஜனசந்தடி தொலைவில் கேட்டு மறைந்தது. இரவு கம்மென்று இருந்தது. வசந்தராய் பட்டாணியனை நோக்கி, "கான் சாகிப்! நீ போகவில்லையா?" என்றார்.

"உஜூர்! நான் எப்படிப் போவேன்? எங்கள் பணத்தையும் மானத்தையும் காப்பாற்ற வேலைக்காரர்களை எல்லாம் அனுப்பிவிட்டீர்கள். இந்த வழியோரத்தில் உங்களைத் தனியாக விட்டு நான் எப்படிச் செல்வது? அவ்வளவு நன்றிகெட்டவனா நான்! 'எனக்குக் குற்றம் செய்தவன் தான் கடன்பட்டவன். பின் பிறவியில் அவன் அதைத் தீர்த்தே ஆகவேண்டும். எனக்கு உதவி செய்தவர்களிடம் நான் கடமைப்பட்டவன். ஆனால் அந்தக் கடனைத் தீர்ப்பது எந்தக் காலத்திலும் முடியாது' என்று எங்கள் கவி சொல்லியிருக்கிறாரே!"

'நல்ல ஆள் தான்!' என்று வசந்தராய் எண்ணினார். சற்று யோசனை செய்ததும் அவர் சொட்டை விழுந்த தம் தலையை வெளியே நீட்டி, "கான் சாகிப்! நீ நல்ல ஆள் தான் என்று தெரிகிறது!" என்றார்.

கான்சாகிப் சட்டென்று தலைகுனிந்து வணங்கினான். இவ்விஷயத்தில் கான்சாகிபின் எண்ணமும் வசந்தராயினுடைய எண்ணமும் ஒன்றே. அவர் தீவட்டியின் ஒளியில் பட்டாணியனுடைய முகத்தை உற்று நோக்கி, "உன்னைப் பார்த்தால் பெரிய இடத்து மனுஷனென்று தோன்றுகிறது!" என்றார்.

பட்டாணியன் மீண்டும் வணங்கினான். "என்ன சாமர்த்தியம், மகாராஜா! நீங்கள் நினைத்தது சரிதான்" என்றான்.

"இப்போது நீ என்ன செய்கிறாய்?"

பட்டாணியன் பெருமூச்சு விட்டான்.

"உஜூர்! துரதிருஷ்டம் பிடித்துக்கொண்டது என்னை. உழுது பயிரிட்டு வயிறு வளர்க்கவேண்டியிருக்கிறது. கவி சொல்லுகிறார்: 'அதிருஷ்ட தேவதையே! புல்லைத் துரும்புபோல் படைத்தது உன் கொடுமையாகாது. ஆனால் அரசமரத்தைப் பெரியதாகப் படைத்துப் புயலில் அதைப் புல்லுக்கு ஈடாக்குகிறாயே! அதிலிருந்துதான் உன் கல்நெஞ்சம் புலனாகிறது' என்றுதான்."

வசந்தராய் பின்னும் அதிகக் களிப்படைந்தார். 'ஆகா! கவி என்னென்ன முத்துக்களை உதிர்த்திருக்கிறார்! கான் சாகிப்! நீ சொன்ன வார்த்தைகள் இரண்டையும் எனக்கு எழுதித் தரவேண்டும்".

அதிருஷ்டம் நெருங்கிவிட்டதென்று பட்டாணியன் களித்தான். "கிழவருக்கு இளகிய மனசு. ஏழைகளுக்கு உதவி செய்வார்' என்று அவனுக்குத் தோன்றியது. 'ஆகா! இவன் ஒரு காலத்தில் பணக்காரனாக இருந்தவன்! இன்று ஏதோ கஷ்டகாலம்போல் இருக்கிறது! நிலையற்ற திருவின் கொடுமை அல்லவா இது' என்றெண்ணி வசந்தராய், "ஏனப்பா! உனக்குத்தான் நல்ல கட்டமைந்த உடல் இருக்கிறதே! நீ சுலபமாகச் சேனையில் சேரலாமே!" என்றார்.

பட்டாணியன் உடனே, "சேராமல் என்ன! அதுதானே எங்கள் தொழில்! என் தந்தை, பாட்டன்மார் எல்லோரும வாள் பிடித்த கையுடனேயே காலம் சென்றனர். எனக்கும் அந்த ஒரே ஆசைதான். எங்கள் கவியும்......" என்று ஆரம்பித்தான்.

வசந்தராய் சிரித்தார். "கவி என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், கான்சாகேப்! என்னிடம் வேலைக்கு வந்தாயோ, கையில் வாளுடன் சாகலாமே தவிர அதை உறையிலிருந்து எடுக்க உனக்கு அதிருஷ்டம் இல்லை. எனக்கோ வயதாகிவிட்டது. குடிகள் அமைதியுடன் இருக்கிறார்கள். கடவுள் கிருபையால் இனிச் சண்டையே வாரமல் இருக்கவேண்டும். நான் கத்தியைத் துறந்துவிட்டேன். அதற்குப் பதிலாக இன்னொன்று வந்து ஒட்டிக் கொண்டது" என்றதும் அவர் பக்கத்திலிருந்த சிதாரின் இரண்டொரு தந்திகளை மீட்டினார்.

பட்டாணியன் கண்ணை மூடிக்கொண்டு தலையை ஆட்டினான். "ஆகா, நீங்கள் சொல்வது அவ்வளவும் உண்மைதான். ஒரு பழமொழியும் கேள்விப்பட்டிருக்கிறேன்: 'கத்தியால் பகைவரைக் கொல்லலாம். ஆனால், இசையோ எதிரியை வசம் செய்கிறது' என்பதுதான் அது" என்றான்.

"என்ன சொன்னாய்! இசையால் எதிரியை வசம் செய்துகொள்ளலாம்! எவ்வளவு அருமையான கருத்து!" யோசிக்க யோசிக்க அவர் உள்ளம் வியப்பில் ஆழ்ந்தது. சற்றுப் பொறுத்து அவர் தாமாகவே பழமொழியை விவரித்துச் சொன்னார். "வாள் பயங்கரமானது. அதனால் பகைவனைக் கொன்றாலும் பகைமை போவதில்லை. போய் விடுகிறதென்று எப்படிச் சொல்லமுடியும்? நோயாளியைக் கொன்று வியாதியைத் தீர்ப்பது ஆரோக்கியமாகுமா? ஆனால் இசையோ இனியது. அதனால் பகைவனைக் கொல்லாமல் பகைமையைச் சிதைக்க முடியும். அற்ப விஷயமா இது! என்ன புத்திக் கூர்மை!" கிழவர் தமக்கு இருந்த களிப்பில் பல்லக்கை விட்டு வெளியேகால்வைத்துப் பட்டாணியனை அருகில் அழைத்தார். "வாளால் எதிரியைக் கொல்லலாம்; ஆனால் இசையால் அவனை நேசனாக்கிக் கொள்ள முடியும். இல்லையா, கான்சாகேப்!" என்றார்.

"ஆம், உஜூர்."

"நீ ராய்களுக்கு ஒரு முறைவா. யசோஹரிலிருந்து நான் திரும்பியதும் உனக்குத் தக்க உதவிகள் செய்வேன்."

பட்டாணியன் முக மலர்வுடன், "நீங்கள் மனம் வைத்தால் என்னதான் ஆகாது!" என்றான். 'அப்பா! ஒரு வழியாக விஷயத்தை வளையக் கட்டினோம்' என்று அவனுக்குத் தோன்றியது. "உங்களுக்குச் சிதார் வாசிக்க வருமோ?" என்று அவன் கேட்டான்.

"ஆம்" என்று வசந்தராய் சிதாரைக் கையில் எடுத்துக்கொண்டார். விரல்களால் தந்திகளைத் தட்டி பேஹாக் ராகத்தை இசைக்கத் தொடங்கினார். பட்டாணியன், "என்ன பிடிப்பு! எவ்வளவு கம்பீரம்!" என்றெல்லாம் அவருக்கு உற்சாகம் ஊட்டினான். வர வர அவரால் சிவிகையின் உள்ளே இருப்பது முடியாமல் வெளியே எழுந்து வந்து சிதார் இசைக்கலானார். தம் மரியாதை, கம்பீரம், சுற்றுப்புறம் எல்லாவற்றையும் மறந்து அவர் பாடவும் தொடங்கினார்:

"காதலனின்றிக் கழிந்திடுமோ கனையிருட் பொழுது?
வேதனை தன்னையிவ் வேளை நான் வெல்வதெவ்வாறு?"

பாட்டு நின்றதும் பட்டாணியன், "எவ்வளவு இனிமையான குரல்!" என்றான்.

"அப்படியா! நள்ளிரவில், திறந்த வெளியில் எவருடைய குரலும் இனிமையாகத்தான் இருக்கும். குரலுக்காக நான் எவ்வளவோ சாதனைகள் செய்திருக்கிறேன். ஆனால் ஜனங்கள் என் குரலை அவ்வளவாகப் புகழ்ந்தது இல்லை. ஆனால் கடவுள் தாம் அளித்த நோய்களுக்கெல்லாம் அததற்கு ஏற்றபடி மருந்துகள் கொடுத்துள்ளார். அதே போல் என் குரலையும் ரசிப்பவன் ஒருவன் இருக்கவேண்டுமல்லவா! என் பாட்டைக் கேட்கவும் இரண்டொரு பித்தர்கள் இருக்கிறார்கள். இராமற் போனால், பாடுவதை நான்

என்றைக்கோ நிறுத்திக்கொண்டிருப்பேன். இரண்டொரு வாடிக்கைக்காரர், பொருளின் மதிப்பை அறியாது என்னைப் புகழுகின்றனர். அவர்களைக் கண்டு வெகு நாட்களாகின்றன. அதனுல்தான் விரைகிறேன். என் ஆசை தீரப் பாட்டைப்பாடி, மனத்தின்சுமையைத் தள்ளிவிட்டு வருவேன்."

கிழவருடைய மங்கிய கண்கள் அன்பும், களிப்பும் மிகுந்து சுடர்விட்டன.

'உன்னுடைய ஆசை ஒன்று நிறைவேறியது. பாடிக் காட்டினுர். உள்ளத்தின் சுமையையும் இலேசாக்கிக் கொள்வதெப்படி? இப்படியும் செய்யலாமா! முசல்மான் அல்லாதவனைக் கொன்றுல் புண்ணியந்தான். ஆனுல் அந்தப் புண்ணியம் ஏராளமாகச் சேர்த்துக்கொண்டாயிற்று. இனிப் பரலோக நினைவு தேவையில்லை. இவ்வாழ்வில், இவரைக் கொல்லாமல், வேறு ஏதாவது வழி செய்ய முடியுமா, பார்க்கலாமே' என்று பட்டாணியன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அதற்குமேல் ஒரு கணமும் கம்மென்றிருக்க வசந்தராயினுல் முடியவில்லை. அவருடைய கற்பனை மேன்மேலும் வளரத் தொடங்கியது. பட்டாணியனை நெருங்கி மெதுவாக, "யாரைப்பற்றிச் சொல்லுகிறேன், தெரியுமா, கான்சாகேப்! 'என் பேரனையும் பேர்த்தியையும்பற்றித்தான்" என்றதும், என் வேலையாட்கள் எப்பொழுது வருவார்கள்?' என்ற கவலையில் ஆழ்ந்தார். மறுபடியும் அவர் உள்ளம் சிதாரில் சென்றது.

திடீரென்று குதிரை வீரன் ஒருவன் அவரை நெருங்கி, "அப்பாடா, பிழைத்தேன்! தாத்தா! தனி வழியில் இந்த நடுராத்திரி யாருக்குப் பாடிக் காட்டுகிருய்?" என்றுன்.

களிப்பும் வியப்பும் மேலிட்டு, வசந்தராய் சிதாரைப் பல்லக்கின்மேல் வைத்துவிட்டு, உதயாதித்தியனுடைய கையைப் பிடித்துக் கீழே இறக்கினுர். அவனை மார்பில்

இறுகத் தழுவிக்கொண்டு, "என்ன விஷயம்! தங்கை சுகந்தானே?" என்றார்.

"எல்லோரும் சுகமே."

கிழவர் சிரித்துக்கொண்டே சிதாரை எடுத்து, காலால் தாளம் போட்டவாறு பாடலானார்:

" எதிர்பா ராமல் தோன்றியதேன்?
எல்லா, யாவும் கனவேயோ?
வதிந்திருந் தாயோ கோடிவீட்டில்
மங்கை சந்த்ரா வளியுடனே?
மதர்விழி மாதின் ஆதரவை
முற்றும் பெற்று மகிழ்ந்தாயோ?
இதற்குள் ளாகவே உன்னுடைய
இன்ப மயக்கம் தணிந்ததுவோ?
இரவின் செறியிருள் நீங்கவில்லை:
இன்னும் பொழுது விடியவில்லை.
வரவை எதிர்பார்த் திருக்கும்அந்த
ராதையின் அழுகை ஓயவில்லை.
இன்றிதற் குள்ளே சந்த்ராவின்
மென்மலர்க் குவியல் வாடியதோ?
அன்றிலே! அந்த மதிவதனத்
தின்முறு வல்நீ கண்டனையோ?"

உதயாதித்தியன் பட்டாணியனைநோக்கி வசந்தராயின் காதோடு காதாக, "தாத்தா! இந்தக் காபூல்காரன் எங்கிருந்து முளைத்தான்?" என்றான்.

வசந்தராய் பரபரப்புடன், "கான்சாகேப் ரொம்ப நல்லவர்! இந்த இரவு சந்தோஷமாகக் கழிந்தது" என்றார்.

உதயாதித்தியனைக் கண்டதும் பட்டாணியன் உள்ளூறப் பரப்படைந்தான்; என்ன செய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை.

"ஏன் தாத்தா, சத்திரத்துக்குப் போகாமல், இங்கே என்ன வேலை?" என்றான் உதயாதித்தியன்.

பட்டாணியன் திடீரென்று பேசலானான். "உஜூர்! என்னைக் காப்பாற்றுவதானால் ஒரு விஷயம் சொல்கிறேன். நான் பிரதாபாதித்திய மகாராஜாவின் குடி; மகாராஜா என்னையும் என் அண்ணனையும் அழைத்து நீங்கள் யசோஹருக்கு வரும் வழியில் உங்களைக் கொன்று விட வேண்டும் என்று கட்டளையிட்டார்."

வசந்தராய் திடுக்கிட்டு, "ராம்! ராம்!" என்றார்.

"ஊம்! மேலே சொல்லு" என்றான் உதயாதித்தியன்.

"நாங்கள் எப்பொழுதுமே இந்த மாதிரி செய்ததில்லை. ஆகவே முடியாது என்றோம். அவர் எங்களைப் பலவித மாகப் பயமுறுத்தினார். அதனால் நாங்கள் வரவேண்டிய தாயிற்று. வழியில் உங்களைக் கண்டோம். என் அண்ணன் ஊரில் கொள்ளை என்று அழுது, உங்கள் வேலையாட்களை அழைத்துச் சென்றான். என்மேல் இந்தப் பொறுப்பு இருந்தது. ஆனால், மகாராஜா, அரசனுடைய கட்டளை இப்படி இருந்தும் இதைச் செய்ய எனக்கு மனமில்லை. ஏனென்றால், 'அரசனுடைய கட்டளையினால் நீ உலகத்தையே நாசம் செய்யலாம். ஆனால் சுவர்க்கத்தின் ஒரு சிறிதும் உன் மூலம் பழுதுபடக் கூடாது' என்று எங்கள் கவி சொல்லுகிறார். நான் ஏழைப்பட்டவன்; உங்கள் கால்களில் விழுகிறேன். ஊருக்குப் போனால் எனக்கு என்ன கதி நேருமோ! நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். எனக்கு வேறு வழியில்லை" என்று அவன் கைகூப்பினான்.

வஸந்தராய் வாயடைத்து நின்றார். சற்றுப் பொறுத்து அவனை நோக்கி, "நான் உனக்கு ஒரு கடிதம் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டு நீ ராய்கருக்குப் போ. நான் திரும்பியதும் உனக்குச் சௌகரியம் செய்து தருவேன்" என்றார்.

"தாத்தா, நீ யசோஹருக்குப் போகப் போகிறாயா, என்ன?"

"ஆமாம், அப்பா."

"அதென்ன, தாத்தா?" என்று வியப்புடன் கேட்டான் உதயாதித்தியன்.

"பிரதாபன் எனக்கு அந்நியனா? ஆயிரம் தவறுகள் செய்தாலும், அவன் என் அன்புக்குப் பாத்திரனே. எனக்குக் கெடுதி நேரும் என்று நான் பயப்படவில்லை. நானே பவக்கடலின் எல்லையில் நிற்கிறேன். ஓர் அலை வீசினாலுங் கூட என் வாழ்வு முடிந்துவிடும். இந்தப் பாவச் செயலினால், பிரதாபனுடைய இவ்வுலக வாழ்வு மட்டுமன்றி, சுவர்க்க வாழ்வும் கெடுதியுறுமே! இது தெரிந்தும் நான் சும்மா இருக்கலாமா? அவனைத் தழுவிக்கொண்டு இதையெல்லாம் தெளிவுறச் சொல்ல வேண்டும்."

அதைச் சொல்லும்பொழுது வசந்தராயின் விழிகளில் நீர் முத்துக்கள் தோன்றின. உதயாதித்தியன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டான்.

இதே சமயத்தில், வசந்தராயின் வேலையாட்களும் கூச்சலிட்டுக்கொண்டே வந்தனர்.

"மகாராஜா எங்கே? எங்கே மகாராஜா?"

"இங்கேதான் இருக்கிறேன்! வேறு எங்கே போவது!"

"அந்த வழுக்கைத் தலையன் எங்கே?"

வசந்தராய் பரபரப்புடன் குறுக்கிட்டார். "அடேடே! நீங்கள் கான்சாகேபை ஒன்றும் சொல்லாதீர்கள்."

"இன்றைக்கு ரொம்பக் கஷ்டமுங்க; மகாராஜா! அந்தப் பயல்......"

"அடே நிறுத்துடா! நான் தெளிவாகச் சொல்கிறேன். அந்தப் பயல் எங்களை நேராக அழைத்துப் போய் வலது பக்கம் மாந்தோப்பிலே......"

"அடே! அது வேலந்தோப்புடா......"

"வலது பக்கமாம்! இடது பக்கத்திலேடா அது!"

"போடா போ! வலது பக்கந்தான்."

"உனக்குத்தான் அது வலது பக்கம்."

"அட! வலது பக்கம் இராவிட்டால் அந்தக் குளம்..."

உதயாதித்தியன் குறுக்கிட்டு, "அப்பனே! அது வலது பக்கந்தான். மேலே சொல்லு" என்றான்.

"ஆமாங்க, வலது பக்கத்து மாந்தோப்பு வழியாக ஒரு வயல் காட்டுக்கு அழைத்துப் போனான். எத்தனையோ வயல், சேறு குட்டையெல்லாம் தாண்டி, மூங்கில் புதருக்கு அப்பாலே போனோம். ஊரின் கிட்டே வந்தால், அந்தப் பயலைக் காணவில்லை. எங்கே போனானோ, தெரியவே இல்லிங்க!"

"அந்தப் பயலைப் பார்த்தாலே எனக்கு நல்லவன் என்று தோன்றவில்லை."

"இப்படி ஏதாவது நடக்குமென்று எனக்கு அப்போதே தெரியும்."

"வழுக்கைத் தலையைப் பார்த்ததுமே எனக்குச் சந்தேகந்தான்."

கடைசியில் எல்லாரும் தாங்கள் எண்ணியபடிதான் நடந்துவிட்டது என்று தெரிவித்தார்கள்.



# 5

## எதிர்பாராத தோற்றம்

"மந்திரி, அந்தப் பட்டாணியர்கள் இருவரும் இன்னும் வரவில்லையே?" என்று கேட்டான் அரசன்.

"அது என் குற்றமல்லவே, மகாராஜா!"

பிரதாபாதித்தியன் வெறுப்படைந்தான். "நான் உன்னைக் குறை சொன்னேனா? நேரமாகிறதென்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். உனக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் சொல் என்றுதான் கேட்கிறேன்" என்றான்.

"சிமுல்தலா இங்கிருந்து வெகு தூரமாயிற்றே! போய், வேலையை முடித்துக்கொண்டு திரும்ப நேரம் ஆகத்தான் ஆகும்."

பிரதாபனுக்கு மந்திரியின் பதில் திருப்தி அளிக்கவில்லை. தான் நினைப்பதுதான் மந்திரிக்கும் தோன்ற வேண்டும என்பது அவன் எண்ணம். ஆனால் மந்திரியோ அதைப்பற்றிச் சிறிதும் நினைக்கவில்லை. உதயாதித்தியன் நேற்றிரவு வெளியே போனானா?" என்று அரசன் கேட்டான்.

"ஆமாம். அதை நான் முன்பே சொல்லிவிட்டேனே!"

"நல்ல சமயத்தில் சொல்லிவிட்டாய! சொன்னதுடன் உன் வேலை முடிந்துவிட்டதா? உதயாதித்தியன் முன்பெல்லாம் இப்படி இல்லையே! ஸ்ரீபுரத்து ஜமீன்தாருடைய பெண்தான் ஏதாவது கெட்ட புத்தி சொல்லியிருப்பாள். உனக்கு என்ன தோன்றுகிறது?"

"எப்படித் தெரியும், மகாராஜா?"

"உன்னிடம் நான் வேதவாக்கியம் கேட்க வரவில்லை. உனககு என்ன தோன்றுகிறதோ, அதைச் சொல்லேன்."

"உங்களுக்கு மகாராணியின்மூலம் மருமகளின் சங்கதியெல்லாம் தெரியும். இது விஷயமாக நீங்கள் ஏதாவது அநுமானம் செய்யலாமே தவிர, நான் என்ன சொல்ல முடியும்?"

இதே சமயத்தில் ஒரு பட்டாணியன் உள்ளே வந்தான்.

"என்ன நடந்தது? காரியம் முடிந்ததா?" என்று பிரதாபன் கேட்டான்.

"ஆம்; மகாராஜா! இத்தனை நேரம் காரியம் முடிந்திருக்கும்,"

"அதென்ன! உனக்கு விஷயம் தெரியாதா?"

"தெரியும், மகாராஜா! இத்தனை நேரம் காரியம் கட்டாயம் முடிந்திருக்கும். ஆனால் அந்தச் சமயம் நான் அங்கே இல்லை."

"அப்படியென்றால், காரியம் எப்படி முடிந்திருக்கும்?"

"உங்கள் யோசனைப்படி நான் அவருடைய ஆட்களைக் கடத்திச் சென்றேன். ஹுசேன்கான் அதை முடித்திருப்பான்."

"செய்திராவிட்டால்?"

"என் தலையை ஜாமீன் வைக்கிறேன்."

"சரி, இங்கே இரு. உன் சகோதரன் வந்த பின்னர்ப் பரிசு கிடைக்கும்."

பட்டாணியன் தொலைவில் காவலாளிகளுடன் நின்றான்.

பிரதாபன் வெகு நேரம் கம்மென்று இருந்தபின் மந்திரியை நோக்கி மெல்ல, "இந்த விஷயம் குடிகளுக்குத் தெரியாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே!" என்றான்.

"மகாராஜா! கோபித்துக்கொள்ள வேண்டாம். இவ்விஷயம் குடிகளுக்குத் தெரியாமல் போகாது."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"இதற்கு முன் வெளிப்படையாகச் சிறிய தந்தையை வெறுத்திருக்கிறீர்கள். பெண்ணின் கல்யாணத்துக்கு

வசந்தராயரை அழைக்கவில்லை. அவர் தாமாகவே வந்து சேர்ந்தார். இன்று காரணமின்றி அவரை அழைத்து நடு வழியில் அவரைக் கொன்றீர்கள். இந்த நிலையில், கொலைக்கு மூல காரணம் நீங்கள் தான் என்பதில் வியப்பு ஒன்றுமில்லையே!"

"உன் எண்ணம் எனக்கு விளங்கவில்லை. இந்த விஷயம் வெளியாகி, என் பேரில் பழி ஏற்பட்டால் உன ஆசை தீரும். இராவிட்டால் விஷயம் வெளியாகிவிடுமென்று அல்லும் பகலும் நீ சொல்ல மாட்டாயே! வெளியாவதற்கு வேண்டிய காரணமே இல்லை. வேறு விதமாகப் பரவா விட்டால் நீயே வீடு வீடாகப் போய் இதைச் சொல்லு வாய்போல் தோன்றுகிறதே!"

"மகாராஜா, மன்னிக்கவேண்டும். என்னைவிட எல்லா விஷயங்களிலும் உங்களுக்கு அதிகம் தெரியும். உங்களுக் குப் புத்தி சொல்வது, என்னைப் போன்ற முட்டாள்களுக் குத் துணிகரமான செயல்தான். அப்படி இருந்தும் என்னை மந்திரியாக வைத்துக்கொண்டதால் என் குறுகிய புத்திக்கு எட்டியவைகளைச் சொன்னேன். உங்களுக்கு ஏதாவது கோபம் நேர்ந்தால், இந்த அடிமைக்கு வேலையி லிருந்து விலக உத்தரவு கொடுக்கலாம்."

பிரதாபாதித்தியன் உள்ளூறத் தேறுதல் அடைந் தான். மந்திரி நடுநடுவே இப்படிக் கடுமையாகச் சொல்வது அவனுக்கு உள்ளூறப் பிடித்துத்தான் இருந்தது.

"இந்தப் பட்டாணியர் இருவரையும் கொன்று விட்டால் விஷயம் வெளியாகாது என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான்.

"ஒரு கொலையை மூடிவைப்பதே கடினம். மூன்றாகி விட்டதோ அவ்வளவுதான். குடிகளுக்குக் கட்டாயம் தெரிந்துபோகும்."— மந்திரி இப்போதும் தமக்குத் தோன்றியதையே சொன்னார்.

"அப்பா! பயமாக இருக்கிறதே! குடிகளுக்குத் தெரிந்துவிடுமா! அப்பனே! யசோஹரும் ராய்கரும் ஒன்றல்ல; இந்த ராஜ்யம் குடிகளுடையதல்ல. அரசனைத் தவிர மற்ற யாவரும் குடிகள்தாம். ஆகவே, அந்தப் பூச்சாண்டி காட்டாதே! எவனாவது இவ்விஷயத்தில் எனக்கு எதிராகப் பேசினால், பழுக்கக் காய்ந்த இரும்பைக் கொண்டு அவன் நாக்கில் சூடு போடுவேன்."

மந்திரி தமக்குள் சிரித்து, 'குடிகளின் நாவைக் கண்டா இவ்வளவு பயம்? அப்படியும் பயமில்லை என்று வீறு பேசுவதைப் பார்' என்று கூறிக்கொண்டார்.

"கடைசிக் காரியங்களை முடித்துவிட்டு, ஆட்களுடன் ராய்கருக்குச் செல்ல வேண்டும். என்னைத் தவிர அந்த அரசுரிமைக்கு வாரிசு எவருமில்லை."

அவன் சொல்லி முடிக்கும் சமயம், கிழவர் வசந்தராய் மெல்ல உள்ளே வந்தார். அவரைக் கண்டதும், பேய் தானோ என்று பயந்து பிரதாபன் பின்வாங்கினான். வாய் திறந்து பேச அவனால் முடியவில்லை. வசந்தராய் அவனை அணுகி, அவன் உடம்பைத் தடவினார். "எதற்காக அஞ்சுகிறாய், பிரதாபா? நான் உன் சிற்றப்பன்; அதையும் நம்ப முடியவில்லையா! சரி; நான் ஒரு கிழவன். உனக்குக் கெடுதி செய்யும் திறமை எனக்கு இல்லை" என்றார்.

பிரதாபனுக்குச் சுயநினைவு வந்தாலும், அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. வாய் திறவாமல் அவன் கம்மென்று நின்றான். சிறிய தந்தையை வணங்கக்கூடச் செய்யவில்லை.

"பிரதாபா! ஏதாவது பேசு! என்னைக் கண்டு கூசும்படியாக ஏதாவது நீ செய்திருந்தால் அதன் பொருட்டுக் கவலைப்படவேண்டாம். நான் எதையும் எடுக்கவில்லை. வா; என்னைத் தழுவிக்கொள். உன்னைப் பார்த்து வெகு நாட்களாகின்றன. இனியும் எவ்வளவு நாட்களாகுமோ, சொல்வதற்கில்லை."

இவ்வளவு நேரம் பொறுத்துப் பிரதாபன் சிறிய தந்தையைவணங்கினன். அவர் அவனைத் தழுவிக்கொண்டார். இதற்குள் மந்திரி வெளியே போய்விட்டார். வசந்தராய் புன்சிரிப்புடன் பிரதாபனைத் தடவி, "வசந்தராய் ரொம்ப நாட்கள் உயிருடன் இருக்கிருன், இல்லையா பிரதாபா? காலம் ஆகிவிட்டது. இன்னும் ஏன் அழைப்பு வரவில்லையோ, கடவுளுக்குத்தான் தெரியும். ஆனல் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியிராது" என்றார்.

வசந்தராய் பேசி நிறுத்தியுங்கூடப் பிரதாபன் வாயே திறக்கவில்லை. வசந்தராய் மீண்டும் தொடங்கினர்: "தெளிவாகவே எல்லாம் சொல்லுகிறேன். எனக்கு எதிராகக் கத்தியை எடுத்தாய்; அதுவே என்னை வாளினும் அதிகமாகத் தாக்குகிறது. ஆனல் எனக்குச் சிறிதும் கோபமில்லை. இன்று உனக்கு முக்கியமாக இரண்டு விஷயங்கள் சொல்லவேண்டும். என்னைக் கொல்லாதே! அதனல் இந்த உலகிலும் சரி, பரலோகத்திலும் சரி, உனக்குச் சுகமிராது. இத்தனை நாள் என்சாவுக்காகக்காத்திருந்தபின் இன்னும் இரண்டு நாட்கள் இருக்கமாட்டாயா! இதற்காக வீண் பாவம் எதற்கு?" என்றார்.

இதற்கும் பிரதாபன் பதில் சொல்லவில்லை. குற்றத்தை ஒப்புக்கொள்ளவோ, அநுதாபப்படவோ இல்லை. உடனே வசந்தராய் வேறு பேச்செடுத்தார்: "பிரதாபா! ஒரு தடவை ராய்கருக்கு வா. நீ அங்கே வந்து வெகு நாட்களாகின்றன. எவ்வளவோ மாற்றங்களைக் காணலாம். வீரர்கள் கத்தியை விட்டுக் கலப்பையை எடுத்துவிட்டார்கள். சேனை இருந்த இடம் விருந்தினர் தங்கும் இடமாக இருக்கிறது..."

இதேசமயம் அந்தப்பட்டாணியன் நழுவமுயலுவதைக் கண்டு, பிரதாபனுடைய கோபம் அவனமேல் கப்பென்று பாய்ந்தது. "அவனை விடாதீர்கள்; ஜாக்கிரதை! கட்டிச்

சிறையில் தள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு விடு விடென்று அவன் வெளியே சென்ருன்.

ராஜா மந்திரியை அழைத்து, "அரசாங்க அலுவல் களில் நீ வரவர அலட்சியமாகத்தான் இருக்கிருய்"என்ருன்.

மந்திரி மெல்ல "மகாராஜா! இந்த விஷயத்தில் என் தவறு எதுவுமில்லை" என்ருர்.

பிரதாபன் கம்பீரமான குரலில், "நான் ஏதாவது விஷயத்தைக் குறிப்பிட்டேனு! நீ வரவர அலட்சியமாக இருக்கிருய் என்றுதானே சொன்னேன். அன்று உன் னிடம் ஒரு கடிதம் கொடுத்தேன். அதைத் தொலைத்து விட்டாய்" என்ருன்.

ஒன்றரை மாதங்களுக்கு முன்பு நடந்த விஷயம் அது. அந்தச் சமயத்தில் பிரதாபன மந்திரியை ஒன்றும் சொல்ல வில்லை.

"இன்னொரு நாள் உமேசராயிடம் உன்னைப் போகச் சொன்னேன். நீ ஆளை அனுப்பி அதை முடித்தாய். போதும்; வீணுகப் பிழையை மறைக்க முயலாதே! சொல்லி விட்டேன். நீ வரவர அரசியலில் கவனமே செலுத்துவ தில்லை."

அரசன் வாயில் காப்பாளரை அழைத்தான். முதல் நாள் சம்பளம் பிடிபட்ட அவர்களுக்குச் சிறைவாசம் கிடைத்தது.

பிரதாபன் அந்தப்புரத்துக்குச் சென்று அரசியை அழைத்தான். "வரவரக் குடும்பமே சீர்குலைகிறது. உதயா தித்தியன் முன்பெல்லாம் இப்படி இல்லையே! கண்ட நேரத்துக்கெல்லாம் அவன் வெளியே போக ஆரம்பித்து விட்டானே! குடிகளுடன் சேர்ந்துகொண்டு எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிருன். இதற்கெல்லாம் அர்த்தம் என்ன?" என்ருன்.

அரசி பயமடைந்தாள். "மகாராஜா! அவன் பேரில் தவறு ஒன்றுமில்லை_ எல்லாவற்றிற்கும் அந்த

மருமகள்தான் காரணம். என் செல்வம் முன்பு இப்படி இல்லையே! ஸ்ரீபுரத்து வீட்டில் மணம் நடந்த அன்று முதல் உதயன் ஏன் இப்படி ஆனுனென்று புரியவில்லை” என்றுள்.

அரசன் சுரமாவை அடக்கி வைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வெளியே சென்றுன். அரசி உதயாதித்தியனை அழைத்தாள். அவன் வந்ததும் அவள், “என் செல்வம் இப்படி இளைத்து, முகமே கறுத்துவிட்டானே! கல்யாணத்துக்குமுன் எப்படி இருந்தான் தங்கப் பொம்மை போல்! உன்னை இப்படி ஆக்கியது யாரடா! இதோ பார், அவள் சொல்வதைக் கேட்காதே! கேட்டுக் கேட்டுத்தான் உன் நிலை இப்படி ஆகிவிட்டது” என்று சொல்லும்போது சுரமா முக்காடு இட்டுக்கொண்டு ஒருபுறமாக நின்றிருந்தாள். அரசிசொல்லிக்கொண்டே போனுள். “அவள் கீழான வம்சத்தில் பிறந்தவளடா! உனக்குத் தகுந்தவளா? உனக்குப் புத்தி சொல்ல அவளால் ஆகுமா? நான் சொல்வதைக் கேள். உனக்குக் கெட்டது சொல்லி, குட்டிச்சுவரடிப்பதில்தான் அவளுக்கு மகிழ்ச்சி. அந்த ராட்சசியை உனக்கு மணம் செய்து வைத்தாரே மகாராஜா!” என்று அரசி கண்ணீர் வடித்தாள்.

உதயாதித்தியனுடைய நெற்றியில் வேர்வைத் துளிகள் அரும்பின. மனத்தின் சஞ்சலம் எங்கே வெளியாகி விடுமோ என்று பயந்து அவன் தலை குனிந்தான்.

கிழட்டு வேலைக்காரி ஒருத்தி (வெகு நாளைய பழக்கம் அவளுக்கு) கைகளை ஆட்டிக்கொண்டு, “ஸ்ரீபுரத்துப் பெண்களுக்கு வசியம் தெரியும். குழந்தைக்கு மருந்திட்டிருப்பாள்” என்று தொடங்கி உதயாதித்தியனை அணுகி, “அப்பா! அவள் உனக்கு மருந்து வைத்திருக்கிருளடா! அதோ இருக்கிருளே, அவள் சாமானியமானவளல்ல. ஸ்ரீபுரத்துப் பெண். அவர்கள் சூனியக்காரிகள் என் குழந்தைக்கு உடம்பில் என்ன இருக்கிறது!” என்று

சொல்லிச் சுரமாவைத் தீயெழ நோக்கினுள். கிழவி கைகளால் கண்ணைக் கசக்குவது கண்டு, அரசியின் துக்கம் பொங்கிக்கொண்டு கிளம்பியது. அந்தப்புரத்தில் இரண்டு பேருமாகச் சேர்ந்து அழத் தொடங்கிவிட்டனர். இதைக் கண்டு, அந்தப்புரத்து வேலைக்காரிகள் எல்லோரும் அரசியின் அறைக்குள் ஒப்பாரி வைக்கக் கூடினர். உதயாதித்தியன் ஏக்கத்துடன் சுரமாவை நோக்கினுன். முக்காட்டின் உள்ளிருந்து அதைக் கண்ட சுரமா, ஒன்றும் சொல்லாமல் மெல்லத் தன் அறைக்குச் சென்ருள்.

மாலை நேரமானதும் அரசி பிரதாபனிடம், "இன்று குழந்தைக்கு எல்லாம் தெளியச் சொன்னேன். அப்படி அவன் ஒன்றும் மோசமாகிவிடவில்லை. எடுத்துச் சொன்ஞல் தெரியும்; இன்று அவனுக்குக் கண் திறந்துவிட்டது" என்ருள்.



# 6

## கிழவனும் குமரியும்

**வி**பாவின் முகவாட்டத்தைக் கண்டு சுரமா மன வேதனைப்பட்டாள். அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "ஏன் விபா, கம்மென்றிருக்கிருய்? உனக்குத் தோன்றுவதைச் சொல்லுவதுதானே!" என்ருள்.

விபா மெல்ல, "சொல்ல என்ன இருக்கிறதம்மா?" என்ருள்.

"அவரைப் பார்த்து வெகு நாட்களாகின்றன. மனசு அடித்துக்கொள்ளாதா! நீ அவரை வரும்படி சொல்லி ஒரு கடிதம் எழுதுவதுதானே? உங்கள் அண்ணுவின் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்" என்ருள் சுரமா.

விபாவின் கணவன் ராமசந்திரராய் சந்திரத்வீபத்தின் அரசன்; அவனைப்பற்றித்தான் பேச்சு நடந்தது.

விபா தலைகுனிந்து சொல்லிக்கொண்டே போனுள்: "இங்கே யாரும் அவரை லட்சியம் செய்யவில்லை; வரவழைப்பதும் அவசியமென்று கருதவில்லை. அவர் இங்கே வராமல் இருப்பது நல்லதல்லவா! அவர் தாமாகவே வருவதானுலுங்கூட நான் தடை செய்வேன். அவர் அரசர்; அவருக்கு மதிப்பு இராத இடத்துக்கு அவர் ஏன் வரவேண்டும்? அப்பா அவரை அவமானம் செய்ய, அவர் எந்த விதத்தில் நம்மைவிடத் தாழ்ந்தவர்?" - அவளால் இருக்க முடியவில்லை. முகம் சிவந்து ஒவென்று அழத் தொடங்கினுள்.

சுரமா, விபாவின் முகத்தைத் தன் மார்பில் அழுத்திக்கொண்டு, கண்ணீரைத் துடைத்தாள். "நீ ஆண் பிள்ளையாக இருந்தால், என்ன செய்வாய், சொல், விபா? அழைபபு வரவில்லை என்று, மாமனுர் வீட்டுக்குப் போகாமல் இருப்பாயா?" என்ருள்.

"இல்லை. நான் ஆண்பிள்ளையானால் இப்போதே போவேன். மான அவமானமெல்லாம் பார்க்கமாட்டேன். ஆனால் அதற்காக மரியாதையுடன் அழைக்காமல் அவர் வரவேண்டுமா?" என்றாள் விபா.

விபா இவ்வளவு தூரம் என்றைக்குமே பேசியவளல்ல. இன்று மனத் தீவிரத்தில் தனக்குத் தோன்றியதை எல்லாம் சொல்லிவிட்டாள். இப்பொழுது அவளுக்கே கூச்சமாக இருந்தது. எவ்வளவோ சொல்லிவிட்டோமே என்று வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது. வர வர உள்ளத்தின் தீவிரம் குறைந்ததும், மீண்டும் பெருஞ்சுமை ஒன்று அவள் உள்ளத்தை அழுத்தியது. விபா தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு, சுரமாவின் மடியில் குப்புறப் படுத்தாள். சுரமா தலைகுனிந்து அவளுடைய கறுத்த கூந்தலைக் கோதிவிட்டாள். இப்படிச் சில நேரம் கழிந்தது. இருவருமே பேசவில்லை. விபாவின் விழிகளிலிருந்து ஒரொரு துளியாகக் கண்ணீர் பெருகியது. சுரமா அதை மெல்லத் துடைத்தாள்.

வெகுநேரங் கழித்து, அந்திவேளை வந்தது. விபா மெல்ல எழுந்து உட்கார்ந்து, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள்; "சீ! இன்று குழந்தைபோல் நடந்து கொண்டுவிட்டோமே" என்று சொல்வதுபோல் தோன்றியது அந்தச் சிரிப்பு. முகத்தைத் திருப்பிக்கொண்டு நகர்ந்துபோய் ஓடிவிட முயன்றாள் சுரமா ஒன்றும் சொல்லாமல் அவள் கையைப் பிடித்தாள். பழைய விஷயத்தை எடுக்காமல் அவள், "விபா! உனக்குத் தெரியுமா, தாத்தா வந்திருக்கிறாராமே!" என்றாள்.

"தாத்தாவா வந்திருக்கிறார்?"

"ஆமாமடி."

விபா ஆவலுடன், "எப்போது வந்தார்?" என்றாள்.

"நடுப்பகலுக்கு மேல் ஆகியிருக்கும் வரும்பொழுது."

"இன்னும் நம்மைப் பார்க்க வரவில்லையே அவர்!"

விபாவின் உள்ளத்தில் சற்றுப் பிணக்கு ஏற்பட்டது. தாத்தாவின் மேல் அவளுக்குச் சற்று அக்கறை அதிகம். ஒரு தடவை, வசந்தராய் உதயாதித்தியனுடன் அதிக நேரம் பேசி, விபாவை அந்தப்புரத்தில் மூன்று மணி நேரம் காக்க வைத்தார். தன்னைப் பார்க்கக்கூட வரவில்லையே என்று விபாவுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. அவள் அது விஷயமாக ஒன்றும் சொல்லாமற் போனாலும், தாத்தாவுடன் முகமலர்ந்து பேச அவளால் முடியவில்லை.

வசந்தராய் உள்ளே வந்ததும் சிரித்துக்கொண்டே, பாடத் தொடங்கினார்:

"காண வந்தேன்பல நாட்களின்பின்;
கணமிரண்டேதான் தங்கிடுவேன்.
வீணில், விபா,நீ அஞ்சாதே!
வெகுதினம் யானினி இருந்திடேன்.
தூணின் மறைவில் நின்றபடி
சும்மா உன்முகம் நோக்கிடுவேன்;
தேனின் மொழியாய்! வாய்திறவாய்!
சற்றே உன்சொல் கேட்டிடுவேன்."

பாட்டைக் கேட்டு விபா தலைகுனிந்து சிரித்தாள். அவளுக்குக் களிப்புக் கரை காணவில்லை. அது எங்கே தாத்தாவுக்குத் தெரிந்துவிடுமோ என்று அவள் பரபரப்பு அடைந்தாள்.

சுரமா விபாவின் முகத்தை நிமிர்த்தி, "தாத்தா, விபாவின் சிரிப்பைக் காண மறைவில் போவானேன்?" என்றாள்.

"ஊஹூம்; 'சிரிக்காவிட்டால் கிழம் போகாது. அதற்காகவாவது சிரிப்போம்' என்பதே அவள் எண்ணம். திருடியாயிற்றே! எனக்கு அவள் வேஷம் தெரியாதா? என்னை விரட்டத்தானே அவள் பார்க்கிறாள்? ஆனால் அது எளிதில் நடக்காது. வந்தாயிற்று; நன்றாக எரிச்சல் மூட்டவேண்டும். நான் போய் வெகு நாட்கள் வரையில்

அது அவள் மனசில் இருக்கவேண்டாமா?" என்றார் வசந்தராய்.

சுரமா சொன்னாள்: "தாத்தா! விபா காதோடு காதாக என்னிடம், 'தாத்தாவை நினைவில் தானே வைத்துக்கொள்ள வேண்டும்? அதற்கு அவர் மூட்டிய எரிச்சலே போதும். இன்னும் புதிதாக ஒன்றும் சொல்லவேண்டாம்' என்றாளே!"

இதைக் கேட்டு வசந்தராயின் மகிழ்ச்சி பின்னும் அதிகமாகியது. அவர் உடல் குலுங்க நகைத்தார்.

விபா அசடு வழிய, "நான் ஒன்றும் அப்படிச் சொல்ல வில்லை; நான் வாய்கூடத் திறக்கவில்லை!' என்றாள்.

"தாத்தா, உங்கள் ஆசை நிறைவேறியது. நீங்கள் சிரிப்பைப் பார்க்க நினைத்தீர்கள்; பார்த்தாயிற்று. பேச்சைக் கேட்க விரும்பினீர்கள். அதுவும் ஆயிற்று. இனி உங்கள் ஊருக்குப் போகலாமே" என்றாள் சுரமா.

"ஊஹூம், அது என்னால் முடியாதம்மா. பதினைந்து பாட்டும், நரைத்த மயிர்த் தலையுமாக வந்துவிட்டேன். அதை எல்லாம் தீர்த்துக்கொள்ளாமல் போகமுடியாது."

விபாவினால் சும்மா இருக்க முடியவில்லை. அவள் சிரித்து, "தாத்தா! உன் தலை நிறைய எங்கே இருக் கிறது மயிர்? பாதி வழுக்கைதானே!" என்றாள்.

தாத்தாவின் விருப்பம் நிறைவேறியது. பல நாட்கள் கழிந்தபின் விபாவை முதலில் பேச வைப்பது கொஞ்சம் சிரமந்தான். ஆனால் அவள் தாத்தாவிடம் பேசத் தொடங்கிவிட்டாலோ, அவளை நிறுத்தப் பின்னும் அதிக மாகக் கஷ்டப்பட வேண்டியதுதான். ஆனால் தாத்தா வைத் தவிர வேறு யாரிடமும் விபா அதிகமாகப் பேச மாட்டாள்.

வசந்தராய் தம் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே, "அந்த நாள் போயிற்றம்மா! வசந்தராயின் தலையிலும் கறேலென்று கற்றை மயிர் இருந்தது. அன்று இவ்வளவு தூரம் சிரமப்பட்டு நடந்து உங்களைச் சிரிப்பு

மூட்ட வந்திருப்பேனு? கொஞ்சம் தலை நரைத்தாலும் உங்களைப்போல் ஐந்து அழகிகள் நரை மயிர் எடுக்க வருவார்கள்; கையுடன் கறுத்த மயிரையும் எடுத்துவிடு வார்கள்'' என்ருர்.

விபா, "ஏன் தாத்தா, உன் தலையில் கற்றை மயிர் இருந்தபோது, இப்போதைவிட நன்ருக இருந்தாயோ பார்வைக்கு?" என்று கேட்டாள். அவள் குரலில் ஆவல் தொனித்தது.

விபாவுக்கு அந்த விஷயத்தில் உள்ளூறச் சந்தேகந் தான். தாத்தாவின் வழுக்கைத்தலை, மீசை தாடியே இல்லாத முகத்தின் மலர்ச்சி, பழுத்த மாம்பழம் போன்ற இனிய சுபாவம் இவைகளை எல்லாம் மறந்து, அவரை வேறுவிதமாக நினைப்பது சரியாகத் தோன்றவில்லை. மீசை தாடியுடன் அவர் முகத்தைப் பற்றிநினைக்கும் போதே அவளுக்குச் சிரிப்பு வந்தது. தாத்தாவுக்குப் போய் மீசையா? வழுக்கைத் தலை இராமல் தாத்தாவா!

"அந்த விஷயமாக ஒவ்வொருத்தர் ஒவ்வொரு வித மாக நினைக்கிருர்கள. என் பேத்திகள் வழுக்கையைக் கண்டு மயங்குகிருர்கள். அவர்கள் என் தலைமயிரைக் கண்டதில்லை. என் பாட்டிகளோ தலையில் கற்றைமயிரைக் கண்டு மகிழ்வார்கள். ஆனல் என் வழுக்கைத் தலையை அவர்கள் பார்க்கவில்லை. இரண்டையும் கவனித்த வர்கள், இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை" என்ருர் வசந்தராய்.

"ஆனல், தாத்தா, இதற்குமேல் உன் தலையில் வழுக்கை விழுந்தால் நன்ருகவே இராது" என்ருள் விபா.

"தாத்தா! வழுக்கைத் தலையைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். இப்போது விபாவுக்கு ஏதாவது ஒரு வழி செய்யவேண்டுமே!" என்ருள் சுரமா.

விபா பரபரவென்று தாத்தாவிடம் போய், "தாத்தா! உன் நரைமயிரெல்லாம் எடுக்கட்டுமா?" என்ருள்.

"நான் சொல்ல வந்தது..."

"தாத்தா, கேட்காதே; உன்..."

"விபா, கம்மென்றிரு! தாத்தா நீங்கள் போய் ஒரு தடவை..."

"தாத்தா, உன் தலையில் நரைமயிர் மட்டுந்தான் இருக்கிறது. அதையும் எடுத்துவிட்டால் பூராவும் வழுக்கை தான்."

"விபா, இப்படிக் கேட்கவொட்டாமல் குறுக்கே பேசினால், நான் இந்தோள ராகம் ஆலாபனை செய்ய ஆரம்பித்துவிடுவேன்" என்று வசந்தராய் தம் சிதாரின் தந்திகளை மீட்டினர்.

இந்தோளம் என்றால் விபாவுக்கு வெறுப்புத் தட்டுவது வழக்கம். "நான் ஓடிப்போகிறேன். அப்புறமாக ஆலாபனை செய்" என்று அவள் ஓட்டம் பிடித்தாள்.

சுரமா ஆழ்ந்த குரலில், "விபா உள்ளூற அல்லும் பகலும் மிகவும் கஷ்டப்படுகிறாள். இது தெரிந்தால் மகாராஜாவின் மனசுகூட இரங்கிவிடும்" என்றாள்.

"என்ன அவளுக்கு? ஏன்?" என்று வசந்தராய் ஆவலுடன் சுரமாவின் அருகில் போய் உட்கார்ந்தார்.

"வருஷத்தில் ஒரு நாள்கூட மாப்பிள்ளையை அழைத்து விருந்தளிக்க எவருக்குமே மனமில்லை."

"உண்மைதான்" என்றார் வசந்தராய்.

"கணவனுக்குச் செய்யும் இந்த அவமானத்தைத் தாங்க எத்தனை பெண்களால் முடியும்? விபா நல்லவள்; அதனால்தான் யாரிடமும் சொல்வதில்லை; மனசுக்குள் புழுங்குகிறாள்."

வசந்தராய் கவலையுடன், "விபா மனசுக்குள் புழுங்குகிறாளா?" என்று கேட்டார்.

"இன்று நடுப்பகலில் என்னிடம் வந்து அதிகமாக அழுதாள்."

"அழுதாளா?"

"ஆமாம்."

"பாவம், அவளை அழைத்து வா. நான் பார்க்கிறேன்."

சுரமா விபாவைப் பிடித்துக்கொண்டு வந்தாள். வசந்தராய் அவள் மோவாயைத் தொட்டு, "நீ ஏனம்மா அழுகிறாய்? உனக்கு ஏதாவது கஷ்டம் வந்தால் தாத்தா விடம் சொல்வதற்கென்ன? என்னால் ஆனதைச் செய்வேனே நான்! இப்போதே போய்ப் பிரதாபனிடம் சொல்லுகிறேன்" என்றார்.

"தாத்தா, உன் காலில் விழுகிறேன். என் விஷயமாக அப்பாவிடம் ஒன்றும் சொல்லாதே. சொல்லவேண்டாமே!" என்றாள் விபா.

அவள் சொல்லி முடிப்பதற்குள் வசந்தராய் வெளியே போய்விட்டார். பிரதாபாதித்தியனிடம் அவர், "உன் மருமகனை அழைக்காதது அவனை அவமானம் செய்தது போல் ஆகிறது. யசோஹரின் மருமகன் பெறவேண்டிய மரியாதையை அவனுக்குச் செய்யாமல் இருந்தால், அது உனக்குத்தானே அவமானம்? இதில் உனக்கென்ன பெருமை?" என்றார்.

பிரதாபன் சிற்றப்பாவின் வார்த்தைக்குக் குறுக்குச் சொல்லவில்லை. ஆட்களை அழைத்துச் சந்திரத்வீபத்துக்கு அழைப்பிதழ் அனுப்ப உத்தரவு செய்தான்.

அந்தப்புரத்தில் விபா, சுரமா இவர்களிடம் வந்து வசந்தராய் சிதார் கச்சேரி செய்யலானார்:

"வாடு முகந்தனில் புன்னகை அரும்பிட,
மனமது குளிர்ந்தே இன்பம் சிலிர்த்திட..."

விபா கூச்சத்துடன், "தாத்தா, என் விஷயம் எல்லாம் அப்பாவிடம் சொல்லிவிட்டாயா?" என்றாள்.

வசந்தராய் தம் விருப்பப்படி பாடிக்கொண்டே போனார்:

"வாடு முகந்தனில் புன்னகை அரும்பிட
மனமது குளிர்ந்தே இன்பம் சிலிர்த்திட
ஏடி தோழி! பழந்துகில் களைந்தே
என்றனக் கணிகலம் பூட்டிடுவாயே!"

விபா சிதாரின் தந்திகளில் கையை வைத்து, அதை நிறுத்தினாள். "அப்பாவிடம் என் விஷயத்தை எல்லாம் சொன்னாயா?" என்றாள்.

இதே சமயம் உதயாதித்தியனுடைய எட்டு வயதுத் தம்பி சமராதித்தியன் அறையினுள் எட்டிப் பார்த்தான். "அகப்பட்டுக்கொண்டயா, அக்கா! தாத்தாவோடுதானே பேசுகிறாய்? அம்மாவண்டைச் சொல்கிறேன், இரு" என்றான் அவன்.

"அடே, நீயா? வா, அப்பா!" என்று வசந்தராய் அவனைப் பிடித்துக்கொண்டார்.

வசந்தராயும் சுரமாவுமாகத்தான் உதயாதித்தியனைக் குட்டிச்சுவரடித்தார்கள் என்று அரச குடும்பத்தினர் நம்பினார்கள். அதனால் வசந்தராய் வரும்போதெல்லாம் எல்லோரும் அதிகக் கவனத்துடன் இருப்பார்கள். சமராதித்தியன தாத்தாவின் பிடியிலிருந்து விடுபடத் திமிறினான். வசந்தராய் சிதாரைக் கொடுத்து, தோளில் தூக்கி, மூக்குக் கண்ணாடி போட்டு, அவனைப் பலவிதங்களில் வசம் செய்துகொள்ளவே, அன்றெல்லாம் அவன் தாத்தாவின் பின்னாலேயே சுற்றினான். ஓயாது சிதார் வாசித்து, அதன் ஐந்து தந்திகளையும் அறுத்தான்; அதன் ஜீவாவைப் பிடுங்கிக்கொண்டு, அவன் கொடுக்கவே இல்லை.

---

# 7

## விகடனும் வேந்தனும்

சந்திரத்வீபத்து அரசன் ராமசந்திர ராய் தன் அறையில் உட்கார்ந்திருந்தான். எண்கோணமாக இருந்தது அவன் அறை. உத்தரத்திலிருந்து துணி சுற்றிய விளக்குச் சங்கிலி தொங்கியது. சுவரின் புரைகளில் கணேசர் உருவம் ஒன்றும், கிருஷ்ணருடைய பல சிலைகளும் இருந்தன. பிரசித்தி பெற்ற சிற்பி வடகிருஷ்ண கும்பகாரன் தன் கையால் செய்த சிலைகள் அவை. நான்கு புறமும் படுதாக்கள் தொங்கின. நடுவில் சரிகை தைத்த பட்டு மெத்தையில் அரசன் உட்கார்ந்திருந்தான். சுவரில் நான்கு பக்கங்களிலும் நாட்டுக் கண்ணாடிகள் இருந்தன. அவைகளில் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அரசனைச் சுற்றி இருந்த மனிதக் கண்ணாடிகளும் எதற்கும் உதவாதவைதாம்; உடலின் உருவந்தான் பெரிதாகத் தெரியும். அரசனுடைய வலது பக்கம் பெரிய உக்கா; மந்திரி ஹரிசங்கரும் இருந்தார். இடப்புறம் ரமாயி பாண்டனும், மூக்குக் கண்ணாடியுடன் சேனதிபதி பர்னாண்டிஸும் நின்றார்கள்.

"அடே ரமாயி!" என்றான் அரசன்.

"உத்தரவு, மகாராஜா!"

அரசன் சிரித்துத் தீர்த்தான். மந்திரி அரசனையும் மிஞ்சினன். பர்னாண்டிஸோ சிரிப்பு மிகுந்து கை கொட்டினன். களிப்பில் ரமாயியின் கண்கள் மினுக் மினுக்கென்று சுடர் விட்டன. ரமாயி சொல்வதைக் கேட்டுத் தான் சிரிக்காவிட்டால் சுவை தெரியாதவனென்று பெயர் வருமென்று அரசன் எண்ணினன். அரசன் சிரித்தால் தானும் சிரிப்பது கடமை என்பது மந்திரியின் எண்ணம். இதில் சிரிப்பதற்கு ஏதோ இருக்கவேண்டுமென்று

பர்ஞண்டிஸ் முடிவு செய்தான். தான் வாயைத் திறந்து பேசும்போது; யாராவது சிரிக்காமல் இருந்தால், அவர்களை அழவைப்பான் ரமாயி. இல்லையானல், ரமாயியின் பழங் காலத்து ஹாஸ்யங்களைக் கேட்டு எவர் சிரிப்பார்கள்! பயந்தோ, கடமை என்றோ எல்லோரும் சிரிப்பை வர வழைத்துக்கொள்வது வழக்கம்.

"என்னப்பா செய்தி?" என்ருன் அரசன்.

இனிக் குறும்பு செய்வது அவசியம் என்று எண்ணிஞன் ரமாயி. "சேஞபதியின் வீட்டில் திருடன் வந்ததாகக் கேள்விப்பட்டேன்" என்ருன்.

சேஞபதிக்கு இருப்புக்கொள்ளவில்லை. பழைய தமாஷாவைக் கிளப்பித் தன்னை ஆட்டிவைக்கப் பார்க்கிருன் ரமாயி என்று அவனுக்குப் புரிந்தது. ரமாயியைக் கண்டால் அவனுக்குப் பயம்; ரமாயியும் அவனையேதான் பிடித்துக்கொள்ளுவது வழக்கம். அரசனுக்கோ சிரிப்புச் சொல்லி முடியாது. ரமாயி வந்ததும் பர்ஞண்டிஸைக் கூப்பிட்டு அனுப்புவான். அரசனுடைய வாழ்வில் இரண்டே பொழுதுபோக்குகள். ஒன்று ஆட்டுச் சண்டை; மற்ருென்று ரமாயியின்முன் பர்ஞண்டிஸை நிற்க வைப்பது. அரசாங்கத்தில் தலையிட்டுக்கொண்டது முதல் சேஞபதியின் உடலில் வாளோ, அம்போ பட்டதில்லை. சிரிப்பின் பாணங்களை உடம்பில் தாங்கியே அந்தப் பேர்வழி அழுகிற நிலைக்கு வந்துவிட்டான்.

அரசன் கண் சிமிட்டி, "அப்புறம்?" என்ருன்.

"சொல்கிறேன், மகாராஜா!" (அப்போது பர்ஞண்டிஸ் தன் நிஜாரின் பித்தான்களை அவிழ்ப்பதும் போடுவதுமாக இருந்தான்.) "இன்று மூன்று நாளாகச் சேஞபதியின் வீட்டில் இராத்திரி திருடன் வந்துகொண்டிருந்தான். அவருடைய சம்சாரம் தெரிந்துகொண்டு அவரை எழுப்பிஞளாம். ஆனல் அவருடைய தூக்கம் கலைந்தால்தானே!' என்ருன் ரமாயி.

அரசன், மந்திரி இருவரும் சிரிக்கவே பர்ஞண்டிஸும் சிரிக்க வேண்டியதாயிற்று.

"மறுநாள் நடுப்பகல் சம்சாரத்தின் அதட்டல் தாங்காமல் கைகூப்பி, 'உனக்கு நமஸ்காரம். இன்று இராத்திரி திருடனைப் பிடிக்கிறேன்' என்றார். அன்றிரவு மணி இரண்டு இருக்கும்பொழுது, வீட்டுக்காரி, 'திருடன் வந்திருக்கிறானே!' என்றாள். அவர், 'அடடா! விளக்கு எரிகிறதே! என்னைக் கண்டு திருடன் ஓடியல்லவா போவான்!' என்றாராம். கடைசியில் திருடனை அழைத்து, 'உள்ளே விளக்கு இருக்கவே நீ பிழைத்தாய்! பேசாமல் ஓடு! நாளைக்கு வா, இருட்டில். எப்படி ஓடுவாய், பார்க்கலாம்' என்றாராம்!"

"அரசன் மந்திரி இருவரும் சிரிக்க, பர்ஞண்டிசும் வேறு வழியின்றி நகைத்தான்.

"அப்புறம்?"

அரசனுக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லை என்று ரமாயி கண்டுகொண்டான். "எதனாலோ திருடனுக்குப் பயமே உண்டாகவில்லை. அதற்கு மறுநாளும் அவன் சேனாபதியின் வீட்டுக்கு வந்தான். வீட்டுக்காரி, 'இன்று கூட வந்திருக்கிறானே திருடன்' என்றாளாம். 'நீ எழுந்திரு' என்றார் சேனாபதி. 'நான் எழுந்து என்ன செய்வது?" என்றாள் வீட்டுக்காரி. நம்ஐயா, 'உள்ளே விளக்கை ஏற்று; ஒரே இருட்டாக இருக்கிறதே!' என்றார். வீட்டுக்காரிக்குக் கோபம்; சேனாபதிக்கு அதற்குமேல் அதிகக் கோபம். 'இதோ பார்; உன்னால்தான் எல்லாம். விளக்கேற்றி என் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வா' என்றார். திருடன் இதற்குள் காரியத்தை முடித்துக்கொண்டு, 'ஐயா, கொஞ்சம் உக்கா தருவீர்களா?' என்றான். ஐயா அவனை அதட்டி, 'இருடா. தருகிறேன். ஆனால் என்கிட்டே வந்தாயோ துப்பாக்கியால் மண்டையைப் பிளந்துவிடுவேன்' என்றார். திருடன் உக்கா குடித்ததும், 'ஐயா,

கொஞ்சம் விளக்கைப் போட்டால் உபகாரமாக இருக்கும். கன்னக்கோல் எங்கேயோ விழுந்துவிட்டது' என்றான். சேனாபதி தம் சம்சாரத்திடம், 'கொஞ்சம் மறைவாக இரு. அவனுக்குப் பயம் உண்டாகிவிட்டது' என்று சொல்லி விட்டு விளக்கைப் போட்டார். திருடன் எல்லாச் சாமான் களையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு, நிதானமாக வெளியேசென்றான். சேனாபதிசம்சாரத்திடம், 'பார்த்தாயா, எப்படிப் பயந்துகொண்டான் பயல்!' என்றார்."

அரசனும் மந்திரியும் விழுந்து விழுந்து சிரித்தார் கள். பர்னாண்டிஸூம் நடுநடுவே கஷ்டத்துடன் கலந்து கொண்டான்.

"ரமாயி, நான் மாமனார் வீட்டுக்குப் போகும் விஷயம் உனக்குத் தெரியுமா?" என்றான் அரசன்.

ரமாயி முகத்தைக் கோணிக்கொண்டு சொல்ல ஆரம் பித்தான்: "அஸாரம் கலு ஸம்ஸாரம்;ஸாரம் ச்வசுரமந்திரம் (உலகில் யாவும் சாரமற்றவை; மாமனார் வீடொன்றே சார முள்ளது) என்ற விஷயம் பொய் அல்ல. (முதலில் அரசன், பின்மந்திரியும்,சேனாபதியும்சிரிக்கத்தொடங்கினர்).மாமனார் வீட்டில் எல்லாம் சுவையுள்ளவைதான்: சாப்பாடு, ஆதரவு எல்லாம். பால் கோவாவும் மீன் கறியும் கிடைக்கும். ஆனால் மோசமான பொருள் இந்த மனைவிதான்."

ராஜா சிரித்தான். "அதென்னடா, உன் அர்த் தாங்கி (பாதி உடல்–மனைவி)..." என்று பேச்செடுத்தான்.

ரமாயி கை கூப்பி, "மகாராஜா! அவளை அர்த்த (பாதி) அங்கி (உடல்) என்று சொல்லாதீர்கள். மூன்று ஜன்மம் தவம் செய்தாலுங்கூட அவள் உடலில் பாதியாக முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. என்னைப் போல் ஐந்து பேரைச் சேர்த்தால்கூட அவள் உருவத்தில் ஒன்றுபடாது" என்றான். எல்லாரும் சிரித்தார்கள். மந்திரிக்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை. அதனால் அவன்தான் அதிகமாகச் சிரித்தான்.

"உன் மனைவி மிகவும் சாது; வீட்டுக் காரியங்களில் திறமை வாய்ந்தவளென்று கேள்விப்பட்டேனே!" என்றான் அரசன்.

"அதெல்லாம் எதற்கு? மகாராஜா! மற்ற எல்லாம் வீட்டில் இருக்கிறது. என்னால்தான் நிற்க முடியவில்லை. விடிந்ததும் விடியாததுமாக வீட்டுக்காரி துரத்துவதில் ஒரேயடியாக மகாராஜாவின் வாசலில் வந்து விழுகிறேன்."

இதோடு ரமாயியின் சம்சாரத்தையும் பற்றிச் சொல்லி விடுகிறேன். அவள் வரவர மெலிந்து இளைத்துக்கொண்டு வந்தாள். ரமாயி வீட்டுக்கு வந்தால், எங்கே போய் ஒளிந்து கொள்வதென்று அலைவான். அரசனுடைய சபையில் ஒரு விதமாகப் பல்லிளிக்கும் ரமாயி வீட்டில் வேறு விதமாக மனைவியிடம் பல்லைக் காட்டுவான். அவளுடைய உண்மை யான தோற்றம் தெரிந்தால் சிரிப்பிற்குப் பதில் இரக்கந் தான் தோன்றும். அதனால் ரமாயி தன் மனைவியைப் பருத்து, முரட்டுச் சுபாவம் வாய்ந்தவளாகவே அரச னிடம் வர்ணிப்பான். அரசனும் மந்திரிகளும சிரிப்பார்கள்.

சிரிப்பு நின்றதும் அரசன், "அடே ரமாயி! நீயும் சேனா பதியும் என்னுடன் வரவேண்டும்" என்றான்.

தன்மேல் இரண்டாவது படையெடுப்பு வரத் தயா ராக இருப்பதை உணர்ந்தான் பர்னண்டிஸ். அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

"கொண்டாட்டத்துக்குப் போகச் சேனாபதிக் குஆட் சேபம் எதுவும் இராது! அதுதான் போர்க்களமில்லையே"!' என்றான் ரமாயி.

அரசனும் மந்திரியும், இன்னொரு வேடிக்கை வருவதை உணர்ந்து, "ஏன்?" என்றார்கள்.

"துரையின் கண்ணில் எப்பொழுதும் கண்ணாடி இருக் கும்; தூங்கும்போதுகூட. இராவிட்டால் சரியாகக் கனவு காண முடியாதல்லவா! சேனாபதி போருக்குச் செல்லத் தயங்குவதற்கு வேறு காரணம் எதுவுமில்லை. பீரங்கிக்

குண்டு பட்டு, கண்ணுடி உடைந்து, கண் குருடாகிவிட்டால் என்ன செய்வது என்றுதான் பயம்; சரிதானே?"

சேனுபதி அழாத குறையாகக் கண்சிமிட்டி, "இராமல் என்ன!" என்று எழுந்தான். "மகாராஜா! உத்தரவானுல் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்" என்ருன்.

அரசன் சேனுபதியிடம் தான் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி, "பதினுறு துடுப்புள்ள நம் பெரிய தோணியையும் தயார் செய்" என்று உத்தரவிட்டான். மந்திரியும் சேனுபதியும் வெளியே சென்ருர்கள்.

"ரமாயி, உனக்கு எல்லாம் தெரியுமென்று நினைக்கிறேன். போன தடவை மாமனுர் வீட்டில் என்னை அலைக்கழித்துவிட்டார்களே!"

"ஆம், மகாராஜா! உங்களுக்கு வாலைக்கூட ஒட்ட வைத்தார்களே!"

அரசன் சிரித்தான். பற்கள் மின்னெளி தந்தனவே ஒழிய, உள்ளூற மேகம் கவிந்துகொண்டுதான் இருந்தது. இந்த விஷயம் ரமாயிக்குத் தெரிந்ததுபற்றி உள்ளூற அவனுக்கு மகிழ்ச்சி இல்லை. மற்றவர்களுக்குத் தெரிந்தாலுங்கூட ஒன்றுமில்லை.

"உங்கள் மைத்துனன் ஒருவன் என்னிடம் வந்து, 'உங்கள் ராஜாவுக்கு வால் முளைத்திருக்கிறதே! அவர் ராமசந்திரனு, இல்லை ராமதாசனு! முன்பு எனக்குத் தெரியாதே!' என்ருன். நான் பட்டென்று, 'முதலில் எப்படித் தெரியும்? முன்புதான் இல்லையே! உங்கள் வீட்டில் கல்யாணமாகவே, அந்த ஊர் வழக்கத்தை மேற்கொண்டார்' என்றேன்."

அரசன் அதைக் கேட்டுக் களிப்படைந்தான். ரமாயியால் தன் வம்சம் பிரகாசமடைந்து, பிரதாபாதித்தியன் குலம் மங்கியது என்று அவன் எண்ணினுன். அரசன் போர், பகைமை எதுவும் வைத்துக்கொள்ளவதில்லை. இந்தச்

சிறு விஷயங்களையே சண்டையைப் போல் நோக்குவது வழக்கம். இத்தனை நாள் பெரிய தோல்வியும் அவமானமும் ஏற்பட்டுவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்தான். அல்லும் பகலும் இது அவனுக்கு நினைவு வரும். கூச்ச மிகுதியால் 'பூமி இரண்டாகப் பிளக்கக்கூடாதா' என அவன் ஏங்குவதுண்டு. 'சேனுபதி' ரமாயி போரில் வென்று வந்ததாக எண்ணி, அவன் ஆறுதலடைந்தான். அப்படியும் அவனுடைய கூச்சம் முற்றும் தீரவில்லை.

"இந்தத் தடவை போய் வெற்றியுடன் வரவேண்டும், தெரியுமா! வெற்றி கிடைத்ததோ என் மோதிரத்தை உன் விரலில் போடுவேன்."

"வெற்றிக்கு என்ன குறைச்சல்? மகாராஜா! ரமாயியை மட்டும் அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்ருல், மாமியாரம்மாவை முதற்கொண்டு சாணி கரைத்துக் கொட்டி விட்டுத் திரும்புவேன்" என்ருன் ரமாயி.

"அதற்கென்ன! உன்னை நான் அழைத்துப் போகிறேன்."

"உங்களால் என்னதான் ஆகாது!"

அரசனும் அதை நம்பினுன். தன்ஞல் எதுவும் ஆகும்; தன்னை அண்டியவர், "மகாராஜா! உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும. என் ஆசையை நிறைவேற்ற வேண்டும்" என்ருல் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான், "அப்படியே ஆகுக" என்று சொல்லுவான். அவனுல் ஆகாதது என்று ஒன்று இல்லை; இவ்வாறே எல்லோரும் எண்ணவேண்டும் என்பது அவன் எண்ணம். ரமாயியை உள்ளே அழைத்துப் போய் ராணியைக் கேலி செய்யா விட்டால் தன் பெயர் ராமசந்திர ராய் அல்ல என்று அவன் சபதம செய்துகொண்டான். இந்தக் காரியங்கூட அவனுல் செய்யமுடியவில்லை என்ருல் அவனும் ஓர் அரசனு!

அவன் ராமமோகன மல்லனை அழைத்தான். பலத்தில் பீமசேனன் அம் மல்லன். நாலரை முழம் உயரம். தசை நார்கள் உடலில் பருத்துத் திரண்டிருந்தன. அவன் ராமசந்திரராயின் தகப்பனுருக்கு ஏவலாளனுக இருந்தவன். சிறுவயது முதல் ராமசந்திரனை வளர்த்தவன். ரமாயியைக் கண்டு யாவரும் அஞ்சுவர்; ரமாயிக்கே அவனிடம் ஒரு நடுக்கம். ரமாயியைக் கண்டால் ராம்மோகனன் வெறுப்பு அடைவான். அவனும் ராமமோகனனுடைய பார்வைக்கு முன் கூசிக் குனிவான்.

அரசன் கூப்பிட்டதும் ராமமோகனன் வந்துநின்முன். தன்னுடன் இருபத்தைந்து பேர் ஏவலாளர் வருவார்கள் என்றும், ' ராமமோகனன் அவர்களுக்குத் தலைவனுக வர வேண்டும் என்றும் அரசன் கட்டளையிட்டான்.

ராமமோகனன், "உத்தரவு! ரமாயி டாகுரும் வருகிருரா?'' என்முன். பூனைக் கண்ணனுன ரமாயி, தன் கோணலான உடம்பைப் பின்னும் சுருக்கிக்கொண்டான்.



# 8

## வரவேற்பு

யசோஹர் அரண்மனையில் வேலைக்காரர்கள் யாவரும் பரபரப்பாக வேலை செய்தார்கள். விருந்து பலவிதமாகத் தயாராகியது. மாப்பிள்ளை வெகுநாளைக்குப் பின் வருகிருனல்லவா! சந்திரத்வீபத்து ராஜவம்சம், யசோஹருக்குத் தாழ்ந்ததென்று அரசனைப் போலவே அரசியும் நினைத்தாள். இருந்தாலும், மாப்பிள்ளை வரப் போகிருன் என்று மகிழ்ச்சி அடைந்தாள். காலையில் எழுந்ததுமுதல் அவள் விபாவுக்கு அலங்காரம் செய்யலாளுள். விபாவின் பாடு திண்டாட்டமாகியது. அழகு படுத்திக்கொள்ளும் விஷயத்தில் ஒரு யுவதிக்கும் வயதான அவள் தாய்க்கும் எவ்வளவோ பேதங்கள் இருக்கும். ஆனல், பெண்ணுக்கு என்ன செய்தால் நன்றாக இருக்கும் என்று அவள் தாய்க்குத்தானே தெரியும்! மூன்றே ஜதை ரோஜா நிற வளையல்கள் அணிந்தால் வெளேரென்ற தன் கைக்கு நன்ருக எடுத்துக் காட்டும் என்று விபாவுக்குத் தோன்றியது. அரசியோ எட்டு ஜதைப் பொன் வளையல்கள் போதாவென்று ஒரு ஜோடி வைரக் காப்பையும் போட்டு வைத்தாள். அவளுக்கு இருந்த மகிழ்ச்சியில் வீட்டில் இருந்த கிழ வேலைக்காரிகளையும், விதவை நாத்தனரையும் அழைத்து வந்து காண்பித்தாள். தன் சின்னஞ் சிறு முகத்துக்கு முத்துப் புல்லாக்கு நன்ருயிராது என்று விபாவுக்குத் தெரியும். ஆனல் அரசி பெரிய முத்துப் புல்லாக்கு ஒன்றை மாட்டி, அவள் முகத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பிப் பார்த்தாள். இதற்கும் விபா ஒன்றும் சொல்லவில்லை. ஆனல் ராணி அவள் தலையை ஒருவிதமாகப் பின்னியபொழுது அவளால் பொறுக்க

முடியவில்லை. அவள் ரகசியமாகச் சுரமாவிடம் போய்க் கூந்தலை ஒழுங்குபடுத்திக்கொண்டு வந்தாள். ஆனால் அது அரசியின் கண்களில் பட்டுவிட்டது. பின்னல் சரியாக இராத குறையில் விபாவின் அழகே சீர் குலைந்துவிட்டது என்று அவள் நம்பினாள். சுரமா பொறுமையால்தான் விபாவைப் பாழடிக்க முயல்கிறாள் என்று அவள் உறுதியுடன் முடிவுசெய்தாள். விபாவிடம் சுரமாவை இழிவு படுத்திச் சொல்லி, மனமாரத்திட்டியபின்னர், தன் காரியம் நிறைவேறியதாக எண்ணி விபாவின் கூந்தலை அழுத்தமாகப் பின்னிவிட்டாள். முத்துப் புல்லாக்கு, அழுத்தமான பின்னல், கைநிறைய அடுக்காக வளையல்கள், உள்ளத்தில் பொங்கும் களிப்பு எல்லாமாகச் சேர்ந்து அவளைச் சஞ்சலப்படுத்தின. இந்தப் பொல்லாத எக்களிப்பை உள்ளத்தில் அடக்கி வைத்துக்கொள்ள முடியவில்லை., அது நடுநடுவே அவள் முகத்தில் எட்டிப் பார்த்து, அதைச் சிவக்க அடித்தது. வீட்டுச் சுவர் முதற்கொண்டு தன்னைக் கேலி செய்வது போலவே அவளுக்குத் தோன்றியது. இளவரசன் உதயாதித்தியன் அன்பு மண்டிய களிப்புடன், கூச்சத்தால் சிவந்த அவள் முகத்தைக் கண்டான். விபாவைக் கண்டு அவனுக்கு இருந்த மகிழ்ச்சியில், தன் அறைக்குள் போய்ப் புன் சிரிப்புடன் சுரமாவை முத்தமிட்டான்.

"என்ன விஷயம்?" என்றாள் சுரமா.

"ஒன்றுமில்லை."

இதே சமயத்தில் வசந்தராய் விபாவைப் பலவந்தமாக இழுத்துக்கொண்டு வந்து அறையினுள் நிறுத்தினார். அவள் மோவாயைப் பிடித்து, "இதோ உங்கள் விபாவின் முகத்தைப் பாருங்களப்பா. சுரமா! ஓ சுரமா! இதைப் பார்" என்று அவர் சிரிக்கத் தொடங்கினார். விபாவின் முகத்தை நோக்கி, "விபா! மகிழ்ச்சியாக இருந்தால் நன்றாகத்தான் சிரியேன்; பார்க்கிறேன்" என்றார்.

"புன்னகை தன்னை எவ்விதம் அடக்குவை?
இன்னகை அதுதான் இதழினில் திகழும்.

"வயது மட்டும் குறைச்சலாக இருந்ததோ உன்முகத்தைக் கண்டு இங்கேயே விழுந்து உயிரை விட்டிருப்பேன். ஆனால் மயங்கி உயிர்விடும் வயது போய்விட்டது. இளமையில் ஒவ்வொரு நாளும் அது நேரும். இப்போது கிழவனாகி விட்டேனல்லவா! அதனால் அப்படிச் சாகவே முடியவில்லை" என்றார்.

விபாவின் மாமா பிரதாபாதித்தியனிடம் போய், "மாப்பிள்ளையை அழைத்துவர யார் போயிருக்கிறார்கள்?" என்று கேட்டபொழுது, அரசன், "எனக்கு என்ன தெரியும்?" என்றான்.

"இன்று வழியில் விளக்குப் போட வேண்டாமா?"

"அப்படி அவசியம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை."

அரசனுடைய மைத்துனன் கூச்சத்துடன், "மேள வாத்தியம்?" என்றான்.

"அதையெல்லாம் யோசிக்க எனக்கு நேரமில்லை" என்றான் பிரதாபாதித்தியன். உண்மையில் மேள தாளங்களுடன் ஒரு மாப்பிள்ளையை அழைப்பது தன்னுடைய காரியமல்ல என்பது அவன் எண்ணம்.

ராமசந்திர ராய்க்கு அதிகக் கோபம். தன்னை வேண்டுமென்றே அவமானம் செய்ததாக அவன் முடிவு செய்தான். இதற்குமுன் இரண்டு முறை அவனை வரவேற்க அரண்மனையிலிருந்து சக்திகிக்கு ஆட்கள் வந்திருந்தனர். இந்தத் தடவை சக்திகியைக் கடந்து, இரண்டு கல் தூரத்தில் வாமன் ஹாடியில் திவான வந்து நின்றான். மாப்பிளளையை வரவேற்க ஐம்பதே ஆட்கள் தாம் இருந்தனர். இன்னும் ஐம்பதுபேர் இல்லையா யசோஹரில்? அரசனை அழைத்துச் செல்ல வந்த யானையைவிடத் திவானை பருத்தவன் என்று ரமாயிக்குப் பட்டது. அவன் திவானை

நோக்கி, "ஐயா, அவர் உமக்குத் தம்பியோ?" என்றான். திவான் மிகவும் சாது. அவர் வியப்புடன், "அது யானை அல்லவா?" என்றார்.

ராமசந்திரன் உள்ளங் குன்றி, "உங்கள் மந்திரி ஏறும் யானைகூட இதைவிடப் பெரியதாயிற்றே!" என்றான்.

"பெரிய யானைகள் எல்லாம் அரசாங்க வேலையாக வெளியே போயிருக்கின்றன. ஊரில் ஒன்றுகூட இல்லை."

தன்னை அவமானம் செய்யத்தான் அவை வெளியே போயிருக்கின்றன என்று ராமசந்திரன் எண்ணினான். வேறு காரணம் என்ன இருக்கப்போகிறது?

ராஜாதிராஜன் ராமசந்திர ராய் தன் மாமனாரின் பெயரைச் சொல்லி, "பிரதாபாதித்திய ராயைவிட நான் எந்த விதத்தில் குறைந்தவன்?" என்றான்.

ரமாயி, "வயதிலும் உறவிலுந்தான். வேறு எதில்? அவர் பெண்ணை நீங்கள் விவாகம் செய்துகொண்டீர்கள்? இதிலிருந்தே......" என்றான்.

பக்கத்தில் இருந்த ராமமோகன மல்லனுக்கு இது பொறுக்கவில்லை. அவன் கோபத்துடன், "இதோ பார், ரமாயி! வரவரத் துணிச்சல் அதிகமாகிறது. எங்கள் அம்மாவைப்பற்றி அப்படிப் பேசாதே! இதோ சொன்னேன்" என்றான்.

பிரதாபனைப்பற்றி ரமாயி, "இவனைப் போல் எத்தனையோ ஆதித்தியர்களைப் பார்த்தவன் நான். அரசே! இது தெரியுமா! ஆதித்தியனை அக்குளில் அடக்கிய வீரன் ராமசந்திரதாசன்" என்றான்.

ராமசந்திரன் வாயைப்பொத்திக்கொண்டு சிரித்தான். ராமமோகனன் மெல்ல அரசன முன் வந்து கைகூப்பி, "அரசே! இவன் உங்கள் மாமனரைப்பற்றிக் கண்டபடியெல்லாம் பேசுவது எனக்குப் பொறுக்கவில்லை. உத்தரவானால் இவன் வாயை அடக்குகிறேன்" என்றான.

"ராம்மோகன்! நீ பேசாமல் இரு" என்றான் ராமசந்

திரன். ராமமோகனன் உடனே வேறிடம் சென்முன். பிரதாபன் தன்னை அவமதிக்கவே இவ்வளவு நாட்களாக ஏற்பாடுகள் செய்துவருகிருன் என்று அன்றைய தினமெல்லாம் ராமசந்திர ராய் எண்ணிக்கொண்டிருந் தான். கோபம் அவன் உள்ளத்தைப் புரட்டியது. மாப்பிள்ளை எவ்வளவு பெரியவன் என்பதைத் தன் முகமே காட்டும்படி நடந்துகொள்ள முடிவு செய்தான்.

பிரதாபனை ராமசந்திரன் கண்டபொழுது, அவன் மந்திரியுடன் தன் அறையில் இருந்தான். பிரதாபனைப் பார்த்ததும், ராமசந்திரன் மெல்லத் தலை குனிந்து வந்து அவனை வணங்கினுன்.

பிரதாபன் களிப்போ, பரபரப்போ அடையாமல் அமைதியாக, "வா, அப்பா! சௌக்கியந்தானே?" என்ருன்.

ராமசந்திரன் மெல்ல, "ஆம்" என்ருன்.

மந்திரியை நோக்கிப் பிரதாபன், "பாங்காமாடி பர்கணுவின் தாசில்தார்மேல் குறைபாடு வந்ததே! அதற்கு விசாரணை ஏதாவது நடந்ததா?" என்ருன்.

மந்திரி பெரிய காகிதம் ஒன்றை எடுத்து அரசன் கையில் கொடுக்க, அவன் அதைப் படிக்கலாஞன். கொஞ்ச தூரம் படித்ததும் மாப்பிளளையைநோக்கி, "போனவருஷம் போல் வெள்ளம் ஒன்றும் இல்லையே ஊரில்?" என்ருன்.

"இல்லை. ஐப்பசி மாதம் ஒருதடவை ஜலம் அதிகமாக......"

"மந்திரி, இந்தக் கடிதத்திற்கு ஒரு நகல் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்" என்று அவன் மீண்டும் கடிதத்தைப் படிக்கலாஞன். கடிதம் படித்தானதும் மாப்பிள்ளையை நோக்கி, "போ அப்பா, உள்ளே போயேன்" என்ருன்.

ராமசந்திர ராய் மெல்ல எழுந்து சென்ருன். பிரதாபாதித்தியன் தன்னைவிட எந்தவிதத்தில் மேலானவன் என்பதை அவன் இப்போது உணர முடிந்தது.

# 9

## விளையாட்டு வினையானது

ராமமோகன மல்லன் அந்தப்புரத்துக்குச் சென்று விபாவை வணங்கினன். "அம்மா, உன்னை ஒரு முறை பார்க்க வந்தேன்" என்று அவன் சொன்னபொழுது விபாவின் உள்ளம் மகிழ்வெய்தியது. ராமமோகனனிடம் அவளுக்கு ஒரு தனி அன்பு உண்டு. குடும்பத் தொல்லைகளையும் மீறிக்கொண்டு அவன் நடுநடுவே சந்திரத்வீபத்திலிருந்து யசோஹருக்கு வருவான். அவசியம் எதுவுமில்லை என்றாலுங்கூட அவன், விபாவைப் பார்ப்பதற்கென்றே வருவது வழக்கம். அவனிடம் விபா கூச்சப்படுவதில்லை. நல்ல நெடிய பலசாலி அவன்; வயதானவன். அவன் அன்புடன், "அம்மா" என்று அழைக்கும்பொழுது விபா சிறு பெண்ணாகவே ஆகிவிடுவாள். விபா அவனை நோக்கி, "ஏன் இத்தனை நாளாக வரவில்லை, மோகன்?" என்றாள்.

"அது சரி, பிள்ளை கெட்டவனென்றாலும் தாய் என்றைக்கும் ஒரே மாதிரிதானே! நீ என்னை என்ன என்று எண்ணிக்கொண்டாய்? அம்மா என்னை எத்தனை நாள் தான் மறந்திருப்பாள்! அவள் அழைக்காவிட்டால் நான் வருவதில்லை என்றுதான் இருந்தேன். எங்கே, நீதான் என்னை அழைக்கவில்லையே!"

விபாவின் உள்ளம் சங்கடத்தில் சிக்கியது. ஏன் அழைக்கவில்லை என்பதை அவளால் சரியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் அழைக்காததன் காரணமாகத் தன்னை மறந்துவிட்டாள் என்று ராமமோகனன் குறிப்பிட்டது அவளுக்குச் சரியென்று தோன்றவில்லை.

அவள் இப்படித் தவிப்பது கண்டு ராமமோகனன் சிரித்தான். "இல்லையம்மா, ஓய்வு இல்லை; அதனால்தான் வரவில்லை" என்றான்.

"மோகன், நீ உட்கார்ந்து உங்கள் ஊரைப்பற்றிச் சொல்லேன், கேட்கிறேன்" என்ருள் விபா.

ராமமோகனன் படிய உட்கார்ந்து சந்திரத்வீபத்தின் அழகை எடுத்துச்சொல்லத் தொடங்கினுன். விபாகன்னத்தில் கை வைத்துக்கொண்டு, தன்னை மறந்து கேட்டாள். சந்திரத்வீபத்தின் வர்ணனையைக் கேட்டு அவள் உள்ளத்துள் எழுந்த கற்பனைகள் பல. அந்த வானத்தில் அவள் அமைத்த கனவுக் கோட்டைகள் அளவிட முடியா. ராமமோகனன் சொல்ல ஆரம்பித்ததும், அவள் வீடுவாசலை மறந்துவிட்டாள். அந்திக் கருக்கலில், தன்னந்தனியே கிழத்தாயை முதுகில் தூக்கிக்கொண்டு நீந்தி, கோயிலை அடைந்து இரவைக் கழித்ததாக அவன் சொன்னபோது விபாவின் பசுமை உள்ளம் சிலிர்த்தது.

கதைமுடிந்ததும் ராமமோகனன், "அம்மா, உனக்காக நான்கு ஜோடிச் சங்கு வளையல்கள் கொண்டு வந்தேன். நீ கையில் போட்டுக்கொண்டு நான் பார்க்கவேண்டும்" என்ருன்.

விபா தன் பொன் வளையல்களையெல்லாம் கழற்றி விட்டுச் சங்கு வளையல்களை அணிந்தாள். தன் தாயிடம் போய், "அம்மா, நீ போட்ட தங்க வளையல்களை எல்லாம் கழற்றிவிட்டு மோகன் எனக்குச் சங்கு வளை போட்டிருக்கிருன்" என்று சொல்லிச் சிரித்தாள்.

அரசி சற்றும் முகங் கோணுமல், "அப்பா! நன்ருகப் பொருந்தியிருக்கிறதே!" என்று சிரித்தாள்.

ராமமோகனனுடைய உள்ளம் பெருமையும் களிப்பும் மிகுந்து பூரித்தது. அரசி அவனை அழைத்துச் சென்று, தானே எதிரில் இருந்து, அவனுக்குச் சாப்பாடு போட்டாள். அவன் மனமார உண்ட பின், அவள் மகிழ்ச்சியோடு "மோகன், நீ 'ஆகமனி' (நல்வரவு) பாடுவாயே; அந்தப் பாட்டை ஒருமுறை பாடேன்" என்ருள். ராமமோகனன் விபாவை நோக்கிப் பாடத் தொடங்கினுன்:

"ஆண்டு முழுவதும் அன்றிப் உன்னைக்
காண்பேற் றையான் கொடுத்து வைக்கிலன்!
ஏன்கண் ணீர்ப்பெருக் கிவ்விதம் வருகுது?
யான்கண் ஒளிபோய் அந்தகன் ஆனேன்!
வன்னெஞ் சுடையாய்! வந்தனையாநீ?
உன்னைக் கண்கள் உவந்திடக் காண்பேன்;
அன்னை! எளிதில் அடங்கா திந்தக்
கண்ணீர், பாழுங் கண்ணீர், அந்தோ!"

ராமமோகனனுடையவிழிகளில் நீர் ஊறியது. அரசியும் விபாவை நோக்கிக் கண்களைத் துடைத்துக்கொண்டாள். 'ஆகமனி'யைக் கேட்டதும் அவளுக்குத் தன் விஜயாவின் நினைவு வந்தது.

மெல்ல மாலைப்போது மங்கிவந்தது. அந்தப்புரத்தில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. அக்கம் பக்கத்தவர் மாப்பிள்ளையைப் பார்க்கவும் கேலி செய்யவும் உரிமை கொண்டாடிக்கொண்டு வந்து குவிந்தனர். களிப்பு, கூச்சம், சந்தேகம், என்ன நடக்குமோ என்ற திகில் எல்லாமாகச் சேர்ந்து விபாவின் உள்ளத்தைக் கலக்கி வைத்தன. முகம் சிவந்து, அவளுடைய கைகால்கள் சில்லென்றாகி விட்டன. இது வேதனையினாலா, அல்லது சுகத்தினாலா என்று யாருக்குத் தெரியும்!

மருமகன் அந்தப்புரத்துக்கு வந்துவிட்டான். வாய்ச்சொல் கொடுக்குகளுடன் பெண்களும் அவன் மேல் மொய்த்துக்கொண்டு விழுந்தனர், குயிற் குரல்களின் கேலிச் சொற்கள், தாமரைக் கரங்களின் சுறீரென்ற அடிகள், மகிழம் பூப்போன்ற விரல்களின் பிறைநகங்கொண்டு கிள்ளுதல் இவைகள் எல்லாம் தாங்காமல் ராமசந்திரராய் தவிக்கும் சமயம், வயதான ஸ்திரீ ஒருத்தி அவன் பக்கத்தில் சேர்ந்துகொண்டாள். கடுமையான குரலில் அவள் காரமாகவும் பச்சையாகவும் சொன்ன வார்த்தைகள்

அந்தப்புரத்துப் பெண்களுடைய வாயை அடக்கிவிட்டன. அவள் வாய்க்கு முன் வாயாடி அத்தையம்மாளும், விமலா பாட்டியுங்கூட அடங்கி வெளியே சென்றுவிட்டனர். பூதோவின் அம்மா மட்டும் அவளை நன்ருகத் தாக்கிஞள். பூதோவின் அம்மா கூவிக்கொண்டே போனபொழுது, அந்த வயதான ஸ்திரீ, "அடியம்மா! வாயா, இல்லை, துடைப்பக்கட்டையா?" என்ருள். பூதோவின் அம்மா சட்டென்று, "உன் வாய்தானடி சேற்றுக் குட்டை! நீ நாசமாய்ப் போக! இத்தனை நேரமாக விளக்குமாற்ருல் புடைத்தும் பேசுகிருயே!" என்று எழுந்து சென்ருள். அறை ஒரேயடியாகக் காலி யாகிவிடவே ராமசந்திர ராயும் ஆறுதல் அடைந்தான்.

அந்த வயதான ஸ்திரீ மெல்ல அரசியின் அறையினுள் சென்ருள். வேலைக்காரரும் அடிமைகளும் உண்பதை அரசி மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். ராமமோகனனும் ஒரு பக்கமாக இருந்தான். அந்தஸ்திரீ மெல்லஅரசியிடம் போய் அவளை உற்று நோக்கி, "இதோ இருக்கிருளே, பத்தரை மாற்றுப் பசும் பொன் தாயார்!" என்ருள். இதைக் கேட்டதும் ராமமோகனன் தலைநிமிர்ந்து அவளைக் கவனித்தான். உடனே சாப்பிடுவதை விட்டுப் புலிபோலத் துள்ளி அவளுடைய கைகளைத் தன் இரும்புக் கரத்தினுள் அடக்கிக்கொண்டான். "அடே, நீ ரமாயி டாகுர் இல்லையா?" என்று அவள் தலைத் துணியைத் தளளியதும், ரமாயி தன் சுய உருவுடன் தோன்றினன். ராமமோகனன் கோபத்திஞல் துடித்து, மேலே போர்த்திருந்த சால்வையைத் தள்ளினன். இரண்டு கைகளாலும் ரமாயியைத் தூக்கி, இரண்டு முறை சுழற்றி, "இன்று என் கையால் நீ செத்தாய்!" என்ருன். அரசி பரபரப்புடன் ஓடி வந்து," மோகன், இதென்னகாரியம்செய்கிருய்?" என்ருள். "வேண்டாம். அப்பா, பிரம்மஹத்தி செய்யாதே" என்று கெஞ்சினன் ரமாயி. நாலு பக்கமும் ஒரு பரபரப்பு மூண்

டது. ராமமோகனன் அவனைக் கீழேவிட்டு, உதடு துடிக்க, "அடே! உனக்குச் சாக வேறு இடமில்லையா?" என்றான்.

"மகாராஜா எனக்குக் கட்டளை இட்டார்" என்றான் ரமாயி. "சீ! என்ன சொல்கிறாய்! திரும்ப இப்படிப் பேசினாயோ, இந்த உரலில் உன் தலையை மோதி உடைப்பேன்" என்று ராமமோகனன் ரமாயியின் கழுத்தை நெரித்தான்.

ரமாயி ஓவென்று அலறினான். ராமமோகனன் அந்தக் குள்ளன் ரமாயியைச் சால்வையினுள் சுருட்டி மூட்டை போல் தொங்க விட்டுக்கொண்டு, அந்தப்புரத்திற்கு வெளியே எடுத்துச் சென்றான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விஷயம் வெகு தூரம் பரவிவிட்டது. இரவு இரண்டாம் ஜாமம். அரசனுடைய மைத்துனன் அந்த வேளையில் பிரதாபனிடம், ரமாயிக்குப் பெண் வேஷமிட்டு, மருமகன் அந்தப்புரத்தினுள் அழைத்துச் சென்றதையும், அவன் அங்கே பெண்களையும் அரசியையுங்கூட அவமானம் செய்ததையும் எட்ட விட்டான். இதைக் கேட்டதும் பிரதாபனுடைய தோற்றம் பயங்கரமாகிவிட்டது. கோபத்தினால் அவன் உடல் துடித்தது. பிடரி சிலிர்த்தெழுந்த சிங்கம்போல் அவன் துள்ளி எழுந்தான். "யாரங்கே! லச்மன் சர்தாரைக் கூப்பிடு" என்றான். லச்மன் சர்தார் வந்ததும், "இன்று இரவிற்குள் ராமசந்திர ராயின் தலை எனக்கு வேண்டும்" என்றான் அரசன். "உத்தரவு, மகாராஜா!" என்றான் காவலாளி.

மைத்துனன் அரசனுடைய காலில் விழுந்து, "மகாராஜா, மன்னிக்க வேண்டும். விபாவின் கதி என்ன ஆவது? இப்படிச் செய்யவேண்டாம்" என்று வேண்டினான்.

அரசன் பின்னும் அழுத்தமாக, சொன்னதையே திருப்பிச் சொன்னான்.

அரசனுடைய மைத்துனன் அவனுடைய காலைப் பிடித்தான். "மகாராஜா! அவர்கள் அந்தப்புரத்தில் படுத்திருக்கிறார்கள். மன்னிக்க வேண்டும்" என்றான்.

பிரதாபன் சற்றுப் பொறுத்து, "லச்மன்! நாளைக் காலை அந்தப்புரத்தை விட்டு வெளியே வரும்பொழுது ராம சந்திரராயைக் கொலை செய்ய வேண்டும். இது உன் பொறுப்பு" என்றான். தான் நினைத்ததற்கு மேலாகவே நடந்துவிட்டதை உணர்ந்தான் அரசன் மைத்துனன். அந்த இரவு வேளையில் அவன் மெல்லப் போய் விபாவின் அறைக் கதவைத் தட்டினான்.

இரண்டாம் ஜாம மணியோசை தொலைவில் கேட்டது. அமைதியான இரவில், அதன் இசை, தென்றலுடனும், நிலவொளியுடனும் கலந்து கனவுலகத்தின் நினைவை ஊட்டியது விபாவின் படுக்கை அறைச் சாளரத்தின் வழியாக நிலவொளி படுக்கையில் வந்து விழுந்தது. ராம சந்திரராய் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். விபா கன்னத் தில் கை வைத்து ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். நிலவைக் கண்டு அவள் விழிகள் தாமாகவே கண்ணீர் உகுத்தன. அவள் கற்பனை செய்தவாறு எதுவுமே நடக்க வில்லை. அவள் மனம் ஏங்கி வாடியது. இவ்வளவு நாட் களாக எதிர்நோக்கி யிருந்த தினத்தில் அவள் நினைத் தது ஒன்றும் நடக்கவில்லை.

ராமசந்திர ராய் படுக்கையில் படுத்தது முதல் விபா வுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பிரதாபனை அவ மதிப்பது நடக்காது; விபாவைத்தான் அலட்சியம் செய்ய லாம்! "நீ யசோஹரின் அரசன் பிரதாபனுடைய பெண்; சந்திரத்வீபத்து அரசன் பக்கத்தில் இருக்க உனக்கு யோக்கியதை இல்லை" என்று அவன் சொல்ல எண்ணி னான். முதலில் திரும்பிப் படுத்தவன் தான்; ஒரு முறைகூட அவன் விபாவைப் பார்க்கவில்லை. கோபம், ரோஷம் எல்லாம் விபாவின் மேல்தான் விழுந்தன. அவள் நிலவையும் கண வனுடைய முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். பெருந் துயர் தாங்காமல் நடுநடுவே அவள் தன்னையும் மீறிப் பெரு மூச்சு விட்டாள். சட்டென்று ராமசந்திர ராய் தூக்கம்

கலைந்து எழுந்தான். விபா கம்மென்று உட்கார்ந்து அழுது கொண்டிருப்பது அவன் கண்களில் பட்டது. தூங்கி எழுந்ததும் அவன் உள்ளத்தில் அவமானச் சின்னம் எதுவும் தோன்றவில்லை. ஆழ்ந்து உறங்கியதன் பலனாக அவன் உள்ளம் சுபாவமானநிலையில் இருந்தது. கண்ணீர் வழியும் அவளுடைய சிறு முகத்தைக் கண்டதும் அவன் உள்ளம் ஏங்கியது. விபாவின் கையைப் பிடித்து அவன், "அழுகிருயா, விபா?" என்ருன். விபாவினல் ஒன்றும் பேச முடியவில்லை; பார்வை மங்கியது. பேசாமல் படுத்தாள். ராமசந்திர ராய் மெல்ல உட்கார்ந்து, அவள் தலையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு, கண்ணீரைத் துடைத்தான். இதே சமயம் யாரோ வெளியே கதவைத் தட்டவும், "யார்?" என்று கேட்டான் ராமசந்திர ராய்.

"சீக்கிரம் கதவைத் திற" என்று வெளியிலிருந்து பதில் வந்தது.



# 10

## கவலையும் உறுதியும்

ராமசந்திர ராய் படுக்கை அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். அரசன் மைத்துனனான ரமாபதி, "அப்பா! இப்போதே ஓடிவிடு! ஒரு கணமும் தாமதம் செய்யாதே!" என்றான்.

அந்த நள்ளிரவில் இத்தகைய சொல்லைக் கேட்டதும் ராமசந்திர ராய் திடுக்கிட்டான். முகம் வெளுத்து, மூச்சை அடக்கியபடி அவன், "ஏன், என்ன நடந்தது?" என்றான்.

"நான் நடந்ததைச் சொல்லமாட்டேன்; இப்போதே ஓடிவிடு."

விபா படுக்கையை விட்டு எழுந்து வந்தாள். "மாமா, என்ன நடந்தது?" என்றாள்.

"அது உனக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை, அம்மா."

விபாவின் உள்ளம் துடித்தது. அவள் வசந்தராய், உதயாதித்தியன் இவர்களைப்பற்றி யோசித்தாள். "மாமா, என்ன விஷயம், சொல்லுங்கள்?" என்றாள்.

ரமாபதி அவளுக்குப் பதில் சொல்லவில்லை. ராமசந்திரனை நோக்கி, "அப்பா, வீண் தாமதமேன்? ரசியமாக ஓடிவிட வழி பார்" என்றான்.

சட்டென்று விபாவின் உள்ளத்தில் என்ன விபத்து நேருமோ என்ற ஐயம் மூண்டது. அவள் போகும் மாமனைத் தடுத்து, "உங்கள் காலில் விழுகிறேன். என்ன நடந்ததென்று சொல்லுங்கள்" என்றாள்.

ரமாபதி பயத்துடன் நாலு பக்கமும் பார்த்தான். "இதோ பார், விபா: கலவரம் செய்யாதே! எல்லாம் சொல்லுகிறேன்" என்றான்.

ரமாபதி ஒவ்வொன்ருக எல்லாவற்றையும் சொன்னதும் விபா கூக்குரலிடப் போனுள். ரமாபதி அவள் வாயைப் பரபரப்புடன் மூடி, "கம்மென்றிரு; குட்டிச் சுவராக்காதே" என்ருன். விபா அரைகுறையாக மூச்சு அடைக்க அங்கேயே உட்கார்ந்து விட்டாள்.

ராமசந்திர ராய் பரிதாபமான குரலில், "நான் என்ன செய்வது? தப்ப வழி எனக்கு ஒன்றுமே தெரியாதே!" என்ருன்.

"இரவு காவலாளிகள் வேறு கவனமாக இருக்கிருர்கள். போய்ப் பார்த்து வருகிறேன். தப்ப வழி ஏதாவது இருக்கலாம்" என்று கூறி ரமாபதி புறப்பட்டான். விபா அவனைப் பிடித்துக்கொண்டு, "மாமா! நீங்கள் எங்கே போகிறீர்கள்? எங்களிடமே இருங்களேன்" என்ருள்.

"பைத்தியமா உனக்கு! நான் பக்கத்தில் இருந்து என்ன பலன்? அதைவிட நாலு பக்கத்திலும் ஏதாவது வழி உண்டா என்று பார்த்து வருகிறேன்."

விபா சமாளித்துக்கொண்டு எழுந்தாள். கைகால்கள் வெட வெடவென்று நடுங்க, "நீங்கள் இங்கேயே இருங்கள், மாமா! நான் அண்ணுவிடம் போகிறேன்" என்று பரபரப்புடன் உதயாதித்தியனுடைய அறைக்குச் சென்ருள்.

பிறைச் சந்திரன் மறையும் தருணம். நாலு பக்கமும் இருள் சூழ்ந்துகொண்டு வந்தது. எங்கேயும் நிச்சப்தமே! ராமசந்திர ராய் தன் பள்ளியறையின் வாயிலில் நின்றிருந்தான். அந்தப்புரத்தின் மற்றக் கதவுகள் யாவும் அடைத்துக் கிடந்தன. எல்லாரும் கவலையின்றி உறங்கிக்கொண்டிருந்தனர். எதிரே முற்றத்தில் சுவரின் நிழல்; ஒரு மூலையில் மங்கிய நிலவொளியின் கீற்று மறைந்துகொண்டிருந்தது. இருள் அடிமேல் அடிவைத்து மெல்ல உலகைக் கவிந்துகொண்டது. தொலைவில் தென்னந்தோப்பு இருளில்மூழ்கியது. இந்த இருளைத் தனக்கு எதிராகக்

கத்தி ஒன்று காத்திருப்பதுபோல் ராமசந்திர ராய் கற்பனை செய்யத் தொடங்கினன். எதிரேயோ, வலது புறமோ பின்னலேயோ எங்கு இருக்கின்றனரோ ஆட்கள்? மூலைக்கு மூலை காரிருளில் அவர்கள் மறைந்திருக்கலாம் அல்லவா? அறைக்குள்ளேயே கட்டிலின் அடியில் பதுங்கியிருந்தால்—? அவனுடைய நெற்றியில் வேர்வை அரும்பியது. மாமாவுக்கே ஏதாவது தோன்றி, அவரே ஏதாவது செய்தால் —? அவன் மெல்ல நகர்ந்தான். சட்டென்று வீசிய காற்றில் அறையில் இருந்த விளக்கும் அணைந்தது. யாரோ உள்ளே இருந்து அதை ஊதி அணைத்துவிட்டது போலவே ராமசந்திரனுக்குத் தோன்றியது. ரமாபதியின் உடம்போடு உராய்ந்தாற்போல் நின்று அவனை, "மாமா" என்று அழைத்தான். "என்னப்பா!" என்றான் மாமன். விபா இருந்தாலே தேவலை என்று எண்ணினன் ராமசந்திரன். மாமாவைப்பற்றி அவனுக்கு உள்ளூறச் சந்தேகம் இருக்கத்தான் இருந்தது.

விபா உதயாதித்தியனிடம் போய் ஒரேயடியாக அழுதுவிட்டாள். வாயைத் திறந்து அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. சுரமா அவளைத் தேற்றி, "என்ன நடந்தது, விபா? சொல்" என்றாள். விபா சுரமாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். உதயாதித்தியன் அன்புடன் அவள் தலையைக் கோதி, "என்னம்மா, விஷயம் சொல்?" என்றான். விபா அண்ணனுடைய கையைப் பிடித்து இழுத்து, "அண்ணா, என்னுடன் வா; எல்லாம் தெரியும்" என்றாள்.

மூவருமாக விபாவின் அறைக்கு வந்து சேர்ந்தார்கள். இருளில் ரமாபதியும் ராமசந்திர ராயும் உட்கார்ந்திருப்பது கண்டு உதயாதித்தியன் பரபரப்புடன், "மாமா, என்ன விஷயம்?" என்றான். ரமாபதி நடந்தவற்றை அவனுக்குத் தெரிவித்ததும், உதயாதித்தியன் சுரமாவின் முகத்தை நோக்கினன். "இப்போதே அப்பாவிடம் போகிறேன்.

அவரை ஒருகாலும் இக் காரியம் செய்ய விடமாட்டேன்" என்றான்.

"அதனால் பலன் என்ன! அதைவிடத் தாத்தாவைப் போகச் சொல்லுங்கள். ஏதாவது உதவி உண்டு" என்றாள் சுரமா.

"சரி" என்றான் இளவரசன்.

வசந்தராய் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்; தூக்கம் கலைந்து உதயாதித்தியனைக் கண்டதும், பொழுது விடிந்துவிட்டதாக எண்ணி லலித ராகிணியில் பாடத் தொடங்கினார்:

"பூக்களெலாம் வாடின பாவைதன்னின் கூந்தலிலே;
புதுமலர்கள் காட்டகத்தே பூத்துக் குலுங்கின.
பார்க்கையிலே வீசியதே, பகலொளிதான்; எங்குமது
பரந்தும்மனத் தாசையின்னும் போகவில்லை, அம்மா."

உதயாதித்தியன், "தாத்தா பெருத்த ஆபத்து வந்து விட்டது!" என்றான்.

பாட்டுச் சட்டென்று நின்றது. பரபரப்புடன் உதயாதித்தியனை அணுகி அவர், "என்ன நடந்தது? சொல்! என்ன ஆபத்து?" என்றார்.

உதயாதித்தியன் நடந்தவைகளைத் தெரிவித்தான். வசந்தராய் அப்படியே படுக்கையில் உட்கார்ந்துவிட்டார். உதயாதித்தியனுடைய முகத்தை நோக்கித் தலையசைத்து, "இது நடக்குமா? இல்லை; இது கூடவே கூடாது" என்றார்.

"தாத்தா, நேரமில்லை. நீ அப்பாவிடம் போயேன்."

வசந்தராய் போய்க்கொண்டே, "இதுவும் நடக்குமா? நடக்க முடியுமா? கூடாதே" என்று பல தடவை தமக்குத் தாமே கேட்டுக்கொண்டார்.

பிரதாபாதித்தியனுடைய அறைக்குள் நுழைந்ததும் வசந்தராய், "இதுவும் நடக்குமா, அப்பா பிரதாபா?" என்றார்.

பிரதாபன் படுக்கை அறைக்குச் செல்லவில்லை. தன் மந்திராலோசனை அறையிலேயே இருந்தான். ஒரு கணம் லச்மன் சர்தாரைத் திருப்பிக் கூப்பிடலாமா என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் மறு நிமிஷமே அவன் அதை மறந்தான். பிரதாபன் சொன்னதைத் தான் மீறுவதில்லையே! கட்டளை இடுவது ஒரு விளையாட்டா என்ன! ஆனால் விபா-? விபா விதவையாவாள். ராமசந்திர ராய் தன் இஷ்டப்படி தீயில் குதித்தாலும் விபா கைம்பெண் ஆகப்போகிறாள். இதில் பிரதாபனுடைய கை எங்கே இருக்கிறது? ஆனால் இவ்வளவு தூரம் அவன் எண்ணவே இல்லை. நடந்தவைகள் எல்லாம் அவன் மனத்தில் பளிச்சென்று தோன்றும் பொழுது, அவன் இரவு எப்போது விடியும் என்று பரபரப்படைந்தான். இதே சமயந்தான் வசந்தராய் உள்ளே வந்து அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "பிரதாபா! இப்படியும் நடக்கலாமா?" என்றார்.

பிரதாபன் எரிந்து விழுந்தான். "ஏன் நடக்கக் கூடாது?" என்றான்.

"சிறுபிள்ளை; தீர்க்கமாக யோசிக்கவில்லை. அவன் மேல் உன் கோபத்தைக் காட்டலாமா?"

"குழந்தை!—தீயில் கை வைத்தால் சுடும் என்று தெரிகிற வயசு ஆகவில்லை இன்னும்! முட்டாள் பிராம்மணனும் ஒருத்தன்; அறிவிலி! பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பிழைக்கும் தரித்திரன்! அவனுக்குப் பெண்வேஷம் இட்டு அந்தப்புரத்தினுள் அழைத்துப் போய் ராணியை முதற்கொண்டு அவமானம் செய்தானாம்! இவ்வளவு தூரம் செய்ய முடிந்த அவனுக்கு இதன் பலன் என்ன ஆகும் என்ற யோசனை இல்லைபோல் இருக்கிறது! தலையில்தானே மூளை இருக்கிறது? அந்தத் தலைதான் போகப் போகிறது!" என்று சொல்லச் சொல்லப் பிரதாபனுடைய உடல் துடித்

தது. சபதம் பின்னும் உறுதியாகி, பொழுது எப்போது விடியும் என்ற பரபரப்பும் மிகுந்தது.

வசந்தராய் தலையசைத்தார். "அவன் சிறுவன்; தெரியாது" என்றார்.

பிரதாபனுக்குப் பொறுக்கவில்லை. "சிற்றப்பா சுவாமிகளே! யசோஹர் வம்சத்துக்கு எது அவமானம் என்ற அறிவு உமக்கு இருந்தால் உம் வழுக்கைத் தலையில் பாதுஷாவின் பாதுகைகளைச் சுமந்து திரிய மாட்டீர்! பாதுஷாவின் தயையில் நீர் தலை நிமிர்ந்து நிற்பதால்தான் பிரதாபனுடைய புகழ் குன்றி இருக்கிறது. யவனருடைய திருப் பாத தூளியை நெற்றியில் திலகமாக இடுகிறீர். மிலேச்சர் பாதம் பட்டு அழுக்கடைந்த உம் தலையைப் புழுதியில் புரட்ட எண்ணினேன். தெய்வத்தின் தடையால் அது நிறைவேறவில்லை. இதோ தெளிவாகச் சொல்லுகிறேன். உமக்குத்தான் ராய் வம்சத்துக்கு இன்று ஏற்பட்ட அவமானம் தெரியவில்லை! போயும் போயும் நீர் வந்து ராய வம்சத்தை அவமதித்தவனுக்கு அளித்த தண்டனையை மன்னிக்கும்படி பிச்சை கேட்க வந்திருக்கிறீர்!" என்றான்.

வசந்தராய் மெல்லச் சொன்னார்: "பிரதாபா! எனக்குப் புரிந்துவிட்டது. நீ ஒரு முறை கத்தியை உருவிவிட்டால் அது எவன் மேலாவது விழுந்தே தீரவேண்டும். நான் அதன் குறியிலிருந்து தப்பிவிடவே, இன்னொருத்தனை லட்சியமாகக் கொண்டாய். நல்லது, பிரதாபா! உன் மனசில் இரக்கமில்லை; உன் பொல்லாத கோபம் எவனையாவது விழுங்க எண்ணினால் அதற்கு நானே பலியாகிறேன். இதோ உன் சிற்றப்பனுடைய தலை. (வசந்தராய் தலை குனிந்தார்.) உனக்கு இதுகிடைப்பதால் திருப்தி என்றால் இதையே எடுத்துக்கொள். தலையில் கறேலென்ற சுருட்டை மயிர் இல்லை. முகத்தில் இளமை இல்லை. யமனே ஓலை அனுப்பிவிட்டான். அவனுடைய சபைக்கு ஏற்ற உடல் அழகுகள் எல்லாம் தயாராகிவிட்டன. (வசந்த ராயின்

முகத்தில் சிரிப்பின் கீற்றுப் புலனுகியது.) ஆனல் யோசித்துப் பார், பிரதாபா! விபா, முகத்தில் பால்வடியும் பெண்! அவள்கண்களில் நீர் வடிந்தால்—(வசந்தராய் ஓவென்று அழுதார்.)பிரதாபா! என்னைக்கொன்றுவிடு! நான் இருந்து என்ன சுகம்? அவள் கண்ணீரைப் பார்க்கு முன்னரே என்னை முடித்துவிடு'' என்ருர்.

பிரதாபன் இவ்வளவு நேரம் கம்மென்று இருந்தான். வசந்தராய் சொல்லி முடித்ததும் அவன் மெல்ல எழுந்து சென்ருன். விஷயம் வெளிச்சமாகி விட்டதென்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. கீழே போய்க் காவலாளிகளை அழைத்து, அரண்மனையை ஒட்டி இருந்த கால்வாயைப் பெரிய சால மரங்களைக்கொண்டு அடைத்துவிடும்படி கட்டளையிட்டான். அந்தக் கால்வாயில்தான் ராமசந்திரராயின் தோணி இருந்தது. அந்தப்புரத்தை விட்டு அன்றிரவு எவரும் வெளியே போகாதவாறு காவலாளிகளை ஜாக்கிரதைப் படுத்தினுன் பிரதாபன்.



# 11

## தலை தப்பியது

வசந்தராய் அந்தப்புரத்திற்குப் திரும்பி வந்ததும் விபா ஓவென்று அழுதாள். வசந்தராய் கண்ணீர் பெருக்கிய வண்ணம் உதயாதித்தியனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "அப்பா! நீதான் இதற்கு வழி செய்ய வேண்டும்" என்றார். ராமசந்திர ராய் பொறுமையை இழந்து பரபரப்படைந்தான். உதயாதித்தியன் தன் உடைவாளைக் கையில் எடுத்து, "வாருங்கள் என்னுடன்" என்றதும் எல்லாரும் அவனைப் பின்பற்றினர். "விபா, நீ இங்கேயே இரு. வரவேண்டாம்" என்றான் உதயாதித்தியன். விபா அதைக் கேட்கவில்லை. ராமசந்திரனும், "விபாவும் கூடத்தான் இருக்கட்டுமே" என்றான். அந்த நிச்சப்தமான இரவில் எல்லாரும் அடிமேல் அடிவைத்துச் சென்றனர். பயங்கரமானஏதோ ஒன்று தன் புலனறியாக்கரங்களை நாலு பக்கமும் நீட்டுவது போலத் தோன்றியது. ராமசந்திர ராய் இப்படியும் அப்படியுமாகப் பார்க்கலானான். மாமாவின் மேல் நடுநடுவே ஐயம் அதிகரித்தது. உதயன் கதவருகில் சென்றான். வெளியே செல்ல வழி இல்லை. விபா பயத்துடன் குரல் குழற, "அண்ணா, கீழே போகும் கதவு மூடாமல் இருக்கலாம்; அங்கே வாயேன்" என்றாள். எல்லாருமாகக் கீழே இறங்கும்போது, பாதாள உலகின் படுகுழியோ, வாசுகியின் புற்றோ, இங்கே இறங்கினால் திரும்ப முடியுமோ என்றெல்லாம் தோன்றியது ராமசந்திர ராய்க்கு. இறங்கிச் சென்றபோது அந்தக் கதவு மூடிக் கிடந்தது. மீண்டும் அவர்கள் மெல்ல மேலே ஏறிச் சென்றனர். அந்தப்புரத்தை விட்டு வெளியே செல்லும் கதவுகள் மூடிக் கிடந்தன. ஒன்றாவது திறந்திருக்கவில்லை.

அவர்கள் ஒவ்வொரு வாயிலர்கச் சுற்றி அலேந்ததுதான் மிச்சம்!

வெளியேற வழி எதுவும் காணுமல் விபா கண்களேத் துடைத்துக்கொண்டாள். கணவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு படுக்கை அறைக்குப் போய்க் கதவருகில் நின்று திடமான குரலில், "பார்க்கலாம், உம்மை இந்த அறையிலிருந்து வெளியே கொண்டு போக யாரால் முடிகிறதென்று! நீங்கள் போகும் இடத்துக்கு நானும் செல்வேன்! என்னே யார் தடுக்கிருர்கள், பார்க்கிறேன்" என்ருள். உதயன் கதவருகில் நின்று, "என்னேக் கொல்லாமல் யாரும் அறையில் புகுவது நடக்காது" என்ருன். சுரமா வாய் திறவாமல் கணவனுடைய பக்கலில் போய் நின்ருள். கிழவர் வசந்தராய் அவர்கள் எல்லாருக்கும் முன்னல் போய் நிற்கவும், மாமா மெல்லச் சென்று விட்டார். ஆனல் ராமசந்திர ராய்க்குப் பயம் தணியவில்லே. 'பிரதாபன் பலே பேர்வழி. அவனல் என்ன தான் செய்ய முடியாது? விபாவோ உதயனே குறுக்கிட்டு ஏதாவது செய்ய முடியுமென்ற நம்பிக்கை எனக்கில்லே. இந்த வீட்டிலிருந்து எப்படியாவது வெளியேறிவிட்டால் போதும்!' என்று அவன் எண்ணிஞன்.

சற்று நேரம் பொறுத்துச் சுரமா தன் கணவனிடம் மெதுவாக, "நாம் இங்கே நிற்பதால் பலன் கிடைக்குமென்று எனக்குத் தோன்றவில்லே. ஒரு வேளே மோசமாகவுங்கூட முடியலாம். அப்பாவுக்குத் தடை அதிகமாக ஆக அவருடைய உறுதியும் பன்மடங்கு பலமாகும். இன்றைய இரவே அரண்மனேயை விட்டு ஓட வழி தேடுங்கள்" என்ருள்.

உதயன் யோசனேயுடன் சுரமாவின் முகத்தை ஆழ்ந்து கவனித்தபின், "சரி, என் பலத்தை உபயோகித்துப் பார்க்கிறேன்" என்ருன்.

சுரமா மன உறுதியுடன் தலையசைத்து, "போங்கள்" என்றாள்.

உதயன் தன் அங்க வஸ்திரத்தை எறிந்துவிட்டுச் சென்றான். சுரமாவும் அவன் பின்னே சிறிது தூரம் சென்றாள். மறைவான இடத்துக்கு வந்ததும் அவள் உதயனுடைய மார்பைத் தழுவிக்கொண்டாள்; உதயன் தலை குனிந்து அவளை முத்தமிட்டான். மறுகணமே அவன் சென்றதும், சுரமா மெல்லத் தன் படுக்கையறைக்கு வந்தாள். அவளுடைய விழிகளில் நீர் தாரையாக வடிந்தது. அவள் கரங் குவித்து, "தாயே, நான் மட்டும் பதிவிரதை யான பெண் என்றால், என் கணவரை அவருடைய தந்தை யின் கையிலிருந்து காப்பாற்ற வேண்டும். இன்று இந்த ஆபத்திலும் அவருக்கு விடை கொடுத்தனுப்பியது உன் பேரிலுள்ள நம்பிக்கையால்தானம்மா. என்னைமட்டும் நீ நாசமாக்கினால், உலகில் எவரும் உன்னை நம்பமாட்டார்கள்" என்று அழுதாள். 'தாய்க்கு நம் குரல் கேட்கவில்லையோ? இந்த இருண்ட அறையில் பலமுறை கூவியும் அவள் செவிக்கு எட்டவில்லையோ? உள்ளூறத் தேவிக்குச் சமர்ப் பித்த மலர்க்கொத்து அன்னையின் காலிலிருந்து நழுவி விட்டதோ?' என்றெல்லாம் எண்ணி அவள் அழுதாள். "தாயே! நான் என்ன செய்தேன்?" என்ற கேள்விக்குப் பதில் வரவில்லை. காரிருளில் அவளைச் சுற்றி ஊழியின் பேருருவம் தாண்டவமாடுவது போலவே அவளுக்குத் தோன்றியது. அவள் கண்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. தனியாகத் தன் அறையினுள் இருக்கமுடியாமல், அவள் விபா இருந்த இடத்துக்கு வந்தாள்.

வசந்தராய் குரல் தடுமாற, "இன்னும் அவன் வர வில்லையே! என்ன நடந்ததோ?" என்றார்.

சுரமா சுவரில் சாய்ந்து நின்று, "எல்லாம் தெய்வத் தின் விருப்பம்" என்றாள்.

ராமசந்திரன் மறைவாகத் தன் பழைய வேலைக்காரன் ராமமோகனனைச் சபித்துக்கொண்டிருந்தான். அவனால் தானே இவ்வளவு சங்கடங்களும்! எத்தனை விதமான தண்டனைகள் உண்டோ அத்தனையும் அவனுக்கு இட வேண்டுமென்று மனத்தில் உறுதி செய்துகொண்டான். நடுநடுவே அவனுக்குத் தண்டனை விதிக்க முடிகிறதோ இல்லையோ என்ற எண்ணமும் தலை தூக்கியது.

உதயன் கையில் வாளுடன் அந்தப்புரத்துக் கதவருகில் போய் அதைக் காலால் உதைத்தான். "யார் அங்கே?" என்றான்.

வெளியிலிருந்து, "நான்தான், சீதாராமன்" என்று பதில் வந்தது.

உதயன் திடமாக, "கதவைத் திற" என்றான்.

சீதாராமன் பட்டென்று கதவைத் திறந்தான். உதயன் மேலே செல்ல முயன்றபோது அவன் கை கூப்பி, "இளவரசே! மன்னிக்க வேண்டும். இன்றிரவு அந்தப்புரத்தைவிட்டு எவருமே வெளியேற உத்தரவில்லை" என்றான்.

"சீதாராம், நீயும் எனக்கு எதிராக நிற்கிறாயா? சரி, எடு உன் வாளை" என்று உதயன் கத்தியை உருவினான்.

"இல்லை, இளவரசே! உங்களுக்கு எதிராக நான் நிற்க மாட்டேன். என் உயிரை இரண்டு முறை காத்தீர்கள்" என்று அவன் இளவரசனுடைய பாததூளியை எடுத்துக் கொண்டான்.

"பின் என்ன செய்யவேண்டும் என்கிறாய்? சீக்கிரம் சொல்; எனக்குச் சமயமில்லை."

"இரண்டு முறை காத்த உயிரை இப்போது நாசமாக்க வேண்டாம். என் கத்தி இந்தாருங்கள். என்னைத் தலை முதல் கால் வரையில் கட்டிவிடுங்கள். இல்லாவிட்டால் நாளைய தினம் மகாராஜாவிடமிருந்து தப்ப முடியாது."

இளவரசன் அவன் சொன்னவாறு அவனைக் கட்டிப் போட்டுவிட்டு மேலே சென்றான். இன்னும் சற்றுத் தொலைவு சென்றதும், கொஞ்சம் உயரமான ஒரு மதில்; அதன் கதவும் அடைத்துக் கிடந்தது. அதைத் தாண்டி விட்டால் அந்தப்புரத்திற்கு வெளியே சென்றுவிடலாம். இளவரசன் கதவைத் தட்டாமல் மதில் சுவர் ஏறினான். காவலாளி ஒருவன் சுவரில் சாய்ந்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். உதயன் கவனமாக இறங்கி, சட்டென்று அவன்மேல் பாய்ந்தான். அவனுடைய உடைவாளைப் பிடுங்கி எறிந்து அவனையும் நன்றாகக் கட்டிப் போட்டான். அவனிடம் இருந்த சாவியால் கதவைத் திறக்கும்போது காவலாளிக்குப் பிரக்ஞை வந்தது. "இளவரசே! இதென்ன செய்கிறீர்கள்?" என்று அவன் வியப்புடன் கேட்டான்.

"அந்தப்புரத்தின் கதவைத் திறக்கிறேன்" என்றான் இளவரசன்.

"நாளை மகாராஜாவிடம் என்ன பதில் சொல்வது?"

"இளவரசன் பலாத்காரமாக எங்களைக் கட்டிப்போட்டு விட்டுக் கதவைத் திறந்ததாகச் சொன்னால் விடுதலை கிடைக்கும்."

அந்தப்புரத்தினுள் ராமசந்திரனுடைய ஆட்கள் இருந்த இடத்துக்குச் சென்றான் உதயன். அங்கு ராம மோகனனும் ரமாயியுமே இருந்தனர். மற்றவர் உணவு அருந்தியதும் தோணிக்குச் சென்றுவிட்டனர். இளவரசன் ராமமோகனனை மெல்லத் தொட்டான். அவன் திடுக்கிட் டெழுந்து உதயனைக் கண்டதும், "என்ன, இளவரசே!" என்றான். உதயன் ராமமோகனனை வெளியே அழைத்து வந்து அவனிடம் விஷயங்களைச் சொன்னான்.

ராமமோகனன் முண்டாசு கட்டிக்கொண்டு கையில் தடியை எடுத்தான். "பார்க்கலாம், அந்த லச்மன் சர்தார் எத்தனை தீரன் தான் என்பதை! இளவரசே! மகாராஜாவை

என்னிடம் கொண்டு விடுங்கள். இந்த ஒரு தடியால் நூறு பேரை நான் மடக்கிப்போடுவேன்” என்றான்.

“அது எனக்கும் தெரியும். ஆனல், மோகன்! யசோஹரில் ஆட்கள் நூற்றுக்குமேலேயே இருக்கிறார்கள். பலத்தைக் கொண்டு ஒன்றும் செய்யமுடியாது. வேறு வழி தான் பார்க்கவேண்டும்.”

“முதலில் மகாராஜாவிடம் என்னை அழைத்துப் போங்கள். அவர் முகத்தைப் பார்த்தால்தான் எனக்கு யோசனை தோன்றும்.”

மோகனனும் உதயனும் மற்றவர்கள் இருந்த இடத்துக்குச்சென்றனர். ராமமோகனனைக் கண்டதும் ராமசந்திர ராயின் கோபம் அளவை மீறியது. “உன்னை இப்போது விட்டேன். பழைய ஆள்! உனக்கு அதிக தண்டனை இல்லை. நீ போய்விடு. இந்தத் தடவை பிழைத்தேனே, இனி உன் முகத்தைக்கூட நான் பார்க்கமாட்டேன்” என்ற போது அவன் குரல் அடைத்தது. அவனுக்கு உள்ளூற மோகனன்மேல் ஒரு பாசம். சிறுவயது முதல் மோகனன் தான் அவனை வளர்த்துப் பெரியவனுக்கினன்.

ராமமோகனன் கைகூப்பினன்; “என்னை விரட்ட நீங்கள் யார், மகாராஜா? எனக்கு இந்த வேலையைக் கொடுத்தார் பகவான். யமனுடைய கூப்பாடு வரும் தினத்தன்று என் வேலை போகும். நீங்கள் வைத்துக்கொளகிறீர்களோ, இல்லையோ, நான் உங்கள் வேலைக்காரன்தான்” என்றான்.

**உதயன்:** மோகன், என்ன செய்வது?

**ராமமோ:** உங்கள் ஆசியில், கைத்தடியும் காளியின் பாதமுந்தான் துணை.

உதயன் தலையசைத்து, “அது நடக்காது, மோகன். உங்கள் தோணி எந்தப் பக்கம் இருக்கிறது?” என்றான்.

“அரண்மனையின் வலது பக்கத்துக் கால்வாயில்.”

“வா; மேலே போய்ப் பார்க்கலாம்.”

ராமமோகனனுக்குச் சட்டென ஏதோ தோன்றியது. "அதுதான் சரி, அங்கேயே வாருங்கள்" என்றான்.

எல்லாரும் மேலே சென்றார்கள். அங்கிருந்து எழுபது அடி கீழே இருந்தது கால்வாய். அதில் மிதந்தது ராமசந்திரராயின் பெரிய தோணி. அரசனை முதுகில் கட்டிக்கொண்டு அங்கிருந்து படகில் குதிப்பது என்று தெரிவித்தான் ராமமோகனன்.

வசந்தராய் பரபரப்புடன் அவனைப் பிடித்துக்கொண்டு, "இது நடக்காது, மோகன். அசட்டுப் பிசட்டென்று ஏதாவது செய்துவிடாதே!" என்றார்.

விபாவும் திடுக்கிட்டு, "இதென்ன சொல்லுகிறாய், மோகன்!" என்றாள். ராமசந்திரனும், "இல்லை, மோகன்! இது நடக்காது" என்றான்.

உதயன் அந்தப்புரத்துக்குச் சென்று பருமனான சில சால்வைகளைக் கொணர்ந்தான். அவற்றை முறுக்கிக் கயிறுபோல் தயார் செய்து, அதைச் சிறு கம்பத்துடன் பிணைத்தான். கயிறு படகுக்குச் சற்று அருகில் முடிந்தது. ராமசந்திரனை நோக்கி மோகனன், "மகாராஜா! என் முதுகைப் பிடித்துக்கொள்ளுங்கள். நான் கயிறு வழியாக இறங்குவேன்" என்றான். அரசனும் வேறு வழியின்றி அதற்கு இசைந்தான். ராமமோகனன் எல்லாரையும் வணங்கிப் பாததூளியை எடுத்துக்கொண்டான். பின்னர் அரசனை முதுகில் தூக்கி விபாவை நோக்கி, "அம்மா, நான் வருகிறேன். உன் மகனை நான் இருக்கும் வரையில் பயமே வேண்டாம்" என்றான்.

ராமமோகனன் கயிற்றைப் பிடித்தான். விபா தூணைத் தாங்கி நின்றாள். கிழவர் வசந்தராய் கால் நடுங்க, கண்களை மூடிக்கொண்டு, "துர்க்கா, துர்க்கா" என்று ஜபிக்கத் தொடங்கினார். ராமமோகனன் படகு வரையில் இறங்கி, கையைவிட்டுப் பல்லால் கயிற்றைக் கடித்துக்கொண்டு அரசனை இறக்கித் தானும் தோணியில் குதித்தான்.

தோணியில் இறங்கியதுமே, ராமசந்திரன் மயக்க முற்றான். விபாவும் நினைவிழந்தாள். கண்ணைத் திறந்து, "இதென்ன?" என்றார் வசந்தராய். உதயன் விபாவைத் தூக்கிக்கொண்டு உள்ளே சென்றான். சுரமா, "உங்கள் கதி என்ன?" என்றாள். "என்னைப் பற்றிய கவலை எனக்கு இல்லை" என்று பதில் வந்தது.

இந்தப் பக்கம் படகு கொஞ்சதூரம் சென்றதுமே பெரிய சால மரங்களால் கால்வாய் அடை பட்டுக் கிடந்தது. தோணி நகருவதைக் கண்டு தொலைவி லிருந்த காவலாளிகள் கல்லெறிந்தனர். ஆனால் ஒருவர் கூடத் தோணியை நெருங்கவில்லை. கத்திதான் அவர் களிடம் இருந்தது. ஒருவன் துப்பாக்கி கொணர்ந்தான். ஆனால் மருந்தும் சக்கிமுக்கியும் இல்லை. மருந்து எங்கே, குண்டெங்கே என்று அவர்கள் அலைவதற்குள் ராம மோகனனும், படகோட்டிகளுமாகத் தோணியைக் கட்டை களின்மீது இழுத்துச் சென்றுவிட்டனர். காவலாளிகள் அதைப் பின்தொடரப் படகைத் தேடினர். படகுக்காகச் சென்றவன் ஓர் உருண்டை கஞ்சா அடித்தபின், கடன் தரவேண்டிய ராம சங்கரனை எழுப்பிக் கண்டித்தான். படகின் அவசியம் முற்றும் தீர்ந்தபின் பலத்த ஆரவாரத் துடன் அது வந்தது. எல்லாரும் நேரமானதற்காக அதை ஓட்டி வந்த அவனைத் திட்டினர். அவன், "நான் என்ன குதிரையா?" என்றான். அவர்கள் அவனை திட்டி ஓய்ந்ததும் தோணியைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை போய் விட்டது. ராமசந்திரனுடைய தோணி பைரவநதி யைத் தாண்டியபோது பர்னாண்டிஸ் வேட்டு ஒன்று போட் டான். பிரதாபன் விடியற்காலையில் சற்று ஆழ்ந்து உறங் கினான். வேட்டின் ஓசையைக் கேட்டு அவன் தூக்கம் சட்டென்று கலைய, "யாரங்கே?" என்றான். ஒருவரையும் காணவில்லை. வாயிலில் இருந்த ஆட்கள் அன்றிரவே ஓடிவிட்டனர். பிரதாபன், "யாரங்கே?" என்று கூவினான்.

# 12

## தண்டனை

பிரதாபன் தூங்கி எழுந்து, "யாரங்கே?" என்று உரத்துக் கேட்டபோது எவரும் வரவில்லை. அவன் படுக்கையை விட்டு எழுந்து பரபரவென்று வெளியே வந்தான். "மந்திரி" என்று அவன் கூவியதைக் கேட்டு வேலையாள் ஒருவன் மந்திரியை அழைத்துவந்தான்.

"மந்திரி! காவலாளிகள் எங்கே?"

"வெளிக் கதவின் காவலாளிகள் ஓடிவிட்டனர்."

தலைக்குமேல் ஆபத்துக் கவிந்து வருவதை மந்திரி உணர்ந்தார். அதனால் பிரதாபனுடைய கேள்விக்குச் சட்டென்று உண்மையே சொல்லிவிட்டார். அரசனுடைய கேள்விக்குச் சுற்றி வளைத்தோ தயங்கியோ பதில் சொன்னால் அவனுக்குக் கோபம் பின்னும் அதிகமாகும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும்.

"அந்தப்புரத்தின் காவலாளிகள்?"

"வரும் வழியில், அவர்கள் தலைமுதல் கால்வரையில் கட்டுண்டு கிடப்பதைக் கண்டேன்."- மந்திரிக்கு இரவு நடந்த விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. என்ன என்று அவரால் அநுமானங்கூடச் செய்துகொள்ள முடியவில்லை, ஆனால் ஏதோ பெருத்த கலவரம் மட்டும் நடந்துவிட்டது அவ்ருக்குப் புரிந்தது. விஷயம் என்ன என்று மகா ராஜாவை அந்தச் சமயத்தில் கேட்பதும் முடியாது.

"ராமசந்திர ராய் எங்கே? உதயாதித்தியன், வசந்த ராய் இவர்கள்-?" என்று பிரதாபன் பரபரப்புடன் கேட்டான்.

"அவர்கள் அந்தப்புரத்திலேயே இருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன்."

அரசன் வெறுப்புற்றான். "நானுங்கூட நினைத்து விடலாமே! உன்னை எதற்காகக் கேட்டேன்? நினைப்பது எல்லா வேலைகளிலும் சரியாகிவிடாது" என்றான்.

மந்திரி வாய் திறவாமல் வெளியே சென்ருர். ரமாபதியின் மூலம் இரவு நடந்தவை எல்லாம் தெரிந்தன. ராமசந்திர ராய் ஓடிவிட்டது தெரிந்ததும் மந்திரிக்குக் கவலை மூண்டது. அவர் வெளியே வந்தபோது குள்ளன் ரமாயி உட்கார்ந்திருந்தான். மந்திரியைக் கண்டதும் அவன், "இதோ மந்திரி ஜாம்பவான்" என்று பல்லை இளித்தான். அவன் பல் இளிப்பது ராமசந்திரனுடைய சபையோருக்கு ரசிகத்தனமாகத் தோன்றுமே தவிர அசட்டுத்தனமென்று படாது. இங்கேயோ மந்திரி அவன் சொன்னதைக் கேட்கவுமில்லை; அவனைப் பார்க்கவுமில்லை. ஒரு சேவகனை நோக்கி, "இவனை இழுத்துக்கொண்டு வா" என்ருர். 'பிரதாபனுடைய கோபத்துக்கு இவன்தான் ஆளாகட்டுமே! அரசனுடைய கோபம் யார் மேலாவது விழுந்தாக வேண்டும். அதற்கு இந்த வாழைமரந்தான் லட்சியமாகட்டும்! மற்றப் பெரிய மரங்கள் பிழைக்கலாமல்லவா!' என்று அவர் எண்ணிஞர்.

ரமாயியைக் கண்டதும் பிரதாபனுடைய கோபம் பின்னும் அதிகமாகியது. அதிலும் அவன் பல் இளித்துக் கோணல்மாணலாக ஏதோ பேசத் தொடங்கியதும் பிரதாபன் பொறுக்க முடியாமல் கைகளை ஆட்டினுன். "பேசாமல் இவனை வெளியே தள்ளுங்கள். இவனை யார் இங்கே கொண்டுவரச் சொன்னது?" என்ருன். கோபத்துடன் பிரதாபனுக்கு வெறுப்பும் தோன்றியிராவிட்டால் ரமாயி பாண்டன் பிழைத்திருக்கவே முடியாது. அந்த அற்பனை அடிப்பதற்கும் கை கொண்டு தீண்ட வேண்டுமல்லவா! ரமாயியைக் காவலாளிகள் உடனே அப்புறப் படுத்தினர்.

**மந்திரி:** மகாராஜா!...மாப்பிள்ளை... ..

பிரதாபன் பொறுமையை இழந்து, "ராமசந்திர ராயன் என்று சொல்" என்று திருத்திஞன்.

"ஆம்! அவர் நேற்றிரவு அரண்மனையைவிட்டுப் போய் விட்டார்."

"ஓடிவிட்டானு! காவலாளிகள் எங்கே?" என்று பிரதாபன் ஆசனத்தை விட்டு எழுந்தான்.

"வெளிக் கதவின் ஆட்கள் ஓடிவிட்டனர்."

முஷ்டியைக் குவித்துக்கொண்டு பிரதாபன், "எங்கே ஓடிவிடுவார்கள்? எங்கே இருந்தாலும் அவர்களைப் பிடித்தே ஆகவேண்டும். அந்தப்புரத்தின் காவலாளிகளை உடனே அழைத்து வரச் சொல்" என்ருன்.

மந்திரி மெல்ல வெளியே சென்ருர்.

ராமசந்திர ராய் படகில் ஏறியபொழுது இருள் பிரிய வில்லை. உதயன், வசந்தராய், சுரமா, விபா இவர்கள் முன்னிரவு படுக்கவே இல்லை. விபா பேசவும் இல்லை கண்ணீர் வடிக்கவுமில்லை. கம்மென்று சோர்ந்து போய்க் கிடந்தாள். சுரமா அவள் பக்கத்தில் உட்கார்ந்து தன் விரல்களால் அவள் தலையைக் கோதிவிட்டாள். உதயனும் வசந்தராயும் கம்மென்று நின்றனர். இருளில் ஒவ்வொருவர் முகமும் மங்கலாகத் தெரிந்தது. காரிருளில் புலனறியாத ஒன்று (அதை இருளென்றும் சொல்லலாம்; சந்தேக மென்றும்; குறிப்பிடலாம்; அதிருஷ்டம் என்றும் எண்ண லாம்.) பெருமூச்சு விடுவதுபோல் இருந்தது. எப்போதும் புன்னகையுடன் இருக்கும் வசந்தராயின் உள்ளம் அந்தச் சூழ்நிலையில் வேதனையுற்று ஏங்கியது. அவர் நாற்பக்கமும் பார்த்துத் தலையைத் தடவியவாறு எண்ணமிட்டுக்கொண் டிருந்தார். அவருடைய மூளை நிலை தடுமாறியது. நடந் தவை ஒன்றுமே அவருக்கு விளங்கவில்லை; சிக்கலான கனவு போலவே அவருக்குத் தோன்றின. நடுநடுவே அவர் உதயனுடைய கையைப் பிடித்து, "அப்பா!" என்று ஏக்கம் துடிக்கும் குரலில் அழைத்தார். "என்ன, தாத்தா!" என்று உதயன் கேட்டான். என்ன பதில் சொல்வதென்று வசந்தராய்க்குத் தோன்றவில்லை. "அப்பா!" என்ற ஒரே

கேள்வியில் ஏங்கும் அவர் உள்ளத்தில் எத்தனை கேள்வி அடைத்துக் கிடந்தன என்பது எப்படித் தெரியும்? முக்கியமான கேள்வி ஒன்றுமில்லை. அவர் சொல்ல எண்ணியது, "இதென்ன?" என்பதே. நாற்பக்கமும் கவிந்த இருள் ஏதோ ஒன்றைப் புரிபடாமல் அவர் காதில் ஓதியது. இந்தச் சமயத்தில் உதயனுடைய பேச்சைக் கேட்டால் அவர் மனம் நிம்மதி அடையும். நடுநடுவே அவர் உதயனுடைய கையைப் பிடித்து, "அப்பா! என்னுல் தானே இவ்வளவும்?" என்ருர். தம்மைக் கொல்ல முடியாத தன் வினைவுதான் இவ்வளவும் என்று அவருக்குப் பட்டது. உதயனும் அதிகமாக ஒன்றும் பேச முடியவில்லை. "இல்லை, தாத்தா!" என்றுமட்டும் அவன் சொன்ஞன். வெகுநேரம் அறை நிச்சப்தமாக இருந்தது. வசந்தராய், "விபா, என் செல்வமே! நீ ஏன் பேசமாட்டேன் என்கிருய்?" என்று விபாவின் பக்கத்தில் போய் உட்காருவார். கொஞ்ச நேரம் பொறுத்து, "சுரமா!" என்பார். சுரமா தலை நிமிர்ந்தாளே ஒழியப் பேசவில்லை. கிழவர் ஒன்றும் தோன்ருமல் தலையைத் தடவிக்கொண்டிருந்தார். இன்னதென்று விளங்காத விபத்தொன்றை அவர் எதிர்நோக்கிஞர். சுரமா விபாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவள் கூந்தலைக் கோதிவிட்டாள்; ஆனுல், அவள் உள்ளம் படும்பாடு அ.ந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். சுரமா இருளிடையே உதயனுடைய முகத்தை நோக்கிஞள். அப்போது அவன் சுவரில் தலையைச் சாய்த்துக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். சுரமாவின் கண்களில் நீராக வடிந்தது. விபாவுக்குத் தெரியாதவாறு அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

கிழக்கு வெளுத்து, வெளிச்சம் மெல்லப் பரவியதும் வசந்தராய் பெருமூச்சு விட்டார்; அவர் மனத்தைக் கவிந்த சந்தேகம் மெல்ல விலகியது. இதுவரை நடந்தவைகளை எல்லாம் நன்ருக ஒரு முறை ஆலோசனை செய்தபின்

மெல்ல விபாவின் அறையை விட்டுச் சென்றார். அந்தப் புரத்தின் வாயிலில் கைகால் கட்டுண்டு கிடக்கும் சீதா ராமனிடம் போய், "இதோ பார், சீதாராம்! உன்னை யார் கட்டியது என்று பிரதாபன் கேட்டால் என் பெயரைச் சொல். ஒரு காலத்தில் வசந்தராய்க்கு இருந்த பலம் பிரதாபனுக்குத் தெரியும். அவன் நீ சொல்வதை நம்பு வான்" என்றார்.

பிரதாபனிடம் என்ன சொல்வது என்றுதான் இவ் வளவு நேரமாகச் சீதாராமன் யோசித்துக்கொண்டிருந் தான். இது விஷயமாக உதயனுடைய பெயரை எடுப்பது சரி என்று அவனுக்குப் படவில்லை. கோணல் காலும், மூன்று கண்களுமுடைய பனைமர அளவு உயரமான பிசா சைக் குற்றவாளி ஆக்கலாமா என்று அவன் யோசித்த சமயம், வசந்தராய் வந்து சேர்ந்தார். பிசாசு விடுதலை அடைந்தது. அவன் உடனே வசந்தராயின் சொல்லுக்கு இணங்கினான். அவர் இரண்டாவது காவலாளியிடம் போய், "பாகவதா! பிரதாபன் உன்னைக் கேட்டால் நான் கட்டியதாகச் சொல்" என்றார். சட்டென்று பாகவத னுடைய தர்மம் தலைதூக்கி நின்றது. பொய் சொல்லு வதை அவன் உள்ளூற வெறுக்க ஆரம்பித்தான். அதற்கு முதல் காரணம் உதயன் மேல் அவனுக்கு இருந்த கோபந்தான். "அப்படிச் சொல்லக்கூடாது, பாவம்" என்றான்.

வசந்தராய் அவனுடைய தோளில் கை வைத்து, "பாகவதா! நான் சொல்வதைக் கேள்: இதில் பாவம் எதுவு மில்லை. சாதுவின் உயிரைக் காக்கப் பொய் சொல்வது பாவம் என்றால், உன்னை இவ்வாறு நான் வேண்டுவேனா?" என்றார். ஆனால் பாகவதனுடைய உள்ளம் இதற்குச் சற்றும் இசையவில்லை. "இல்லை, சுவாமி! எஜமானிடம் பொய் சொல்லக் கூடாது!" என்றான்.

வசந்தராயின் கவலை அதிகமாகியது. "பாகவதா! நான் சொல்வதைக் கேள்: உனக்குத் தெளிவாகச் சொல்கிறேன். இந்தப் பொய்யால் பாவம் எதுவுமில்லை. உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன். நான் சொல்வதைக் கேள்: என்னிடம் இருப்பதை எல்லாம் எடுத்துக்கொள்" என்று கெஞ்சினார்.

பாகவதன் உடனே கை நீட்டினான்; ரூபாய்கள் கச்சைக்குள் மறைந்தன. வசந்தராய் சற்று நிம்மதி அடைந்தார்.

பிரதாபன் காவலாளிகள் இருவரையும் அழைத்தான். அவன் தனக்கு இருந்த கோபத்தை எல்லாம் அடக்கிக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான். "நேற்றிரவு அந்தப்புரத்தின் கதவு எப்படித் திறந்தது?" என்று அவன் அழுத்தமாகக் கேட்டான்.

சீதாராமனுடைய உள்ளம் துடித்தது. அவன் கைகூப்பி, "மகாராஜா! என்பேரில் தவறு ஒன்றுமில்லை!" என்றான்.

அரசன் புருவம் சுளித்து, "அதை யார் கேட்டது?" என்றான்.

சீதாராமன் பரபரப்புடன், "சொல்லுகிறேன், அரசே! இளவரசர்......இளவரசர் எங்களைப் பலவந்தமாகப் பிணைத்துவிட்டு வெளியே சென்றார்" என்று சொன்னான். இளவரசனுடைய பெயர் எப்படியோ வாய் தவறி வந்து விட்டது. அதைச் சொல்லக்கூடாது என்று எவ்வளவோ கவனமாகத்தான் இருந்தான். கடைசியில் பரபரப்பில் அந்தப் பெயரே முதலில் வந்துவிட்டது. வெளி வந்தபின் அதை மறைப்பது எப்படி?

வாயில் காப்பாளரின் விசாரணை என்று கேள்விப் பட்டு வசந்தராய் உடனே ஓடிவந்தார். அப்போது சீதா ராமன், "நான் இளவரசரைத் தடுத்தேன்; அவர் கேட்க வில்லை" என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

வசந்தராய் பரபரப்புடன், "என்ன! என்ன! சீதாராம்! பொய் சொல்லாதே! தெய்வம் உனக்கு நல்லதைச் செய்யும்; உதயன் பேரில் தவறில்லை" என்றான்.

பிரதாபன், "அப்படியானால் உன் குற்றமா?" என்று அழுத்தமாகக் கேட்டான்.

"இல்லை, மகாராஜா!"

"பின், யார் செய்தது?"

"மகாராஜா!......" என்று தயங்கினான் சீதாராமன்.

அடுத்தபடியாகப் பாகவதனைக் கேட்டபொழுது, அவன் தான் தூங்கியதைத் தவிர மற்றவைகளை எல்லாம் அப்படியே சொல்லிவிட்டான். வசந்தராய்க்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர் கண்ணை மூடிக் கொண்டு துர்க்கா நாமத்தைச் சொல்லலானார். காவலாளிகளுக்கு வேலை போய்விட்டது. பலாத்காரமாக அவர்களை ஒருவன் கட்ட முடியும் என்றால், காவலாளிகளாக இருக்க லாயக்கில்லைதான். அந்தக் குற்றத்துக்காகக் கசையடித் தண்டனையும் அவர்களுக்குக் கிடைத்தது.

பிரதாபன் வசந்தராயை நோக்கி, "உதயன் செய்த இந்தக் குற்றத்துக்கு மன்னிப்புக் கிடையாது" என்றான். அவன் சொன்ன தோரணையிலிருந்து, உதயன் செய்த தவறு எல்லாம் வசந்தராயினுடையது போலவே தோன்றியது. வசந்தராயின குற்றம் அவர் உதயனை உயிரினும் மேலாக நேசிப்பதுதான்!

வசந்தராய் பரபரப்புடன், "அப்பா! உதயன் பேரில் தவறு ஒன்றுமில்லை" என்றார்.

பிரதாபன் தீப்போல் கொதித்தான். "குற்றவாளி இல்லையா! நீர் சொல்லுகிறதால் அவன் தண்டனையைப் பின்னும் அதிகரிப்பேன். நீர் குறுக்கே விழுந்து முடிவு கட்ட வரக் காரணம் என்ன?" என்றான்.

வசந்தராய் உதயன் பக்கமாக இவ்வளவு பேசுவதைக் கண்டு அரசனுடைய வெறுப்புப் பன்மடங்காகியது.

தமக்குத் தண்டனை தரும் நோக்கத்துடன்தான் உதய னுக்குச் சிறைவாசம் என்று வசந்தராய்க்குத் தெரிந்தது. அவர் மௌனமாக யோசனையில் ஆழ்ந்தார்.

சற்றுப் பொறுத்துப் பிரதாபன் அமைதியாகச் சொன்னான்: "உதயனுக்குச் சற்றுவது மனோதிடம் இருந்து, ஒரு லட்சியத்தோடு இதைச் செய்திருந்தால், அவன் இன்று பிழைத்திருக்க முடியாது. இந்தச் சருகு பறக்கும்படி கீழே ஊதுவது யார் என்று தெரிந்துவிட்டது. அதனால்தான் அவனுக்குத் தண்டனை அளிக்க எனக்கு மனமில்லை. அவன் அதற்குக்கூடத் தகுதி அற்றவன். ஆனால், சிற்றப்பா சுவாமிகளே! நீர் இனி உதயனைக் காண யசோஹர் வந்தால், அவன் உயிரைக் காப்பாற்று வது முடியாது" என்றான்.

வசந்தராய் மெல்ல, "சரிதான், பிரதாபா! நான் இன்று சாயங்காலமே போகிறேன்" என்று வெளியே போய் நீண்ட பெருமூச்சு விட்டார்.

உதயாத்தித்தியனை நேசிப்பவர்களையும், அவன் மேல் அன்பு கொண்டவர்களையும் அவனை விட்டுப் பிரிப்பது என்று பிரதாபன் உறுதிகொண்டான். "நம் மருமகள் இனி அரண்மனையில் இருப்பது கூடாது. அவளை எப்படி யாவது பிறந்த வீடு அனுப்பவேண்டும்" என்று அவன் மந்திரியிடம் சொன்னான். விபாவின் மேல் அவனுக்குச் சந்தேகம் உண்டாகவில்லை. ஆயிரம் இருந்தாலும் அவள் வீட்டுப் பெண்தானே!

# 13

## விடை பெறுதல்

வசந்தராய் உதயாதித்தியனிடம் போய் அவனை இரு கைகளாலும் தழுவிக்கொண்டார். "அப்பா! இனி உன்னைக் காண முடியாது" என்றார்.

"ஏன்? தாத்தா" என்று உதயன் அவர் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

வசந்தராய் எல்லாவற்றையும் சொல்லி அழுதார். "அப்பா! நான் உன்னை நேசிக்கிறேன் என்றுதானே உனக்கு இவ்வளவு கஷ்டம்? நீ சுகமாக இருந்தாலே, இந்தச் சில நாட்களை நான் ஒருவாறு கழிப்பேன்" என்றார்.

உதயன் தலை யசைத்தான்: "இல்லை. அது ஒருகாலும் நடக்காது. நீ என்னைக் காணமுடியும். அதைத் தடுக்க எவராலும் முடியாது. தாத்தா, நீ போய்விட்டால், நான் உயிரோடு இருக்கவே முடியாதே!" என்றான்.

வசந்தராய் கவலையுடன், "பிரதாபன் என்னைக் கொல்லவில்லை; உன்னை என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டான். அப்பா! இப்போதே நான் போகிறேன்; என்னைப் பாராதே. நான் செத்துவிட்டேன் என்று நினைத்துக்கொள்" என்றார்.

உதயன படுக்கையறையில் சுரமாவிடம் சென்றான். விபாவிடம் போய் வசந்தராய், "விபா, என் செல்வமே! எழுந்திரு. இந்தக் கிழத்தின் தலையை உன் கையால் தடவிக்கொடு" என்று அவள் மோவாயைத் தொட்டார். விபா அவர் தலையில் நரைமயிர் எடுக்கத் தொடங்கினாள்.

உதயன் சுரமாவிடம் எல்லாவற்றையும் சொன்னான்: "சுரமா! எனக்கு உலகில் எது பிடித்திருக்கிறதோ, அதை

யும் பிடுங்க ஒரு சூழ்ச்சி நடக்கிறது'' என்று அவள் கையைப் பிடித்தான். "சுரமா! உன்னையும் யாராவது பிரித்துவிட்டால்!'' என்றான்.

சுரமா உதயனை மார்புறத் தழுவிக்கொண்டு, "அது யமனால்தான் முடியும். வேறு யாருக்கும் அந்த வல்லமை இல்லை'' என்றாள்.

சுரமாவின் உள்ளத்திலும் அப்படி ஓர் ஐயம் பிறந்தது. கடினமான கரம் ஒன்று உதயனை அவளிடமிருந்து பிரித்து வைக்க வருவதை அவள் உணர்ந்தாள். உதயனை உள்ளூறத் தழுவி, "நான் விடமாட்டேன். நம்மை எவராலும் பிரித்து வைக்க முடியாது'' என்று தனக்குள் அவள் சொல்லிக்கொண்டாள்.

மீண்டும், "வெகு நேரமாக யோசனை செய்தேன். உங்களை என்னிடமிருந்து பிரிக்க எவராலும் முடியாது'' என்றாள். இதையே திரும்பத் திரும்பச் சொல்லி, அவள் தன் உள்ளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள எண்ணினாள்.

உதயன் சுரமாவை நோக்கிப் பெருமூச்சுவிட்டு, "சுரமா! இனித் தாத்தாவைக் காண்பது முடியாது'' என்றான்.

சுரமாவும் ஆழ்ந்து பெருமூச்செறிந்தாள்.

"என் கஷ்டத்துக்காகச் சொல்லவில்லை. சுரமா! ஆனால் தாத்தாவின் உள்ளம் மிகவும் வருந்துமே! இன்னும் ஈசுவரனுக்கு என்ன எண்ணமோ!'' என்றான்.

உதயன் வசந்தராயைப்பற்றிச் சொல்லலானான். அவர் சொன்னவை, செய்தவை எல்லாம் அவன் நினைவில் எழுந்தன. அவருடைய இளகிய உள்ளத்தின் எத்தனையோ பேச்சுக்களை - தன்னுடைய நினைவைக் கடைந்தெடுத்த மாணிக்கங்கள் அத்தனையையும் - அவன் ஒவ்வொன்றாகச் சுரமாவுக்குச் சொன்னான்.

சுரமா, "ஆகா! தாத்தாவைப் போல் ஒரு மனுஷர் உண்டா!'' என்றாள். அவர்கள் இருவரும் விபாவின்

அறைக்குச் சென்றனர். விபா தாத்தாவின் நரை மயிரை எடுக்க, அவர் தம் விருப்பம்போல் பாடிக்கொண்டிருந்தார்:

"செல்வோம்; இனிமேல் செய்யேல் தாமதம்;
நல்லோய்! எத்துணை நாளிங் கிருப்பது?
போயினர் உன்றன் பாங்கியர் யாவரும்;
நீயுமிப் பவத்தே நின்விளை யாட்டொழி.
இருளும் சூழ்ந்தது; எவரை நோக்கித்
திரும்பிப் பார்த்துத் தியங்குகி றாய்நீ?
உலகெனும் நாடக அரங்கினில் ஆடிடப்
பலபல புத்தம் புதியோர் வந்துளர்.
வாராய்; விரைவினில் வாராய், தோழி!
வாரா திருப்பின் வந்திடும் கேடு!
உள்ளச் சுமையினை அகற்றிடு வாயே!
நல்லன சூழ்ந்த நாடுசெல் வாயே!
புதியதோர் உறைவிடம் புனைந்துநீ ஆங்கே
புதியவாம் ஆடல் பலபுரி வாயே!

உதயனைக் கண்டதும் வசந்தராய் சிரித்தார். "இதோ பார்: விபா என்னை விட மாட்டேனென்கிறாள். நான் அவளுக்கு எதற்கு? ஒரு காலத்தில் எனக்கு இளமை இருந்தது. இன்று அதன் தீவிரம் வற்றி உடல்வெறுந்தோலாகி விட்டது. பாவம்; அவள் இதைக் கொண்டே தன் ஆசையைத் தீர்த்துக்கொள்ள எண்ணுகிறாளா! நான் போகிறேன் என்றால், அவள் அழுகிறாள். இப்படி எங்கேயாவது கேள்விப்பட்டதுண்டா? என்னால் அவள் அழுவதைப் பார்க்கச் சகிக்கவில்லையப்பா!" என்று அவர் பாடத் தொடங்கினார்:

"யானும் புறப்பட ஆனது நேரம்;
ஏனிப் படிநீ எனைமடக் குகிறாய்;
கண்ணீர் பெருக்கிக் கனியவைத் தென்னை
உன்றன் மாய வலைப்படுத் தாதே!

வாளா கழிந்ததே வாழ்வின் ஒய்வுநாள்;
மீளா நோக்கை மீட்டிடு வாயே!
என்னைப் பெயரிட் டினியழை யாதே!
இன்னே யான்சென் றிடுவன், தோழி!”

“இதோ பார்; விபா! விபா! நீ அப்படி அழுதாயோ...” இதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. விபாவை அடக்கப் போய், அது முடியாமல் தாமே கண்களைத் துடைத்துக்கொண்டார். “இதோ பார், சுரமாவும் அழுகிருள். இதற்கு ஏதாவது வழி செய். இல்லையோ நான் கட்டாயம் இங்கேயே தங்கிவிடுவேன். உன் இடத்தைப் பிடித்துக்கொள்வேன். இரண்டு கைகளாலும் நரை மயிர் எடுக்கவேண்டும். உடைந்த பற்களால் காதில் ரகசியம் ஓதுவேன். அப்படியே பக்கத்தில் நடக்கமுடியாதது ஏதாவது நடந்துவிட்டால் என்னை ஒன்றும் சொல்லக் கூடாது” என்ருர்.

யாரும் பதில் பேசவில்லை. உடனே அவர் சிதாரை எடுத்துக்கொண்டு மிக வேகமாக இசைக்கத் தொடங்கினுர். ஆனுல் விபாவின் கண்ணீர் அதற்கும் தடை செய்தது. அவர் கண்களும் மங்கின. நடுநடுவே அங்கு இருந்த எல்லாரையும் திட்ட நினைத்தார். ஆனுல் குரல் எழவில்லை. தொண்டை அடைத்தது. அவர் பேசாமல் சிதாரைக் கீழே வைத்தார். போகும் நேரம் நெருங்கியது.

உதயனை மாற்புறத் தழுவி அவர், கடைசியாகச் சொன்னுர்: “அப்பா! இதோ சிதாரை வைக்கிறேன். இனி அதைத் தொடுவதில்லை. சுரமா! சுகமாக இரு. அம்மா விபா......” அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு பல்லக்கில் ஏறினுர்.

# 14

## அரண்மனை ரகசியம்

யசோஹரின் ஒரு மூலையில் மங்களாவின் குடில். அங்கு அவள் மாலையுடன் ஜபம் செய்துகொண்டிருந்தாள். இந்த வேளையில் காய்கறிக் கூடையுடன் வந்து நின்ருள், அரண்மனை வேலைக்காரி மாதங்கினி.

"சந்தைக்கு வந்தேன். மங்களாவைக் கண்டு வெகு நாளாச்சுதே என்று இப்படி வந்தேன். வேலை அதிகம் கிடக்குது. உட்கார நேரமில்லை" என்று அவள் கூடையை வைத்துவிட்டு ஒரு பக்கமாக அமர்ந்தாள். "அது சரிதா னம்மா, உனக்குத்தான் தெரியுமே! அவருக்கு என்மேல் ஆசைதான். ஆனல் கொஞ்ச நாளாக அவர் மனசு எவள் மேலேயோ போய் அலையுது. மூணே நாளில் அவளுக்குச் சாவு வரும்படி செய்வேன்" என்ருள்.

பசு காணுமல் போனதுமுதல், கணவனைத் திருத்து வது வரையில் எதற்கும் மருந்து கொடுப்பாள் மங்களா. அதைத் தவிர வசீகரண வழிகளுக்காக அரண்மனையின் பெரிய வேலைக்காரர்கள் எல்லாரும் அவள் காலில் விழு வார்கள். எவளுக்கு மூன்று நாளில் சாவு வர வேண்டு மென்று மாதங்கினி கேட்டாளோ, அவள் மங்களாவே தான். அவள் தனக்குள் சிரித்துக்கொண்டே, "அவள் சாக என்ன அவசரம்! யமனுக்கு வேலை கொடுத்த பின்தான் அவள் சாவாள்" என்று சொல்லிக்கொண்டாள். பின்னர் வெளிப்படையாக, "உன்னைப் போன்ற அழகியை விட்டு வேருெருத்தியை நாடும் முட்டாளும் உண்டா? நீ கவலைப்படாதேயம்மா! அவன் மனசு உன் பக்கம் திரும்பும் மறுபடியும். அதற்கு உன் கண்களிலேயே மருந்து இருக் கிறது. அதைச் சற்று அதிகமாக உபயோகி. அதனல்

பலனில்லை என்றால், இந்த வேரைத் தண்ணீருடன்கலந்து கொடு" என்று உலர்ந்த வேர் ஒன்றைக் கொடுத்தாள்.

"ஏனம்மா, அரண்மனையின் விஷயம் ஏதாவது தெரியுமா?" என்று மங்களா அவளைக் கேட்டாள்.

மாதங்கினி கையை விரித்தாள். "அதைப்பற்றியெல்லாம் எங்களுக்கு என்னம்மா?" என்றாள்.

"உண்மைதான்."

மங்களா தான் சொல்வதை அப்படியே ஒப்புக் கொண்டு விடுவாள் என்று மாதங்கினி எதிர்பார்க்கவில்லை. அவள் சற்றுத் தயங்கி, "அதை உனக்குச் சொல்வதில் தவறில்லை. ஆனால் எனக்கு நேரமில்லை; இன்னொரு நாள் ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு அப்படியே உட்கார்ந்தாள்.

"சரி, இன்னொரு நாள் கேட்டால் போகிறது."

மாதங்கினி பொறுமையை இழந்தாள். "நான் வரட்டுமா? நேரமாயிற்று. இன்று எத்தனை திட்டுக் கேட்க வேண்டுமோ? அன்று ராசா மாப்பிள்ளை வந்தார். அன்று இரவே சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டார்" என்றாள்.

"அப்படியா? ஏன் அப்படிப் போனார்? மாதங்கினியைத் தவிர எனக்கு யார் இதையெல்லாம் சொல்லப்போகிறார்கள்?"

மாதங்கினியின் முகம் மலர்ந்தது. "உண்மையான விஷயம் என்ன தெரியுமா? எங்கள் ராஜா மருமகளுக்கு யாரைக் கண்டாலும் ஆகாது. என்ன மாயமோ, தன் புருசனை வலை போட்டுக் கட்டி ஆட்டுக் குட்டியாக்கி விட்டாள், போயேன்!—இல்லையம்மா! கிடக்கட்டும்; யார் காதிலேயாவது பட்டு, நான தமுக்குப் போடறேன்னு சொல்லுவாங்க" என்றாள்.

மங்களாவின் ஆவல் அதிகமாகியது. மாதங்கினி முழுவதையும சொல்லாமல் போக மாட்டாளென்பது அவ

ளுக்குத் தெரியும். இருந்தும் அவள் பரபரப்புடன், "இங்கே யாருமில்லையடி. தவிர, நம் இருவருக்குள் தானே பேச்சு! அவள் என்ன செய்தாள்?" என்று கேட்டாள்.

"அவள் சின்னம்மா பேரில் மாப்பிள்ளையிடம் ஏதோ பழி சொன்னுளாம். அதனுல்தான் அவர் இரவோடு இரவாக ஓடிவிட்டார். சின்ன அம்மா அழுது சாகிருங்க. ராசாவுக்கு வந்த கோபத்திலே, மருமகளை ஸ்ரீபுரம் அனுப்பிவிடப் போகிருராம். ஏனம்மா, எது சொன்னுலும் நீ சிரிக்கிறியே! இதில் என்ன வேடிக்கை?"

ராமசந்திர ராய் ஓடியதன் காரணம் ஒவ்வொருத்தர் வாயில் ஒவ்வொரு விதமாக வெளியாகியது.

"உங்கள் எஜமானியிடம் சொல்: மருமகளைச் சீக்கிரமே அனுப்ப வேண்டாம்; மங்களா கொடுக்கும் மருந்தினுல இளவரசன் அவளை வெறுக்கும்படி நேரிடும் என்று சொல்" என்று கூறிவிட்டு மங்களா சிரிக்கத் தொடங்கினுள்.

"அது சரி."

"ஆமாம், உங்கள் ராஜா மருமகளிடம் இளவரசருக்கு அதிக ஆசையோ?"

"அதையேன் கேட்கிருய்? ஒரு கணம் பாராமல் இருப்பதில்லை. அவரை 'நீ' என்ருலே வந்துவிடுகிருர்."

"சரி, நான் மருந்து தருகிறேன். பகல் வேளையில் கூடவா அவளிடம் இருக்கிருர்?'

"ஆமாம்."

"அடியம்மா! என்னடி இது! அவள் இளவரசரிடம் என்ன சொல்கிருள்? என்ன செய்கிருள்? ஏதாவது தெரியுமா?"

"எனக்கு அதெல்லாம் தெரியாதம்மா; நான் பார்த்ததில்லை."

"என்னை ஒரு தடவை அரண்மனைக்கு அழைத்துப் போ. நான் பார்த்து வருகிறேன்."

"ஏனம்மா, உனக்கு ஏன் இந்தத் தலைவலி?"

"இல்லை, ஒரு முறை பார்த்துவிட்டால், எப்படி வசம் செய்தாள், என் மந்திரம் பலிக்குமா என்று தெரியும்."

"சரிதானம்மா; எசமானியிடம் சொல்லுகிறேன்" என்று மாதங்கினி கூடையை எடுத்துக்கொண்டு எழுந்தாள்.

மாதங்கினி சென்றதும் மங்களா பற்களைக் கடித்துக் கொண்டாள். கண்கள் கோபத்தினால் விரிய, அவளுடைய உதடுகள் ஏதோ முணுமுணுக்கத் தொடங்கின.



# 15

## தயைக்கு ஏற்ற தண்டனை

வசந்தராய் சென்றுவிட்டார். அப்போது இருட்டி விட்டது. விபா மாடிக்குச் சென்று அங்கிருந்து அவருடைய பல்லக்கு நகர்ந்துசெல்வதைப் பார்த்தாள். வசந்தராய் பல்லக்கினுள்ளிருந்து, தலையை வெளியே நீட்டிப் பின்புறம் நோக்கினார். அந்திக் கருக்கலில் கண்ணீர்ப் படலங்களினூடே கல்லாகி நிற்கும் அரண்மனைச் சுவர்கள் மங்கலாக அவருக்குத் தோற்றின. பல்லக்குச் சென்ற பின்னரும் விபா அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். தாரகைகள் எழுந்தன; அரண்மனையில் விளக்குகளும் ஒளிரத் தொடங்கின. வழியில் ஜன நடமாட்டம் குறைந்தது. அப்போதும் விபா நகரவில்லை. சுரமா வீடெங்கும் அவளைத் தேடிக் காணமல், கடைசியாக மாடிக்கு வந்தாள். விபாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஆதரவாக அவள், "என்னம்மா பார்க்கிருய்?" என்று கேட்டாள். "யாருக்குத் தெரியும்?" என்று மெல்லப் பெருமூச்சு விட்டாள் விபா. அவள் கண்களுக்கு எல்லாம் வெறிச்சென்று தோன்றின; மனத்தில் மகிழ்ச்சியில்லை. உள்ளே செல்வானேன்? வெளியே வருவானேன்? ஏன் படுத்துக்கொள்ளவேண்டும்? பிற்பகல் வேளைக்கு இங்கும் அங்கும் செல்வது எதற்கு? ஒன்றும் அவளுக்கு விளங்கவில்லை. அரண்மனையில் தனக்கு இடமில்லை என்றே அவளுக்குப் பட்டது. சிறு பிராய முதல் விளையாட்டு, சுகதுக்கம், அழுகை சிரிப்புக்கள் நிறைந்த ஓர் அறை அவளுக்கென்று அரண்மனையில் இருந்தது. ஒரே நாளில் அதைத் சிதைத்தது யார்? இந்த அறை அவளுடையதல்லவே! வீடு இருந்தும் வீடற்றவள் அவள். இருந்த தாத்தா போய்விட்டார் அவளுடைய சந்திரத்வீபத்திலிருந்து அவளை அழைத்துச்

செல்ல ஆட்கள் எப்போது வருவார்களோ? ராமமோகனன் புறப்பட்டும் இருக்கலாம்! இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்களோ? விபாவின் அதிர்ஷ்டத்தில் சுகம் இன்னும் இருக்கிறதோ என்னவோ! அண்ணன் உதயாதித்தியன், உயிரான சுரமா இவர்களையும் நிழல்போல் ஓர் ஆபத்துப் பின் தொடருவதை அவளால்உணர முடிந்தது. அது அவளுடைய அறை அல்ல; அதை ஒரு ரகசியம் மூடிக் கொண்டு விட்டபின், அவளுடையதென்று சொல்ல முடியுமா?

சீதாராமனுக்கு வேலை போனபின், அவன் கஷ்டப்படுவது உதயனுக்குத் தெரிய வந்தது. சீதாராமனிடம் சொத்து ஒன்றும் இல்லை. போதாத குறைக்கு அவனை நம்பிப் பெரிய குடும்பம் காத்து நின்றது. அவன் வேலையில் நிறையச் சம்பளம் வாங்கியபொழுது, அத்தை ஒருத்தி அன்பு மேலீட்டால், தன் வேலையை விட்டு அவனிடம் வந்து வசிக்கத் தொடங்கினாள். சீதாராமனைக் கண்டதும் தன் பசிதாகமெல்லாம் போய்விட்டதாகச் சொல்லி எப்படியோ அங்கே இருக்க வசதி செய்துகொண்டாள். பசிதாகம் தீர்ந்தது உண்மைதான்; ஆனால் சீதாராமனைக் கண்டதனால் அல்ல. தூரத்து உறவில் சீதாராமனுக்கு ஒரு தங்கை இருந்தாள். அவள் தன் மகனை வேலைக்கு அனுப்ப எண்ணியபொழுது, சட்டென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. தன் பிள்ளை கண்ட வேலையும் செய்தால் மாமாவுக்கு அவமானமல்லவா? ஆகவே, மாமாவின் மானத்தைக் காப்பாற்றப் பிள்ளையை வேலைக்கு அனுப்பவில்லை. பதிலாகத் தங்கள் உயிரைக் காக்கும் பொறுப்பைச் சீதாராமனிடம் ஒப்படைத்தாள். இவர்களைத் தவிர அவனுக்கு ஒரு விதவைத் தாயும், விவாகமாகாத சிறு பெண் ஒருத்தியும் இருந்தனர். அவனுக்கே சற்று ஆடம்பரம் உண்டு; பொழுது போக்கு, தமாஷாக்களில் அதிகமாக ஈடுபடுவான். அவனுடைய நிலை மாறிய

பின்னரும் அவனுடைய குடும்பத்தினர் அதேபோலத் தான் இருந்தனர். அத்தையின் பசி தாகம் முன்போலவே தான் இருந்தது. தங்கை பிள்ளைக்கு வயது ஆக ஆக அவன் மாமன் சோற்றையே உண்டு, மாமனது மானத்தைக் காக்க முயன்றான். சீதாராமனுடைய பணப்பை குறைந்ததே ஒழிய எவருடைய வயிறும் குறைந்ததாகத் தெரியவில்லை. மற்றச் செலவுகளுடன் அவனுடைய சொந்தப் பழக்கங்களும் இருக்கத்தான் செய்தன. அவன் கடன் வாங்க வாங்க வட்டி வளர்ந்தது; அதோடு அவனுடைய துர்ப்பழக்கங்களும் வளர்ந்தன. உதயன் சீதாராமனுடைய ஏழைமையை உணர்ந்து, அவனுக்கும் பாகவதனுக்கும் கொஞ்சம் பணம் கொடுத்துவர ஏற்பாடு செய்தான். சீதாராமன் ரூபாய் கிடைத்ததும் வெட்கித் தலைகுனிந்தான். அரசனிடம் உதயாதித்திய பெயரைச் சொன்னதுமுதல் பெருத்த குற்றம் செய்ததாக எண்ணி அவன் உள்ளூற நைந்தான். உதயம் அனுப்பிய பணம் கைக்குக்கிடைத்ததும் அவன் வேதனை தாங்காமல் அழுது விட்டான். ஒரு நாள் உதயனைக் கண்டு, அவன் கால்களைக் கட்டிக்கொண்டு அழுது, அவனைத் தெய்வமென்று கூறிப் பிட்டான். பாகவதன் மிகவும் ஆழ்ந்த உள்ளம் படைத்தவன்; அவன் சூதாடி. அக்கம் பக்கத்தவரை ஏமாற்றிப் பிழைப்பதில் வல்லவன். உதயனுடைய பணம் கிடைத்ததும் உதட்டைக் கோணி, “இளவரசர் எனக்குச் செய்த தீங்கு இந்தப் பணத்தால் தீருமா?” என்றான். ஆனால் ரூபாயை வாங்கிக்கொள்ள மட்டும் அவன் சற்றும் தயங்கவில்லை.

வேலையை விட்டுத் தள்ளிய காவலாளிகளுக்கு இளவரசன் பணம் கொடுப்பது பிரதாபனுடைய செவிக்கு எட்டியது. முன்பெல்லாம் அவன் அதை அவ்வளவாக லட்சியம் செய்வதில்லை. உதயனிடம் ஓர் அலட்சியம் பிரதாபனுக்கு. உதயன் குடிகள் பக்கம் சேர்ந்துகொண்டு

இடைஞ்சல் செய்வதுகூட அவனுக்குச் சகித்துப்போயிருந்தது. ஆகவே, விஷயம் மோசமான நிலைமைக்கு வரும் வரையில் அவன் எதையும் கவனிப்பதே இல்லை. சில நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவத்திலிருந்து அவன் உதயன் மேல் சற்றுக் கவனமாகவே இருந்தான். இந்த விஷயம் அவன் காதில் விழுந்ததும், கோபத்துடன் உதயாதித்தியனை அழைத்தான். "நான் பாகவதனையும் சீதாராமனையும் வேலையை விட்டுத் தள்ளியது, கஜானாவில் பணம் இல்லை என்பதற்காக அல்ல. நீ அவர்களுக்கு மாதவாரியாகப் பணம் தரக் காரணம் என்ன?" என்றான்.

உதயன் மெல்ல, "நான் குற்றவாளி; அவர்களை வேலையை விட்டுத் தள்ளித் தண்டித்ததன் மூலம் எனக்குத் தண்டனை விதித்தீர்கள். தங்கள் தீர்ப்பின்படி நான் அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்கிறேன்" என்றான்.

இதற்கு முன் அரசன் உதயனுடைய பேச்சைக் கவனமாகக் கேட்பவனல்ல. உதயனுடைய கம்பீரமான குரலும், பணிவான பேச்சுக்களும் பிரதாபனை மயக்கின. அவன் உதயனுடைய வார்த்தைகளுக்குப் பதில் சொல்லாமல், "அவர்களுக்கு யாரும் பண உதவி செய்யக் கூடாது என்பது என் கட்டளை" என்றான்.

"இன்னும் கடுமையான தண்டனையா!" என்று உதயன் கேட்கலானான்: "இந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்ளும்படி நான் செய்த அவ்வளவு பெரிய குற்றந்தான் என்ன? என் பொருட்டு எட்டுப் பத்துப்பேர் உணவின்றி, இருக்க இடமிழந்து வழியோடு திரிவதை நான் எவ்வாறு பார்ப்பேன்! அப்பா! எனக்குக் கிடைப்பது எல்லாம் தங்கள் தயை! தேவைக்கு அதிகமாகவே என இல்லையில் கிடைக்கிறது. எனக்கு முன் ஏழெட்டுப் பேரை உணவின்றி நிற்க வைத்து, நான் எனக்குக் கிடைப்பதில் ஒரு பிடி தருவதையும் தடை செய்கிறீர்கள். இந்த ஆதரவு எனக்கு விஷம் போலவே தோன்றுகிறது, மகாராஜா!"

உதயன் மனத் தீவிரத்தில் சொல்லிக்கொண்டே போனபோது பிரதாபன் குறுக்கிடவே இல்லை. அவன் சொல்லி முடித்தபின் மெல்ல, "நீ சொல்வதை எல்லாம் கேட்டேன்; இப்போது என் வார்த்தையையும் கேள். சீதாராமன், பாகவதன் இவர்களை நான் வேலையிலிருந்து தள்ளிவிட்ட பின், யார் அவர்களுக்குப் பணம் கொடுத்தாலும், அவன் என் எதிரி!" என்றான். அவனுக்கு உள்ளூறச் சற்றுக்கோபம்; அவனுக்கு அதன்காரணம் தெரியவில்லை. "எனக்குக் கோபம்; கடுமையாக நடந்துகொண்டேன்; இவன் தயையுடன்குறுக்கே வந்துஎன்னதான்செய்கிறான், பார்க்கலாமே! எனக்கு எதிரிடையாகச் செய்ய இவனுக்கு அவ்வளவு துணிச்சலா?" என்பதுதான் அவனுடைய ரோஷத்தின் காரணம்.

உதயன் சுரமாவிடம் போய் நடந்தவைகளை எல்லாம் தெரிவித்தான். "இன்றெல்லாம் அவர்கள் பட்டினியாம். அந்தி வேளை; சீதாராமனுடைய அம்மா, அவன் பெண்ணுடன் என்னிடம் வந்து அழுதாள். நான்ஏதோகொஞ்சம் கொடுத்து அனுப்பினேன். அதைக் கொண்டு இன்றைய பொழுதைக் கழித்தார்கள். பாவம், முகத்தில் பால் வடியும் பெண்; நாளெல்லாம் பட்டினியாம்! முகத்தைப் பார்க்கக் கூட முடியவில்லை. அவர்களுக்கு ஏதாவது தராவிட்டால் எங்கே போவார்கள்?" என்றாள் சுரமா.

"அதிலும், அரண்மனையிலிருந்து துரத்திய பின் அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள யாரும் துணிய மாட்டார்கள். இந்தச் சமயம் நாமும் பாராமுகமாய் இருந்தால் அவர்களுக்குத் துணை யார்! நான் கட்டாயம உதவி செய்வேன், சுரமா; நீ கவலைப்படாதே! அநாவசியமாக அப்பாவை நீ கோபம அடையச் செய்யாமல், ரகசியமாக அனுப்ப வழி தேடவேண்டும்."

சுரமா உதயனுடைய கையைப் பிடித்து, "நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். நான் செய்வேன். அந்தப்

பொறுப்பை என் தலையில் போட்டுவிடுங்கள்" என்றாள். அவள் தன்னைக் கொண்டு உதயனை மூடி வைக்க முயன்றாள். இந்த வருஷம் அவனுக்கு ஏதோ கெட்ட காலம். எந்தக் காரியத்தில் அவன் கை வைத்தாலும் அவனுடைய தகப்பனுக்கு எதிராகவே முடிந்தது: அதுவும் அவசியமான காரியம் எல்லாம். ஆனால் சுரமா அவனைத் தடுக்கவில்லை; அவள் அப்படிப்பட்ட பெண்ணுமல்ல. கணவன் நியாயமாகப் போராடச் செல்லும்போது, தானே அவனுக்குக் கவசம் அணிவாள. பின்னர்த் தன் அறைக்குள் போய் அழுவதுண்டு. உள்ளூறப் பயம் இருக்கும்: அப்படியும் அவனுக்கு ஒவ்வொரு முறையும் நம்பிக்கை ஊட்டுவாள். கடுமையான விபத்து நேரிடும்போது விழிகளில் நீர் ஊறுமே ஒழியக் கைகள் நடுங்குவதோ, கால்கள் குலைப்பதோ இல்லை. இதைப் பலதடவை உதயன் கண்டதுண்டு.

சுரமா நம்பிக்கையான வேலைக்காரியின் முலமாக, சீதாராமனுடைய தாய்க்கும் பாகவதனுடைய மனைவிக்கும் பணம் அனுப்ப ஏற்பாடு செய்தாள். வேலைக்காரி நம்பிக்கையானவள் தான். ஆனால் மங்களாவிடம் இதை மறைப்பது அவசியமென்று அவள் கருதவில்லை. ஆகவே, இது மங்களாவுக்கு மட்டும் தெரிந்திருந்தது!

# 16

## சுரமாவின் உறுதி

ரகசியமாகச் சுரமா பணம் அனுப்பும் செய்தி பிரதாபனுக்கு எட்டியது. அவன் ஒன்றும் பேசாமல் சுரமாவைப் பிறந்த வீடு அனுப்பும்படி அந்தப்புரத்தில் கட்டளையிட்டான். உதயன் உள்ளூற உறுதி கொண்டான். விபா சுரமாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். “நீயும் போய் விட்டாயானல் இந்தச் சுடுகாட்டில் நான் எப்படி இருப்பது?” என்ருள். சுரமா விபாவின் மோவாயைப் பிடித்து முத்தமிட்டு, “நான் ஏன் போகிறேன், விபா? என்னுடையது எல்லாம் இங்கேதானே இருக்கிறது?” என்ருள்.

பிரதாபனுடைய கட்டளையைக் கேட்டதும் சுரமா, “நான் பிறந்த வீடு செல்லவேண்டிய காரணம் எதுவும் இல்லை. அங்கிருந்து என்னை அழைத்துப் போகவும் யாரும் வரவில்லை. என் புருஷருக்கும் இது சமயம் சம்மதமில்லை. ஆகவே, அநாவசியமாக நான் திடீரென்று போவது முடியாது” என்ருள்.

இதைக்கேட்டுப் பிரதாபன் உள்ளூறக் கொதித்தான். ஆனல் வழி ஒன்றும் இல்லை. சுரமாவைப் பலவந்தமாக வெளித் துரத்துவது நடக்காது; அந்தப்புரத்தில் உடல் வலிமை செல்லாது. பிரதாபன் பெண்கள் விஷயத்தில் பலவீனன்தான். பலத்துக்கு எதிரே உறுதியுடன் நிற்க முடியும்; ஆனல் இந்த அபலைகளுக்கு எதிராக நடக்கும் விதம் அவனுக்குத் தெரியாது. பெரிய கயிறுகளை அறுத்துப் பழகிய அவனுடைய விரல்களால் மெல்லிய நூலின் சிறு முடிச்சை அவிழ்க்க முடியாமல் போயிற்று. அவன் வரையில் பெண்கள புரியாத ஓர் இனம்; அவர்களைப் புரிந்துகொள்வதும் அநாவசியம் என்றே அவன் எண்ணினன். இந்த விஷயமாக ஏதாவது தகராறு நேர்ந்தால்

அவன் உடனே அரசியிடம் பொறுப்பைத் தள்ளிவிடுவான். இவர்கள் விஷயமாக யோசிக்க அவனுக்கு இஷ்டமோ, ஒழிவோ, தகுதியோ எதுவுமில்லை. அவனுக்கு ஏற்ற காரியமா இது? இந்த முறையும் அவன் அரசியை அழைத்து, "சுரமாவைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிடு" என்றான். "அப்புறம் உதயனுடைய கதி என்ன?" என்றாள் அரசி.

பிரதாபன் வெறுப்புடன், "உதயன் சிறு குழந்தை அல்ல; ராஜகாரியமாகச் சுரமாவை இங்கிருந்து அனுப்ப விரும்புகிறேன். இது என் உத்தரவு" என்றான்.

அரசி உதயனை அழைத்தாள். "அப்பா உதயா! சுரமாவைப் பிறந்த வீடு அனுப்பவேண்டும்" என்றாள்.

"ஏன் அம்மா, அவள் என்ன குற்றம் செய்தாள்?"

"என்னவோ அப்பா, பெண்களுக்கு என்ன தெரியும்? ஏதோ ராஜகாரியத்துக்காக அவளை அனுப்ப வேண்டுமென்று மகாராஜா சொல்கிறார்."

"அம்மா, என்னைக் கஷ்டப்படுத்தித் துயரத்தில் ஆழ்த்துவதால் ராஜகாரியத்தில் என்ன உயர்வு? கூடிய மட்டும் கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டேன். எனக்குச் சுகம்என்ன இருக்கிறது? சுரமாவும்சுகமாக இல்லை. இரண்டு வேளையும் உங்கள் திட்டுக்களைக் கேட்க வேண்டி யிருக்கிறது. நகை கிடக்கட்டும்; இவ்வளவு பெரிய அரண்மனையில் அவளுக்கு ஓர் இடமில்லையா? வேண்டியபோது வைத்துக்கொள்ளவும், மற்றப் போது விரட்டவும் அவள் என்ன பிச்சைக்காரியா? எனக்கும் அரண்மனையில் இடமில்லை; விரட்டிவிடுங்கள்."

அரசி அழத் தொடங்கினாள்: "என்னவோ, அப்பா! அவர் எப்போது என்ன செய்கிறார் என்பது ஒன்றும் புரியவில்லை. சுரமா நல்ல பெண்ணல்லடா. அவள் வீட்டில் கால் வைத்தது முதல் எல்லாம் ஒரே குழப்பந்தான். உடம்பெரிச்சல் தாங்கவில்லை. அவள் கொஞ்ச நாள்

பிறந்த வீடு போகட்டும். வீட்டின் அழகு திரும்பும், பாரேன்!" என்றாள்.

உதயன் பதில் சொல்லாமல் மெல்ல எழுந்து சென்றான்.

அரசி பிரதாபனிடம் போய் அழுதாள்; "அரசே! காப்பாற்றுங்கள்! சுரமாவை அனுப்பினால் உதயன் பிழைத்திருக்க மாட்டான். அவன்மேல் தவறில்லை. இந்தக் கள்ளிதான் அவனை வசியப்படுத்திவிட்டாள்" என்றாள்.

பிரதாபன் கடுங் கோபத்துடன், "சுரமா போகாவிட்டால் உதயனை நான் சிறையில் அடைப்பேன்" என்றான்.

அரசி நேரே சுரமாவின் அறைக்குச் சென்றாள். "அடி எரிமூஞ்சி! என் பிள்ளையை என்னடி செய்தாய்? என்னிடம் திருப்பிக் கொடடி! வந்தது முதல் அவனை என்ன செய்தாய்? கடைசியில் கண்ணன அவன் கையில் விலங்கையும் மாட்டுவாயா?" என்றாள்.

சுரமா உடல் சிலிர்த்து. "எனக்காக அவர் கைதி யாவதா? இல்லை, அம்மா, இதோ போகிறேன்" என்றாள்.

சுரமா விபாவிடம் போய் எல்லாவற்றையும் தெரிவித்தாள். "விபா! இதோ போகிறேன். இனி என்னைத் திரும்பி வர விடமாட்டார்கள் என்றே தோன்றுகிறது" என்றாள். விபா அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழலானாள். எதிர் காலத்தில் நேரப் போவதன் அறிகுறி போல் ஏதோ ஒன்று சுரமாவின் மனத்தில், 'இனி நீ வர முடியாது' என்றது. அவள் திரும்புவது நடக்காது. அவளுக்கு ஒன்றுமில்லை; வருங் காலமே அவளுக்கு வெறிச்சென்று தோன்றியது. இங்கேகளிப்போ, ஆதரவோ எதுவும் இல்லை. தன் உயிருக்குயிரான கணவனுடன் ஒன்றிப் பேசமுடியாது. சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள எவருமில்லை. உள்ளம் விண்டுபோனாலும், காதலோ அன்போ பெற வழி ஏதுமில்லை. ஒரே வெறிச்

சென்ற வாழ்வு! சுரமா மார்பு துடிக்க, தலே சுற்றி அப்படியே உட்கார்ந்துவிட்டாள். அவள் கண்களில் நீர் வற்றிவிட்டது. உதயன் வந்ததும் அவனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு ஓவென்று அழுதாள். இதுவரையில் அவள் அப்படி அழுதவளல்ல. அன்று அவள் உள்ளம் விண்டு போயிருந்தது. உதயன் அவளைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு, "என்ன நடந்தது, சுரமா?" என்றான்.

சுரமா அவன் முகத்தைப் பார்த்துப் பார்த்து அழுதாள். "இந்த முகத்தை இனி நான் காண்பேனா? இனி அந்திப் பொழுதுகளில் சாளரத்தின் அருகில் உங்களுடன் நான் இருக்கமாட்டேன். கதவருகில் வந்து நிற்கும்போது, சிரித்துக்கொண்டே உங்கள் கையைப் பிடிக்க நான் வருவேனா? நீங்கள் இங்கே இருக்கும்போது நான் எங்கிருப்பேனோ, என்றாள். 'எங்கு என் பதில் எவ்வளவு ஏமாற்றம், பிரிவின் துயரம் அடங்கி இருந்தது என்று சொல்லிமுடியாது. 'கண்கள் மட்டும் சந்திக்கமுடியுமென்றால் எவ்வளவு தொலைவு; அதுவும் முடியவில்லை என்றால் பின்னும் எவ்வளவு தூரமோ? பேசுவதோ பின்னும் சிரமமென்றால் இடையீடு மிக அதிகந்தான்! உள்ளூற ஒரு முறை காண எவ்வளவு ஆவல் இருந்தும் முடியாவிட்டால்? அதைவிட இந்தக் கால்களை மார்பில் அழுத்திக்கொண்டு சாவதே மேலல்லவா?, என்று எண்ணினாள்.



# 17

## சுரமாவின் பிரிவு

ஆரம்பத்தில் ருக்மிணி என்ற பெண்பற்றிக் குறிப்பிட்டேனே, அவளை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்த மங்களா அந்த ருக்மிணியேதான்! அவள் ராய்கரை விட்டு யசோஹரின் எல்லையில் வேறு பெயருடன் வசித்துவந்தாள். அவளால் முடியாதது ஒன்றுமில்லை. இழிந்த இயல்புள்ள பெண்கள் போல், அவளிடம் எப்பொழுதும் சேர்க்கையில் ஆவலும், பொருமையும், மனத்தைக் கவரவேண்டும் என்னும் பேராசையும் குடிகொண்டிருந்தன. சிரிப்பும் அழுகையும் அவள் விரல் நுனியில் இருந்தன; வேண்டுமானால் வெளியிடுவாள்; மற்ற வேளைகளில் உள்ளே நிறுத்துவாள். கோபம் வரும்போது அவள் காளிதேவிதான்! எதிரில் நிற்பவரை நகங்களாலும் பற்களாலும் கிழித்துவிடுவாள் போலத் தோன்றும். அப்பொழுது பேசமாட்டாள்; கைகள் நடுங்க, தீயெழ விழிப்பாள். உருகிய இரும்புபோல் அவள் உள்ளம் கொதிக்கும். பொருமை உள்ளூறப் பாம்பு போல் 'உஸ் உஸ்' என்று சீறும். பல நோன்புகளும் தாந்திரிகச் சடங்குகளும் செய்துவந்தாள். யாரோடு பழகினாலும், அவர்களுடைய மனத்தை அவளால் நன்ருக அறிய முடியும். இளவரசன் சிம்மாசனத்தில் உட்காரும்போது, அவன் உள்ளத்தில் அமர்ந்து அவனையும் யசோஹரையும் ஒருங்கே ஆளலாம் என்ற நம்பிக்கை அவளை விடவில்லை. இதற்காக அவள் செய்யாதது ஒன்றுமில்லை. பல நாட்களாக ஓயாது முயன்று, அரண்மனையில் பல வேலையாட்களை வசம் செய்துகொண்டாள். அங்கே நடக்கும் அற்பச் செய்தியும் அவள் காதுக்கு எட்டும். சுரமாவின் முகம் மங்கினாலும், பிரதாபனுக்குச் சிறிது அசௌகரியம் ஏற்

பட்டாலும், 'சரி, சனி தீர்ந்தது' என்று எண்ணுவாள். பிரதாபன், சுரமா இவர்களுடைய சாவுக்காக அவள் செய்த நோன்புகள் ஒன்றும் பலிக்கவில்லை. நாளுக்கு நாள் அவளுடைய பரபரப்பு அதிகமாகியது. 'மந்திர தந்திரம் கிடக்கிறது; கையில் அகப்பட்டால் ஆசையை நிறை வேற்றிக்கொள்ளலாம்' என்று அவள் எண்ணினாள். இவ் வாறு அவள் நினைத்து, உதட்டைக் கடிக்கும்போது, சதை கிழிந்து, ரத்தம் வரும்போலத் தோன்றும்.

சுரமாவின் மேல் அரசனுக்கும் அரசிக்கும் வெறுப்பு அதிகமாகி வருவது ருக்மிணிக்குத் தெரிந்தது. கடைசி யில் இளவரசியை அரண்மனையை விட்டு அனுப்புவது தெரிந்தபோது, அவள் அடைந்த களிப்புக்கு ஓர் அள வில்லை. அப்படியும் சுரமா போகாமல் இருப்பது கண்டு ருக்மிணி அவளை அனுப்பச் சுலபமான வழியைக் கைக் கொண்டாள்.

மங்களா என்ற விதவை மந்திர தந்திரங்களில் வல்ல வள் என்ற செய்தி அரசிக்கு எட்டியதும், அவள் சுரமாவை அனுப்புமுன் உதயனுடைய மனத்தை வசம் செய்துகொள்ள எண்ணினாள். அரசி மாதங்கினியை ரகசியமாக மருந்து வாங்கிவர அவளிடம் அனுப்பினாள். மங்களா பலவித வேர்களை நனைத்து,உலர்த்தி, அறுத்துக் கலந்து மந்திரம் ஓதி விஷம் தயாரித்தாள்.

அந்த நிச்சப்தமான இரவில், ஊரின் எல்லையில் தனி யாக நின்ற குடிசையில் உலக்கையின் ஓசை கேட்டது. அந்த ஓயாத சத்தம், அவள் உள்ளத்துள் துடிக்கும் களிப்புடன் ஒத்துப் போய்க் கை கொட்டுவது போலத் தோன்றியது. அவளுடைய கண்களில் தூக்கமென்பதே இல்லை.

மருந்தைக் கலக்க அவ்வளவு நாட்கள் ஆகவேண்டிய அவசியம் இல்லைதான். ஆனால் சுரமா சாகும்போது

உதயனுடைய மனம் அலையக் கூடாதல்லவா? அதற்காக மந்திரிக்கவும், நோன்புகளைச் செய்யவும் நேரம் பிடித்தன!

பிரதாபனிடம் சொல்லி, அரசி சுரமாவை மேலும் சில நாட்கள் அரண்மனையில் வைத்துக்கொள்ள அநுமதி பெற்றாள். சுரமா போய்விடும் செய்தியைக் கேட்டு விபாவுக்கு யாரோ தன்னை நடுக் கடலில் ஆழ்த்துவது போலத் தோன்றியது. அவள் எப்போதும் சுரமாவின் பக்கத்திலேயே இருந்தாள்; மங்கிய நிழல்போல் அவள் பின்னாலேயே அலைந்தாள. பகல் கழிந்து இரவாகும். நாட்கள் ஆக ஆகச் சுரமாவைப் பின்னும் நெருங்கித் தன்னோடு அணைத்து வைத்துக்கொள்ள முயன்றாள் விபா. நாட்களை யாரோ பலவந்தமாக ஓட்டிச் செல்வது போலவே அவளுக்குத் தோன்றியது. உலகமே அவள கண்முன் இருண்டது. சுரமாவின் விழிகளில் வெறிச்சென்ற பார்வை! அவளுக்கு எதுவும் ஒன்றாகவே தோன்றியது. அவள் உதயனுடைய முகத்தையே பார்த்தவாறு, அவன் காலடியிலும் மடியிலும் விழுந்து கிடந்தாள். வேறு ஒன்றும் செய்வதில்லை. "விபா, உன்னிடம் என்னுடைய சொத்தை விட்டுச் செல்கிறேன்" என்று சொல்லிக் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு ஓவென்று அழுவாள.

அன்று பிற்பகலாயிற்று; மறுநாள் காலை சுரமா போக வேண்டும். அவள் தன் வசம் இருந்தவைகளை எல்லாம் விபாவிடம் ஒப்படைத்தாள். உதயாதித்தியன் மலர்ந்த முகத்துடன் திடமாக உட்கார்ந்திருந்தான். ஒன்று சுரமாவைத் தங்க வைப்பது, இல்லையேல் தானும் அவளுடன் செல்வது என்று அவன் உறுதியாக இருந்தான். அந்தி மங்கியபோது, சுரமாவின் கால்கள் நடுக்குற்றன. அவளால் நிற்க முடியவில்லை. தலை கனத்தது. அவள் படுக்கையில் படுத்து, "விபா, விபா! அவரைக் கூப்பிடேன். இனி எனக்கு நேரமில்லை", என்றாள்.

உதயன் கதவருகில் வரும்போது அவள், "வாருங்கள், எனக்கு என்னவோபோல் இருக்கிறது" என்று தன் கரங்களை நீட்டினாள். உதயன் நெருங்கியதும், அவன் கால்களைப் பிடித்துக்கொண்டாள். உதயன் உட்கார்ந்தபோது, சுரமாவுக்கு மேல்மூச்சு வாங்கியது. கைகால்கள் சில்லிட்டுப்போயின. உதயன் பயத்துடன், "என்ன, சுரமா?" என்றான். சுரமா மெல்லத் தலை நிமிர்ந்து உதயனுடைய முகத்தைநோக்கினாள். "என் சுவாமி!" என்றாள். உதயன் கவலையுடன், "என்ன நடந்தது, சுரமா?" என்றான். "இனி எனக்குக் காலம் கிட்டிவிட்டது" என்று அவள் உதயனுடைய கழுத்தைக் கட்டிக்கொள்ளக் கையைத் தூக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. அவனுடைய முகத்தையே உற்றுப் பார்த்தவாறு இருந்தாள். உதயன் தன் கைகளால் சுரமாவின் முகத்தைத் தூக்கி, "சுரமா, சுரமா, நீ எங்கே போகிறாய்? எனக்கு யார் இருக்கிறார்கள்?" என்றபோது சுரமாவின் விழிகளில் நீர் முத்துக்கள் வடிந்தன. அவள் விபாவை நோக்கினாள். விபா சுய நினைவின்றிச் சுரமாவையே பார்த்தாள். தினமும் அந்திவேளை சுரமாவும் உதயனும் உட்கார்ந்திருக்கும் சாளரம் திறந்து கிடந்தது. வானில் தாரகைகள் தோன்றின. மெல்லக் காற்று உள்ளே வீசியது. எங்கும் ஒரே நிச்சப்தம். அரண்மனையில் பூஜையின் சங்கொலியும் மணியோசையும் அடங்கிவிட்டன. சுரமா உதயாதித்தியனை நோக்கி மங்கிய குரலில், "ஏதாவது பேசுங்களேன்; எனக்குக் கண்களில் ஒன்றும் தெரியவில்லை" என்றாள்.

சுரமா தானே விஷம் அருந்திச் சாகும் விஷயம் அரண்மனையில் மெல்லப் பரவியது. அரசியுடன் எல்லோரும் ஓடிவந்தனர். சுரமாவின் முகத்தைக் கண்டு அரசி அழுதாள். "சுரமா! அம்மா! நீ இங்கேயே இரு! எங்கேயும் போகவேண்டாம். என் வீட்டு லட்சுமி ஆயிற்றே நீ! உன்னை யார் போகச் சொல்லுவார்கள்?" என்றாள்.

சுரமா மெல்லக் கை நீட்டி மாமியாரின் பாத தூளியை எடுத்துக்கொண்டாள். அரசி ஓவென்று அழுதாள். "அம்மா! என்மேல் கோபித்துக்கொண்டு போகிறாயா?" என்றாள். சுரமா ஏதோ பேச வாயெடுத்தாள். ஆனால் தொண்டை அடைத்துக்கொண்டு குரல் எழும்பவில்லை. இரவு நான்கு மணி நேரம் இருக்கும்போது வைத்தியர், "இனிப் பயனில்லை" என்று கையை விரித்துவிட்டார். "அண்ணா, இதென்ன!" என்று விபா சுரமாவின் மார்பில் விழுந்து அவளை அணைத்துக்கொண்டு அழுதாள். பொழுது மெல்ல விடிந்தது. உதயன் சுரமாவின் தலையை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.



# 18

## துயரம்

'அப்படியானல் சுரமா போய்விட்டாளா?—' சுரமாவைத் தான் மறுபடி பார்க்க முடியுமென்றும், அங்கே எங்கோ சுரமா இருப்பது போலவும் விபாவின் மனத்தில் பட்டது. சுரமா இல்லை என்று எண்ணக்கூட அவளால் ஏனோ முடியவில்லை! விபா ஒவ்வோர் அறையாகச் சுற்றி அலைவாள். சுரமாவைத் தன் உள்ளம் தேடி அலைவது போல் கூந்தலை வாரிக்கொள்ளும்போது விபா கம்மென்று இருப்பாள். சற்று நேரத்துக்கெல்லாம் சுரமா வந்து தன் கொண்டையை வாரி முடியத் தான் காத்துக்கொண்டிருப்பது போல் இருக்கும் விபா இருக்கும் ரீதி. இல்லை, இனிமேல் அது சாத்தியமில்லை! — மாலை நேரமாகிவிட்டது; இரவும் நெருங்கிவிட்டது; சுரமா இனி வரமாட்டாள்; கூந்தலும் அப்படியே வாராமல் கிடந்தது. இன்று விபாவின் முகம் இவ்வளவு வாடி இருப்பதேன்? அவள் இவ்வளவு அழுதும் ஏன் சுரமா வரவில்லை? எப்போதும் சுரமா இப்படி இருந்ததில்லையே! விபாவின் வதனம் சிறிது வாட்டமுற்றாலும் உடனே சுரமா அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு உள்ளூற அன்புடன் அவள் முகத்தைப் பார்த்தவண்ணம் இருப்பாளே!— ஆனால் இன்று இதென்ன? விபாவின் மார்பு வெடித்துப் போனாலும் அவள் வரப்போவதில்லை!

உதயாதித்தியனுக்குப் பாதிப்பலம் ஒடுங்கிவிட்டது; பாதிப் பிராணன் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு காரியத்திலும் அவனுக்கு நம்பிக்கையூட்டி, உற்சாகமளித்து, யோசனை சொல்லித் துணையாக இருந்தவள்- தன் இன்னகையைப் பரிசாகத் தந்த அந்தச் சுரமா- போய்விட்டாள்! அவன் தன் பள்ளியறைக்குப்

போவான்; என்னவோ எண்ணமிடுவான்; நாலு திசையு ஒரு முறை சுற்றிக் கவனிப்பான்; அங்கே எவரும் இருக்க மாட்டார்கள். சுரமா அமர்ந்திருந்த இடத்தை அப்படியே காலியாக வைத்தான். வானில் அதே நிலவுதான்; எதிரே அதே காடுதான்; முன்போலவேதான் மந்தமாருதம் வீசியது. 'இப்படிப்பட்ட மாலை நேரத்தில் சுரமா வராதிருப்பாளா?' என்று எண்ணுவான்.

சட்டென்று சுரமாவின் குரல் கேட்டதுபோல் அவன் மனத்திற்குப் பட்டது. திடுக்குற்று எழுந்தான். அது சாத்தியமில்லை என்று தோன்றினாலும், நாற்புறமும் பார்த்தான்; ஒரு தடவை படுக்கையண்டை போய்க் கவனித்தான், யாராவது இருக்கிறார்களா என்று. எத்தனையோ சில்லறை அலுவல்களில் ஈடுபட்டிருப்பான், உதயாதித்தியன் முன்னெல்லாம்; ஏழைக் குடிகள் தங்கள் வயல்களிலிருந்தும் தோட்டங்களிலிருந்தும் பழம், கிழங்கு, கறிகாய்களை அவனுக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்து கொடுப்பார்கள். அவன் அவர்கள் குறைகளை விசாரித்தறிந்து தக்கது சொல்வான். இப்போதோ அந்த அலுவல்கூட இல்லை; ஆனாலும், மாலை வேளைகளில் சோர்வுற்றுக் கிடந்தான் அவன். தள்ளாடிக்கொண்டே பள்ளியறைக்கு வருவான். உள்ளத்தில் மட்டும், அதைத் திறந்த மாத்திரத்தில் சுரமா ஜன்னலில் உட்கார்ந்திருப்பாள் என்ற நம்பிக்கை இருந்தது. விபா தன்னந்தனியாக முகம் வாடி அலைவதைக் கண்டு அவன் உள்ளம் கதறி அழும். அவளை அருகில் அழைத்து ஆதரவுடன் தேறுதல் கூறுவான். கடைசியில் தமையன் கையைப் பிடித்துக்கொண்டு தங்கை அழுதுவிடுவாள்; உதயாதித்தியன் கண்களிலிருந்தும் நீர் வழிந்தோடும். ஒருநாள் அவன் விபாவைக் கூப்பிட்டு, "விபா! இனிமேல் இங்கே உனக்கு யார் இருக்கிறார்கள்? உன்னைப் புக்ககம் கொண்டுபோய்ச் சேர்க்க ஏற்பாடு செய்கிறேன். என்ன சொல்கிறாய்? என்னிடத்தில் வெட்கப்

படாதே, விபா! பின்னே யாரிடம் உன் மனக் குறையைச் சொல்லிக்கொள்வாய்?" என்றான்.

விபா சும்மா இருந்தாள்; பதில் ஒன்றும் சொல்ல வில்லை. இதைக் கேட்கவும் வேண்டுமா? இன்னுமா பிறந்த வீட்டில் இருக்க அவள் ஆசைப்படுவாள்! இந்த உலகத்தில் அவளுக்கு இனி ஒரே இடந்தான் உண்டு; அந்தச் சந்திரத்வீபத்துக்குச் செல்ல அவள் மனம் துடிக்காதிருக்குமா? ஆனால் அவளை அழைத்துச் செல்ல அங்கிருந்து ஓர் ஆள்கூட வரவில்லையே; ஏன்?

விபாவைப் புக்ககம் அனுப்பும் விஷயமாகத் தந்தையிடம் உதயாதித்தியன் பேச்செடுத்தபோது பிரதாபன், "எனக்கு ஓர் ஆட்சேபமும் இல்லை, அவளை அங்கே அனுப்புவதற்கு. ஆனால் அவர்களுக்கு அவளைப் பற்றிக் கொஞ்சமாவது அக்கறை இருந்தால் தாங்களே ஆள் அனுப்பியிருக்கமாட்டார்களா, அவளை அழைத்துப் போக? நாம் இப்படி அவசரப்படுவது அவசியம் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றான்.

விபாவைப் பார்த்துப் பார்த்து ராணி அழுதவண்ணம் இருப்பாள். விபா சுமங்கலியாக இருந்தும் இப்படி அமங்கலிபோல் கிடப்பதைக் கண்ணால் காணவும் வேண்டுமா? விபாவின் பரிதாபமான முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் ராணியின் உள்ளத்தை ஊசி போட்டுக் குத்துவது போல் இருந்தது. மருமகன் மேல் அவளுக்கு அபாரப் பிரீதி. ஏதோ சிறுபிள்ளைத்தனமாக அவன் செய்த காரியத்தை இவ்வளவு பிரமாதமாக்கினது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் பிரதாபனிடம் சென்று "மகாராஜா! விபாவைப் புக்ககம் அனுப்புங்களேன்!" என்று வேண்டிக்கொண்டாள். பிரதாபனோ சினந்து, "தொண தொணவென்று இதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறாய், எப்போது பார்த்தாலும்! போதும்: எனக்குச் சகிக்கவில்லை! அவர்கள் வேண்டுமானால் வந்து

கெஞ்சி அழைத்துக்கொண்டு போகட்டும்" என்ருன்.

"நம் பெண் இப்படியே புக்ககம் போகாதிருந்தால் பத்துப் பேர் என்ன சொல்வார்கள்?" என்று கேட்டாள் ராணி.

பிரதாபாதித்தியன், "அது கிடக்கட்டும்; பிரதாபன் தானே பெண்ணை அனுப்பி அவளை ராமசந்திர ராயன் ஏற்காமல் துரத்தியனுப்பிஞல் அதே பத்துப் பேர் என்ன சொல்வார்கள்? கேட்கிறேன்; சொல்?" என்ருன்.

தன் கணவன் சில சமயம் தனக்கு ஒன்றும் விளங் காதபடி காரியங்கள் செய்வதை எண்ணி ராணி புலம்பிஞள்.



# 19

## ரகசியத் தூது

**மா**ன அவமானங்களில் ராமசந்திர ராய்க்குச் சற்றுக் கவனம் அதிகம். அவன் ஒரு நாள் பல்லக்கில் பவனி சென்றபோது படிப்பறியாத நெசவாளர் இருவர் குடிசைக்கு முன் துணி நெய்துகொண்டிருந்தார்கள் பல்லக்கைக் கண்டு அவர்கள் எழுந்திருக்கவில்லை என்று அரசன் ஒரு பெருத்த கலவரமே செய்துவிட்டானென்று சொல்லலாம். யசோஹரில் ஒரு முறை மாமனார் வீட்டு வேலைக்காரனை ஏதோ வேலையாகக் கட்டளையிட்டான். அந்த அப்பாவி ஒன்றை வேறொன்றாக எண்ணித் தவறுதல் செய்துவிட்டான். மானமே பெரிதாய் மதிக்கும் ராமசந்திர ராய், மாமனார் வீட்டு வேலைக்காரருங்கூடத் தன்னை அலட்சியம் செய்வதாக எண்ணிக்கொண்டான். அதிலும், அன்று காலையில் உதயன் அந்த வேலைக்கார னிடம் ஏதோ ரகசியமாகச் சொல்வதைக் கண்டு, தன்னை அவமானம் செய்யத்தான் இருக்கும் என்று முடிவு கட்டி னான். சிறுவர்கள் சிலர் மணல் மேட்டில் சிம்மாசனம் செய்து, ராஜா மந்திரி விளையாட்டு ஆடினார்கள். அதற் காக அவன் சிறுவர்களுடைய தகப்பன்மார்களை அழைத்து அதட்டினான்.

அன்று அவன் திண்டில் சாய்ந்து ஹுக்கா இழுத் துக்கொண்டிருந்தான். அவன் எதிரே குற்றவாளி ஒருவன் உடல் குறுகி நின்றிருந்தான். விசாரணை நடந்துகொண்டிருந்தது. ராமசந்திர ராய்க்கு மாமனார் வீட்டில் நேர்ந்த ஆபத்துக்கள் அவனுக்குத் தெரியவே, அவன் தனக்குள் ஏதோ சொல்லிக்கொண் டானும். இதை அவனுடைய பகையாளி ஒருத்தன் அரச னிடம் எடுத்துச் சொல்லிவிட்டான். அரசன் கடுங் கோபங்

கொண்டு அவனைத் தன் எதிரே வரவழைத்தான். அவனுக்கு மரண தண்டனையா, தேசப் பிரஷ்டமா என்றுதான் ஆலோசனை நடந்துகொண்டிருந்தது.

"உனக்காடா இந்தத் துணிச்சல்?" என்று அரசன் உறுமினான்.

"மகாராஜா! எனக்கு ஒன்றுமே தெரியாதே என்று அந்த அப்பாவி அழுதான்.

"ஏண்டா, பிரதாபனுடன், எங்கள் மகாராஜாவை ஒப்பிடுகிறாய்?" என்றான் மந்திரி.

"இது தெரியாதா! பிரதாபனுடைய அப்பன் ராஜாவாகிறபோது பட்டாபிஷேகம் செய்ய நம் மகாராஜாவின் பாட்டனாரைத்தான் கூப்பிட்டான். எத்தனையோ அழுதபின், அவர் தம் வலது கால் சுண்டுவிரலால் பொட்டு வைத்தாராம்! தெரியுமா?" என்றான் திவான்.

"விக்கிரமாதித்தியன் பிள்ளை பிரதாபன்; இரண்டு தலைமுறையாகத்தானே அவர்கள் ராஜாக்கள்! பிரதாபனுடைய பாட்டன் சாதாரண வீரன்; அவனுடைய பிள்ளை எப்படியோ துள்ளிப் பிடித்துவிட்டான், சிம்மாசனத்தை; குடிகளின் ரத்தத்தை உறிஞ்சிப் பருத்தான். அவனுடைய பிள்ளை இன்று பாம்பு போலப் படம் எடுத்துச் சீறுகிறான். நாங்கள் வம்சவாரியாக இந்த வேலை செய்கிறோம்; ஜாதிப் பாம்பு எதுவென்று எனக்குத் தெரியாதா?" என்று ரமாயி சொல்லிக்கொண்டிருந்தான். ராமசந்திர ராய் முறுவல் முகத்துடன் ஹுக்கா குடித்தான். இப்போதெல்லாம் பிரதாபனைத் தாக்குவது சபையின் முக்கியமான காரியமாகிவிட்டது. பிரதாபனுடைய பின் பாகத்தில் சொல்லம்புகளை எய்து, தூணி காலியான பிறகே சபை கலையும். என்னவோ அன்று குற்றவாளி கெஞ்சிக் கூத்தாடவே, மகாராஜா அவனை மன்னித்துவிட்டான். "போனால் போகிறது. இந்த முறை பிழைத்தாய். இனி இப்படிச் செய்யாதே!" என்றான் ராமசந்திர ராய்.

சபையோர் அனைவரும் சென்றபின் அரசனுடன் ரமாயியும் மந்திரியுமே இருந்தனர். பிரதாபனைப்பற்றியே பேச்சும் நடந்தது.

"நீங்கள் வந்தீர்களா! இந்தப் பக்கம் இளவரசன் ஆபத்தில் சிக்கிக்கொண்டான். பெண் விதவையானால், அவள் நகைகளால் பொக்கிஷத்துக்கு வருவாய் என்று பிரதாபன் பார்த்தான். இளவரசனே அதற்குக் குறுக்கே நின்றான். அதைப்பற்றித்தான் எத்தனை பேச்சு?" என்றான் ரமாயி.

அரசன் சிரித்து, "அப்படியா?" என்றான்.

"மகாராஜா, பிரதாபனுக்கு இப்போது ஒரே கவலை தானாம். பெண்ணைப் புக்ககத்துக்கு எவ்வாறு அனுப்புவது என்று ஊண் உறக்கமின்றி யோசிக்கிறானாம்" என்றான் மந்திரி.

"அப்படியா!" என்று மனக்களிப்புடன் அரசன் ஹுக்கா இழுத்தான்.

மந்திரி: நான் 'பெண்ணை அனுப்பவேண்டிய அவசியமே இல்லை. மகாராஜா உங்கள் வீட்டில் பெண் கொண்டதே ஏழுதலை முறைக்கும் உங்களுக்குப் பெருமை. அது போதாமல் உங்கள் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்து எங்கள் வீட்டைத் தாழ்மைப்படுத்திக்கொள்ளும்படி அவ்வளவு புண்ணியம் உங்களுக்கு இல்லை' என்றேன். எப்படி ரமாயி?

"அதிலென்ன சந்தேகம், மகாராஜா? நீங்கள் சேற்றில் கால் வைத்தது அவன் அப்பன் செய்த புண்ணியம். அதற்காக, வீட்டில் நுழையும்போது காலைக் கழுவாமல் வர வேண்டுமா என்ன?"

இப்படி இவர்கள பிரதாபனை ஏளனம் செய்து பேசிக் கொண்டிருந்தனர். உதயன், பிரதாபன் இவ்விருவருடைய கற்பனை உருவங்களையும் சொல்லம்புகளால் ரமாயியும்

மந்திரியுமாகத் துளைத்தெடுத்தனர். உதயன் செய்த தவறு என்னவோ தெரியாது. அவன் தன் உயிரையும் லட்சியம் செய்யாமல், ராமசந்திரனுடைய உயிரைக் காத்தான்; ஆனால் அரசனே அதை மறந்து, பிரதாபனுடைய மகனென்று அவனையும் இழிந்துரைத்தான். ராமசந்திரன் கடுமையான நெஞ்சனல்ல; ஆனால் குறுகிய மனப்பான்மையும் கோழை நெஞ்சமும் படைத்தவன். உதயன் தன் உயிரைக்காப்பாற்றியதற்காகத்துளிகூட நன்றி அவனுக்கு இல்லை. இவ்வாறு நடப்பதுதான் சரி; இன்றேல் தவறு என்றே அவன் எண்ணினான். அவன் ஆபத்தில் சிக்கினால் மற்றவர் கடமை அவனை விடுவிப்பதுதானே! தன்னுடைய காலில் முள் தைத்தால் உலகிற்கே வலிக்கும் என்பது அவன் எண்ணம். உலகில் உள்ள அற்பனுக்கும் உயிருக்குமுன் அரசன் துரும்புதான் என்பது அவனுக்கு விளங்கவில்லை. முகஸ்திதி செய்வோரின் வசமாகி, அவன் தன்னை உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டிருந்தான். அதனால் அவனுக்கு எளிதில் எவர் மேலும் நன்றி உண்டாவதில்லை. உதயன் தங்கையின் பொருட்டுத்தான் தன்னைக் காப்பாற்றினான்; இன்றேல் அவனுக்கு ஏது அத்தனை கவலை என்று எண்ணித்தான் அரசன் உதயனையும் இகழத் தொடங்கினான். உதயன்மேல் நன்றி இருந்தாலுங்கூட அவனைப் பரிகாசம் செய்துதான் இருப்பான். பத்துப் பேராக ஒருவனை இகழும் இடத்தில், அதிலும் ரமாயி ஒருத்தனைத் தாழ்மைப்படுத்திக் கூறுகையில், எதிராகப் பேசவோ, அடக்கவோ அரசனுக்கு மனத் துணிவு இல்லை. எல்லாரும் என்ன எண்ணிக்கொள்வார்களோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது.

விபாவின்மேல் மட்டும் அவனுக்கு ஒரு பிடித்தம் இருந்தது. அவள் அழகி; நிறைந்த இளமை பொலிந்தவள். அவளை அவன் கொஞ்ச நேரமே கண்டான். அரசன் பிரதாபனை அவமதித்தவன்தான்; ஆனால், அன்றிரவு

உறக்கம் கலைந்து அவன் முதல் முறையாக எழுந்தபோது, விபா படுக்கையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் கிலவு படிந்திருந்தது. சற்றே மூடியிருந்த மார்பும் விம்மித் தணிவது அவன் கண்களில் பட்டது. மலர் விழிகளில் நீர்த்துளியும், கோவை இதழ்கள் துடிப்பதும் கண்டு அவனுடைய மனம் இளகிவிட்டது. விபாவின் இதழ்களை முத்தமிடவும் உள்ளூற ஓர் ஆவல் மூண்டது. அந்தக் கணத்தில்தான் அவன் முதல்முதலாக விபாவின் இளமை மண்டிய அழகைக் கண்டான். உள்ளூறப் பெருமூச்சும், கண்களில் நீர்த்துளியும் எழ, உள்ளம் ஏங்கியது விபாவை முத்தமிடச் சென்ற வேளையில் வெளியே யாரோ கதவைத் தட்டும் ஓசை எழுந்தது. விபத்தின் செய்தியும் எட்டியது. உள்ளத்தின் முதல் மலர்ச்சி, ஆசையின் முதல் தீவிரம், கண்களின் கவர்ச்சி இவைகள் திருப்தி அடையாததன் காரணமாகவே, விபாவைப்பற்றிய எண்ணம் அவன் உள்ளத்தில் இடங்கொண்டிருந்தது. இது நிலைத்த காதல் அல்ல; குறுகிய மனப்பான்மை வாய்ந்த ராமசந்திர ராய்க்கு நிலைத்த காதல் இருக்கவே நியாயமில்லை! அழகிய பொருளின்மேல் ஆசை உண்டாவதுபோல், விபாவின் அழகிலும் அவனுக்கு ஒரு பிடித்தம்! எப்படியானால் என்ன! அவள் நினைவு அவனுக்கு இருந்தது. விபாவை அடையும் ஆவலும் இராமல் இல்லை. ஆனால் அவனாக விபாவை அழைத்து வர முயன்றால் நாலு பேர் என்ன நினைப்பார்கள்! சபையார் அவனைப் பெண் பித்தனென்பர். மந்திரியும் ரமாயியும் உள்ளூறத் தன்னை எள்ளி நகைப்பர் என்று அவனுக்குப் பயம். தவிர, அதனால் பிரதாபனுக்கு என்ன? மாமனாரைப் பழி வாங்க வேண்டுமல்லவா? இப்படி ஏதோ சில காரணங்களை முன்னிட்டு, அவன விபாவை அழைத்துவர முயற்சிகள் ஒன்றும் செய்யவில்லை. விபாவைப்பற்றிச் சபையார் செய்யும் கேலிகளைத் தடுக்கும் துணிவும் அவனுக்கு இல்லை. பிரதாபனைப்பற்றி எண்ணும்

போது அவர்களை அடக்கும் விருப்பமும் அவனுக்கு இல்லை.

ரமாபியும் மந்திரியும் சென்றபின் ராமமோகனன் கை கூப்பிக்கொண்டு வந்து நின்றான். "மகாராஜா!" என்றான்.

"என்ன, மோகன்?"

"உத்தரவிடுங்கள்; அம்மாவை அழைத்து வருவேன்."

"அதென்ன?"

"ஆம். அந்தப்புரம் வெறிச்சென்று கிடக்கிறது. என்னால் அதைக் காணச் சகிக்கவில்லை. உள்ளே போய் அம்மா இராமல் என் உள்ளம் துடிக்கிறது. என் அம்மா வீட்டுக்கு வந்து, வீடு வெளிச்சமாக இருப்பதைக் கண்டு என் மனம் குளிரவேண்டும்."

"ராம்மோகன்! உனக்கென்ன பைத்தியமா? அந்தப் பெண்ணையா சொல்லுகிறாய்?"

ராம்மோகனன் வியப்புடன், "ஏன் மகாராஜா! அவள் செய்த தவறு என்ன?" என்று கேட்டான்.

"என்ன, மோகன்? பிரதாபனுடைய பெண்ணையா?"

"ஏன் கூடாது? பிரதாபன் அவளுக்கு என்ன! கல்யாணம் ஆகாத வரையில் பெண்ணுக்கு அப்பன்; அப்புறம் பெண்ணின்மேல் அவனுக்கு ஏது உரிமை? அவள் இன்று தங்கள் அரசி. நீங்கள் ஆதரிக்காவிட்டால் அவள் கதி என்ன ஆவது?"

"அவளை மணந்ததே மேல். அவளை அழைத்து வந்தால் என் மானம் எப்படிப் பிழைக்கும்?"

"மானமா! சொந்த மனைவியை அழைத்துவாராமல், பிறத்தியான் வீட்டில் விட்டுவைத்தீர்கள்; அவள்மேல் உங்களுக்கு உரிமை இல்லையா? அவளை மற்றவன் கண்டபடி நடத்தலாமா? இதனால் உங்கள் மானம் பிழைக்கிறதோ?"

"பிரதாபன் பெண்ணை அனுப்ப மறுத்தால்?"

மோகனன் தன் மார்பைப் பார்த்துக்கொண்டான். "என்ன! என் தாய், என் வீட்டு லட்சுமி! அவளைப் பிர தாபனே வேறு எவனே தடுத்தாலும் சரி, நான் அழைத்து வருவேன். இதோ சொன்னேன்: நான் என் அம்மாவை அழைத்தே வருவேன். என்னைத் தடுப்பதற்கு யார் அவ்வளவு தலைபடைத்தவன்!" என்று சொல்லிக் கொண்டே புறப்படத் தொடங்கினன்.

அரசன் பரபரப்புடன், "மோகன்! நில் போகாதே! நீ அரசியை அழைத்து வரச் செல்வதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனல் இது எவனுக்கும் தெரியக்கூடாது. ரமாயி, மந்திரி இவர்கள் காதில் விழவே கூடாது" என்ருன்.

"அப்படியே, மகாராஜா!" என்று மோகனன் சென்ருன்.

"அரசி அந்தப்புரத்துக்கு வந்தால் எல்லோருக்கும் தெரியத்தான் போகிறது. ஆனல், முதலிலிருந்து எதற் காகக் கூச்சப்பட்டுப் புழுங்கவேண்டும்?' என்றுதான் எண்ணினன் ராமசந்திர ராய்.



# 20

## உதயன் நிலை

உதயனுக்கு எதனுல் சுகம் ஏற்படும் என்பதையே இரவு பகலாக யோசனை செய்தாள் விபா. தன் கையாலேயே அவனுக்கு வேண்டியவற்றைத் தருவாள். தானே உணவைப் பரிமாறுவாள். அவன் எதிரே உட்கார்ந்து சாப்பிடச் செய்வாள். அற்ப விஷயத்திலும் தவறு நேர விடுவதில்லை. அந்தி வேளையில் உதயன் தன் அறையில் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பான். கண்களில் நீர் துளிக்கும். விபா பரபரப்புடன் அவன் காலருகில் வந்து உட்கார்ந்து, அவனுக்குச் சமாதானம் சொல்ல முயலுவாள். ஆனல் குரல் எழாது. இருவரும் பேச முடியாமல் கம்மென்று உட்கார்ந்திருப்பர். மங்கிய விளக்கின் சுடர் நடுநடுவே அணையும். அத்துடன் சுவரில் அசையும் நிழலையே விபா உற்று நோக்குவாள். கப்பென்று அழுகை பொங்கிக்கொண்டு வரும். "அண்ணு! அவள் எங்கே போய்விட்டாள்?" என்பாள். உதயன் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்து விபாவை நோக்குவான். விபாவின் கேள்வி புரியாதவன் போல விழிப்பான். சட்டென்று உணர்ச்சி பிறக்கும். பரபரப்புடன் கண்களைத் துடைத்துக்கொண்டு விபாவின் பக்கத்தில் போய் உட்காருவான். "விபா! ஒரு கதை சொல்லுகிறேன், கேள்" என்று அவள் மனத்தை மாற்ற முயலுவான்.

மழை நாள்; வானில் மேகம் நன்ருக மூடியிருந்தது. பகலெல்லாம் ஒரே மழை. வெயில் என்பதே இல்லை. தோட்டத்தில் மரங்கள் எல்லாம் அசைவற்று நின்று மழையில் குளித்தன. நடுநடுவே வீசும் பேய்க் காற்றில் மழைச்சாரல் உள்ளே அடித்தது. உதயன் கம்மென்று உட்கார்ந்திருந்தான். வானில் இடியொலியும் தொடுவானில் மின்னலும், காதையும் கண்ணையும் பிய்த்தெடுத்தன.

மழையின் பேரொலியோ, "சுரமா இல்லை! இல்லை!" என்று சொல்வது போல் தோன்றியது. ஈரக்காற்று, "சுரமா எங்கே?" என்று கேட்பது போல் இருந்தது. விபா மெல்ல உதயனிடம் வந்து, "அண்ணு!" என்ருள். உதயனுல் பதில் சொல்ல முடியவில்லை. விபாவைக் கண்டதும் உதயன் முகத்தை மூடிக்கொண்டு ஜன்னலில் படுத்துவிடுவான். மழைத் தாரைகள் தலையில் விழுந்த வண்ணமாக இருக்கும். பகல் வேளை இவ்வாறே கழிந்து இருட்டத் தொடங்கும். விபா உதயனுக்காகச் சாப்பாடு எடுத்து வருவாள். "அண்ணு, சாப்பாடு தயாராகி விட்டது; வா" என்பாள். உதயன் பதில் சொல்ல மாட்டான். இருள் பின்னும் அதிகமாகும். "அண்ணு! நேரமாகிவிட்டது. வாயேன்" என்று விபா அழுவாள். உதயன் அவள் கண்களைத் துடைத்துவிட்டுச் சாப்பிடச் செல்வான். சாப்பாடு நன்ருகப் பிடிக்காது. விபா அதைக் கண்டு பெருமூச்சுடன் படுக்கச் செல்லுவாள். அன்று அவள் உண்ணவே மாட்டாள்.

விபா பேசி அவனைக் களிப்போடு இருக்கும்படி செய்ய முயன்ருள். ஆனல் அவளால் அது முடியவில்லை. "ஆகா! தாத்தா இருந்தால் எவ்வளவோ மேலாக இருக்குமே!" என்று அவளுக்குத் தோன்றும்.

வரவர உதயனுடைய மனத்தில் பெரும் பயம் ஒன்று மூண்டது. அவனுக்குப் பிரதாபனைக் கண்டால் ஒரு நடுக்கம். முன் போல் அவ்வளவு துணிச்சல் அவனுக்கு இல்லை. ஆபத்துக்களை லட்சியம் செய்யாமல், அநியாயத்துக்கு மாருக உயிரை விடும்படி அவ்வளவு தைரியம் அவனுக்கு இல்லை. எந்த வேளையிலும் சந்தேகமும் தயக்கமும் மூண்டவாறே இருக்கும்.

சாப்ரா ஜமீன்தார் கச்சேரியை இரவோடு இரவாகக் கொள்ளை அடித்துத் தீயிடும்படி பிரதாபன் கோல் வீரரை அனுப்பிய செய்தி அவனுக்குத் தெரிந்தது. உதயன் தன்

குதிரையைத் தயார் செய்யச் சொல்லிவிட்டு அந்தப்புரத்துக்குச் சென்றான். அறைக்குள் போய் நாலுபக்கமும் பார்த்ததும் உள்ளூறக் கவலை மூண்டது. ஏதோ யோசனையுடன் உடைகளை மாற்றிக்கொண்டு வெளியே வந்தபொழுது, "இளவரசே! குதிரை தயார்; எங்கே போர் வீரர்கள்?" என்று வேலைக்காரன் கேட்டான். உதயன் ஏதோ நினைவாக அவன் முகத்தைப் பார்த்தான். 'எங்கேயும் இல்லை; குதிரையை இழுத்துப் போ" என்றான்.

ஒரு நாள் அழுகையொலி கேட்டு, உதயன் வெளியே வந்தான். அரசனுடைய ஏவலாள் ஒருத்தன் ஒரு குடியானவனை மரத்தில் கட்டி அடித்தான். அடியுண்ட பேர்வழி இளவரசனைக் கண்டு ஓவென்று அலறினான். உதயனுக்கு அது தாங்கவில்லை. பரபரவென்று உள்ளே சென்றுவிட்டான். முன்னெல்லாம் அப்படி நேர்ந்தால் விளைவுகளை யோசியாமல், ஏவலாளைத் தடுத்து விரட்டியிருப்பான்.

பாகவதன், சீதாராமன் இருவருக்கும் பணம் அனுப்புவது நின்றுவிட்டது. அவர்களுக்கு வெளிப்படையாகவோ ரகசியமாகவோ பண உதவி செய்ய இளவரசனுக்குத் துணிவில்லை. அவர்களுடைய கஷ்டம்பற்றித் தெரிந்தால், 'இன்றைக்கே பணம் அனுப்புவது'. என்று நினைப்பான். உடனே தயக்கம் மூண்டுவிடும்; பணம் அனுப்ப முடியாது.

உதயன் உயிருக்குப் பயந்து இவ்வாறு செய்யவில்லை. வாழ்வில் அவனுக்குப் பற்றுதலே சற்றும் இல்லை. உள்ளூற ஒரு குருட்டுக் கவலை அவனைப் பிடித்துக்கொண்டிருந்தது. பிரதாபன் ஒரு ரகசியமான பேர்வழி என்றே அவன் எண்ணினான். தன்னுடைய அதிர்ஷ்டம், தனது எதிர்காலம் எல்லாம் பிரதாபனுடைய கைக்குள் இருப்பது போலவே உதயனுக்குத் தோன்றின; 'நாம் சாகும் கடைசிக் கணத்திலுங்கூட அப்பா புருவத்தைச் சுளித்துப் பிழைக்கும்படி கட்டளையிட்டால், உடனே எழுந்து விடுவாமோ' என்றுங்கூடத் தோன்றியது.

# 21

## சூழ்ச்சி

விதவை ருக்மிணியிடம் கொஞ்சம் ரொக்கப் பணம் இருந்தது. அந்தப் பணத்தில் வரும் வட்டியைக் கொண்டு அவள் கஷ்டமின்றிக் காலங் கழித்தாள். அழகு, பணம் இவைகளால் அவள் பலரைத் தன் வசம் செய்துகொள்ள முடிந்தது. சீதாராமன் சற்று ஆடம்பரமான பேர்வழி. வீட்டிலோ காலணவுக்கு வழியில்லை. ஆகவே, அவனுக்கு மங்களாவின் பணம், அழகு இரண்டின் மேலும் ஆசை மூண்டது வீட்டில் அரிசி இராத நாளன்று சீதாராமன் கவலையற்று மேல்துணியைப் பறக்க விட்டுக்கொண்டு மங்களாவின் குடிசைக்குச் செல்வதைக் காணலாம். வழியில் யாராவது, "என்ன சீதாராம்? குடும்பம் எப்படி?" என்று விசாரித்தால், அவன் முகம் வாடாமல், "ஆகா! சுகந்தான். நாளைக்கு என் வீட்டில் விருந்து" என்பான். அவனுடைய நிலை குன்றக் குன்ற, வாய்ச் சொற்கள் பின்னும் ஆடம்பரமாகவே இருந்தன. குடும்பம் நடப்பது மிகவும் சங்கடமாகிவிட்டது. அவனுடைய அத்தை தன் உறவை விட்டுச் சொந்த ஊருக்குக் கிளம்ப எண்ணி விட்டாள். பணம் அதிக முடையாக இருக்கவே, அன்று அவன் சிரித்துக்கொண்டே மங்களாவை அணுகினன்.

"பிச்சை அளிப்பாய், பெண்ணே ராதை!
இச்சை இலையே, எனக்கினிப் பொன்மேல்.
உள்ளம் விரும்பிட உனைவந் தடைந்தேன்;
கள்ளம் நீங்கிக் கௌரவம் பெறவே...

"சே! சரியாக வரவில்லையே! எனக்கு மானமோ கௌரவமோ அவ்வளவு அவசியமில்லை. அதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்போது வெள்ளி ஏதாவது டைத்தால் நலம்."

ருக்மிணி மிகவும் அன்புள்ளவள் போல, "உனக்கு அவசியமென்ருல், உன்னைத் தவிர வேறு யாருக்குத் தருவேன்?" என்ருள்.

"அப்படி அல்ல, ஆனுல் என் கையில் பணமில்லை; அம்மாவிடந்தான் இருக்கிறது. இன்று காலை அம்மா ஜோடாகாடாவில் மருமகன் வீட்டுக்குச் சென்ருள். பணம் தர மறந்துவிட்டாள். நாளைக்கே திருப்பித் தருவேன்."

மங்களா தனக்குள் சிரித்து, "உனக்கேன் அவசரம்? முடிந்தபோது திருப்பிக் கொடு. உன் கையில் கொடுத்தால் என்ன? ஜலத்தில் போடவில்லையே!" என்ருள். ஜலத்தில் போட்டால் திரும்பக் கிடைத்தாலும் கிடைக்கலாம்; சீதாராமனிடம் கொடுத்தால் அந்த நம்பிக்கை இல்லை.— இதுதான் வித்தியாசம்.

மங்களா இப்படிப் பேசுவது கண்டு சீதாராமனுடைய காதல் பன்மடங்காகத் தளிர்த்தது. அவன் அவளுடன் வேடிக்கையாகப் பேசலானுன். பணமிராமல் ஆடம்பரமும், பரிகாசப் பேச்சின்றி வேடிக்கையும் செய்வது அவனுக்கு இயல்பான குணமே. அவன் தன் வாய்க்கு வந்தபடி சொல்லிவிட்டு, வேறு யார் சிரிக்காவிட்டாலும் தானே சிரிப்பான். அரண்மனைக் காவலாளாக இருந்தபோது மற்றவர்களுடன் நடுநடுவே சண்டை நேர்ந்துவிடும். இதற்குக் காரணம், சீதாராமனுக்கு வேடிக்கையாகத் தோன்றுவது, மற்றவர்களுக்குக் கோபமூட்டுவதாக இருந்ததுதான். ஒரு சமயம் ஹநுமான் பிரஸாத் திவாரி காவலில் உறங்கும் போது, சீதாராமன் மெல்ல வந்து அவன் முதுகில் குத்தி விட்டுச் சிரித்தான். திவாரி கோபமூண்டு சீதாராமனை நன்ருகக் குத்தி, சிரிப்புக்கும் அழுகைக்கும் உள்ள பேதத்தை எடுத்துக் காட்டத் தொடங்கினுன். இப்படி அவனைப் பற்றிப் பல கதைகள் சொல்லலாம்.

சீதாராமனுடைய காதல் பொங்கி எழுந்தது என்று

சொன்னேனல்லவா! அவன் மங்களாவை நெருங்கி, "நீ என் சுபத்திரை; நான் உன் கண்ணன்" என்றான்.

"ஐயோ பைத்தியமே! சுபத்திரை கண்ணனுக்குத் தங்கையாச்சுதே!"

"எப்படி என்கிறேன்? அப்படி இருந்தால் சுபத்திரா ஹரணம் எப்படி நடக்கும்?"

ருக்மிணி சிரிக்கத் தொடங்கினாள். சீதாராமன் மார்பு பூரிக்க, "ஊம்; சிரித்தால் நடக்காது! பதில் சொல். சுபத்திரை தங்கைதான் என்றால் சுபத்திராஹரணம் எப்படி நடந்தது?" என்றான். தான் சொன்ன யுக்திக்கு மேல் பேச வழியில்லை என்று சீதாராமனுக்கு நம்பிக்கை.

ருக்மிணி மெல்லிய குரலில், "முட்டாள்!" என்றாள்.

சீதாராமன் குரல் இளகி, "என்னதான் சொல்லு உன் வரையிலும் நான் என்றைக்கும் முட்டாள்தான் எனக்கு என்றைக்கும் தோல்விதான்" என்றான். நல்ல பதில் சொல்லிவிட்டதாக அவனுக்கு எண்ணம். உடனே மறுபடியும், "உனக்கு இது பிடிக்காவிட்டால் போகிறது. உன்னை எப்படிக் கூப்பிட்டால் சந்தோஷப்படுவாய்? சொல்" என்றான்.

ருக்மிணி சிரித்தாள்.

"ஆருயிரே என்று சொல்!"

"ஆருயிரே!"

"அன்பே!"

"அன்பே!"

"கண்மணியே!"

"கண்மணியே! அது சரி — என் ஆருயிரே! நீ கொடுத்த பணத்திற்கு வட்டி எத்தனை?"

ருக்மிணி கோபத்துடன் முகத்தைக் கோணிக் கொண்டாள். "போ! போ! இதுதான் உன் காதலின் லட்சணமோ! வட்டி என்று உன்னால் எப்படிக் கேட்க முடிந்தது?" என்றாள்.

சீதாராமன் களி மிகுந்து, "இல்லை, இல்லை! நான் நிச்சயமாகவா சொன்னேன்? கேலி செய்தேன்! இது கூடவா உனக்குப் புரியவில்லை! சீ! ஆருயிரே!" என்ருன்.

சீதாராமனுடைய தாய்க்கு என்ன வந்ததோ தெரியாது; பணங் கொடுக்க மறந்துபோய், அடிக்கடி மருமகன் வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தாள். சீதாராமன் அடிக்கடி மங்களாவிடம் வரத் தொடங்கினன். அவனும் அவளுமாகச் சேர்ந்து ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி ரகசியமாக ஆலோசனை செய்தனர். அன்று வெகுநேரம் யோசனை செய்தபின் சீதாரர்மன், "எனக்கு அவ்வளவு மூளை இல்லை. இந்த விஷயமாகப் பாகவதனுடைய உதவியை நாட வேண்டியதுதான்" என்ருன்.

அன்று மாலை புயல் பலமாக வீசிக்கொண்டிருந்தது. அரண்மனையின் கதவுகளை எல்லாம் தடார் தடாரென்று மூடிக்கொண்டிருந்தனர் வேலையாட்கள். காற்றின் வேகத்தில் தோட்டத்தின் மரங்கள் கூட ஆடிப் பூமியைத் தொட்டன. வெள்ளத்தில் சிதைவுண்ட கிராமங்கள் போல் சின்னபின்னமாகி மேகங்கள் அடித்துச் சென்றன. மின்னலும் இடியும் பலமாக இருந்தன. உதயன் கதவுகளை எல்லாம் மூடிக்கொண்டு, சிறு பெண் குழந்தை ஒன்றுடன் அறையில் உட்கார்ந்திருந்தான். அறையின் விளக்கை அவன் அவித்துவிட்டான். அறையில் ஒரே இருட்டு. பெண் அவனுடைய மடியில் தூங்கிக்கொண்டிருந்தாள். சுரமாவுக்கு அந்தப் பெண்ணின்மேல் அன்பு அதிகம். சுரமா இறந்தபின், அவளுடைய தாய் இந்தக் குழந்தையை அனுப்பவில்லை. வெகு நாட்களுக்குப் பின் உதயனைக் கண்டதும் குழந்தை, "சித்தப்பா!" என்று ஓடி வந்து அவன்மேல் விழுந்தாள். உதயன் அவளை மார்போடு அணைத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்ருன். "சுரமா இந்தக் குழந்தைக்காகவாவது இன்று வரக் கூடாதா! இவள்மேல் அவளுக்கு அன்பு அதிகமாயிற்றே!

வராமலா இருப்பாள்?'' என்று அவனுக்குத் தோன்றியது. பெண் அவனை நோக்கி, "சித்தப்பா! சித்தி எங்கே?'' என்றாள்.

உதயன் தொண்டை அடைக்க, "அவளை ஒரு முறை கூப்பிடேன்'' என்றான். பெண் குழந்தையும் உரத்த குரலில், "சித்தி! சித்தி'' என்று கூப்பிட்டாள். யாரோ "இதோ வருகிறேன்'' என்பதுபோல் உதயனுக்குப் பிரமை உண்டாயிற்று. பெண்ணின் அன்பு மண்டிய அழைப்பை அவளால் தட்ட முடியவில்லையோ! பெண் அவன் மடியிலேயே தூங்கிவிட்டாள். வெளியே ஓ வென்று வீசியது பேய்க் காற்று. உதயன் விளக்கை அவித்துவிட்டுப் பெண்ணுடன் இருளில் உட்கார்ந்திருந் தான். காலடி ஓசைகள் மெல்லக் கேட்டன. ஆம்! மார்பின் படபடப்பில் அதுவும் சரிவரக் கேட்கவில்லை. கதவு திறந்து விளக்கொளி அறையினுள் விழுந்தது. இதுவும் நடக்குமா? கையில் விளக்குடன் பெண்ணொருத்தி மெல்ல உள்ளே வந்தாள். உதயன் கண்களை மூடிக்கொண்டு, "சுரமாவா?'' என்றான். கண் திறந்து பார்த்தால், அவள் போய்விடவும் கூடும்; அல்லது வேறு பெண்ணாகவும் இருக்கலாம்.

வந்தவள் விளக்கை வைத்துவிட்டு, "ஏன்! என்னை நினைவில்லையா?'' என்றாள்.

இடியொலி கேட்டுக் கனவு கலைந்தது. உதயன் திடுக் கிட்டுக் கண்ணைத் திறந்தான். குழந்தையும் எழுந்து, "சித்தப்பா'' என்று அழத் தொடங்கினாள். அவளைப் படுக்கையில் விட்டு உதயன் எழுந்து நின்றான். என்ன செய்வது, எங்கே செல்வது என்று அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ருக்மிணி அவனை அணுகித்தலையாட்டி, "இப்போது நினைவிருக்குமா? ஆனால் ஒரு நாள் ஆசை காட்டி என்னைத் தூக்கிவைத்த காரணம் என்ன?'' என்றாள். உதயனால் வாய் திறக்க முடியவில்லை.

ருக்மிணி மெல்லத் தன் அஸ்திரத்தை வெளியே எடுத்தாள். "நான் உனக்கு இழைத்த தீங்கென்ன? என்னைப் பார்க்க ஏன் கூசுகிறாய்? நீதானே என்னை நாசம் செய்தாய்? இளவரசனிடம் தன் உயிரையும் உள்ளத்தையும் பறிகொடுத்தவள் இன்று தெருத் தெருவாக அலையவும் என் தலையில் எழுதியிருக்கிறதே!" என்று அவள் அழத் தொடங்கினாள்.

உதயனுடைய உள்ளத்தை அது பொத்தியது. 'நான் தான் இவளை நாசமடித்தேனோ?' என்றும் எண்ணினான். கடந்த நிகழ்ச்சிகள் மறந்தன. இளவயதில் ருக்மிணி அணு அணுவாகத் தன்னை மயக்கியது, வலையில் தன்னைச் சிக்க வைத்தது, அழல்போல் தன் கைகளால் அணைத்து தன்னைப் பாதாளத்தில் தள்ளியது எல்லாவற்றையும் அவன் மறந்தான். ருக்மிணியின் அழுக்குப் படிந்த உடையையும், அவள் அழுகையையும் கண்டு அவன் மனம் இளகியது. "உனக்கு என்ன வேண்டும்?" என்று அவளைக் கேட்டான்.

"எனக்கு வேறெதுவும் வேண்டாம். உன் அன்புதான். இந்தச் சாளரத்தின் அருகே, உன் மார்பில் தலைவைத்து உன் ஆதரவைப் பெற விரும்புகிறேன். ஏன்! சுரமாவைவிட என் முகம் அழகாக இல்லையா? அப்படி என் பொலிவை இழந்திருந்தாலும் அது உன் பொருட்டுத்தான். முதலில் அப்படி இல்லையே!" என்று ருக்மிணி அவனுடைய படுக்கையில் உட்காரச் சென்றாள். உதயனால் அதைப் பொறுக்க முடியவில்லை. பரபரப்புடன், "அதில் உட்காராதே! வேண்டாம்!" என்றான்.

ருக்மிணி அடியுண்ட நாகம்போல் சீறினாள். "ஏன்? ஏன் உட்காரக்கூடாது?" என்றாள்.

உதயன் அவளைத் தடுத்து, 'இல்லை; அதில் உட்காரக் கூடாது. உனக்கு வேண்டியதைக் கேள்; தருகிறேன்' என்றான்.

"சரி; உன் விரலில் இருக்கும் மோதிரத்தைக் கொடு" என்றாள் ருக்மிணி.

உதயன் தன் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றி எறிந்தான். ருக்மிணி அதை எடுத்துக்கொண்டு வெளியே சென்றாள். 'சூனியக்காரியின் மோகம் தெளியவில்லை. இன்னும் கொஞ்ச நாள் போனால் என் மந்திரம் பலிக்கும், என்று அவள் எண்ணினாள். அவள் போனதும் உதயன் படுக்கையில் விழுந்தான். கைகளால் முகத்தை மூடிக்கொண்டு, "சுரமா! எங்கே போனாய்? என் புண்பட்ட நெஞ்சுக்கு இன்று அமைதி தர யார் இருக்கிறார்கள்?" என்று அவன் விம்மினான்.



## 22

## சதியின் விபரீத பலன்

**பா**கவதனுடைய நிலைமை மோசமாகிவிட்டது. அவன் சில நாட்களாக ஓயாமல் ஹுக்கா குடித்தவாறு யோசனை செய்தான். அது கண்டு அக்கம் பக்கத்தவர்க்கு ஐயம் மூண்டது. அவன் வாயிலிருந்து புகைப்படலங்கள் சுருண்டெழுவதுபோல் உள்ளுக்குள்ளும் ஒரு சுழல் இருப்பது உண்டு. ஆனால் அவன் நியாயம் தவறாத பேர்வழி. பிறத்தியார் விவகாரங்களில் தலையிடமாட்டான். துளசி மணி மாலையுடன் இருப்பான்; அதிகமாகப் பேசுவதில்லை. ஆனால் யாராவது விபத்தில் சிக்கினால், அவனைப்போல் ஆலோசனை சொல்வதற்கு ஈடானவர் இல்லை. அவன் தானாக ஒருத்தனுக்குக் கஷ்டம் தருவதில்லை. ஆனால் எவராவது அவனுக்குத் தீங்கிழைத்தால் அதை மறக்க மாட்டான். பழி வாங்கிய பின்னரே ஓய்வு எடுத்துக் கொள்வான். உலகத்தில் நல்லவர் என்று குறிப்பிடும் சாரரில் அவனும் ஒருத்தன் என்று சொல்லலாம். ஊரார் அவனை மதித்தனர். கஷ்டகாலத்தில் வாங்கிய கடனைப் பாத்திரம் பண்டங்களை விற்றுத் தீர்த்தான்.

ஒரு நாள் காலை சீதாராமன் வந்து, "எப்படி இருக்கிறாய், அண்ணா!" என்றான்.

"ரொம்பக் கஷ்டமப்பா!"

"ஏன் அப்படி?"

பாகவதன் நிதானமாக, "குடும்பக் கஷ்டந்தான்" என்றான்.

"எப்படி?"

பாகவதன் உள்ளூறச் சற்று ரோஷத்துடன், "எப்படி என்று உனக்குச் சொல்லவேண்டுமா? என் நிலைமைதானே உனக்கும் என்பது தெரியாதா?" என்றான்.

சீதாராமன் திகைத்து, "இல்லை; நான் சொல்வது அதுவல்ல. கடன் வாங்குகிறதுதானே?" என்றான்.

"வாங்கிவிடலாம்; ஆனால் தீர்ப்பது எப்படி? அடகு வைக்கவோ, விற்கவோ என்னிடம் எதுவுமில்லை."

சீதாராமன் பெருமையுடன், "உனக்கு எத்தனை ரூபாய் வேண்டும்? நான் தருகிறேன்" என்றான்.

"ஓ! உனக்கு அத்தனை பணம் இருந்து வாரி இறைக்கலாம் என்றால்,எனக்குப் பத்து ரூபாய் தாயேன். என்னால் அதைத் திருப்பித் தர முடியாது; முதலிலேயே சொல்லி விட்டேன்."

"அதற்காக நீ ஏன் அண்ணா கவலைப்படுகிறாய்?"

சீதாராமன் வேண்டாமல் உதவி செய்யவந்தது கண்டு பாகவதன் நட்பு மிகுதியால் தன்னை மறந்துவிடவில்லை. கம்மென்று அவன் ஹுக்காவில் தம் இழுத்தான்.

சீதாராமன் மெல்லப் பேச்சை எடுத்தான். "அண்ணா! ராஜாவின் அநியாயத்தால் நம் வாயில் மண் விழுந்தது" என்றான்.

"ஆனால் உன்னைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே!"—சீதாராமனுடைய பேச்சு பாகவதனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு உள்ளூறக் கோபந்தான்.

"இல்லையப்பா. பேச்சுக்குச் சொல்லுகிறேன். இன்று இல்லை என்றாலும் பத்துநாளில் போகப்போகிறதுதானே!"

"ராஜா அநியாயம் செய்தால் நாம் என்ன செய்வது?"

"இளவரசன் ராஜாவானால் யசோஹரில் ராமராஜ்யம் வரும். அதுவரையில் நாம் பிழைத்திருக்கவேண்டும்!"

பாகவதன் சள்ளென்று விழுந்தான். "அதெல்லாம் நமக்கென்ன! நீ பெரிய மனுஷன்; வீட்டிலே உட்கார்ந்து ராஜா, மந்திரியைக் கொல்லலாம். நான் ஏழை; எனக்கேது அத்தனை துணிச்சல்?" என்றான்.

"ஏன், அண்ணா; கோபமேன்? நான் சொல்வதைக்

கேளேன்'' என்று அவன் பாகவதனுடைய காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னன்.

பாகவதன்கடுங்கோபத்துடன், "இதே பார், சீதாராம்! உன்னிடம் பச்சையாகச் சொல்கிறேன். என்னிடம் இனி இந்த மாதிரிப் பேச்சை எடுக்காதே!'' என்றான்.

அன்று சீதாராமன் போய்விட்டான். அன்றெல்லாம் அதையே யோசித்தபின் மறுநாட் காலை பாகவதனே சீதாராமனிடம் சென்றான். "நேற்று நீ சொன்னது சரியான பேச்சு" என்றான். சீதாராமன் பெருமையாக, "நான் முன்னமே சொல்லவில்லையா?'' என்றான். "இன்று அந்த விஷயமாக் ஆலோசனை செய்யத்தான் நான் வந்தேன்" என்றான் பாகவதன்.

சீதாராமன் பின்னும் பெருமை அடைந்தான். சில நாட்களாக இருவரும் ஓயாமல் யோசித்தனர். கடைசியில் கள்ளப் பத்திரம் ஒன்று தயார் செய்வதென்று தீர்மானித் தனர்: இளவரசன் பிரதாபனுக்கு எதிராகப்புரட்சிசெய்து, தானே அரசை அடைய முயலுவதாக எழுதி அதில் இள வரசன் பெயரிட்ட முத்திரை இடவேண்டும்; ருக்மிணியிட மிருந்த மோதிரத்தில் உதயன் பெயர் இருந்ததால் காரியம் விரைவில் நிறைவேறிவிட்டது. முட்டாள் சீதாராமனை நம்ப முடியாது. ஆகவே, பாகவதன் தன் கையால் எடுத்துச் சென்று அதைப் பாதுஷாவிடம் கொடுப்பது என்று முடிவாயிற்று. ஆனல் அவன் பாதுஷாவிடம் செல்லாமல், பிரதாபனிடம் போனான். "இளவரசரின் இந்தப் பத்திரத்துடன் பாதுஷாவிடம் ஒருவன் போய்க்கொண்டிருந்தான். இது எனக்கு எப்படியோ தெரிந்தது. அந்த ஆள் ஓடிவிட்டான். நான் பத்திரத்துடன் வந்தேன்'' என்றான். சீதாராமனுடைய பெயரை அவன் வெளியிடவில்லை. அதைப் படித்ததும் பிரதாபனுக்கு ஒரேகோபம். பாகவதனுக்கு அரண்மனையில் மீண்டும் வேலை கிடைத்தது.

# 23

## எதிர்பாராதது

விபாவின் உள்ளம் சிதைவுண்டு கிடந்தது. எதிர் காலத்தில், வறண்ட ஏமாற்றம் ஒன்று தன் வாழ்வின் சுகத்தை எல்லாம் விழுங்கக் காத்திருப்பது போலவே அவளுக்குத் தோன்றியது. அவளுடைய தலைவிதி அவளை வாட்டி எடுத்தது. படுக்கையில் தனியாகக் கிடப்பாள். அந்த வேளையில் அவள் பக்கத்தில் எவருமே இல்லை. விபா விம்மி அழுதாள். "நான் என்ன செய்தேன்? உங்களுக்கு இழைத்த தீங்கென்ன? என்னை ஏன் துறந்தீர் கள்?" என்று அவள் தலையணையில் முகத்தைப் புதைத் துக்கொண்டு அழுதாள். "கடிதமுமில்லை; அழைத்துச் செல்ல ஆட்களும் வரவில்லை. நான் என்ன செய்வேன்? மார்பு வெடித்துப் போகிறது. நாளெல்லாம் மனம் அடித்துக்கொள்ள வீட்டில் கிடக்கிறேன். உங்களைப்பற்றி எவரும் வாய்கூடத் திறப்பதில்லை. என் காலம் எப்படித் தான் கழியுமோ?" என்று அவள் விம்மினாள். இப்படிப் பல நாட்கள் கழிந்தன. யாரும் கவனியாமல், நிழலைப்போல் உலாவினாள் விபா.

ஒரு நாள் காலையில் ராமமோகனன் வந்து, "உனக்கு நல்லதுண்டாகட்டும், அம்மா!" என்றான். அவனைக் கண்ட தும் விபா ஒன்றும் தோன்றாமல் நின்றாள். அவளுடைய விழிகளில் நீர் ஊறியது. "மோகன்! நீ வந்தாயா?" என்றாள்.

"ஆமாம் அம்மா. என்னை மறந்துவிட்டாள் என்று தோன்றியது. அதனால்தான் நினைவூட்ட வந்தேன்."

விபா எவ்வளவோ விஷயங்கள் அவனைக் கேட்க வேண்டுமென்று துடித்தாள். ஆனால் கூச்சமிகுதியால்

வாய்கூடத் திறக்க முடியவில்லை. ஆனால் தெரிந்துகொள்ள மட்டும் அவள் உயிர் துடித்தது.

ராமமோகனன் விபாவின் முகத்தை நோக்கி, "ஏன் அம்மா, உன் முகம் வாடிக்கிடக்கிறது? உன் கண்களில் ஏன் வாட்டம்? சிரிப்புமில்லை; மலர்ச்சியுமில்லை. தலையும் விரிகோலமாகக் கிடக்கிறது. வா அம்மா, எங்கள் வீட்டுக்கு வா. உன்னிடம் அக்கறை எடுத்துக்கொள்ள இங்கு எவருமே இல்லையா?" என்றான்.

விபா மங்கலாகச் சிரித்தாள்; ஆனால் அதுவும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மறைந்தது. வாடிய கன்னங்களில் விழிநீர் உருண்டது; ஓயவில்லை. வெகு நாட்களாக ஆதரவின்றி இருந்தபின், இன்று கேட்பார் ஏற்படவும், அவளுடைய உள்ளத்தில் பிணக்குத் தலை தூக்கியது; அவள் அழுதுவிட்டாள். இத்தனை நாட்கள் பொறுத்து நினைவு வந்ததா?

ராமமோகனனால் இருக்க முடியவில்லை. அவனும் அழுதான். பின்னர், "இதென்ன அம்மா! நீ சிரித்துக்கொண்டே என் வீட்டுக்கு வா. கண்களைத் துடைத்துக்கொள்" என்றான்.

மருமகன் தன் பெண்ணைத் தள்ளிவிடுவானோ என்று ராணிக்கு உள்ளூறப் பயம் இருந்தது. ராமமோகனன் விபாவை அழைத்துச் செல்ல வந்த விஷயம் தெரிந்து, அவள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். ராமமோகனனிடம் அவள் மருமகனின் சுக க்ஷேமங்களை விசாரித்தாள். அவனுக்குத் திருப்தியாக உணவு பரிமாறி அவன் சொன்ன விஷயங்களைக் கேட்டாள். இப்படி அன்றெல்லாம் ஆனந்தமாகவே பொழுது கழிந்தது.

மறுநாள் புறப்படுவதற்கு நன்றாக இருந்தது. காலையிலேயே விபாவை அனுப்பத் தீர்மானம் செய்தாள் அரசி. பிரதாபனும் இதற்குக் குறுக்குச் சொல்லவில்லை.

பிரயாணத்துக்கு ஏற்பாடுகள் எல்லாம் தயாரானதும் விபா உதயாதித்தியனிடம் சென்ருள். உதயன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான்.

விபாவைக் கண்டதும் உதயன் திடுக்கிட்டு, "விபா! நீ போகிருயா! நல்லது, சுகமாக இரு, அம்மா. லட்சுமி போல் உன் புக்ககத்தில் ஒளி கொடுத்திரு, அம்மா. இது தான் உன் அண்ணன் தரும் ஆசி" என்ருன்.

விபா உதயனுடைய காலடியில் விழுந்து அழுதாள். உதயனுடைய கண்களிலும் நீர் துளித்தது. விபாவின் தலையில் கை வைத்து அவன், "ஏன் அழுகிருய்? உனக்கு இங்கே என்ன சுகம் இருக்கிறது? எங்கும் வேதனையும் துயரமுந்தான். இந்தச் சிறையை விட்டு வெளியேறினுல் நீ பிழைப்பாய்" என்ருன்.

விபா எழுந்தபோது உதயன், "சென்று வா! விபா! புக்ககம் சென்று எங்களை ஒரேயடியாக மறந்துவிடாதே. நடு நடுவே விஷயத்தைத் தெரிவியம்மா" என்ருன்

விபா நேரே ராமமோகனனிடம் சென்று, "இப்போது என்னுல் வருவது முடியாது" என்ருள்.

ராமமோகனன் வியப்புடன், "அதென்ன, அம்மா!" என்ருன்.

"இல்லை. என்னுல் முடியாது. அண்ணுவைத் தனியே விட்டு என்னுல் வரவே முடியாது. என்னுல்தான் அவருக்கு இத்தனை கஷ்டம். நான் இன்று அவரை விட்டுச் சுகம் அநுபவிப்பதா? அவர் மனத்தில் எவ்வளவு துயரம் குடி கொண்டிருக்கும் வரையிலும் நானும் அவரோடேயே இருப்பேன். என்னைப் போல் அவரைக் கவனிக்க இங்கு யார் இருக்கிருர்கள்?" என்று விபா விம்மிவிம்மி அழுதாள்.

அந்தப்புரத்தில் ஒரு கலவரம் மூண்டது. அரசி விபாவைத் திட்டினுள்; எவ்வளவோ பயம் காட்டினுள். ஆனுல் விபா எதற்கும் இணங்கவில்லை.

கடைசியில் அரசி வெறுப்பும் கோபமும் மேலிட்டு அழுதாள். "இப்படியும் ஒரு பெண் உண்டா?" என்று அவள் அரசனிடம் சொன்னபோது, அவன் நிதானமாக, "நல்லது. அவளுக்கு இஷ்டமில்லை என்றால் போக வேண்டாமே" என்றான்.

அரசி வாயடைத்துப் போனாள். அவள் கடைசியில் கைவிரித்து, "உங்கள் இஷ்டம்! இனி நான் எதிலும் தலையிடப் போகிறதில்லை" என்றாள்.

உதயாதித்தியன் விஷயங்கள் தெரிந்ததும் விபாவிடம் வந்து எவ்வளவோ எடுத்துக் கூறினான். அவள் அழுதாளே ஒழிய, அவன் சொல்வது எதையும் புரிந்து கொள்ளவில்லை.

ராமமோகனன் பெருமூச்சுடன் வந்து, "நான் போகிறேன், அம்மா. மகாராஜாவிடம் என்ன சொல்வது?" என்று கேட்டான்.

விபா ஒன்றும் தோன்றாமல் கம்மென்று நின்றாள்.

"நான் வருகிறேன்" என்று ராமமோகனன் வணங்கி விட்டு எழுந்தான். விபா துயரம் மேலிட்டு அழுதாள். "மோகன்!" என்றாள். மோகன் திரும்பினான். "என்ன அம்மா?" என்றான்.

"மகாராஜாவிடம் சொல். அவர் என்னை மன்னிக்கட்டும். அவராக அழைத்தும் வர முடியாதது என் துரதிருஷ்டந்தான்."

"அப்படியே, அம்மா!" என்று வறண்ட குரலில் சொல்லிவிட்டு அவன் விடை பெற்றுச் சென்றான். விபாவின் நிலைமை அவனுக்கு விளங்கவில்லை. இதை நினைத்து நினைத்து அவள் உள்ளம் அலை பாய்ந்தது. உள்ளம் விரும்பும் இடத்துக்குச் செல்ல அவளால் முடியவில்லை. தவிரவும், அன்பு மிகுந்த ராமமோகனனும் ரோஷத்துடன் சென்றான். அவள் உள்ளம் பட்ட பாடு ஈசனுக்குத்தான் வெளிச்சம்!

விபா தங்கிவிட்டாள். கண்களைத் துடைத்துக் கொண்டு, மனத்தை வேதனைவாட்ட, அண்ணனுடனேயே அவள் இருந்தாள். வற்றி உலர்ந்த நிழல்போல் அவள் வீட்டுக் காரியங்களைச் செய்தாள். உதயன் ஆதரவாக அவளிடம் பேசினால், தலை குனிந்து சற்றுச் சிரிப்பாள். மாலை வேளைகளில் உதயனுடைய காலருகில் உட்கார்ந்து, அவனுடன் பேச முயலுவாள். அரசி திட்டும்போது நின்று கேட்பாள். எல்லாம் ஓய்ந்தபின் மேகத்துணுக்குப் போல் மங்கிய முகத்துடன் நகர்ந்து செல்வது வழக்கம். யாராவது அவளுடைய மோவாயைத் தொட்டு, "ஏன், விபா, நாளுக்கு நாள் இப்படி இளைத்துப் போகிறாய்?" என்று விசாரித்தால், பதில் பேசாமல் மெல்லச் சிரிப்பாள்.

இந்தச் சமயத்தில்தான் பாகவதன் கள்ளப் பத்திரத்தை அரசனிடம் காட்டினான். அரசன் கொதித்து, உடனே உதயனைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டான்.

"மகாராஜா! இளவரசரா இப்படிச் செய்வார்? இதைக் கேட்பவர்கள்கூட நாக்கைக் கடித்து, அப்படிச் சொல்வதும் பாவம் என்பார்களே! இது நம்பத் தகாத விஷயம்" என்றார் மந்திரி.

"எனக்குந்தான் நம்பிக்கை இல்லை. ஆனால் அவன் சிறையில் இருப்பதில் என்ன தவறு? கஷ்டப்படுத்தாமல் இருந்தால் போகிறது. ரகசியமாக அவன் எதுவும் செய்யாதபடி பாராக்காரரை ஏற்பாடு செய்தால் போகிறது" என்றான் பிரதாபன்.

# 24

## மானபங்கம்

ராமமோகனன் தனியனாகச்சந்திரத்வீபத்துக்குவந்து அரசன் முன் கைகூப்பி நின்றபோது, ராமசந்திர ராயின் உடல் கொதித்தது. விபா வந்தால், பிரதாபனைப்பற்றி இகழ்ந்து, பழி வாங்குவது என்று அவன் நிச்சயம் செய்து கொண்டிருந்தான். என்ன சொல்லுவது, எப்படிச் சொல்லுவது, எப்போது சொல்லுவது என்றெல்லாங்கூட அவன் தயாராக இருந்தான். ராமசந்திர ராய் முரடனல்ல; விபாவை வருத்தும் எண்ணம் அவனுக்கு இல்லை; ஆனால் தகப்பனுடைய முட்டாள்தனத்தைப்பற்றி அவள் எண்ணிக் கூசும்படி வைக்க வேண்டும் என்பதே அவனுடைய பேராவல். விபா வருவதற்குத் தடை நேர லாம் என்ற எண்ணமே இல்லை. இந்தச் சமயத்தில் ராம மோகனன் ஒன்றியாக வரவே அவன் வியப்புடன், "என்ன, ராமமோகன்?" என்றான்.

"எல்லாம் பலனற்றுவிட்டது, மகாராஜா!"

"அனுப்பவில்லையா?" என்று அரசன் கேட்டான்.

"இல்லை, அரசே! நான் கெட்ட வேளையில் புறப்பட் டேன்."

அரசனுக்குப் பொல்லாத கோபம் வந்தது. "உன்னை யாரடா போகச் சொன்னது? வேண்டாமென்று எத்தனை தடவை சொன்னேன்! மார்பைப் பார்த்துக்கொண்டு போனாயே அன்று!" என்றான்.

மோகனன் தன் தலையைத் தொட்டு மங்கிய குரலில் "எல்லாம் என் தலைவிதி, அரசே!" என்றான்.

அரசன் பின்னும் கோபமாக, "ராமசந்திர ராய்க்கு இதனால் அவமானம் அல்லவா! நீஎன் பெயரைச் சொல்லிக் கேட்டாய். பிரதாபன் அனுப்பவில்லை. இத்தனை பெரிய

அவமானம் இதுவரை என் வம்சத்தில் ஏற்பட்டதில்லை" என்றான்.

மோகனன் சற்றுக் கர்வமாக, "அப்படிச் சொல்லாதீர்கள்! பிரதாபன் அனுப்ப மறுத்தால் நான் பலவந்தமாக அழைத்து வந்திருப்பேன். அப்படித்தான் உங்களிடம் சொல்லிவிட்டுச் சென்றேன். அரசே! உங்கள் கட்டளையை நிறைவேற்றச் சென்ற நான் பிரதாபனுக்கா அஞ்சுவேன்? அவன் அரசனென்றாலும், என் எஜமானனல்லவே!" என்றான்.

"பின் ஏன் இப்படி?"

ராமமோகனன்வெகுநேரம் கம்மென்றிருந்தான். அவன் கண்களில் நீர் அரும்பியது.

"மோகன், சொல் சீக்கிரம்" என்று பொறுமையை இழந்து கேட்டான் அரசன்.

"அரசே!" என்று கை கூப்பினான் மோகனன்.

"என்ன, சொல்."

"அரசே! என் தாய் வர விரும்பவில்லை" என்றபோது அவன் விழிகளில் நீர் உதிர்ந்தது. குழந்தையின் பிணக்கினால் உண்டான வேதனைக் கண்ணீர்தானே அது! 'நான் அம்மாவின் மேலிருந்த நம்பிக்கையால் மார்பைத் தட்டிக்கொண்டு சென்றேன். அவள் வரவில்லை; என் மரியாதையும் நிலைக்கவில்லை' என்பதுதான் அதன் அர்த்தம்.

அரசன் அதைக் கேட்டதும் கண்கள் சிவக்க எழுந்து நின்றான். "ஓகோ! அவள் வர விரும்பவில்லையா? வெளியே போ! என் எதிரே நிற்காதே" என்றான்.

ராமமோகனன் வாய் திறக்காமல் வெளியேசென்றான். தன் குற்றம் அவனுக்குத் தெரியும். இதற்கு ஏற்ற தண்டனை பெறுவது நியாயந்தானே!

இதற்கு எந்த விதமாகப் பழி வாங்குவது என்று அரசனுக்குத் தெரியவில்லை. பிரதாபனையும் ஒன்றும்

செய்ய முடியாது. விபாவும் கைக்குக் கிட்டவில்லை. அவன் ஒன்றும் தோன்றாமல் குறுக்கும் நெடுக்குமாக உலாவினான்.

இரண்டே நாட்களில் இந்த விஷயம் ஊரெங்கும் பரவியது. இதற்குப் பழி வாங்காவிட்டால் மானம் போகும் நிலை வந்துவிட்டது. குடிகளுங்கூடப் பழி வாங்கத் துடித்தனர். "எங்கள் ராஜாவுக்கு அல்லவா அவமானம்!" என்றனர். பழி வாங்கும் எண்ணம் ஏற்கனவே அரசனுடைய ரத்தத்தில் ஊறியிருந்தது. அதோடு, பதிலுக்குப் பதில் செய்யாவிட்டால், குடிகளும் ரமாயியும் என்ன எண்ணிக்கொள்வார்களோ என்ற ஐயமும் பிறந்துவிட்டது. இதைப்பற்றி ரமாயி இன்னொருத்தரிடம் கேலி செய்வதாக எண்ணும்போது அரசன் மனம் பரபரப்படைந்தது.

ஒரு நாள் சபையில் மந்திரி, "அரசே! நீங்கள் இன்னும் ஒரு விவாகம் செய்துகொள்ளுங்கள்" என்றான்.

"பிரதாபனுடைய பெண், தன் அண்ணனிடமே இருக்கட்டும்" என்றான் ரமாயி.

அரசன் ரமாயியை நோக்கிச் சிரித்தான்.

அரசன் சிரிப்பது கண்டு சபையில் எல்லோரும் சிரித்தனர். பர்னாண்டிஸ் மட்டும் வெறுப்புற்றான்— ராமசந்திர ராயைப் போன்றவர் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள மட்டும் எண்ணினார்களே தவிர, மரியாதை இன்னதென்பது அவர்களுக்குத் தெரியவில்லையே என்றுதான்.

திவான், "மந்திரி சொல்வது மிகவும் சரி. அப்போதுதான் பிரதாபனையும் அவன் பெண்ணையும் அடக்கியது போலாகும்" என்றான்.

"இந்தச் சுப காரியத்தில் தங்கள் மாமனார் அவர்களுக்கு ஓர் அழைப்பு அனுப்ப மறக்கவேண்டாம். இராவிட்டால் அவருக்கு வருத்தம் ஏற்படலாம்" என்று ரமாயி கண் சிமிட்டவும், சபையோர் கொல்லென்று சிரித்தனர்.

இந்த வார்த்தை காதில் பட்டிராத பேர்வழிகளுங்கூடச் சிரிக்காமல் இல்லை.

"பெண்ணை அழைத்து வரும்போது சுமங்கலிகளிடையே தங்கள் மாமியாரையும் கூப்பிடவேண்டும். பிரதாபனுடைய பெண்ணுக்கு இனிப்புப் பட்சணங்களுடன் இரண்டு அழகிய பெண்களையும் அனுப்பி வைக்கலாம்" என்று ரமாயி மேலும் சொன்னான்.

அரசனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. சபையோர்கள் துணியால் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தனர். பர்னண்டிஸ்மட்டும வெறுப்புத் தாங்காமல், எவரும் அறியாமல் வெளியே சென்றான்.

திவான் வேடிக்கையாகப் பேச, "மிஷ்டான்னம் இதரே ஜனா: (இனிப்பு மற்றவர்க்கு) என்று எல்லாவற்றையும் யசோஹருக்கே செலவழித்து விடவேண்டாம்! சந்திரத்வீபத்தில் தின்பதற்கு ஆள் இல்லையா?" என்றான்.

இதைக் கேட்டுச் சபையில் எவரும் சிரிக்கவில்லை. அரசன் ஆழ்ந்து ஹுக்கா இழுத்தான். ரமாயி வாயடைத்துப் போய்த் திவானை நோக்கினான். ஒரு மந்திரி குன்றிய குரலில், "அதென்ன திவான்ஜி! அரசரின் கல்யாணத்தில் தின்பண்டங்களுக்கு அத்தனை குறைச்சலா?" என்று கேட்டதும், தலையைச் சொறிந்து கொண்டான்.

கல்யாணப் பேச்சு நிச்சயமாகிவிட்டது.



# 25

## சிறையில்

உதயாதித்தியனை வைத்திருந்த இடம் சிறைச்சாலை அல்ல; அரண்மனையை ஒட்டிய ஒரு சிறு அறைதான். அதற்கு இடப்புறம் ராஜவீதி. கீழண்டைப் பக்கம் உயரமான சுவர் இருந்தது. அறையின் சுவரில் சிறு சாளரம் ஒன்றின் மூலம், வானமும், தொலைவில் சிவன் கோயிலின் உச்சியும் மூங்கில் புதர்களும் தெரிந்தன. சுவரின் மேல் காவலாளிகள் ஓயாது உலாவினர்கள். உதயன் சிறையினுள் நுழைந்தபோது அந்தி வேளை. அவன் சாளரத்தின் அருகில் முகத்தை வைத்துக்கொண்டு தரையில் உட்கார்ந்தான். மழைக்காலம்; வானத்தில் மேகம் மூடி இருந்தது. தெருவெங்கும் வெள்ளமாகப் பெருகியது நீர். நிச்சப்தமான வேளையில் இரண்டொரு வழிப்போக்கரின் கால் ஓசை மட்டும் தப் தப்பென்று கேட்டது. சிறைச்சாலையின் இதயத் துடிப்புப் போல் காவலாளிகளின் ஓசை சுவரின் மேல் கேட்டது. இரவு ஒவ்வொரு மணியாகக் கழிந்தது. தொலைவிலிருந்து நடுநடுவே கூப்பாடு வரும். வானத்தில் ஒரு தாரகைகூடத் தலைகாட்டவில்லை. மூங்கில் புதர் எங்கும் மின்மினிகளின் ஒளி நிறைந்திருந்தது. அன்றிரவு முழுவதும் உதயாதித்தியன் தூங்கவே இல்லை. சாளரத்தின் அருகில் உட்கார்ந்து காவலாளிகளின் காலடி ஓசையைக் கேட்கலானுன்.

விபா அன்று சாயங்காலம் அந்தப்புரத் தோட்டத்துக்குச் சென்ருள். அரண்மனையில் கும்பல் அதிகமல்லவா! அத்தை பாட்டிகள், வேலையாட்கள் நடமாடுவதால், ஒவ்வொரு கண்ணீர்த் துளிக்கும் காரணம் சொல்லியாக வேண்டும். தவிர, அவர்கள் தங்களுடைய எண்ணங்

களையும் வெளியிடத் தயங்கமாட்டார்கள். அதனால்தான் விபா தோட்டத்துக்கு ஓடி வந்துவிட்டாள். கதிரவன் அன்று முழுவதும் தலையே தூக்கவில்லை; முகிலிடைப் பிறந்து அதன் இடுக்கிலேயே மறைந்தான். அந்தி மங்குவதும் இருட்டுவதும் தெரியவே இல்லை. அந்தி வேளையில் ஒரு தங்கக் கீற்று மேலைவானில் தலை காட்டிச் சற்று நேரத்துக்கெல்லாம் இருள் பரந்தது. திக்குகள் யாவற்றிலும் கருமை சூழ்ந்தது. மரங்களுக்கிடையே இடைவெளியே தெரியவில்லை. உலகமெங்கும் தன் கால்களைப் பரப்பிக் கொண்டு நின்றான் மையிருளரக்கன். அரண்மனை விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்தன. விபா மரத்தடியிலேயே உட்கார்ந்திருந்தாள். அவள் சுபாவத்திலேயே பயங்கொள்ளி. ஆனால் அன்று அவளது பயம் எங்கேயோ ஓடிவிட்டது. இருள் அதிகமாக ஆக உலகை யாரோ தன்னிடமிருந்து பிடுங்கிச் செல்வதுபோல் அவளுக்குத் தோன்றியது. உலகத்தின் அமைதி, சுகம் இவைகளை அவளால் அநுபவிக்க முடியவில்லை. ஆழம் காணாத இருட் கடலிடையே அவள் விழுந்து கிடந்தாள். கொஞ்சங் கொஞ்சமாகத் தலைக்குமேல் இருள் கனத்துக்கொண்டு வந்தது. அவள் நீரினுள் மூழ்கிக்கொண்டே போனாள். காலின்கீழ்த் தரை கிட்டவில்லை. பிடிப்போ, ஆதாரமோ உலகில் அவளுக்கு எதுவுமில்லை. தனக்கும் உலகத்துக்கும் இடையே இருந்த தொடர்பு அற்றுக்கொண்டு வருவதாகவே அவளுக்குத் தோன்றியது. மனம் மட்டும் பின்னால் விட்டு வந்தவைகளுக்காக ஏங்கியது. அதன் ஒளி விளையாட்டுக்கள், உலகின் கொண்டாட்டம் எல்லாம் அவளுக்குத் தெரிந்தன. ஆனால் அவளை மட்டும் எவரோ கெட்டியாகப் பிடித்து வைத்துக்கொண் டிருந்தார்கள். இதயத்தைப் பிய்த்தெறிந்தாலும் அவளை விடமாட்டார்களோ என்று தோன்றியது. உலகைக் கவிந்த காரிருளில் பிரம்மதேவன் விபாவின் விதியைக் குறித்திருந்தானோ

என்னவோ! அதைத்தான் அவள் தனிமையில் படித்துக் கொண்டு நின்றாளோ! அவள் அழவுமில்லை; அசையவு மில்லை. கண்கள் ஒரே இடத்தில் நிலைத்து நின்றன. காற்று ஊவென்று குழந்தைபோல் அழுதது. மரங்களின் இலைகள் ஆ வென்று அலறின. தொலைவில், மனத்துக் கும் எட்டாத தூரத்தில், எங்கேயோ கடற்கரையில் தன் அன்பையும் ஆதரவையும் விரும்பிச் சிறு குழந்தைகள் கை நீட்டி அழுவதுபோல் விபாவுக்குத் தோன்றியது. அவைகள் விபாவின் மடியில் விளையாட ஏங்கின. ஆனால் வழி தெரியவில்லை. அந்தக் குழவிகளின் ஓலம் லட்சக் கணக்கான கல் தொலைவைக் கடந்து விபாவின் காதில் வந்து விழுந்ததோ! "யாரப்பா! நீங்கள் யார்? எங்கே இருக்கிறீர்கள்?" என்று விபாவின் உள்ளமும் அவர் களைத் தேடிச் சென்றது. ஆண்டுகள்பாட்டில் கழிந் தனவே ஒழிய, அவள் கண்களுக்கு எவரும் தென்பட வில்லை. காற்றும் ஒலியும், ஒளி நிழலும் அற்ற கனத்த இருளிடையே நின்று, சற்று நேரத்துக்கொருதரம் அழு குரலைக் கேட்டாள் விபா. காற்று மட்டும் தொலைவில் ஊவென்று வீசியது.

இரவெல்லாம் உறக்கமின்றியே கழிந்தது. மறு நாள் விபா சிறையில் உதயனைக் காண வெகுவாகப் பாடுபட் டாள். அவளுக்கு அங்கே செல்ல அநுமதி இல்லை. அன் றெல்லாம் அவள் அழுதாள். தானே பிரதாபனிடம் சென்று, அவனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு ஒரு வாறாக அநுமதி பெற்றாள். மறுநாள் விடிந்ததும் விடியா ததுமாக விபா சிறைச்சாலைக்குச் சென்றாள். உதயன் படுக்கவே இல்லை. தரையில் உட்கார்ந்து சாளரத்தில் தலை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அதைக் கண்டதும் விபாவின் உள்ளம் துடித்தது. அவள் மிகவும் கஷ்டத் துடன் அழுகையை அடக்கிக்கொண்டு மெல்ல அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். கொஞ்சங் கொஞ்சமாகப்

பொழுது விடிந்தது. அருகிலிருந்த தோப்பில் புள்ளினம் தம் பாடலைத் தொடங்கின. வழிப்போக்கர் ராஜ வீதியில் உதயகீதம் பாட, இரண்டு இரவுகள் கண் விழித்துக் களைத்த காவலாளியும் பகலின் ஒளியைக் கண்டு இன்னிசையைத் தொடங்கினான். கோயிலின் மணியும் சங்கொலியும் கேட்டன. உதயன் திடுக்கிட்டெழுந்து விபாவைக் கண்டதும், "இதென்ன விபா! இவ்வளவு சீக்கிரமாக-? இங்கு எங்கே இருக்கிறேன்?" என்று சுற்று முற்றும் பார்த்தான். மறுகணமே விஷயம் புரிந்ததும் விபாவை நோக்கிப் பெருமூச்சுவிட்டு, "விபா? நீ வந்தாயா! நேற்றெல்லாம் உன்னைப் பார்க்கவில்லை. ஒரு வேளை இனி மேல் உங்களை யெல்லாம் காணவே முடியாதோ என்று தோன்றியது" என்றான்.

விபா அவனுடைய கண்களைத் துடைத்து, "அண்ணா! ஏன் தரையில் உட்கார்ந்திருக்கிறாய்? கட்டிலில் படுக்கை இருக்கிறதே! ஒரு முறைகூட நீ அங்கு உட்காரவில்லை என்று தோன்றுகிறது. இரண்டு நாட்களாகத் தரையிலேயேதான் உட்காருகிறாயா?" என்று அழத் தொடங்கினாள்.

"விபா! கட்டிலில் உட்கார்ந்தால் வானம் தெரியவில்லையே! சாளரத்தின் மூலம் பறவைகள் வானத்தில் பறப்பதைக் காண்கிறேன். ஒரு நாள் என் தளையும் சிதையும். நானும் அவைகளைப்போல் எல்லையில்லாக் களிப்பில் மனமாரத் துளைவேன் என்று எனக்குத் தோன்றும். சாளரத்தை விட்டு நகர்ந்தாலோ நாலு பக்கமும் இருண்டு விடுகிறது. 'எனக்கு ஒருநாள் விடுதலை உண்டு. வாழ்வின் தளைகள் விலகி, இந்தச் சிறையைவிட்டு வெளியேறுவேன்' என்ற விஷயமே மறந்து போகிறது. விபா, இதோ இரண்டு முழம் தரை; இங்கு வந்தால், 'நான் சுதந்திர மனிதன். எந்த அரசனும் என்னைச் சிறைப் பிடிக்க முடியாது'

என்று தோன்றுகிறது. ஆனால் இதோ இந்தப் படுக்கை— இதுவே எனக்குச் சிறையென்று தோன்றுகிறது."

விபாவைக் கண்டதும் உதயனுடைய மனம் களிப் புற்றது. சிறையின் கதவுகள் எல்லாம் திறந்து விட்டாற் போலவே அவனுக்கு இருந்தது. அன்று விபாவைத் தன் பக்கலில் உட்கார வைத்துக்கொண்டு பேசியதுபோல், சிறை செல்லுமுன் அவன் வார்த்தை யாடினதில்லை. விபாவும் அவனுடைய மனத்தைப் புரிந்து கொண்டாள். ஓர் உயிரின் களிப்பு, அலைகளாக எவ்வாறு இன்னோர் உள்ளத்துக்குப் பரவுகிறதோ தெரியாது! விபா வின் உள்ளம் சிலிர்த்தது. பல நாட்களாக அவள் ஏங்கி யிருந்த எண்ணம் கைகூடியது. தன்னாலும் உதயனுக் குக் களிப்பூட்ட முடியும் என்று அவளுக்குப் புரிந்தது. உள்ளத்திலும் ஒரு பலம் ஏற்பட்டது. இத்தனை நாட் களாகக் கரைகாணாத இருளில் உழன்றாள் அவள்; ஏமாற்றமும் வருத்தமும் அவளைச் சூழ்ந்து நின்றன. தன்னம்பிக்கையே அவளுக்கு இராமல் போயிற்று. ஓயாமல் உதயனுக்குப் பணிவிடை செய்வாள். ஆனால் அவனை மகிழ்விக்க முடியுமென்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை. திடீரென்று அதற்கு ஒரு வழி பிறக்கவும், அவள் தன் சோர்வுகளை எல்லாம் மறந்தாள். விடியலின் பனிபோல் விழிகளில் நீர் அரும்பியது. அவளுடைய இதழ்களில் இளங் கதிரவனுடைய ஒளிபோல் மாசற்ற புன்னகை அரும்பியது.

விபா வர வரச் சிறைவாசி யாகிவிட்டாள். சாளரத்தின் மூலம் காலையின் முதல் கிரணம் நுழையும் போது சிறையில் விபாவின் அழகிய முகம் தென்படும். வேலைக்காரர்களை அவள் எதுவும் செய்யவிடுவதில்லை. தன் கையால் உணவு கொணர்ந்து தருவாள். தானே உதயனுக்குப் படுக்கை போடுவாள். கிளி ஒன்றைக் கூண் டோடு சிறைச்சாலையில் தொங்கவிட்டது மட்டுமன்றிக்

காலையிலும் மாலையிலும் புது மலர்களைப் பறித்து வருவாள். தன்னிடம் இருந்த மகாபாரதத்தை உதயன் விபாவுக்குப் படித்துக் காட்டுவான். ஆனால் அவனுக்கு உள்ளூற ஒரு கஷ்டம் இருக்கத்தான் இருந்தது. அவன் மூழ்கிப் போவது நிச்சயம். ஆனால், சுகத்தை அநுபவிக்க முடியாமல் அரை குறையான ஆசைகளுடன் ஏன் விபாவையும் நாசமடிக்கவேண்டும்? "நீ போ, விபா" என்று சொல்லத் தோன்றும். ஆனால் அவள் விடியலின் ஒளி யோடு அவன் அருகில் உட்கார்ந்து ஆதரவுடன் பேசுகை யில், அவன் எவ்வாறு வாய்விட்டு, "என்னைப் பார்க்க வராதே! நீ போய்விடு" என்று சொல்வான்? நாளைக்குச் சொல்வோம் என்று ஒவ்வொரு நாளும் எண்ணுவான். ஆனால் சொல்லும் நாள் மட்டும் வரவே இல்லை. கடைசி யில் அவன் மன உறுதியுடன், "விபா! நீ இங்கு இராதே! நீ புக்ககம் போகாவிட்டால் எனக்கு மன அமைதி இராது. தினமும் அந்தி இருளில் யாரோ என்னிடம், விபாவுக்கு ஆபத்து நெருங்குகிறது என எச்சரிப்பதுபோல் இருக் கிறது. விபா! என்னை நீ விட்டுச் சீக்கிரம் ஓடு. நான் சனி; என்னைக் கண்டாலே நாலுபக்கத்திலிருந்தும்விபத்துக்கள் வந்து குவிகின்றன. நீ உன் புக்ககம்சென்றுவிடு. நடுநடுவே செய்தி சொல்லி அனுப்பினாலே நான் சுகப்படுவேன்" என்றான்.

விபா பதில் சொல்லாமல் கம்மென்று உட்கார்ந்திருந் தாள்.

உதயாதித்தியன் தலை குனிந்து விபாவின் முகத் தையே வெகுநேரம் உற்று நோக்கினான். அவனுடைய விழிகள் பலபலவென்று நீருகுத்தன. "நான் சிறையை விட்டு வெளியேறும் வரையில் விபா புக்ககம் செல்ல மாட்டாள். எப்படித்தான் நான் விடுதலை பெறுவது?' என்று அவன் ஏங்கினான்.

# 26

## கல்லும் கரையுமோ?

விபா சந்திரத்வீபத்துக்கு வராததற்குப் பிரதாபனுடைய கண்டிப்பும் உதயனுடைய சூழ்ச்சியுமே காரணம் என்று ராமசந்திர ராய் எண்ணினன். விபா தானுக வர மறுத்தாள் என்று எண்ணுவது அவனுக்கு மானக்கேடாகத் தோன்றியது. "பிரதாபன் என்னை அவமதிக்க எண்ணுகிருன்; ஆகவே, விபாவை அனுப்பமாட்டான். ஆனல், 'நான் உன் பெண்ணைத் தள்ளிவிட்டேன். அவளைச் சந்திரத்வீபத்துக்கு இனி அனுப்பவேண்டாம்' என்று பிரதாபனுக்கு ஒரு கடிதம் எழுதினல்தான் என்ன?" — இவ்வாறு நாலைந்து பேருடன் யோசித்து அவன் பிரதாபனுக்கு ஒரு கடிதம் எழுதினன், பிரதாபனுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதுவதென்ருல் துணிச்சல் வேண்டாமா? ராமசந்திரனுக்கு உள்ளூறப் பயமேதான். மலைச்சரிவில் வேகமாக ஓடிவரும்போது பயம் இருந்தாலும் நிற்கமுடியாததுபோல், அவனுக்கு ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. துணிச்சலான காரியம் ஒன்றில் இறங்கியபின் கடைசிவரையில் போகாமல் நிற்பது முடியாது. அவன் ராமமோகனனை அழைத்து, "இந்தக் கடிதத்தை யசோஹருக்கு எடுத்துச் செல்" என்ருன். "இல்லை, மகாராஜா! என்னல் முடியாது. என் அம்மாவைத் திரும்ப அழைக்கச் சொன்னல் போவேன். கடிதம் எடுத்துச் செல்வது என்னல் ஆகாது" என்று கைகூப்பினன் ராமமோகனன். அவனிடம் மேலே பேசாமல் அரசன், கிழவன் நயனசாந்திடம் கடிதத்தைக் கொடுத்தான்.

கடிதம் எடுத்துச் செல்லும்போது நயனசாந்துக்கு உள்ளூறப் பயமே. பிரதாபன் கடிதத்தைப் பிரிக்கும்

போது என்ன செய்வானே? வழியெல்லாம் யோசனை செய்தபின், அரசியிடம் கடிதத்தைத் தருவதுதான் சரி என்று முடிவு செய்தான். அரசியின் மனநிலை சரியாக இல்லை. விபாவைப்பற்றிய வேதனை; உதயனை எண்ணி மனவருத்தம்; குடும்பக் கவலைகள் வேறு அவளை வாட்டி எடுத்தன. நடுநடுவே அவள் ஒன்றும் தோன்றாமல் ஓவென்று அழுவாள். வீட்டு வேலைகளில் அவள் மனம் செல்லாது. இந்த நிலையில் நயனசாந்து அவளிடம் கடிதத்தைக் கொடுத்தான். அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. விபாவுக்குச் சொன்னால் அவள் உயிர் நிலையாது. அரசன் காதில் பட்டால் என்ன கேடு விளையுமோ! இந்த நிலையில் எவரிடமும் சொல்லி யோசனை கேட்காமல் இருந்தால் அரசி எப்படிப் பிழைப்பது? அவள் அழுதுகொண்டே பிரதாபனிடம் சென்றாள். "மகாராஜா! விபாவுக்கு ஏதாவது ஒரு வழி செய்யவேண்டுமே!" என்றாள்.

"ஏன்? என்ன வந்தது, சொல்?"

"அப்படி ஒன்றுமில்லை. விபாவை என்றைக்காவது புக்ககம் அனுப்பத்தானே வேண்டும்?"

"அது சரி; திடீரென்று உனக்கு இந்த நினைவு வரக் காரணம் என்ன?"

அரசி பயத்துடன், "நீங்கள் ஒன்று! நான் ஒன்றும் இல்லை என்றுதான் சொன்னேனே! ஏதாவது வந்தால்...?" என்றாள்.

"என்ன வரப்போகிறது?" என்று பிரதாபன் வெறுப்புடன் சொன்னான்.

"அவன் விபாவைத் தள்ளிவிட்டான் என்று வைத்துக்கொள்ளுங்கள்..."

பிரதாபனுக்குக் கடுங்கோபம் மூண்டது. அவனுடைய விழிகள் தீயைக் கக்கின.

அரசனுடைய தோற்றத்தைக் கண்டு அரசி கண்களைத் துடைத்துக்கொண்டாள். "அவன் அப்படி ஒன்றும் செய்யவில்லை. என்றைக்காவது செய்தால்...?" என்றாள்.

"அதற்கு ஏற்ற செயல் எனக்கும் தெரியும். இப்போது அதுபற்றி யோசிக்க நேரமில்லை."

"மகாராஜா! உங்கள் காலில் விழுகிறேன். என் பேச்சைக் கேளுங்கள். என் நெஞ்சம் கல்லாகியும் இன்னும் இருக்கிறதே! விபாவின் கதி என்ன? நீங்கள் கொடுத்த வேதனை எல்லாம் பொறுத்தேன். உதயன் என் செல்வம்!- அரசன் மகன்! அவனைச் சாதாரணக் கைதிபோல் வைத்திருக்கிறீர்கள். அவன் குற்றமற்றவன். அரச வேலையோ, குடிகளை அடக்கவோ அவனுக்குத் தெரியாது. புத்தி இல்லாதவன். அவனை எதற்காகச் சிறையிட வேண்டும்?" என்று அரசி உரக்க அழுதாள்.

பிரதாபன் வெறுப்புடன், "அதுபற்றி எத்தனையோ தடவை யோசித்தாகிவிட்டது. இனிமேல் அது வேண்டாம்" என்றான்.

அரசி தலையில் அடித்துக்கொண்டாள். "என் தலைவிதி! வேறென்ன? சொன்னால் கேட்பீர்களா? விபாவைப் பாருங்கள். யாரிடமும் ஒன்றும் சொல்வதில்லை. நாளுக்கு நாள் சுக்காகி உலர்ந்து போகிறாள். நிழல்போல் அலைகிறாளே தவிரப் பேசுவதேயில்லை. அவளுக்கு ஏதாவது ஒரு வழி செய்யுங்கள்" என்றாள்.

அரசன் பின்னும் வெறுப்படைவது கண்டு, அரசி மெல்ல எழுந்து சென்றாள்.



# 27

## கிழவர் கேட்ட செய்தி

இதன் நடுவிலே ஒரு நிகழ்ச்சி நடந்தது. உதயன் சிறைப்பட்டது கண்டு சீதாராமன் அலறினன். முதலில் அவன் நேராக ருக்மிணியின் குடிசைக்குச் சென்று அவளைக் கண்டபடி எல்லாம் திட்டி அடிக்கவும் சென்றான். "அடி மோசக்காரி! உன் வீட்டைக் கொளுத்திக் குட்டிச் சுவரடிப்பேன். என் இளவரசரை விடுதலை செய்யாவிட்டால் என் பெயர் சீதாராமனல்ல. இப்போது ராய்கர் போகிறேன். உன் முகத்தில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி ஊரை விட்டுத் துரத்திய பின்னரே சாப்பிடுவேன்" என்றான்.

ருக்மிணி கொஞ்ச நேரம் கண் கொட்டாமல் சீதாராமனையே நோக்கினள். அவளுடைய பற்கள் நறநறவென்று மோதிக்கொண்டன. முஷ்டிகளைக் குவித்துக்கொண்டாள்; புருவங்கள் சுளித்தன. விழிகளில் மின்னலாடியது. கை கால்கள் வெட வெடவென்று நடுங்கின. சீதாராமனை விழிகளால் பொசுக்கி விடுவாள்போலத் தோன்றியது. அதே கணத்தில் சீதாராமன் வெளியே சென்றுவிடவும், ருக்மிணி மெல்லப் பழைய நிலைக்கு வந்தாள். தொப்பென்று அவள் கீழே உட்கார்ந்தாள். "ஓகோ! உங்கள் இளவரசனா? அவனுக்கு ஆபத்து வரவே, அது உன் உடம்பில் குத்தியதாக்கும்! ஏன்? அவன் எனக்கு யாருமில்லையா! அட எரிமூஞ்சி! அவன் என் இளவரசனடா! அவனுக்கு நல்லது, கெட்டது எதுவும் என்னால்தான் செய்யமுடியும். உன் இளவரசனை நீ சிறையிலிருந்து விடுவிப்பாயா? எப்படி உன்னால் முடிகிறது, பார்க்கலாம்" என்று ருக்மிணி தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

சீதாராமன் அன்றைய தினமே ராய்கருக்குச் சென்றான்.

மாலை வேளை; வசந்தராய் மாளிகையின் வராந்தாவில் உட்கார்ந்திருந்தார். வயல்வெளிகளின் கோடியில் வாய்க்காலுக்கு அந்தக் கரையில் மாந்தோப்புக்குப் பின் மறைந்துகொண்டிருந்தான் பகலவன். வசந்தராயின் கையில் முன்போல் சிதார் இல்லை. மறையும் கதிரவனை நோக்கித் தமக்குள் அவர் முணுமுணுவென்று பாடிக்கொண்டார்.

"யானெனும் ஒருவனே இனியுளேன் பாக்கி;
யாவையும் போயின; இருப்பதும் பொய்யே!

ஏனென தன்பினர் இன்குரல் கேட்டிலன்?
எங்கே அவர்தாம்? எங்கே உள்ளார்?

வீணென தரற்றலோ? வினவுகி றேன்யான்?
விளம்பிடு அன்னாய்! விளம்பிடு நீயே!

யானென தென்றே இனியுரைத் திடவும்
ஏதும் இலையே? இவ்வாழ் வேதற்கோ?"

எதற்காகக் கிழவர் இப்படிப் பாடினாரோ தெரியாது. தாம் பாடுவதைக் கேட்க வேண்டியவர் இல்லை என்று தோன்றியதோ? பாட்டுத் தானாக வந்தது. ஆனால் அதில் அவ்வளவாக மனம் செல்லவில்லை. அவர் இன்னும் களிப்பை இழக்கவில்லை. ஆனால் அந்த வேளையில் அவர் ஆரத் தழுவிக்கொள்ள அலைபாயும் அவர்கள் எங்கே? 'ராய்கரின் பனைமரங்களுக்குமேல் மேகம் கவியும் வேளையில் நான் மனமகிழ்வுடன் அவர்களைக் காண யசோஹருக்கு ஓடுவேன். இனி அவர்களைக் காணவே முடியாதோ? இப்போது என் மனம் களிப்பில் ஆழ்ந்துள்ளது. ஆனால்......' —இவ்வாறு எண்ணித்தான் கிழவர் வசந்தராய் அன்று தம் பாட்டில் பாடிக்கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில் கான் சாகேப் வந்து அவரை வணங்கினான். அவனைக் கண்டதும் வசந்தராய், "கான் சாகேப், வா வா" என்று அவனை அணுகினார். "சாகேப்!

உன் முகம் ஏன் வாடிக் கிடக்கிறது? உடல்நிலை சுகந் தானே?" என்று கேட்டார்.

"உடலுக்கு என்ன, மகாராஜா! உங்கள் முகவாட்டம் கண்டு எனக்கு மன அமைதி இல்லை. 'இரவென்னும் யான் வேறென்றுமில்லை. தலையில் இருக்கிறது சந்திரன்; அத்துடன் யான் சிரிக்கிறேன். அதனுடனேயே மயங்கவும் செய்கிறேன்' என்று ஒரு பழமொழி உண்டு: மகாராஜா! நான் யார்? நீங்கள் சிரிக்காவிட்டால், எனக்கு மகிழ்ச்சி ஏது? எனக்கு இனிச் சுகமில்லை, ஜனாப்."

"அதென்ன, கான் சாகேப்! எனக்கு உடம்பு ஒன்று மில்லை. என்னைப் பார்த்து நானே சிரித்து மகிழ்கிறேனே. எனக்கு என்ன?" என்று வசந்தராய் பரபரப்புடன் கேட்டார்.

"மகாராஜா! முன்போல் நீங்கள் பாடவோ, சிதார் இசைக்கவோ இல்லையே?"

வசந்தராய் சற்றுக் கம்பீரமான குரலில், "என் பாட்டைக் கேட்பாயா? கான் சாகேப்!" என்று ஆரம்பித்தார்:

"யானெனும் ஒருவனே இனியுளேன் பாக்கி;
யாவையும் போயின; இருப்பதும் பொய்யே.''

"மகாராஜா! நீங்கள் ஏன் சிதார் வாசிப்பதில்லை? அது எங்கே?"

வசந்தராய் சற்றே சிரித்து, "சிதார் இருக்கிறது; ஆனால் அதன் தந்திகள்தாம் அறுந்துபோய்விட்டன. முன்போல் சுரங்கள் எழுவதில்லை" என்று மாந்தோப்பை நோக்கித் தம் தலையைத் தடவிக்கொண்டார்.

சற்றுப் பொறுத்து அவர், "கான் சாகேப்! நீ ஒரு பாட்டுப் பாடேன். " 'தாஜபே தாஜ், நஓபே நஓ' பாடேன்'' என்றார்.

கான்சாகேப் அதைப் பாடத் தொடங்கினான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம். இசை மயக்கத்தில் வசந்தராயினால்

உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவனோடு பாடத் தொடங்கினார். அவருடைய கைகள் பலமாகத் தாளம் போட்டன. அவர் திரும்பத் திரும்பப் பாடினார். சூரியன் மெல்ல மேலை வாயிலில் மறைந்தான். வானம் இருட்டிக்கொண்டு வந்தது. இடையர்கள் குழலிசைத்தவாறு வீடு திரும்பினர். இந்தச் சமயத்தில், "வெற்றி உண்டாகுக, மகாராஜாவுக்கு!" என்று சீதாராமன் அங்கே வந்து அவரை வணங்கினான். "சீதாராமா! உதயன் எப்படி இருக்கிறான்? விபா எங்கு இருக்கிறாள்? எல்லாரும் சுகந்தானே!" என்று வசந்தராய் பரபரப்புடன் கேட்டார்.

கான் சாகேப் வெளியே எழுந்து சென்றான். "ஒவ்வொன்றாகச் சொல்கிறேன், மகாராஜா" என்று சீதாராமன் உதயன் சிறைப்பட்டதுவரையில் சொல்லி நிறுத்தினான். அவன் கூறியது முற்றும் உண்மையல்ல. உதயன் சிறைப் பட்ட காரணத்தை அவன் சொல்லவில்லை.

வசந்தராய்க்கு இடி விழுந்ததுபோல் இருந்தது. அவர் சீதாராமனுடைய கையைப் பிடித்தார். புருவங்கள் நிமிர்ந்து, விழிகள் விரிந்தன. கண் இமையாமல் அவர் சீதாராமனையே உற்று நோக்கினார்.

"என்ன?"

"ஆம், மகாராஜா!"

"சீதாராம்!"

"மகாராஜா!"

"உதயன் எங்கு இருக்கிறான்?"

"சிறைச்சாலையில் தான்."

வசந்தராய் தலையைத் தடவிக் கொண்டார். உதயன் சிறையில் இருப்பதாக அவரால் நம்பவே முடியவில்லை. அவரால் அதைக் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை.

"சீதாராம்!"

"மகாராஜா!"

"அவன் என்ன செய்கிறான்?"

"என்ன செய்வார்? சிறையில்தான் கிடக்கிறார்."

"அவனை எல்லாருமாகக் கட்டி வைத்தார்களா?"

"ஆம்; மகாராஜா!"

"அவனை ஒரு தடவைகூட வெளி வர விடுவதில்லையா?"

"இல்லை, அரசே!"

"சிறையில் தனியாகக் கிடக்கிறானா?"

வசந்தராய் சீதாராமனைக் கேட்கவில்லை. தமக்குத் தாமே அவர் சொல்லிக்கொண்டு போனார். ஆனால் சீதாராமனுக்கு அது புரியவில்லை. "ஆம், மகாராஜா!" என்று அவன் பதில் அளித்தான்.

வசந்தராய் திடீரென்று, "என் அப்பனே! நீ என்னிடம் வா. உன்னை எவரும் புரிந்துகொள்ளவில்லை" என்றார்.



# 28

## கிழவர் சொன்ன புத்தி

வசந்தராய் எவருடைய சொல்லையும் கேளாமல் மறு நாளே யசோஹருக்குக் கிளம்பினர். யசோஹரில் நேரே அந்தப்புரத்துக்குச் சென்ருர். விபா திடீரென்று தாத்தா வைக் கண்டதும் என்னவோ போல் ஆனுள். கொஞ்ச நேரம் வரையில் அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. கண்களில் வியப்பும் இதழ்களில் சிரிப்பும் இருந்தனவே தவிர, வாயில் சொற்களோ உடலில் உணர்வோ இல்லை. கொஞ்ச நேரம் இப்படி இருந்தபின் அவள், அவரை வணங்கிப் பாததூளியை எடுத்துக் கொண்டாள். வசந்தராய் அவளையே கூர்ந்து நோக்கி, "விபா!" என்ருர். வேறு ஒன்றும் கேட்க அவரால் முடிய வில்லை. சீதாராமன் சொன்னது பொய்யாகவும் இருக்கலாம் என்ற சிறு நம்பிக்கை ஒன்று அவர் மனத்தில் இருந்தது. முழுவதையும் கேட்கப் போய் விபா பதில் சொல்லிவிட் டால் என்ன செய்வதென்ற பயமும் இருந்தது. விபா சட்டென்று பதில் சொல்லக் கூடாது என்பது அவர் எண்ணம். ஆகவே, அவர் தயக்கமும் பயமும் கலந்த குரலில், "விபா!" என்ருர். விபாவுக்கு இது புரிந்தது. ஆனுலும் அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அவ ளுடைய களிப்பு எங்கேயோ பறந்தோடியது. முன்பு தாத்தா வரும்போது உண்டாகும் நினைவெல்லாம் அவள் மனத்தில் எழுந்தன. அப்போது எவ்வளவுகொண்டாட்டம்! அவர் வந்ததாலே வீடுமலர்ச்சி பெறும். சுரமாவும்விபாவும் அவரைக் கேலி செய்து சிரிப்பார்கள். அண்ணு உதயன் முகமலர்வுடன் தாத்தாவின் பாட்டைக் கேட்பான். ஆனுல் இப்போது தாத்தா வந்தார்! ஆனுல் அங்கே எவரும்

இல்லை. இருண்ட அறையினுள் விபா மட்டுமே இருந்தாள். சுகமாக வாழ்ந்த குடும்பத்தின் சிதைந்த அங்கம்போல நின்ருள் விபா. தாத்தா வந்தால், களிப்பின் அலை பெருகும். சுரமாவின் அறை இன்று ஏன் இப்படிக் கிடக்கிறது? நிச்சப்தமும் இருளும் வெறிச்சென்ற சூனியமுமாக அல்லவா இருக்கிறது? அவரைக் கண்டாலே அந்த அறை அழும்போலத் தோன்றியது. வசந்தராய் ஏதோ ஓர் ஆறுதலுடன் அறையின் எதிரே போய் நின்ருர். கதவருகில் போய் உள்ளே தலையை நுழைத்து நாலு பக்கமும் நோக்கிய பின் மார்பு வெடித்து வர, "இந்த அறையில் யாருமே இல்லையா?" என்ருர்.

விபாவும் அழுதாள். "இல்லை, தாத்தா! யாருமில்லை" என்ருள். நிச்சப்தமான அறை, 'முன்பு இருந்தவர்கள் எவரும் இன்று இல்லை' என்று அலறுவது போலத் தோன்றியது.

வசந்தராய் வெகுநேரம் சும்மா இருந்தபின் கடைசியில் விபாவின் கையைப் பிடித்துக்கொண்டு மெல்லப் பாடத் தொடங்கினர்:

"யானெனும் ஒருவனே இனியுளேன் பாக்கி."

வசந்தராய் பிரதாபனிடம் சென்று மிகவும் கெஞ்சினர். "அப்பா, பிரதாபா! உதயனை ஏன் கஷ்டப்படுத்துகிருய்? அவன் உங்களுக்கு என்ன தீங்கு செய்தான்? உங்களுக்கு அவனைக் கண்டால் ஆகவில்லை. அவன் ஒவ்வோர் அடியிலும் தவறு செய்கிருன் என்று தோன்றினல் இந்தக் கிழவனிடம் கொடுத்துவிடேன். நான் அவனை என்னிடம் வைத்துக்கொள்வேன். அவனை நீங்கள் பார்க்க வேண்டாம். என்னிடமே இருப்பான்" என்ருர்.

பிரதாபன் வெகுநேரம் பொறுமையுடன் கேட்டபின், "சிற்றப்பா! நான் எல்லாவற்றையும் நன்ருக யோசனை செய்துதான் முடிவு செய்தேன். இந்த விஷயத்தில் என்னை

விட உமக்கு அதிகம் தெரியாது. ஆகவே, நீர் சொல்வதை நான் கேட்பதும் நடக்காது" என்ருன்.

வசந்தராய் எழுந்து சென்று பிரதாபனுடைய கையைப் பிடித்தார். "அப்பா பிரதாபா! உனக்கு நினைவு இல்லையா? சிறு வயதில் உன்னை மார்பிலும் தோள் மேலும் வளர்த்துப் பெரியவனாக்கினேன். அண்ணு உன்னை என்னிடம் விட்டுச் சென்ற அன்றுமுதல் உனக்கு ஏதாகிலும் கஷ்டம் கொடுத்தேனு? உதவியற்ற நிலையில் நீ என்னிடம் இருந்தாய். ஒரு நாளாகிலும் உன்னைத் தகப்பனற்றவன் என்று எண்ணியிருப்பாயா? பிரதாபா, சொல்: உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? என்னை இந்தக் கிழ வயதில் ஏன் கஷ்டப்படுத்துகிருய்? உன்னை வளர்த்ததனல் நீ என்னிடம் கடமைப்பட்டவன் என்று சொல்லவில்லை. உன்னை வளர்த்து அண்ணனிடம் நான் பட்ட கடனைத் தீர்க்க முயன்றேன். ஆகவே, பிரதாபா, எனக்குச் சேரவேண்டியதென்று நான் எதையும் உரிமை கொண்டாட வரவில்லை. உன்னைப் பிச்சை கேட்கிறேன். அதையும் தரமாட்டாயா?" என்ருர்.

வசந்தராயின் கண்கள் ஆருக நீரை வடித்தன. பிரதாபனே அசைவற்றுக் கல் போல நின்றிருந்தான்.

"என் பேச்சைக் கேட்கமாட்டாயா? எனக்குப் பிச்சை தர மாட்டாயா? பதிலுங்கூட இல்லையா?" என்று அவர் பெருமூச்சு விட்டார். "சரி; ஒரே ஒரு வேண்டுகோள்: ஒரு முறை நான் உதயனைக் காண விரும்புகிறேன். அவனுடைய சிறையில் என்னைத் தடை செய்யாமல் விடு. இந்த அநுமதியாகிலும் தருவாயா?" என்ருர்.

பிரதாபன் அதற்கும் இசையவில்லை. உதயன் பக்கம் அன்புடன் பேசித் தன்னை எதிர்பார்ப்பது பிரதாபனுக்கு வெறுப்பைமூட்டியது. தன்னை நாலு பேர் குற்றம் சொல்லச் சொல்ல, அவனுடைய உள்ளம் பின்னும் விறைத்துக் கொண்டு நின்றது.

வசந்தராய் முகம் வாடி அந்தப்புரத்துக்குச் சென்றார். அவருடைய முகத்தைக் கண்டதும் விபாவின் உள்ளம் விண்டது. அவள் தாத்தாவின் கையைப் பிடித்து, "தாத்தா! என் அறைக்கு வா" என்றதும், இருவரும் விபாவின் அறைக்குள் சென்றனர். விபா தன் மெல்லிய விரல்களால் அவர் தலையைக் கோதி, "தாத்தா! உன் நரை மயிரை எடுக்கட்டுமா?" என்றாள்.

"அம்மா! நரை மயிர் இன்னும் இருக்குமா? வயது ஆகாதபோது இருந்தது. உன்னை எடுக்கச் சொன்னேன். இன்று நான் கிழவனாயிற்றே!" என்றார் வசந்தராய்.

விபாவின் முகம் இருண்டது கண்டு வசந்தராய் அழுதார். பரபரப்புடன், "வா விபா, நரை மயிரைத்தான் எடு. உனக்கு அந்த வேலை கொடுக்க என்னால் முடிய வில்லை, அம்மா! வயதாகிறது. தலையில் நாளுக்கு நாள் வழுக்கை அதிகமாகிறது. இன்னொரு தலையைப் பிடி; நான் விலகிக்கொள்கிறேன்" என்று சிரித்தார் வசந்தராய்.

வேலைக்காரி ஒருத்தி அங்கு வந்து, "ராணியம்மா உங்களை நமஸ்காரம் செய்யவேண்டுமாம்" என்றாள்.

வசந்தராய் அரசியின் அறைக்குச் செல்லவும், விபா மெல்லச் சிறையின் பக்கம் புறப்பட்டாள்.

அரசி அவரை வணங்கியதும் வசந்தராய், "அம்மா! நீ தீர்க்க சுமங்கலியாக நூறு வயது இருக்கவேண்டும்" என்று ஆசீர்வாதம் செய்தார்.

"சிற்றப்பா! அந்த ஆசி வேண்டாம். நான் இனிமேல் சாவதே மேல்" என்றாள் அரசி.

வசந்தராய் பரபரப்புடன், "ராம! ராம! அப்படியெல் லாம் சொல்லாதே, அம்மா" என்றார்.

"என்ன சொல்வது, சிற்றப்பா! எங்கள் குடும்பத்தில் சனியன் பார்வை விழுந்துவிட்டது. விபாவின் முகத்தைக் கண்டு எனக்குச் சோறு பிடிக்கவில்லை. கேட்டால் அவள் ஒன்றும் சொல்வதில்லை. நாளுக்கு நாள் அவளுடைய

உடல் குன்றிக்கொண்டு வருகிறது. அவனை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே எனக்கு விளங்கவில்லை."

வசந்தராய் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தார். "சிற்றப்பா! போதாத குறைக்கு இந்தப் பாழும் கடிதம் ஒன்று!" என்று அரசி அவர் கையில் ராமசந்திரராயின் கடிதத்தைக் கொடுத்தாள்.

வசந்தராய் அதைப் படிக்கு முன்னரே அரசி அழத் தொடங்கினாள். "சிற்றப்பா! எனக்குச் சுகம் ஏது? என் கண்மணி...உதயன்... அவன் அரசரைப் போலவே இல்லை; ஒன்றும் அறியாதவன். ஆனாலும், என் வயிற்றில் பெற்றெடுத்தபின் என் மகன்தானே! அவன் சிறையில் எப்படி இருக்கிறானோ! ஒரு தடவை பார்க்கக்கூட முடியவில்லை'' என்றாள் அரசி. எந்தப் பேச்சை எடுத்தாலும் உதயனுடைய நினைவு வந்தது. இந்த வேதனையை அவளால் மறக்கவே முடியவில்லை. கடிதத்தைப் படித்ததும், வசந்தராய் வாய் அடைத்துப் போனார். அவர் ஒன்றும் தோன்றாமல் தலையைத் தடவிக்கொண்டே, "கடிதத்தை யாருக்குமே காட்டவில்லையா, அம்மா?" என்றார்.

"அரசர் இதைக் கண்டால் என்ன செய்வாரோ? விபாவுந்தான் உயிரோடு இருப்பாளா?"

"நல்லது; இதை யாருக்குமே காட்டாதே! நீ சீக்கிரமே விபாவைப் புக்ககம் அனுப்பிவிடு. மான அவமானமே பார்க்காதே!"

"நானும் அதைத்தான் செய்ய எண்ணினேன். மானமென்ன? என் விபா சுகப்பட்டாலே போதும். விபாவை அவர்கள் ஏதாவது கஷ்டப்படுத்துவார்களோ என்றுதான் பயப்படுகிறேன்."

"விபாவையா கஷ்டப்படுத்துவார்கள்? அப்படிப் பட்டவளா என் செல்வம்? அவள் எங்கே சென்றாலும் ஆதரவு இருக்கும். உங்கள்மேல் கோபத்துடன் ராமசந்திரன் இதை எழுதினான். அனுப்பிவிட்டால் அவன்

கோபம் தணியும். என் செல்வத்தைப்போல் எத்தனை பேர் உலகத்தில் இருக்கிறார்கள்?"— வசந்தராய் தம் சாதாரண புத்தியால் இவ்வாறு எண்ணினார். அரசியும் இதையே நம்பினாள்.

"விபாவைச் சந்திரத்வீபத்துக்கு அனுப்பவேண்டி, ராமசந்திரன் கடிதம் எழுதியிருப்பதாக வீட்டில் செய்தியை எட்டவிடு, அம்மா! விபாவும் அப்போது மறுக்கமாட்டாள்" என்று வசந்தராய் யோசனை சொன்னார்.



## 29

## மீட்சி

இருட்டியபின் வசந்தராய் ஒன்றியாக வெளி அறையில் உட்கார்ந்திருந்தார். இந்தச் சமயத்தில் சீதாராமன் வந்து அவரை வணங்கினான்.

"என்ன, சீதாராமா? என்ன விசேஷம்?" என்றார் வசந்தராய்.

"அப்புறம் சொல்கிறேன். நீங்கள் என்னுடன் வரவேண்டும்."

"ஏன்? எங்கே வருவது?"

சீதாராமன் அவரை அணுகி, ரகசியமாக ஏதோ சொன்னான். வசந்தராய் விழிகள் விரிய, "உண்மையாகவா?" என்றார்.

"ஆம், மகாராஜா."

வசந்தராய் தயங்கினார். "இப்போதே போக வேண்டுமா?" என்றார்.

"ஆமாம், அரசே!"

"ஒரு முறை விபாவைப் பார்க்கக்கூட முடியாதா?"

"நேரமில்லை, மகாராஜா!"

"எங்கே போகவேண்டும்?"

"என்னுடன் வாருங்கள்; நான் அழைத்துச் செல்கிறேன்."

வசந்தராய் எழுந்தார். "ஆனால்...ஒரு தடவை விபாவைப் பார்த்துவிட்டு வருகிறேனே!..." என்றார்.

"இல்லை, மகாராஜா! தாமதமானால் எல்லாம் வீணாகி விடும்."

வசந்தராய், "வேண்டாம்: வேண்டாம்" என்றதும், இருவருமாகக் கிளம்பினார்கள். கொஞ்சதூரம் சென்றதும்

வசந்தராய் மறுபடியும், "சற்று நேரமானுல், என்ன, சீதாராம்?" என்ருர்.

"இல்லே, மகாராஜா! ஏதாவது விபத்து நேரலாம்."

"ராம ராம!" என்று வசந்தராய் அவனுடன் அரண்மனேக்கு வெளியே சென்ருர்.

வசந்தராய் வந்திருப்பது உதயனுக்குத் தெரியாது. விபா அவனிடம் அதைச் சொல்லவில்லே. இருவரும் சந்திக்கவோ வழியில்லே. ஆகவே, இந்தச் செய்தி அவனுக்குக் கஷ்டம் தரும் என்று அவள் நம்பினுள். இருட்டியபின் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினுள் விபா. உதயன் விளக்கொளியில் சம்ஸ்கிருத புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். சாளரத்தின் மூலம் வீசிய காற்றில் விளக்கின் சுடர் அலேந்தது. எழுத்துக்கள் தெளிவாகப் புலனுகவில்லே. விட்டில்கள் வேறு, சுடரில் வந்து பொசுங்கின. ஒரு தடவை வேகமாக வீசிய காற்றில் விளக்குச் சட்டென்று அணேந்தது. உதயன் புத்தகத்தை மூடிவிட்டுக் கட்டிலில் உட்கார்ந்தான். எத்தனேயோ கவலேகள் அவன் மனத்தை வாட்டின. முதலில் விபாவின் கவலேதான் அவனுக்கு. அவள் அன்று கொஞ்ச நேரம் கழித்து வந்தவள், சாயங்காலம் சீக்கிரமே போய்விட்டாள். அவளுடைய முகமும் சற்று வாடித்தான் இருந்தது. அதன் காரணமென்ன என்று அவன் யோசனே செய்தான். உலகில் விபாவைத் தவிர வேறு யாரையும் அவனுல் காண முடியவில்லே. அவளேப் பற்றித்தானே அவனுல் எண்ண முடியும்! விபாவின் ஒவ்வொரு சொல்லும் அவன் மனத்தில் பச்சென்றிருந்தது. தாகத்தால் தவிக்கும் ஒருவன் ஒவ்வொரு நீர்த்துளியையும் அநுபவித்துப் பருகுவதுபோல், விபாவின் அன்பைப்பற்றிய ஒவ்வொரு நினேவையும் அவன் எண்ணி எண்ணி மகிழ்ந்தான். இருண்ட அறையின் தனிமையில் அவன் விபாவின் வாடிய முகத்தைப்பற்றியே யோசனே செய்தான். 'விபா

வுக்கு வர வர வெறுப்புத் தட்டுகிறதா? இருண்ட அறையில், வாட்டமே உருவெடுத்த அண்ணனுக்குப் பணிவிடை செய்வது அவளுக்குப் பிடிக்கவில்லையா? வாழ்வின் பாதையில் முள், சுகத்திற்குத் தடை என்று என்னை எண்ணுவாளோ? இன்று நேரம் கழித்து வந்தாள்; நாளைக்கு வர இன்னும் சற்றுத் தாமதமாகும். அப்புறம் ஒரு நாள் அவளுக்காக ஏங்கி நாளெல்லாம் காத்திருப்பேன்' என்று நினைப்பான். அந்தி மங்கி இருட்டும்; விபா வரவில்லை. 'அப்புறம் விபா வரவே மாட்டாளோ என்னவோ?' என்று எண்ணும்போது, உதயாதித்தியனுடைய உள்ளம் தவித்தது. கற்பனை உலகம் வெறிச்சென்று அவனுக்குத் தோற்றியது. விபா தன்னை வாழ்வின் சுகத்துக்குத் தடையாக எண்ணலாம் என்று தோன்றுகையில்,உதயனுடைய மனம் துடித்தது. சற்று நேரத்துக்கெல்லாம் வேறொரு கவலை! 'சீ! என்னைப்பற்றியே பெரிதாக எண்ணுகிறேனே! அவள் மேலுள்ள அன்பால் அவளுக்கு எத்தகைய தீங்கு செய்கிறேன்! இப்படி ஒரு பகைவனுங்கூடச் செய்ய மாட்டானே! சீ! இனி என் பொறுப்பை அவள் தலையில் போடுவது கூடாது' என்று அடிக்கடி எண்ணுவான். ஆனால், 'விபா சென்றுவிட்டால்?' என்று நினைக்கும் போது மன உறுதி தளர்ந்துவிடும். ஆழமான கவலைக் கடலில் உழன்றுவருந்துவான். அதில் மூழ்கிச் சாக இருக்கும் ஓர் உயிர்போல் அவன் உள்ளம் விபாவின் கற்பனை உருவைக் கவலையுடன் பிடித்துக்கொள்ளும்.

இந்தச் சமயம், வெளியே "தீ! தீ!" என்ற கூக்குரல் எழுந்தது. உதயன் மனம் துடித்தான். வெளியே நூற்றுக் கணக்கான குரல்கள் ஒருங்கே கூவவும், வானமளாவி அந்தக் கூச்சல் எதிரொலித்தது. அரண்மனையில் எங்கேயோ தீப் பிடித்துக்கொண்டதை அவன் உணர்ந்தான். வெகு நேரம் வரையில் கூச்சல் கேட்டவாறு இருக்கவே, அவன் உள்ளம் கவலையில் ஆழ்ந்தது. சட்டென்று சிறைக்

கதவு திறந்து, எவனோ உள்ளே வரவும் உதயன் திடுக்கிட்டு, "யார்?" என்றான்.

"நான் சீதாராமன். வெளியே வாருங்கள்."

"ஏன்?"

"இளவரசே! சிறையில் தீப் பிடித்துவிட்டது: சீக்கிரம் வெளியே வாருங்கள்" என்று சீதாராமன் ஒருவாறாக இளவரசனைத் தூக்கிக்கொண்டே சிறைக்கு வெளியில் சென்றான்.

வெகுநாட்களுக்குப் பின் உதயன் திறந்த வெளிக்கு வந்தான். தலைக்குமேல் எல்லையற்ற வானம்; சில்லென்ற காற்று அவன் மார்பை அணைத்துக்கொள்வதுபோல் வீசியது. கண்களின் தடையும் விலகியது. அந்த இரவு வேளையில் வானில் எண்ணற்ற தாரகைகளையும் பரந்த பசும் புல் தரையையும் கண்டு, உதயனுடைய மனம் மட்டில்லா மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. களிப்பில் தன்னை மறந்து சற்று நேரம் இருந்தபின் அவன், "எங்கே போவது?" என்று சீதாராமனைக் கேட்டான். வெகுநாட்கள் குறுகிய சிறையில் நகராமல் இருந்தபின், திறந்த வெளியைக் கண்டதும் என்ன செய்வது, எங்கே செல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. சீதாராமன், "என்னுடன் வாருங்கள், இளவரசே!" என்றான்.

ஒரு புறம் தீ கொழுந்துவிட்டது. பிற்பகலில் சில குடிகள் தலைமை அதிகாரியிடம் ஏதோ சொல்ல வந்தனர். முன் முற்றத்தில் கும்பலாக இருந்த அவர்கள் தாம் தீ, தீ என்று முதலில் கூவியவர்கள். காவலாளிகள் தங்குவதற்கென்று சிறைச்சாலையை அடுத்துச் சில விடுதிகள் இருந்தன. அங்கே அவர்களுடைய படுக்கை, துணிமணிகள் எல்லாம் இருக்கும். தீயைப்பற்றித் தெரிந்ததும், ஓட முடிந்தவர்கள் ஓடினார்கள். கடுமையான காவலில் இருக்கவேண்டியவர்கள் நின்றுகொண்டு கையைப் பிசைந்தனர். உதயனுடைய சிறைக்குக் கடுமை

யான காவல் தேவையில்லை. ஏதோ பெயருக்காக அவர்கள் நின்றனர். உதயனுக்கு ஓட விருப்பம் இருப்பதாகத் தோன்றவில்லை. இதனால் அங்கு இருந்த காவலாளிகள் முதலிலேயே ஓடிவிட்டனர். இரவு கனத்தது; தீயோ அணைந்த பாடாக இல்லை. ஒரு சிலர் துணிமணி, படுக்கைகளை அகற்றவும், தீயை அணைக்கவும் முயன்றனர். ஒரு சிலர் ஒன்றும் செய்யாமல் இங்குமங்கும் கூச்சலிட்டுக் கொண்டு ஓடினர். தீ அணைந்தபின், கூச்சல் போட்டவருக்கே அதிகப் பெருமை கிடைத்தது. எல்லோரும் இந்தப் பரபரப்பில் முனைந்திருக்கும்பொது ஒரு பெண் குறுக்கே வந்தாள். அவள் சொல்வதை எவரும் கேட்கவில்லை. சிலர் அவளைத் திட்டினர்; ஒருசிலர் ஒதுக்கித் தள்ளினர். எவரும் அவள் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. கேட்டவர்கள், ''இளவரசர் ஓடினால் உனக்கென்ன? அது தயால்சிங்கின் வேலை. எங்கள் அறையை விட்டு நாங்கள் ஏன் வருவோம்?'' என்றனர்.

இதனால் அப்பெண்ணின் கோபம் பின்னும் அதிகமாகியது. எதிரே இருந்த ஒருவனைப்பிடித்து அவள், ''அட எரிமூஞ்சி! அரண்மனையில் வேலை செய்கிற நினைவில்லையா? நாளைக்கே அரசரிடம் சொல்லி உன்னை ஆணிப்படுக்கையில் அழுத்துவேன் இளவரசன் ஓடிவிட்டானே!'' என்றாள்.

“மிகவும் நல்லது. உனக்கென்னடி அதில்?'' என்று அவன் அவளை ஓர் அறை வைத்தான். அறைத்குத் தீ வைத்தவர்களுள் அவனும் ஒருவன். அடி வாங்கியதும் பெண்ணின் தோற்றம் பின்னும் பயங்கரமாகியது. அடியுண்ட புலிபோல் அவள், தன் விழிகளில் அனல் வீசப் பற்களை நற நற வென்று கடித்தாள். பேய்போல் ஆகியது அவள் தோற்றம். எதிரே எரிந்துகொண்டிருந்த கட்டை ஒன்றைக் கையில் எடுத்தாள். கை கொதிப்பதையும் லட்சியம் செய்யாமல், அவனைத் துரத்திக்கொண்டு ஓடிக் கடைசியில் அதை அவன்மேல் வீசி எறிந்தாள்.

# 30

## பாட்டனும் பேரனும்

சீதாராமன் இளவரசனுடன் கால்வாய்க் கரைக்குச் சென்றான். அங்கே இருந்த பெரிய தோணியின் எதிரே போய் இருவரும் நின்றார்கள். அவர்களைக் கண்டதும் தோணியினுள்ளிருந்து ஒருவர் வந்து, "வந்தாயா! என் செல்வமே" என்றார். உதயாதித்தியன் இள வயது முதல் பழக்கமான அந்தக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான். அந்தக் குரல் அவனுடைய வாழ்வின் சுகதுக்கங்களோடு ஒன்றியிருந்தது. ஒரோரு நாள் நள்ளிரவில், கனவில் குழலிசைபோல் கேட்டு, அவனைத் திடுக்கிட வைக்கும் குரல் அது. அவனுடைய வியப்பு விலகு முன்னமே வசந்தராய் அவனைத் தழுவிக்கொண்டார். உதயனுடைய விழிகளில் நீர் மண்டியது. இருவரும் அப்படியே புல் தரையில் உட்கார்ந்தனர். வெகுநேரங் கழித்து உதயன், "தாத்தா!" என்றான். "என்ன, அப்பா!" என்று கேட்டார் வசந்தராய். அதற்குமேல் பேச இருவராலும் முடியவில்லை. வெகு நேரம் இவ்வாறே கழிந்தது. வானையும் வசந்தராயையும் மாறிமாறிப் பார்த்தவாறு உதயன், "தாத்தா! இன்று விடுதலை அடைந்தேன். உன்னையும் பார்த்தேன். இதற்கு மேலும் வேறு சுகமுண்டா? இந்தக் கணம் இப்படியே நீடிக்குமா?" என்றான். சீதாராமன் கைகூப்பி, "இளவரசே! தோணியில் ஏறுங்கள்" என்றான்.

"தோணியிலா? ஏன்?"

"இராவிட்டால் காவலாளிகள் வருவார்கள்."

உதயன் வியப்புடன், "தாத்தா! நாம் என்ன, ஓடுகிறோமா?" என்று வசந்தராயைக் கேட்டான்.

வசந்தராய் உதயனுடைய கையைப் பிடித்தார். "ஆம், அப்பா! நான் உன்னைத் திருடிக்கொண்டு போகிறேன்.

இது கல்நெஞ்சர் வாழும் இடம். உன்னை இவர்கள் நேசிக்க வில்லை. மான்குட்டிபோல் நீ வேடரின் நாட்டில் உறை கிருய். நான் உன்னை மறைத்து வைப்பேன். அங்கே நீ ஆபத்தின்றி இருக்கலாம்'' என்று அவர் உதயனை மார்பில் அணைத்துக்கொண்டார். கடினமான உலகின் துன்பங்களி லிருந்து அவர் உதயனை அன்புடன் காக்க முயன்ருர்.

உதயன் வெகுநேரம் பொறுத்து, "இல்லை, தாத்தா! என்னுல் ஓடமுடியாது" என்ருன்.

"ஏன், அப்பா! இந்தக் கிழத்தை மறந்துவிட்டாயா?"

"நான் அப்பாவின் காலைப் பிடித்துக்கொண்டு அழு கிறேன். ராய்கருக்குச் செல்ல அவர் அநுமதி தரமாட் டாரா?"

வசந்தராய் பரபரப்புடன், "அப்பா! நான் சொல்வ தைக் கேள். அங்கே போகாதே! அந்த முயற்சி வீண் தானடா!" என்ருர்.

"அப்படியானுல், சிறைக்கே செல்லுகிறேன்" என்று பெருமூச்சு விட்டான் உதயன்.

வசந்தராய் அவனுடைய கையை உறுதியாகப் பிடித் தார். "எப்படிப் போகிருயோ பார்க்கலாம். நான் விட மாட்டேன்" என்ருர்.

"தாத்தா! இந்தத் துரதிருஷ்டசாலியோடு ஏன் வீணில்கஷ்டங்களை வேண்டி வரவழைத்துக் கொள்கிருய்? நான் இருக்கும் இடத்தில் துளியாவது சுகமுண்டா?'

"அப்பா! உன்பொருட்டு விபாவும் சிறையில் கிடக் கிருள். அவளுடைய இள வயதில் வாழ்வின் சுகதுக்கங் களை யெல்லாம் துறக்க வேண்டுமா?" என்றபோது வசந்த ராயின் விழிகள் நீரைப் பெருக்கின.

உதயன் பரபரப்புடன், "வா, தாத்தா! நாம் போய்விட லாம். சீதாராம்! அரண்மனைக்கு மூன்று கடிதங்கள் அனுப்பவேண்டுமே!" என்ருன்.

“தோணியில் காகிதம், பேனு இருக்கின்றன. கொண்டு வருகிறேன். சீக்கிரம் எழுதுங்கள்; அவகாசமில்லை.”

உதயன் தகப்பனிடம் மன்னிப்புக்கேட்டு எழுதினுன். தாய்க்கு, “அம்மா! என்னைப் பெற்று நீ ஒரு நாளாகிலும் மகிழவில்லை. இனி நிச்சிந்தையாக இரு. நான் தாத்தா விடம் போகிறேன். அங்கு எனக்குச் சுகமும் ஆதரவும் உண்டு, கவலைப்படாதே!” என்றும், விபாவுக்கு, “உனக்கு மங்களம் உண்டாகும். என்ன எழுதுவது? நீ உன் புருஷ னிடம் போய்ச் சுகமாக இரு. துயரம், கஷ்டம் எல்லாவற்றை யும் மறந்துவிடு” என்றும் எழுதினுன். அவனுடைய விழி களில் நீர் முத்துக்கள் உதிர்ந்தவண்ணமாக இருந்தன. சீதாராமன் மூன்று கடிதங்களையும் ஒரு படகோட்டியின் மூலமாக அனுப்பினுன். எல்லோரும் படகில் ஏறும் சமயம் யாரோ ஒருத்தி தோணியை நோக்கி ஓடிவந்தாள். “ஐயோ! அந்தச் சூனியக்காரி!” என்று திடுக்கிட்டுக் கூவினுன் சீதாராமன். ருக்மிணி தோணியை நெருங்கினுள். தலை விரிகோலமாக இருந்தது. தலைப்புக்கீழே புரண்டது. எரியும் கொள்ளிபோல் கண்கள் கனன்றன. அடிக்கு அடி சிதைந்த ஆசைகள், பழிவாங்கும் தீவிரம் எல்லாமாகச் சேர்ந்து தனக்கு எதிரே காண்பவரைக் கிழித்தெறியத் தோன்றி யது அவளுக்கு. காவலாளிகள் தீயை அணைக்க முயலும் இடத்தில் தடையுண்ட அவள், பைத்தியக்காரிபோல் கோபத்துடன் அரண்மனைக்குள் ஓடினுள். அவள் பைத்திய மென்று காவலாளிகள் பிரதாபனுடைய அறைக்குள் அவளை நுழையவிடவில்லை. வேதனை தாங்காமல் அவள் அரண்மனையிலிருந்து ஓடிவந்தாள். புலிபோல் அவள் உதயன்மேல் பாயும்போது சீதாராமன் குறுக்கிடவே, அவள் அவனை இரு கைகளாலும் நெறித்துப் பிடித்தாள். திடீரென்று சீதாராமன் கூக்குரலிடவும், படகோட்டிகள் பலவந்தமாக ருக்மிணியை இழுத்து ஒதுக்கினர். தேள் கோபந் தாளாமல் தன்னையே கொட்டிக் கொள்வதுபோல்

அவள் தன் மார்பையும் தலையையும் நகங்களாலும் கைகளாலும் பிய்த்துக்கொண்டாள். கடைசியில் அவள், "இதோ சாகிறேன். என் எண்ணம் ஒன்றும் நிறைவேறவில்லை! பெண் பாவம் உன்னையே சாரட்டும்" என்று வாய்க்காலில் குதித்தாள். அவளுடைய குரல் அடிவானத்தைத் தொட்டு எதிரொலித்தது. மாரிவெள்ளம் கரை புரண்டு ஓடவே, அவள் போன இடங்கூடத் தெரியவில்லை. சீதாராமனுடைய தோளிலிருந்து ரத்தம் பெருகியது. அவன் மேல் துணியைத் தண்ணீரில் நனைத்துக் கட்டிக்கொண்டான். உதயனுடைய கைகால்கள் சில்லிட்டுப்போய், அவன் நினைவை இழந்த நிலையில் இருந்தான். வசந்தராயும் பேச்சற்று இருந்தார். படகோட்டிகள் இருவரையும் தோணியில் ஏற்றவும், தோணி கிளம்பியது. சீதாராமன் பயத்துடன், "புறப்படும் வேளையில் இது என்ன அபசகுனம்?" என்றான்.



## 31

# அரசனின் கட்டளை

உதயனுடைய தோணி கால்வாயைக் கடந்து ஆற்றை அடைந்ததும் சீதாராமன் வெளியே வந்தான். வரும்போது அவன் கையோடு உதயனுடைய உடைவாளையும் கேட்டு வாங்கிக்கொண்டான்.

உதயனுடைய கடிதங்கள் மூன்றையும் ஒருவன் மூலம் சீதாராமன் அரண்மனைக்கு அனுப்பினானல்லவா? அவைகளைக் கொடுக்காமல் இருக்கும்படி சீதாராமன் அவனை எச்சரித்தான். தோணியிலிருந்து நேராக அரண்மனைக்கு வந்து அவன் மூன்று கடிதங்களையும் வாங்கிக்கொண்டான். அரசி, விபா இவர்களுடைய கடிதங்களை மட்டும் வைத்துக் கொண்டு, அவன் மூன்றாவதைக் கிழித்தெறிந்தான்.

அதற்குள் தீ பின்னும் பலமாகப் பரவியது. இரவில் வேடிக்கை பார்ப்பதற்காகச் சிலர் படுக்கையை விட்டு எழுந்துவந்தனர். அவர்களால் தீயை அணைப்பது தடைப் பட்டதேயொழிய, அநுகூலம் எதுவும் ஏற்படவில்லை.

தீப் பிடிக்கக் காரணமாக இருந்தவன் சீதாராமன் தான் என்று சொல்ல வேண்டியதில்லை. உதயன் மேல் அன்புகொண்ட சில மக்களும், அரண்மனை வேலையாட் களும் இந்தக் காரியத்தில் அவனுக்குத் துணை செய்தனர் அந்தி வேளையில் ஆறு இடங்களில் காரணமின்றித் தீப் பிடித்ததும், இத்தனை பேர் முயன்றும் அது அணை யாததும் தெய்வச் செயல் அல்ல. இவைகளுக்கு ஒரு காரணமும் உண்டு. தீயை அணைக்கக்கூடியிருந்தவர்களுள் சீதாராமனுடைய ஆட்களும் இருந்தனர். தீ இராத இடத் தில் நீரை ஊற்றுவதும், ஜலங் கொண்டுவரப் போய்த் திரும்பாமல் இருப்பதும், தந்திரமாகப் பானையை உடைப்

பதுமர்க இருந்தார்களே ஒழியத் தீயை அணைக்கவில்லை. ஒருவர்மேல் ஒருவர் விழுந்து பெருத்த கலவரமே செய்தார்கள். தீயும் அணைந்தபாடாக இல்லை.

இந்தப் பக்கம் இப்படிக் கலவரம் நடக்கையில், சீதாராமனுடைய கூட்டத்தவர் உதயனுடைய சிறைக்கும் தீ வைத்தனர். கதவு, சாளரம், கூரையெல்லாம் பற்றிக் கொண்டன. இந்தச் சிறையில் தீ பரவும் என்று அவர்கள் கனவில்கூட எண்ணவில்லை. ஆகவே, எவரும் அந்தப் பக்கம் கவனிக்கவில்லை. சீதாராமன் வந்தபோது தீ பிரபலமாகக் கொழுந்துவிட்டு எரிந்தது. சில எலும்புகள், மண்டையோடு, உதயனுடைய வாள் இவைகளை அவன் ஒருவாறு அந்த அறையினுள் போட்டான்.

காவலாளிகளின் விடுதிகளை அணைத்துக்கொண்டிருந்தவர்கள், திடீரென்று சிறைப்பக்கமிருந்து கூச்சல் வருவதைக் கேட்டனர். ஒருவன் ஓடிவந்து, "அடே! இளவரசரின் சிறையில் தீப்பிடித்துவிட்டது" என்றான். காவலர்களின் ரத்தம் உறைந்துவிட்டது. தயால் சிங்குக்குத் தலை சுற்ற, அவன் கையிலிருந்த பெட்டி படுக்கைகள் கீழே விழுந்தன. இதற்குள் மற்றொருவன் ஓடிவந்து, "அடே! சிறைக்குள் கத்துகிறார் இளவரசர்" என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் சீதாராமன் வந்து, "வாருங்கள் சீக்கிரம்! அறையின் கூரை இடிந்துவிட்டது. இளவரசர் குரல்கூடக் கேட்கவில்லை" என்றதும் எல்லோருமாக அந்தப் பக்கம் ஓடினார்கள். அறையின் கூரை சிதைந்துவிட்டது. நாலுபக்கமும் தீ; உள்ளே நுழைய வழி இல்லை. அவர்கள் அங்கேயே நின்று ஒருவரையொருவர் திட்டிக் கொண்டனர். எவனுடைய தவறு என்று அவர்கள் தீர்மானம் செய்யப்போய்க் கலகம் வலுத்து, கைகலக்கும் வரையிலும் வந்துவிட்டது.

இளவரசர் அறையோடு சாம்பலானார் என்ற செய்தியைப் பரப்பி, இன்னும் சில நாட்கள் நிம்மதியாக இருக்க

லாம் என்று சீதாராமன் எண்ணினன். தீ நன்ருகப் பிடித்துக்கொண்டது கண்டு, அவன் மகிழ்ச்சியோடு தலையில் துணியைப் போர்த்துக்கொண்டு குடிசையை நோக்கிச் சென்ருன். வழியில் ஜன நடமாட்டமே இல்லை. தென்றலில் மூங்கில் சலசலவென்று ஓசை செய்தது. சீதாராமன் களிப்பு மிகுந்து, தன்பாட்டில் பாடத் தொடங்கினன். கொஞ்ச தூரம் சென்றதும் அவனுக்கு ஓர் எண்ணம் மனத்தில் உதித்தது. 'குடும்பத்தோடு, யசோஹரை விட்டு விட்டு ஓட வேண்டியது அவசியந்தான். அப்படியே கொஞ்சம் பணத்தையும் சுருட்டிக்கொள்வது நல்லதல்லவா! மங்களாதான் செத்தாள்; சனி தொலைந்தது! அவள் குடிசைக்குச் சென்ருல், நிறையச் சொத்து அகப்படும். எவனவது அதை எடுத்துக்கொள்ளத்தான் போகிருன். அதைவிட நானே எடுத்துக்கொள்ளலாம்' என்று எண்ணி அவன் ருக்மிணியின் குடிசையை நோக்கிச் சென்ருன். வழியில் கள்ளப் புருஷனை நோக்கிச் செல்லும் பெண் ஒருத்தியைக் கண்டான்; அவளைக் கேலி செய்யும் ஆவலும் அவனுக்கு உண்டாயிற்று. ஆனல் பொழுதாகி விடுமோ என்று அவன் நேராக மங்களாவின் குடிசைக்குச் சென்ருன்.

குடிசையின் கதவு திறந்திருந்தது. அவன் களிப்புடன் உள்ளே நுழைந்து நாலு பக்கமும் பார்த்தான். இருளில் ஒன்றுமே தெரியவில்லை. நாலு பக்கமும் தடவிப் பார்த்தான். ஒரு பெட்டியில் தடுக்கியும் விழுந்தான். சுவரில் இரண்டோரிடத்தில் தலையும் மோதியது. அவனுடைய உடல் சிலிர்த்தது. யாரோ மூச்சு விடும் ஓசையும் கேட்டது. மெல்ல அவன் பக்கத்து அறைக்குள் சென்ருன். அங்கே விளக்கு எரிவது கண்டு களிப்புடன் அருகில் சென்றவன் திடுக்கிட்டு நின்ருன். அங்கு யார்? தூக்கமின்றி உடல் நடுங்க நிற்கும் அந்தப் பெண் யார்? உடலைப் பாதி மறைத்துக்கொண்டிருந்தது ஈரத்துணி; தலையிலிருந்து சொட்டுச்

சொட்டாக நீர் வடிந்தது. பற்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நறநறவென்று ஒலித்தன. அறையினுள் ஒரே விளக்குத்தான் இருந்தது. அதன் மங்கிய ஒளி அவளுடைய வாடிய முகத்தின்மேல் படிந்தது. சுவரில் அவளுடைய நிழல் பெரிதாக விழுந்தது. அறையினுள் ஒன்றுமில்லை. வாடிய முகமும், பெரிய நிழலும், அச்சமூட்டும் நிச்சப்தமுமே பரவியிருந்தன. மங்கலான ஒளியில் நனைந்த உடையும், விரிந்த தலையுமாக மங்களா பேய்போல் உட்கார்ந்திருந்தாள். முன்னே போகச் சீதாராமனுக்குத் தைரியமில்லை; திரும்பவும் முடியவில்லை. அவன் கோழையல்ல. சற்றுப் பொறுத்து அவன் வேடிக்கையாக, "எங்கிருந்து முளைத்தாயடி? உனக்குச் சாவில்லை?" என்றான். ருக்மிணி அவனை நோக்கித் தீயெழ விழித்தாள். சீதாராமனுடைய உயிர் தொண்டையில் வந்து சிக்கிக்கொண்டு தவித்தது. அவள், "ஓ! உங்களுக்கு இன்னும் போகிற காலம் வரவில்லையோ? நான் சாகவா?" என்று எழுந்தாள். "அடே! யமலோகம் வரையிலும் போய்த் திரும்பிவந்தேன். முதலில் உன்னையும் உன் இளவரசனையும் கட்டையில் வைத்துச் சாம்பலை என் உடம்பில் பூசிக்கொண்ட பிறகே நான் சாவேன். அதற்கு முன் எனக்கு யமலோகத்தில் இடமில்லையடா!" என்றாள்.

ருக்மிணியின் குரலைக் கேட்டதும் சீதாராமனுக்குத் துணிச்சல் ஏற்பட்டது. அவன் அவளுடன் கொஞ்சலாகப் பேச முயன்றான். சற்று முன்னால் போய், இனிய குரலில், "அடி என் கண்ணே! இதுதான் எனக்குக் கோபம் வருகிறது. உனக்கு ஏன் இப்படி ஆகிறதோ? எனக்குப் புரியவே இல்லை. சொல், மங்களா! உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? அடிமைமேல் ஏன் இவ்வளவு பராமுகம்? அந்தப் பாட்டு உனக்கு நினைவு இருக்கிறதா?" என்றான்.

சீதாராமன் இப்படிப் பேசப் பேச ருக்மிணியின் கோபம் பின்னும் பொங்கிக்கொண்டு வந்தது. அவள் உடல்

கொதித்தது. சீதாராமனுடைய தலைமயிரைப் பிய்த்து விடுவாள் போலவும், கண் விழிகளை நகத்தால் பிடுங்குவாள் போலவும் தோன்றியது. நாலுபக்கமும் பார்த்தாள். கைக்கு எதுவும் எட்டவில்லை. பற்களை நறநற வென்று கடித்து அவள், "இரு இரு! உன் தலையைக் கீழே உருட்டுகிறேன்" என்று உடல் குலைக்க அரிவாளைத் தேடிச் சென்றாள். சீதாராமன் மேல்துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு நாடகம் போல்சாகும் கட்டத்தை நடிக்கமுயன்றான். ஆனால் மங்களாவின் தோற்றத்தைக் கண்டதும் நாடகம்நின்றது. உண்மையாகவே அரிவாளால் வெட்டுண்டு சாக அவன் விரும்பவில்லை. ஆகவே, அவன் அதற்கு முன்னதாகவே நழுவிவிட்டான். சீதாராமனைக் காணுமல் ருக்மிணி அரிவாளால் தரையை ஓங்கி அடிக்கலானாள்.

ருக்மிணியின் ஆத்திரம் அதிகமாகியது. உதயனுடைய நடத்தையால் அவளுடைய தீய எண்ணங்கள் சிதைந்து போயின. அவள் பட்ட பாடுகள் யாவும் பலிக்கவில்லை. கூர்வாளைப்போல் உள்ளத்தை ஊடுருவும் சிரிப்பு, மின்வெட்டுப் போன்ற பார்வை, கார்வெள்ளம் நிறைந்த ஜான்னவி ஆறுபோல் வனப்பு எதுவும் அவளிடம் இல்லை. அவள் தன்னிடம் வந்த அரண்மனை ஆட்களை எல்லாம் திட்டி விரட்டினாள். திவானுடைய மகன் வெற்றிலையைக் குதப்பியவாறு அவளுடன் வேடிக்கையாகப் பேச வந்தபோது அவனுக்குத் துடைப்பக்கட்டை மரியாதைதான் கிடைத்தது. எவரும் அவளை நெருங்கத் துணியவில்லை.

'மங்களாவுக்கு இளவரசன் ஓடிய செய்தி எல்லாம் தெரிந்துவிட்டது. ஆகவே, விஷயம் வெளியாகுமுன் அவள் மென்னியை ஏன் பிடித்துக் கொன்றிருக்கக் கூடாது? போனது போகட்டும். யசோஹரில் இனி ஒரு கணங்கூடத் தங்குவது கூடாது. இப்போதே ஓடலாம்'

என்று எண்ணிச் சீதாராமன் இரவோடு இரவாக அன்றைய தினமே ராய்கருக்கு ஓடிவிட்டான்.

இரவு கழியும் தறுவாயில் மழை பொழியவும், தீ மெல்ல அணைந்தது. இளவரசன் சாம்பலான செய்தி பிரதாபனுடைய காதில் விழுந்தது. உடனே அவன் வெளியே ஒரு சபையைக் கூட்டினான். காவலாளிகள், மந்திரி, சில ஜனங்கள் எல்லோரும் வந்தனர். தீ பற்றிக் கொண்டு எரியும்போது சாளரத்தின் மூலம் இளவரசனைக் கண்டதாக ஒருவன் சொன்னான். இன்னும் சிலர் இளவரசன் கூக்குரலையும் கேட்டதாகச் சொன்னார்கள். ஒரு சிப்பாய் உதயனது வாளையும் எலும்புகளையும் எடுத்துவந்தான்.

பிரதாபன், "சிற்றப்பா எங்கே?" என்று கேட்டான். அரண்மனையெங்கும் தேடியும் அவரைக் காணவில்லை. "அறையில் தீப் பிடித்த சமயம் அவர் இருந்தார்" என்றனர் சிலர். "இல்லை. இளவரசர் இறந்த செய்தி கேட்டு இரவோடு இரவாக அவர் சென்றுவிட்டார்" என்றனர் ஒரு சிலர். பிரதாபன் சபையில் விசாரணை செய்துகொண்டிருந்த சமயம் வெளியே ஒரு கூச்சல் கேட்டது. ஒருபெண் சபைக்குள் வர முயன்றாள். காவலாளிகள் அவளை உள்ளே விட மறுத்தனர். பிரதாபன் அவளை உள்ளே அனுப்ப உத்தரவிடவே, அவளைக் காவலாட்கள் அழைத்து வந்தனர். "உனக்கு என்னவேண்டும்?" என்று பிரதாபன் கேட்டான். "எனக்கு எதுவும் வேண்டாம். இந்தக் காவல் ஆட்களை ஆறுமாதம் சிறையில் அடைத்துக் களி தின்ன வைக்கவேண்டும். உங்களிடம் பயமா, பக்தியா, சொன்னதைக் கேட்பதா? ஒன்றுமில்லை" என்றாள் அவள். காவல் ஆட்கள் அவளை மிரட்ட ருக்மிணி முரட்டுப் பார்வையுடன் அவர்களை அடக்கினாள். "கம்மென்று இருங்கள். உங்கள் கையைப் பிடித்து எத்தனை தடவை சொன்னேன்! ராய்கரின் கிழட்டு ராஜாவோடு இளவரசர் ஓடுகிறார் என்றால் நீங்கள் கேட்டீர்களா? அரசரிடம் வேலை செய்யும்

திமிர்! எறும்புக்கு இறக்கை முளைப்பது சாவதற்குத் தான்! தெரியுமா?" என்ருள். "நடந்ததை எல்லாம் சொல்" என்ருன் அரசன். "என்ன சொல்வது? ராய்கரின் கிழட்டு ராஜாவோடு இளவரசர் ஓடிவிட்டார்" என்ருள் அவள்.

"அறைக்குத் தீயிட்டது யார்? அது தெரியுமா?"

"எனக்கா தெரியாது? உங்கள் சீதாராமனுடைய வேலை அது. அவனுக்கு இளவரசர் மேல் மிகவும் அன்பு! அவருக்கு இந்தச் சீதாராமன்தான் எல்லாம்! கிழட்டு ராஜா, சீதாராமன், இளவரசர் மூவரும் செய்த சூழ்ச்சி இது!"

பிரதாபன் வெகு நேரம் கம்மென்றிருந்த பின், "உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?" என்ருன்.

"அது எதற்கு? என்னேடு ஆள் அனுப்புங்கள். நானே அவர்களைக் காட்டுகிறேன். உங்கள் காவலாட்கள் வெறும் ஆட்டுக்குட்டிகள்; வேலைக்கு லாயக்கில்லை."

பிரதாபன் ருக்மிணியுடன் ஆட்களை அனுப்பிவிட்டுக் காவலாளிகளுக்குத் தண்டனை விதித்தான். மெல்லச் சபை கலைந்தது. மந்திரியும் அரசனும் மட்டுமே இருந்தனர். அரசன் தன்னிடம் ஏதாவது சொல்வான் என்று எண்ணினர் மந்திரி. ஆனல் அரசன் பேசவே இல்லை. ஏதோ சொல்லும் நோக்கத்துடன் மந்திரி, "மகாராஜா!" என்ருன். அரசன் அதைக் காதில் போட்டுக்கொள்ளாமற் போகவே, மந்திரி மெல்ல எழுந்து சென்ருன்.

அன்று மாலை அரசன் ஒரு செம்படவன் மூலம் உதயன் ஓடிய செய்தியைக் கேட்டான். மெல்ல இன்னும் சிலர் இவ்வாறே சொன்னர்கள். ருக்மிணியுடன் சென்றவர்கள் ஒரு வாரத்துக்கெல்லாம் திரும்பி, இளவரசரை ராய்கரில் கண்டதாகச் சொன்னர்கள். "அந்தப் பெண் எங்கே?" என்று அரசன் கேட்டான். "அவள் அங்கேயே தங்கிவிட்டாள்" என்றனர் காவலாளிகள். பிரதாபன் முக்தியார் கான் என்ற பட்டாணிப் சேனபதியிடம் ரகசியமாக ஏதோ கட்டளையிட்டான். அவனும் தலையசைத்தான்.

# 32

## தாயும் மகளும்

பிரதாபனுக்கு முன்பாகவே அரசிக்கும் விபாவுக்கும் உதயன் ஓடிய செய்தி எட்டியது. அரசனுக்குத் தெரிந்தால் அவன் என்ன செய்வானே என்று அவர்கள் திகில் அடைந்தனர். ஒவ்வொரு நாளும் விதம் விதமாக விஷயம் அரசனுக்கு எட்டவும அவர்களுடைய பயம் அதிகமாகியது. இப்படி ஒரு வாரம் சென்றது. கடைசியில் அரசனுக்கு நம்பிக்கையான செய்தி வந்தது. அவன் கோபத்தைக் காட்டவில்லை. அரசிக்குச் சந்தேகம் இராமல் போகவே, அவள் அரசனிடம் சென்றாள். ஆனல் வெகு நேரம் வரையில் உதயனுடைய பேச்சை எடுக்கும் துணிவு அவளுக்கு இல்லை. அரசனும் அது விஷயமாகப் பேசவில்லை. கடைசியில் தாங்க முடியாமல் அரசி, "மகாராஜா! என் ஒரே வேண்டுகோள்: என் உதயனை இந்தத் தடவை மன்னித்துவிடுங்கள். அவனை ஏதாவது செய்தால் நான் விஷங் குடித்துச் சாவேன்" என்றாள்.

பிரதாபன் கசப்புடன், "முதலிலேயே அழ ஆரம்பித்தாயா? நான் ஒன்றுமே செய்யவில்லையே!" என்றான்.

எங்கே அரசன் கோபம் அடைவானே என்று பயந்து அரசி இரண்டாவது முறை பேச்செடுக்கவில்லை. அவள் மெல்ல எழுந்து சென்றாள். இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அரசனுடைய மன நிலையில் மாறுதல் ஒன்றும் காணவில்லை. அது கண்டு அரசியும் விபாவும் ஆறுதல் அடைந்தனர். உதயன் வேறிடம் சென்றதனுல் அரசனது மனம் திருப்தி அடைந்ததாக எண்ணினார்கள்.

கொஞ்ச நாட்களுக்கு அரசியின் உள்ளம் கவலையற்றிருந்தது. இதற்குள் ராமசந்திர ராய் விபாவை அனுப்ப எழுதியிருப்பதாக அவள் வீட்டிலும், விபாவிடமும்

சொல்லிவிட்டிருந்தாள். விபாவின் உள்ளம் களிப்பில் ஆழ்ந்தது. ராமமோகனனை அனுப்பியது முதல் அவள் மனத்தில் ஒரு கணங்கூட அமைதியில்லை. ஓய்ந்தபோதெல்லாம், “அவர் என்ன நினைக்கிருரோ! என் நிலை அவருக்குப் புரிந்ததோ இல்லையோ! கோபமும் கொண்டிருக்கலாமே! எடுத்துச் சொன்னுல் என்னை மன்னிக்க மாட்டாரா? எப்போது எடுத்துச் சொல்வது? தெய்வமே! அவரை என்று காண்பேன்?” என்றே ஏங்குவாள். இராப் பகலாக இந்த ஒரே கவலை அவளை வாட்டியது. அரசியின் சொல்லைக் கேட்டு, அவள் மனத்தை அழுத்திய பயம் விலகியது. வெட்கத்தை விட்டு அவள் தாயின் மார்பில் முகத்தை வைத்துக்கொண்டு வெகுநேரம் வரையில் அழுதாள்; சிரித்தாள். தாய்க்கும் அழுகை பொத்துக்கொண்டு வந்தது. தன் கணவன் தவருக எண்ணவில்லை என்பதை நினைத்ததும், விபாவின் கண்களுக்கு உலகமே இன்பமயமாகத் தோற்றியது. எவ்வளவு உதார குணம் அவருக்கு என்று எண்ணினுள். கணவன்மேலுள்ள காதலினுல் அவளுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. கணவனுடைய அன்பே உலகில் நிலைத்த ஆதரவு; பலசாலியான அவர் தோளில் இளங்கொடி போன்ற தன்னை அர்ப்பணம் செய்துவிட்டுக் கவலையின்றி இருப்பது என்று அவள் தீர்மானம் செய்தாள். இவ்வாறு எண்ணும்போது அவள் உள்ளம் மலர்ந்தது. மேகமற்ற இலையுதிர்காலத் தூய வானம்போல் மாசற்று இருந்தது அவள் உள்ளம். அவள் தன் தம்பி சமராதித்தியனுடன் குழந்தைபோல் விளையாடினுள். சின்னப் பெண்போல் தாயிடம் பிடிவாதம் பிடித்தாள். வீட்டு வேலையில் உதவி செய்வாள்; நிழல்போல் வாடித் திரிந்த நிலைமை அகன்றது. தெளிவான இளங் காலைபோல் இருந்தது அவள் மனம். முனபோலக் கூச்சம், பிணக்கு, துயரம், மௌனம் எதுவும் இப்போது இல்லை. அவள் மகிழ்வுடன் தாயிடம் பேசுவாள். இவ்வாறு

பேச முன்பு கூச்சமாக இருக்கும்; பேசவே விருப்பமும் இராது. பெண்ணின் களிப்பைக் கண்டு தாயின் உள்ளத்தில் அன்பு பெருக்கெடுத்தது. உள்ளூற இருந்த வேதனையை அவள் விபாவிடம் காட்டவில்லை. தாயாக இருந்து அவள் எப்படித்தான் விபாவின் புன்சிரிப்பை மங்க அடிப்பாள்? பெண் சிரித்த முகத்துடன் வீட்டில் நடமாடுகையில், தாயும் மனத்திருப்தியோடு அதைக் கண்டு மகிழ்வாள்.

அரசியின் மனத்தில் பயமும் சந்தேகமும் இருந்தன. அதனால்தான் அவள் இதுவரையில் விபாவைப் புக்ககம் அனுப்பவில்லை. இரண்டு வாரங்கள் கழிந்தன. உதயனுடைய விஷயமாக எவரும் கவலைப்படவில்லை. விபாவைக் குறித்து என்ன செய்வதென்று அரசி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இப்படி இன்னும் சில நாட்கள் கழிந்தன. நாளாக ஆக, விபாவின் தீவிரமும் அதிகரித்தது. தாமதமாக ஆகக் கணவனிடம் தன் குற்றம் பின்னும் அதிகம் ஆவதாகவே அவளுக்குப் பட்டது. அவர் கூப்பிட்டு அழைத்தபின் தாமதம் ஏன்? ஒரு முறை மன்னித்த பின்னரும் தயக்கமா? முதலில் சில நாட்கள் விபா ஒன்றும் சொல்லவில்லை. கடைசியில் அவள் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "அம்மா" என்றாள். தாயும் விஷயத்தைப் புரிந்துகொண்டாள். விபாவை மார்போடு அணைத்துக் கொண்டு, "என்ன, அம்மா?" என்றாள். "என்னை எப்போது அனுப்புவாய்? அம்மா!" என்றபோது விபாவின் முகம் காது நுனி வரையிலும் சிவந்தது. தாய் சிரித்து, "எங்கே அனுப்புவது?" என்றாள்.

"சொல்லேன், அம்மா!" என்று கெஞ்சினாள் விபா.

"கொஞ்சம் பொறு. சீக்கிரமே அனுப்புகிறேன், அம்மா!" என்றபோது தாயின் விழிகளில் நீர் அரும்பியது.

## 33

# கட்டளை நிறைவேறியது

வெகு நாட்களுக்குப் பின் உதயன் ராய்கருக்கு வந்திருந்தான். ஆனால் முன்போல் அவ்வளவு மகிழ்ச்சி அவனுக்கு இல்லை. உள்ளத்துள் அழுத்தும் ஒரு கவலை அவனை விடவே இல்லை. "தாத்தா செய்த காரியத்தால் அவருக்கு என்ன நேரிடுமோ, தெரியாது! அப்பா இதை எளிதில் விட மாட்டார். எந்தக் கெட்ட கணத்தில் நான் பிறந்தேனே!" என்று எண்ணியபடி அவன் வசந்தராயிடம் சென்றான். "தாத்தா! நான் யசோஹருக்கே போகிறேன்" என்றான்.

முதலில் வசந்தராய் சிரித்துப் பாடி, விஷயத்தைக் காதில் போட்டுக்கொள்ளாமல் இருந்தார்:

"இனியும் உன்னை விடுவேனோ?
என்மனம் விட்டே அன்பதனால்
பிணித்தே வைப்பேன் உன்னையான்;
பேதை என்றன் மனங்கவர்ந்து
தனியே வாடும்இவ் வுள்ளமதாம்
தேவா லயந்தனில் உறைந்திடுநீ;
கனிந்தே என்குறை தீர்த்திடுவாய்;
கள்வா! என்உளம் கவர்கள்வா!"

உதயன் தான் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லவும்,வசந்தராயின் உள்ளம் வருத்தமுற்றது. அவர் பாடுவதை நிறுத்தி வாடிய முகத்துடன், "ஏன்? என்னிடம் இருந்தால் உனக்கு என்ன கஷ்டமப்பா?" என்றார். உதயனால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

உதயனுடைய மனக் கவலையை மாற்ற, வசந்தராய் இராப்பகலாகத் தம்மால் ஆன வரையில் பாடுபட்டார்.

சிதார் வாசிப்பார்; அவனை அழைத்துக்கொண்டு உலாவச் செல்வார். அவனுக்காக ராஜ்யத்தின் காரியங்கள் யாவும் தடைப்பட்டன. உதயன் எங்கே யசோஹருக்குச் சென்று விடுவானோ என்று வசந்தராய் பயந்து அவனைத் தம் கண் பார்வையிலேயே வைத்திருந்தார். "அப்பா! அந்தக் கல் நெஞ்சர் உறையும் இடத்துக்கு நான் உன்னைச் செல்ல விடமாட்டேன்" என்பார்.

நாட்கள் செல்லச் செல்ல உதயனுடைய மனமும் மாறிக்கொண்டு வந்தது. வெகு நாட்கள் கழித்து அவன் விடுதலை அடைந்தான். குறுகிய கற்சிறையிலிருந்து தப்பித் தாத்தாவின் அன்பு, ஆதரவுக்கிடையே அவன் வந்து சேர்ந்தான். வெகு நாட்களுக்குப் பின் மரம், செடி, தூய வானம், அடிவானைத் தொடும் விடியலின் ஒளி இவைகளைக் கண்டும், புள்ளினத்தின் இன்னிசையைக் கேட்டும் மகிழ்ந்தான். சில்லென்ற காற்று அவனுடைய உடம்பில் பட்டது. இரவுகளில் வானம் நிறைந்த விண்மீன்களை அவனால் காண முடிந்தது. நிலா வெள்ளத்தின் மோனத்தை அவன் ஆழ்ந்து பருகுவான். இஷ்டம்போலக் காரியம் செய்யவோ, மனம் போன போக்கில் செல்லவோ அவனுக்கு யாதொரு தடையுமில்லை. இள வயதில் உதயனைக் கண்ட குடிகள் யாவரும் தொலைவிலிருந்து அவனைக் காண வந்தனர். ஒவ்வொரு நாளும் அக்கம் பக்கத்து ஊரிலுள்ள ஏழைகள் அவனைப் பார்க்க வருவார்கள். இளவரசனும் அவர்களை விசாரிப்பான். அவன் அவர்களை மறக்கவில்லை. அது கண்டு அவர்கள் களிப்பும் வியப்பும் ஒருங்கே அடைந்தனர். "மகாராஜா! முன்பு நீங்கள் ராய்கருக்கு வந்தபோது இந்தப் பிள்ளை பிறந்தது. நீங்கள் பார்த்தீர்கள். அப்புறம் உங்கள் ஆசியில் இன்னும் இரண்டு பிள்ளைகள் எனக்கு" என்று மதுரன் தன் குழந்தைகளை அழைத்துவந்தான். அவன் "வணங்குங்களடா" என்றதும் அவர்களும் இளவரசனை வணங்கினார்கள்.

"நீங்கள் யசோஹர் சென்றபோது, நான்தான் படகோட்டி" என்ருன் பராணன். "மகாராஜா! நீங்கள் ராய்கரில் என் கோல் வித்தையைக் கண்டு பரிசளித்தீர்கள்; என் பிள்ளைகளின் திறமையையும் காணவேண்டும். - வாருங்களடா!" என்று சீதள் சர்தார் தன் மக்களை அழைத்தான். இப்படி உதயனிடம் பழைய குடிகள் வந்து பழகிப் பேசினர்கள்.

இந்த ஆதரவு, மரங்களிடையே பரவி மலர் மணமேந்தி வீசும் காற்று, புள்ளினத்தின் இசை யாவும் கூடி உதயனுடைய மனக் கவலையை மாற்ற உதவி செய்தன. "அப்பாவுக்குக் கோபம் இராது. இல்லையேல் இத்தனை நாள் ஏதாவது செய்துவிட்டிருப்பாரே!" என்று அவன் கண்களை மூடிக்கொண்டு நம்பினன்.

ஆனல் இந்த நம்பிக்கை வெகு நேரம் நிலைக்கவில்லை. தாத்தாவுக்காக உள்ளூற ஒரு பயம் இருக்கத்தான் செய்தது. யசோஹர் திரும்புவதாக அவரிடம் சொல்வது என்னவோ வீண். ஒருவருக்கும் தெரியாமல் சென்றுவிட அவன் நினைத்தான். உடனே சிறைச்சாலையின் நினைவு வரும். இந்தச் சுயேச்சையின் மகிழ்ச்சி எங்கே! குறுகிய சிறு சிறை எங்கே! சிறைச்சாலையில் ஒரு கணம் கழிவதும் ஒரு யுகம் போல் இருந்தது. ஒளியும் காற்றுமின்றித் தனிமையாக அந்த அறையில் அடைபட்டு இருப்பதாக எண்ணும்போதே அவன் உடல் சிலிர்த்தது. அப்படியும் அவன் ராய்கரை விட்டுச் சிறைக்கு ஓடுவது மேலென்றே கருதினன். உடனே செல்வது சரி என்று அவனுக்குத் தோன்றவில்லை. என்றைக்காவது ஒருநாள் செல்வதன்றே அவன் எண்ணினன்.

அன்று வியாழக்கிழமை; ராகு காலத்தில் புறப்படக் கூடாது; மறுதினம் நாள் நன்ருக இல்லை. காலை முதல் பிசுபிசுவென்று தூற்றல் போட்டவண்ணமாக இருந்தது. வானத்தை மேகம் கவிந்திருந்தது. அன்று சாயங்காலம் சென்றுவிடுவது என்று உதயன் முடிவு செய்தான். காலை

யில் தாத்தாவைக் கண்டதும், அவர் அவனைத் தழுவிக் கொண்டு, "அப்பா! நேற்றிரவு ஒரு கெட்ட கனவு கண்டேன். எனக்கு அது சரியாகப் படவில்லை. வாழ்வில் நாம் இருவரும் என்றைக்குமே பிரிந்துவிடுவதாகக் கனவு கண்டேன்" என்றார்.

உதயன் தாத்தாவின் கையைப் பிடித்துக்கொண்டு, "என்ன தாத்தா! பிரிவதானாலும் இனிக் காணவே முடியாதா என்ன?" என்றான்.

வசந்தராய் ஏதோ நினைவாக, "என்னவோ! இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இருப்பேன்? வயதோ ஆகி விட்டது" என்றார். முதல் நாளிரவு கண்ட கனவு இன்னும் வசந்தராயின் மனத்தில் பதிந்திருந்தது. அவர் கவலை யுடன் ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தார்.

உதயன் கொஞ்சநேரம் கம்மென்று இருந்தபின், "தாத்தா! நமக்குள் மீண்டும் பிரிவு வந்தால் என்ன செய்வது?" என்றான்.

வசந்தராய் உதயனைத் தழுவி, "ஏனப்பா? ஏன் பிரிவு வருகிறது? என்னை விட்டுச் செல்லாதே! இந்தக் கிழ வயதில் என்னை விட்டுப் போகாதே!" என்றார். உதய னுடைய விழிகளில் நீர் ததும்பியது. தன்னுடைய மனம் தாத்தாவுக்கு எப்படித் தெரிந்ததென்று அவன் வியந் தான். அவன் பெருமூச்சுடன், "என்னால் உனக்கு ஏதாவது ஆபத்து வருமே, தாத்தா!" என்றான்.

வசந்தராய் சிரித்தார். "என்ன ஆபத்து? இந்த வய தில் நான் ஆபத்துக்கு அஞ்சுவதா? சாவை எதிர்பார்க்கும் எனக்கு என்ன பயமப்பா? மரணம் எனக்கு வழித்துணை. அதற்கா நான் அஞ்சுவேன்? வாழ்வில் விபத்துக்களை யெல்லாம் தாண்டிக் கிழ வயது வரையில் வந்தபின், கரைக்கு அருகில் படகு கவிழ்ந்தால்தான் என்ன?"

உதயன் அன்று முழுவதும் வசந்தராயுடனேயே இருந் தான். நாளெல்லாம் தூற்றலும் போட்டவாறு

இருந்தது. பிற்பகலில் மழை நின்றதும், உதயன் எழுந்தான். "எங்கே போகிருயப்பா?" என்ருர் வசந்தராய்.

"சற்றே உலாவிவிட்டு வருகிறேன்."

"இன்று போகாவிட்டால்தான் என்ன அப்பா?"

"ஏன், தாத்தா?"

வசந்தராய் அவனைத் தழுவி, "வீட்டை விட்டுச் செல்லாமல் இன்று என்னிடமே இரேன்" என்ருர்.

"நான் அதிக தூரம் போகவில்லை, தாத்தா, இதோ சீக்கிரம் வருவேன்" என்று உதயன் வெளியே சென்ருன். அரண்மனையை விட்டு வெளியே செல்லும்போது ஒரு காவலாளி, "மகாராஜா! நானும் கூடவரட்டுமா?" என்ருன்.

"வேண்டாம்."

"உங்கள் கையில் ஆயுதம் இல்லையே!"

"அவசியமில்லை."

உதயன் வெளியே சென்ருன். பரந்த வயல் வெளிகளினிடையே அவன் தனிமையாக நடந்தான். மெல்லப் பகலின் ஒளி குறைந்துகொண்டு வந்தது. உதயனுடைய மனத்தில் கவலை கவிந்தது. அவன் தன் பாட்டில் யாதொரு நோக்கமும் இன்றி நடந்தான். அவனுக்குப் போக்கிடம் எங்குமில்லை. அடுத்த கணத்தில் என்ன நேருமோ அதுவும் தெரியாது. வயதோ குறைவு; இன்னும் எவ்வளவு காலம் வாழவேண்டுமோ? வீடு வாயிலின்றி, நிலைத்த ஆதரவும் இராமல் அவனுடைய வாழ்நாள்எப்படித்தான் கழியுமோ? "விபா...விபா இப்போது எங்கே இருக்கிருளோ? இத்தனை நாள் அவளைச் சுகம் அநுபவிக்கவொட்டாமல் தடுத்தாகி விட்டது. இப்போது அவள் சுகமாக இருக்கிருளா? அவளாவது நன்ருக இருக்கட்டும்' என்று உதயன் விபாவை மனமார ஆசீர்வாதம் செய்தான்.

விடர் வெளியின் நடுவே, கமுகு, ஆல், அரச மரங்கள் நிறைந்த தோப்பு ஒன்று இருந்தது. வெயில் வேளையில் இடையர் அங்கே ஒதுங்குவது வழக்கம். உதயன் தோப்பி

னுள் போய் உட்கார்ந்தான். அந்தி மங்கி மெல்ல இருட்டியது. இளவரசன் அன்று யசோஹருக்கு ஓடுவதாக இருந்தான். அதைப்பற்றியே அவன் யோசித்தான். தான் ஓடிய செய்தி தெரிந்தால் வசந்தராயின் உள்ளம் எப்படித் தவிக்கும்? மனமுடைந்து அவர், "அப்பா! என்னை விட்டு ஓடினுயா!" என்று அழுவாரே!—அந்தத் தோற்றம் அவனுடைய மனக்கண்முன் தெளிவாகத் தோன்றியது.

இந்தச் சமயத்தில் ஒரு பெண், "இதோ உங்கள் இளவரசர்! இதோ" என்ருள்.

இரண்டு வீரர்கள் தீவட்டியுடன் வந்து அவன் எதிரே நிற்கவும், பின்னும் சிலர் அவனைச் சூழ்ந்துகொண்டனர். அந்தப் பெண் அவன் எதிரே நின்று, "என்னைத் தெரிகிறதா? நன்ருகப் பார்" என்ருள். உதயன் பார்த்தான். அவள் ருக்மிணியேதான்! வீரர்கள் அவளை அதட்டி, "தூரப் போ" என்றனர். அவள் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"இதெல்லாம் செய்தது யார்? நான்தான்! வீரரை அழைத்து வந்ததும் நானே! உனக்காக நான் இவ்வளவு செய்தேன். நீயோ..."

உதயன் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொள்ளவும், வீரர்கள் ருக்மிணியைப் பலவந்தமாக ஒதுக்கினுர்கள். முக்தியார் கான் எதிரே வந்து இளவரசனை வணங்கினுன். உதயன் வியப்புடன், "முக்தியார்! என்ன விஷயம்?" என்ருன்.

முக்தியார் கான் வணக்கமாக, "ஜனுப்! மகாராஜாவின் கட்டளையோடு வந்தேன்" என்ருன்.

"என்ன கட்டளை?"

முக்தியார் கான் பிரதாபனுடைய முத்திரையிட்ட பத்திரத்தை இளவரசனிடம் கொடுத்தான்.

இளவரசன் அதைப் படித்தான். "இதற்கா இத்தனை

வீரர்கள்? ஒரு கடிதம் அனுப்பினுல் நானே வருவேனே? வீண் தாமதமேன்? வா, போகலாம்" என்ருன்.

முக்தியார் கான் கைகூப்பி, "இப்போதே வரச் சாத்தியமில்லை" என்ருன்.

இளவரசன் பயத்துடன், "ஏன்?" என்ருன்.

"இன்னும் ஒரு கட்டளை; அதையும் முடித்த பின்னரே செல்லவேண்டும்."

"என்ன கட்டளை?" என்றபோது உதயனுடைய குரல் நடுங்கியது.

"ராய்கரின் ராஜாவுக்கு அரசர் மரண தண்டனை விதித்தார்."

இளவரசன் திடுக்கிட்டு உரத்த குரலில், "இல்லை; பொய்!" என்ருன்.

"இல்லை, இளவரசே! பொய் இல்லை. அரசரின் முத்திரையிட்ட பத்திரம் என் கையில் இருக்கிறது."

இளவரசன், சேனுபதியின் கையைப் பிடித்துக்கொண்டு பரபரப்புடன், "முக்தியார்! நீ எண்ணுவது தவறு. உதயன் கிடைக்காவிட்டால் வசந்தராயை...... என்றுதான் அரசர் சொல்லியிருப்பார். நானுகச் சிக்கிய பின் என்ன! இப்போதே என்னை அழைத்துச் செல்லுங்கள். என்னைக் கைது செய்யுங்கள். தாமதமேன்?" என்ருன்.

"இளவரசே! நான் நினைப்பது தவறல்ல. அரசர் தெளிவாகக் கட்டளையிட்டார்."

இளவரசனுல் இருக்க முடியவில்லை. "நீ எண்ணுவது தவறு. வா! அரசர் சொன்னது அதுவல்ல; யசோஹர் செல்வோம். நான் அரசரிடம் விஷயத்தை விளக்கிச் சொல்கிறேன். அப்படி இரண்டாவது முறையும் அவர் சொன்னுல் நீ செய்யலாம்" என்ருன்.

முக்தியார் கான் வணக்கமாக, "அதுவும் நடக்காது; அரசே!" என்ருன்.

"முக்தியார்! ஒரு நாள் நானும் அரசனாக வருவேன். அதை நினைத்துப் பார். நான் சொல்வதைக் கேள்."

முக்தியார் பதிலே சொல்லவில்லை.

இளவரசனுடைய முகம் வெளுத்தது. நெற்றியில் வேர்வைத் துளிகள் அரும்பின. அவன் சேனாபதியின் கையைக் கெட்டியாகப் பிடித்து, "முக்தியார்! அவர் கிழவர்; யாதொரு பாவமும் செய்யாதவர். ஒரு புண்ணியாத்மாவைக் கொன்றால் உனக்கு நரகத்திலும் இடமிராது" என்றான்.

"எஜமானனுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் தவறு ஒன்றுமில்லையே!"

"பொய்! எந்த நூல் இதைச் சொல்லுகிறதோ, அது பொய். முக்தியார்! பாவம் செய்வது கூடாது."

முக்தியார் பதில் பேசவில்லை. உதயன் நாலு பக்கமும் பார்த்தான். "அப்படியானால் என்னை விடு; உன் சேனைகளுடன் நீ கோட்டைக்கு வா. உன்னைப் போருக்கு அழைக்கிறேன். அங்கு உனக்கு வெற்றி கிடைத்தால், உன் கட்டளையை நிறைவேற்று" என்றான்.

முக்தியார் கான் அதற்கும் பதில் சொல்லவில்லை. வீரர்கள் பின்னும் நெருக்கமாக உதயனைக் கவிந்து கொண்டனர். வேறு வழியின்றி உதயன் உரத்த குரலில், "தாத்தா, ஜாக்கிரதை" என்றான். விடர் வெளியின் கோடி வரையில் சென்று குரல் மங்கி மறைந்தது. வீரர்கள் உதயனைப் பிடித்தனர். உதயன் பின்னும் ஒருமுறை, "தாத்தா! பத்திரம்!" என்று கூவினான். வழியோடு சென்ற ஒருவன் இக் குரலைக் கேட்டு, "யார்?" என்றான். உதயன் பரபரப்புடன், "கோட்டைக்கு ஓடு! அரசரை ஜாக்கிரதைப் படுத்து" என்றான். அதற்குள் வீரர்கள் சிலர் அவனைக் கைது செய்தனர். வழியோடு சென்றவர்களை எல்லாம் அவர்கள் பிடித்துவைத்துக்கொண்டார்கள்.

சிலர் உதயனுடன் தோப்பில் தங்கினர். முக்தியார் கானும் சில வீரர்களும் மாறு வேஷம் அணிந்து, ஆயுதங்

களை மறைத்துக்கொண்டு கோட்டையை நோக்கிச் சென்றனர். ராய்கரின் கோட்டைக்குப் பல வாயில்கள் உண்டு. அவர்கள் வெவ்வேறு வழியாக உள்ளே புகுந்தனர்.

அந்தி வேளையில் வசந்தராய் சந்தியா காலத்திற்குரிய சடங்குகளைச் செய்துகொண்டிருந்தார். அரண்மனைக் கோயிலின் மணியோசை கேட்டவாறு இருந்தது. அரண்மனையில் கூச்சலே இல்லை. எங்கும் ஒரே நிச்சப்தம். வழக்கப்படி பல வேலையாட்கள் சாயங்காலத்தில் ஓய்வு பெற்றிருந்தனர்.

அப்போது முக்தியார், தம் அறைக்குள் வருவதைக் கண்டார் வசந்தராய். "கான் சாகேப்! உள்ளே வர வேண்டாம். இது முடிந்ததும் வருகிறேன்" என்றார்.

முக்தியார் கான் வெளியே போய் நின்றான். வசந்தராய் விரைவில் முடித்துக் கொண்டுவந்து, முக்தியாரைத் தழுவிக்கொண்டார். "கான் சாகேப்! சுகந்தானே?" என்றார்.

முக்தியார் கான் சலாம் செய்து, "ஆம், அரசே!" என்றான்.

"சாப்பாடு ஆயிற்றா?"

"ஆம், அரசே!"

"இரவு இங்கே தங்க ஏற்பாடு செய்கிறேன்."

"அவசியமில்லை, மகாராஜா! காரியமானதும் சென்றுவிடுவேன்."

"அது நடக்காது, சாகேப்! இன்று விடமாட்டேன். இரவு தங்கியாக வேண்டும்."

"இல்லை, மகாராஜா! சீக்கிரம் போகவேண்டும்."

"ஏன்! அவசியமானவேலையா? பிரதாபன் சுகந்தானே?"

"சுகமே இருக்கிறார்."

"பின் என்ன வேலை? சொல்! மிகவும் அவசரம் என்று கேட்கப் பரபரப்புண்டாகிறது. அவனுக்கு ஆபத்து ஒன்றுமில்லையே!"

"இல்லை, மகாராஜா! அவருடைய கட்டளையை நிறைவேற்ற வந்தேன்."

"என்ன கட்டளை? உடனே சொல்."

முக்தியார் கான் ஒரு பத்திரத்தை அவர் கையில் கொடுத்தான். அவர் விளக்கின் அருகில் சென்று அதைப் பார்த்தார். இதற்குள் சில வீரர்கள் கதவருகில் வந்து சூழ்ந்து நின்றனர்.

படித்தானதும், வசந்தராய்மெல்ல முக்தியார்கானிடம் வந்தார்; "இது பிரதாபனுடைய கையெழுத்தா?" என்றார்.

"ஆம். மகாராஜா."

வசந்தராய் அழுதார்; "கான் சாகேப்! நான் அவனை என் கையால் வளர்த்தேன். பிரதாபன் சிறுவனாக இருந்த போது மார்பின் மேலும் தோளின் மேலும் வைத்துக் கொண்டேன். அவன் பெரியவனானதும் கல்யாணம் செய்து வைத்து, அரசனாக முடியும் சூட்டினேன். அவனுடைய குழந்தைகளின் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அந்தப் பிரதாபனா இன்று இப்படி எழுதினான்?" என்றார்.

முக்தியார் கானுடைய விழிகளிலும் நீர் சுரந்தது. அவன் தலை குனிந்து கம்மென்றிருந்தான்.

"என் செல்வம் உதயன் எங்கே?"

"அவர் கைதி. அரசரிடம் விசாரணைக்காக அனுப்பியிருக்கிறேன்."

"அவன் கைதியா? அவனை ஒருமுறை காணவும் முடியாதா?"

"இல்லை, ஜனாப்! அநுமதியில்லை" என்று முக்தியார் கைகூப்பினான்.

"ஒருமுறை அவனைக் காண விடமாட்டாயா?" என்று கண்ணீர் பெருகக் கேட்டார் வசந்தராய்.

"மகாராஜா! நான் வேலையாள்."

வசந்தராய் பெருமூச்சு விட்டார். "இந்த உலகில் எவருக்கும் இரக்கமில்லை. வா சாகேப்! உன் கட்டளையை நிறைவேற்றலாம்" என்றார்.

முக்தியார் தரையைத் தொட்டுக் கரம் குவித்தான். "மகாராஜா! என்னை மன்னிக்கவேண்டும். நான் அரசரின் கட்டளையைச் செய்கிறேன். என் தவறு எதுவுமில்லை" என்றான்.

"இல்லை, சாகேப்! நீ என்ன செய்தாய்? உன்னை நான் எதற்கு மன்னிப்பது?" என்று அவர் முக்தியாரைத் தழுவினார்; "பிரதாபனிடம் சொல். நான் அவனை ஆசீர்வாதம் செய்கிறேன். கான் சாகேப்! உதயனுடைய பொறுப்பை நான் சாகுமுன் உன் கையில் விட்டேன். அவன் குற்றமற்றவன். அவனை வீணாக வருத்தவேண்டாம்" என்றார்.

வசந்தராய் கண்களை மூடிக்கொண்டு, இஷ்ட தெய்வத்தின் முன் படுத்தார். வலது கையில் ஜபமாலை இருந்தது. "சாகேப்! உன் கட்டளையை முடிக்கலாம்" என்றார்.

"அப்துல்!" என்றான் முக்தியார் கான். அப்துல் உருவிய வாளுடன் உள்ளே வந்ததும் முக்தியார் முகத்தைத் திருப்பிக்கொண்டு வெளியே வந்தான். கண நேரத்துக்கெல்லாம் ரத்தம் சொட்டும் வாளுடன் அப்துல் திரும்பினான். அறையெங்கும் ரத்தம் வெள்ளமாகப் பெருகியது.

# 34

## உதயனின் சபதம்

முக்தியார் கான் ராய்கரில் சேனைகளை வைத்து, இளவரசனுடன் உடனே யசோஹருக்குக் கிளம்பினான். வழியில் இரண்டு நாட்கள் உதயன் உணவையே தொடவில்லை. எவரோடும் பேசவுமில்லை; கல்லைப்போல் அசைவற்று உட்கார்ந்திருந்தான். தூங்கவோ, கண் இமைக்கவோ இல்லை. கண்கள் இருண்டிருந்தன. தோணியில் ஏறியதும் அவன் வெறிச்சென்று ஜலத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். தோணி சென்றது. துடுப்புக்களின் ஓசையும் அலைகளின் ஒலியும் அவன் காதில் விழுந்தன. அவன் எதையும் கவனியாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இரவு வந்தது. வானில் தாரகைகள் தோன்றவும், படகோட்டிகள் தோணியை நிறுத்தினர். படகில் இருந்த எல்லோரும் தூங்கினார்கள். தோணியின் மேல் மோதும் சிற்றலைகளின் ஒலி கேட்டவண்ணமாக இருந்தது. இளவரசன் கண்கொட்டாமல் யோசித்தான். விடியலில் படகோட்டிகள் எழுந்து மீண்டும் யாத்திரையைத் தொடங்கினார்கள். காற்றுச் சில்லென்று வீசியது. சிவந்த கீழ் வானத்தையே நோக்கினான் உதயன். மூன்றும் நாள் அவனுடைய கண்கள் ஆறாக நீரை வடித்தன. கைகளால் தலையைத் தாங்கி, அவன் வானையும் நீரையும் மாறி மாறிப் பார்த்தான். தோணி தன் போக்கில் சென்றது. கரையின் மரங்கள் மேகத்துணுக்குகள் போலக் கண்முன் மறைந்தன. வெகுநேரம் இவ்வாறு சென்றது. முக்தியார் கான் மெல்ல அவனை அணுகி வணக்கமாக, "இளவரசே! என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

இளவரசன் திடுக்கிட்டு, முக்தியாரின் முகத்தையே வெகுநேரம் உற்று நோக்கினான். சேனாபதியின் முகத்தில்

க்ண்ட வேதனேக் குறி உதயனுடைய மனத்தைத் திறந் தது. "நான் உலகில் பிறந்து என்ன செய்தேன்? என்னால் எவ்வளவு நாசம்? தெய்வமே! பலவீனர்கள் ஏன் உலகில் தோன்றவேண்டும்? சொந்த வலிமையால் உலகில் நிற்க முடியாதவர்கள், ஒவ்வோர் அடியிலும் பிறரைத் தழுவுப வர்கள் இவர்களால் உலகிற்கு என்ன லாபம்? இவர்கள் தாம் புணேயென்று பிடித்துக்கொள்பவரையும் மூழ்க அடிக் கிருர்கள். உலகின் தொழில்கள் எல்லாம் இவர்களால் தடைப்படுகின்றன. தங்களாலும் இருப்பது முடியாது; மற்றவர்களேயும் விபத்துக்கு உள்ளாக்குகின்றனர். நான் பலவீனன்; கோழை. தெய்வம் என்னேப் பிழைக்க வைத் தது. உலகில் களிப்பும் நம்பிக்கையுமாக இருந்தவரை ஏன் இப்படி நாசமாக்க வேண்டும்? இனி ஏதும் இல்லே. உலகிலிருந்து நான் விடை பெறவேண்டியதுதான்" என்ருன்.

உதயனேக் கைது செய்து பிரதாபனிடம் கொணர்ந்து நிறுத்திஞன் முக்தியார் கான். பிரதாபன் அவனே அந்தப் புரத்துக்கு அழைத்துச் சென்று கதவை மூடிக்கொண் டான். பிரதாபனே அணுகியபோது உதயனுடைய உடல் சிலிர்த்தது. வெறுப்பினுல் அவனுடைய உள்ளம் குன்றி யது. அவன் தகப்பனே ஏறிட்டும் பார்க்கவில்லே.

பிரதாபன் கம்பீரமான குரலில், "உனக்கு எந்தத் தண்டனே ஏற்றது?" என்ருன்.

உதயன் சற்றும் கலங்காமல், "உங்கள் இஷ்டம்" என்ருன்.

"என் அரசுக்கு நீ ஏற்றவனல்ல."

"மகாராஜா! எனக்கு அது வேண்டாம். எனக்கு விடை தாருங்கள். இதுவே என் வேண்டுகோள்."

பிரதாபனுக்கும் அதுதான் விருப்பம். "நீ சொல்வது உன் உள்ளத்தின் உண்மையான பேச்சு என்று எப்படித் தெரியும்?" என்ருன்.

"பலவீனத்துடன் பிறந்தேன். ஆனால் இதுவரையில் தன்னலம் கருதி நான் பொய் சொன்னவனல்ல. அப்படியும் நம்பாவிட்டால் அன்னைகாளியின் சரணங்களைத் தொட்டுச் சபதம் செய்கிறேன். உங்கள் அரசில் ஊசி அளவும் எனக்கு வேண்டாம். சமராதித்தியனே இதற்கு வாரிசு."

"பின் உனக்கு என்ன வேண்டும்?" என்று பிரதாபன் களிப்புடன் கேட்டான்.

"மகாராஜா! எனக்கு ஒன்றும் வேண்டாம். மிருகம் போல் என்னைக் கூட்டில் அடைக்கவேண்டியதில்லை. என்னை விடுங்கள்: நான் காசிக்குச் செல்கிறேன். இன்னும் ஒன்று: எனக்குக் கொஞ்சம் பணம் தாருங்கள். காசியில் தாத்தாவின் பெயரால் ஒரு சத்திரமும் கோயிலும் கட்டுவேன்."

"சரி. அப்படியே ஆகட்டும்."

உதயன் அன்றைய தினமே கோயிலுக்குச் சென்று பிரதாபன் எதிரே சபதம் செய்தான். "தாயே, காளி! நீ சாட்சி; உன் பாதங்களைத் தொட்டுச் சொல்கிறேன்: நான் உயிரோடிருக்கும்வரையில் யசோஹரின் ஒரு பிடி மண்ணும் எனக்கு வேண்டாம். சிம்மாசனமோ, செங்கோலோ நான் தொட விரும்பவில்லை. தொட்டேனே, தாத்தாவைக் கொன்ற பாவம் என்னைச் சேரட்டும்" என்றபோது அவனுடைய உடல் சிலிர்த்தது.

உதயாதித்தியன் காசிக்குச் செல்லும் செய்தி தெரிந்ததும் அரசி அவனிடம் வந்தாள். "அப்பா! என்னையும் உன்னோடு அழைத்துச் செல்" என்றாள்.

"அதென்ன, அம்மா! சமராதித்தியன் இருக்கிறான். உன் குடும்பம் இது. நீ போய்விட்டால் யசோஹரின் அழகே நிலையாதே!"

"அப்பா! நீ இந்த வயதில் உலகைத் துறந்தாய். நான் எப்படி உயிருடன் இருப்பேன்? ராஜகுடும்பத்தை விட்டு நீ ஆண்டியாவதா? உன்னைக் கவனிப்பவர் யார்?

உன் தகப்பனுர் மனம் கல்லென்ருல், நானும் உன்னைவிட்டு இருக்க முடியுமா?"— அரசிக்குத் தன் குழந்தைகளுள் உதயனிடம் அன்பு அதிகம். உதயனுக்காக அவள் மார்பு விண்டு அழுதாள்.

உதயன் தாயின் கையைப் பிடித்துக் கண்ணீருடன், "அம்மா, உனக்குத் தெரியும்: நான் இங்கிருந்தால் அடிக்கு அடி எனக்கு ஆபத்து வருகிறது. நீ கவலைப்படாதே! நான் விசுவேசுவரருடைய பாதங்களில் போய் நிம்மதி அடைகிறேன்" என்ருன்.

உதயன் விபாவிடம் சென்ருன்; "விபா! நான் காசிக்குச் செல்லுமுன் உன்னையும் சுகமடையச்செய்வேன். உன்னை நானே அழைத்துச் சென்று, உன் புருஷனிடம் விடுவேன். இதுவே என் ஆசை" என்ருன்.

"தாத்தா எப்படி இருக்கிருர்?" என்ருள் விபா.

"சுகந்தான்" என்று உதயன் பரபரப்புடன் அங்கிருந்து சென்ருன்.



# 35

## பிரயாணம்

உதயன், விபா இருவரும் புறப்படத் தயாராயினர். விபா தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். புக்ககம் செல்லுமுன் அந்தப்புரத்தவர் விபாவுக்கு அநேக புத்திமதிகள் கூறினர்.

அரசி உதயனிடம், "அப்பா! விபாவை அவர்கள் கஷ்டப்படுத்தினுல்—?" என்ருள்.

"ஏனம்மா? ஏன் கஷ்டப்படுத்துவார்கள்?"

"என்னவோ, அப்பா! விபாவின்மேல் கோபமும் இருக்கலாம் அல்லவா?"

"இல்லையம்மா. அவள் குழந்தை. அவள்மேல் ஏன் கோபங்கொள்ளப் போகிருர்கள்?"

"ஜாக்கிரதை! அவர்கள் தள்ளி வைத்தால் விபா பிழைக்க மாட்டாள்" என்று அரசி அழுதாள்.

உதயனுடைய மனத்தில் ஓர் ஐயம் பிறந்தது. விபாவைப் புருஷன் வீட்டார் தள்ளி வைக்கலாம் என்ற எண்ணமே அவனுக்கு அதுவரை இல்லை; அவள் கஷ்டங்கள் யாவும் தீர்ந்துவிட்டதாகவே அவன் நம்பியிருந்தான். ஆனல் அவ்வாறு நேராதோ? அவனல் விபாவின் அதிருஷ்டம் எவ்வாறு மாறுமோ?

போகுமுன் விபாவும் உதயனும் தாயை வணங்கி, ஞர்கள். அபசகுனம் வருமோ என்று அரசி அழவில்லை. அவர்கள் சென்றபின் அவள் கீழே புரண்டு அழுதாள். உதயனும் விபாவும் தகப்பனையும் மற்றுமிருந்த பெரியவர்களையும் வணங்கினர். உதயன் சமராதித்தியனைத் தூக்கி முத்தமிட்டு, "அப்பா! நீ உட்கார இருக்கும் ஸிம்மாசனத்தின் சாபம் உன்னைத் தீண்டாமல் இருக்கட்டும்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அரண்மனையின் வேலையாட்களுக்கு உதயன்மேல் அன்பு அதிகம். அவர்கள்

எல்லோரும் அவனை வணங்கிவிட்டு அழுதார்கள். கடைசியில், கோயிலில் தெய்வத்தை வணங்கிய பின் தமையனும் தங்கையும் கிளம்பினார்கள்.

துயரம், வேதனை, அநியாயம், அட்டூழியம் இவைகளுக்கு உறைவிடமான யசோஹர் பின் தங்கியது. வாழ்வைப் பிணைத்த தளை விலகியது. இனி உயிருள்ளவரையில் இந்த வீட்டினுள் நுழைவது கூடாது என்று உதயன் முடிவு செய்தான். உதிரவெறி பிடித்த கல் அரண்மனை வானளாவித் தலை தூக்கி, அரக்கன்போல் நின்றது. சூழ்ச்சி, மனம்போன போக்கு, ரத்த வெறி, பலவீனரைக் கஷ்டப்படுத்தல் இவைகளைச் செய்யும் கல்நெஞ்சர் உறையும் காடு பின் தங்கியது. எதிரே எல்லையற்ற சுயேச்சை, இயற்கையின் தூய அழகு, உள்ளத்தின் இயல்பான அன்பு இவைகள் யாவும் அவனைத் தழுவக் கரம் நீட்டின. அப்போதுதான் பொழுது விடிந்தது. ஆற்றின் கிழண்டைப் புறத்துக் காடுகளினூடே வெயிலின் கதிர்கள் கூர்வேல்போலப் பாய்ந்தன. மரங்களின் உச்சியைப்பொன் போர்த்தது போல் வெயில் பரவியிருந்தது. அக்கம் பக்கத்தூரார் எழுந்துவிட்டனர். படகோட்டிகளும் பாட்டுடன் பாய்மரத்தை விரித்தனர். மலர்ச்சி, தூய்மை, வனப்பு இவைகள் மண்டிய விடியலின் முகம் கண்டு, உதயனுடைய மனம் புள்ளினத்துடன் சுயேச்சையின் புகழைப் பாடியது. "ஒவ்வொரு பிறவியிலும், இயற்கையின் தூய்மையுப் பசுமையும் நிறைந்த இவ்வனப்பைச் சுயேச்சையாகக் கண்டு, இந்த உயிர்களோடு கூடி வாழும் புண்ணியம் எனக்கு வேண்டும்" என்றுதான் அவன் விரும்பினான்.

தோணி விர்ரென்று சென்றது. படகோட்டிகளின் பாட்டையும் ஆற்று நீரின் இரைச்சலையும் கேட்டவாறு உதயனும் விபாவும் சென்றனர். விபாவின் உள்ளத்தில் களிப்பின் சுடர் அலைந்தாடியது. இளங்கதிரவனுடைய வனப்பு அவள் முகத்தில் பளிச்சிட்டது. இத்தனை

நாளாக ஏதோ கெட்ட கனவுபோல் அவள் தோன்றினாள். விபா போகிறாள்; யாரிடம் போகிறாள்? அவளை அழைப்பது யார்? நிலைத்த காதல் அவளை அழைத்தது. விபா, சிறு பறவைபோல் சிறகுகளை மூடிக்கொண்டு அந்த இனிய காதலினுள் மூழ்கிக் கிடந்தாள். உலகெங்கும் அவள் அன்பின் பெருவெள்ளத்தையே கண்டாள். உதயன் மெதுவான குரலில் விபாவுக்கு எத்தனையோ கதைகளைச் சொல்லிக்கொண்டே போனான். அன்று அவளுக்குக் கேட்பது, பார்ப்பது எல்லாம் பிடித்தன.

ராமசந்திர ராயின் நாட்டினுள் தோணி நுழைந்தது. நாலு பக்கமும் பார்த்து விபா மகிழ்ந்தாள். எவ்வளவு வனப்பு! குடிசைகளையும் அங்கு வாழும் மக்களையும் பார்த்ததும், 'எவ்வளவு நிம்மதியாக வாழ்கிறார்கள்!' என்று எண்ணினாள். அவர்களை அழைத்து அரசனைப்பற்றிக் கேட்கலாமா என்றும் அவளுக்குத் தோன்றியது. அவர்கள் பேரில் உள்ளூற அவளுக்கு ஒரு பாசம் மூண்டது. கண்ணில் பட்டவர்களை எல்லாம் அவள் நேசித்தாள். நடு நடுவே இரண்டோர் ஏழைகளைக் கண்டு, "இவர்களுக்கு ஏன் இந்த நிலை? நான் அந்தப்புரத்திற்குச் சென்றதும் இவர்களை அழைத்து இவர்கள் துயரைத் தீர்ப்பேன்' என்று நினைத்தாள். இந்த நாட்டில் ஏழைமையும் துயரமும் இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. "குடிகள் என்னை அணுகி அம்மா என்று அழைக்கமாட்டார்களா? தங்களுடைய வேதனையை என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று அவள் ஏங்கினாள். நகரை ஒட்டிய ஒரு கிராமத்தில் உதயன் தோணியை நிறுத்தினான். அரண்மனைக்குத் தங்கள் வரவைத் தெரிவித்தால் ஆட்கள் வரவேற்பார்கள் என்று அவன் எண்ணினான். படகு நின்றபோது பிற்பகலாகிவிட்டது. உதயன் மறுநாள் ஆள் அனுப்ப எண்ணியிருந்தான். உடனே சொல்லியனுப்ப வேண்டுமென்று விபா துடித்தாள்.

# 36

## பிச்சைக்காரியா? இளவரசியா?

நாட்டு மக்கள் பரபரப்புடன் இருந்தனர். எங்கும் மங்கள வாத்தியங்களின் ஒலி; ஊரெங்கும் கொண்டாட்டம். விபாவின் உள்ளம் ஏற்கனவே களிப்பில் துள்ளியாடியது; அதிலும், வாத்திய ஓசைகள் அவளுடைய மகிழ்ச்சியை அதிகமாக்கின. உதயனுக்குத் தெரியுமோ என்று வெட்கி, விபா தன் ஆர்வத்தை அடக்கிக்கொண்டாள். உதயன் ஆற்றங்கரையில் கொண்டாட்டத்தைக் கண்டதும், விஷயமென்ன என்பதை அறிய ஊரினுள் சென்ருன்.

இவ்வாறு கொஞ்சநேரம் சென்றபின் கரையில் ஒருவன், "இது யார் படகு?" என்று கேட்டான். படகில் இருந்த வேலையாட்கள், "யார், ராமமோகனு? வா, வா" என்றனர். மோகனன் பரபரப்புடன் தோணிக்குள் சென்ருன். விபா தனிமையாக உள்ளிருந்தவள் மோகனனைக் கண்டதும், "மோகன்" என்ருள்.

"அம்மா!—" விபாவின் மலர்ந்த முகம், நிறைந்த சிரிப்பு இவைகளைக் கண்டு வெகுநேரம் இருந்தபின் அவன், "அம்மா! நீ வந்தாயா?" என்ருன்.

"ஆமாம்; மோகன்! அரசருக்கு இதற்குள் விஷயம் தெரிந்ததா? என்னை அழைத்துச் செல்ல வந்தாயா?"

"இல்லை, அம்மா. இன்று வேண்டாம். வேருெரு நாள் அழைத்துச் செல்கிறேன்."

மோகனனுடைய முகத்தைக் கண்டு விபாவின் சிரிப்பு மங்கியது. "ஏன் மோகன்? என்ன விஷயம்?" என்ருள்.

"இன்று இருட்டிவிட்டது; வேண்டாம்."

விபா பயத்துடன், "மோகன்! என்ன நடந்தது? உண்மையைச் சொல்" என்ருள்.

ராமமோகனுல் இருக்க முடியவில்லை. உண்மையை மறைத்து வைப்பது அவன் வழக்கமில்லை. அவன்

தொப்பென்று உட்கார்ந்து அழுதான். "அம்மா! உன் ராஜ்யத்தில் உனக்கு இடமில்லை. உன் அரண்மனையில் உனக்கு உரிமை இல்லை. இன்று மகாராஜா வேறு விவாகம் செய்துகொள்கிறார்" என்றான்.

விபாவின் முகம் வெளுத்தது; கைகால்கள் சில்லிட்டுப் போயின.

"அம்மா! இந்த அடிமை அழைத்தபோது நீ ஏன் வரவில்லை? நீ கல் நெஞ்சுடன் என்னைத் திரும்ப அனுப்பினாயே! என்னால் அரசரிடம் முகம் காட்ட முடியவில்லை. மார்பு விண்டது. இருந்தும் உன் பக்கம் பேச எனக்கு வாயில்லை" என்றான் மோகனன்.

விபாவின் கண்முன் எல்லாம் இருண்டன. தலை சுற்றி அவள் விழுந்தாள். மோகனன் பரபரப்புடன் நீர்கொணர்ந்து அவள் முகத்தில் தெளித்தான். கொஞ்சநேரம் பொறுத்து விபா எழுந்து உட்கார்ந்தாள். அந்தத் தாக்குதலில் அவளுடைய கனவுகள், கற்பனைகள், களிப்புக்கள் எல்லாம் தகர்ந்தன. கணவனுடைய நகருக்கு வந்து, அரண்மனையினுள் பசித்த உள்ளத்துடன் நுழையும்போது, அவளுடைய கற்பனைகள் எல்லாம் கானல் நீர்போல் மறைந்தன.

அவள் கவலையுடன், "மோகன்! அவர் என்னை அழைத்தார். நான் வரத் தாமதமாகிவிட்டதா?" என்றாள்.

"ஆம், தாயே!"

"என்னை மன்னிக்கவே மாட்டாரா?" என்று பொறுமையை இழந்து கேட்டாள் விபா.

"மன்னிப்பு எங்கே, அம்மா?"

"மோகன், அவரை நான் ஒரு முறை காண வேண்டுமே!" என்று விபா விக்கி விக்கி அழுதாள்.

மோகனன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "இன்று வேண்டாமே, அம்மா" என்றான்.

"இல்லை. மோகன்! இன்றைக்கே பார்க்கவேண்டும்."

"இளவரசர் கிராமத்திலிருந்து வரட்டுமே!"

"இல்லே, மோகன்! இப்போதே போகலாம்." உதயனுக்கு இது தெரிந்தால் அவமானத்துக்கு அஞ்சிப் போக விடமாட்டானென்று விபா நினைத்தாள்.

"சரி. பல்லக்குக் கொண்டுவருகிறேன்" என்ருன் மோகன்.

"பல்லக்கு எதற்கு? நான் என்ன அரசியா? சாதாரணக் குடிதான் நான். பிச்சைக்காரிபோல் செல்வேன்."

"என் உயிருள்ள வரையில் அதைக் காணமுடியாது, அம்மா."

"மோகன், உன் காலில் விழுகிறேன். தடை சொல்லாதே! நேரமாகிறது" என்று ஏக்கத்துடன் சொன்னுள் விபா.

"சரியம்மா! உன் இஷ்டம்" என்று மனமுடைந்து போய்ச் சொன்னுன் மோகனன்.

விபா சாதாரண உடையில் தோணியிலிருந்து வெளியே வந்தாள். படகோட்டிகள், "அம்மா, இந்த உடையில் எங்கே போகிருய்?" என்று தடை செய்தனர்.

"இது என் அம்மாவின் ராஜ்யம். அவள் இஷ்டப்படி செய்யலாம்" என்று ராமமோகனன் அவர்களை யெல்லாம் ஒதுக்கினுன்.

நாலு பக்கமும் ஜனத்திரள். முன்னெல்லாம் விபா கூச்சத்தில் புழுங்கி இருப்பாள். இன்று அவள் கண்ணில் எதுவும் படவில்லே. எல்லாம் கனவென்றே எண்ணினுள். அவள் காணும் கூட்டம், கேட்கும் கூச்சல் எதற்கும் அர்த்தம் இல்லே என்றே அவள் நினைத்தாள்.

கூட்டத்தினூடே அரண்மனே வாயிலுக்கு வந்ததும், ஒரு காவலாளி விபாவின் கையைப் பிடித்து நிறுத்தினுன். விபா நாலு பக்கமும் பார்த்துத் திடுக்கிட்டாள். மோகனன் முன்னே சென்றவன், திரும்பிக் காவலாளியை விழித்து நோக்கினுன். சற்றுத் தொலேவில் நின்ற பர்னுண்டிஸ்

காவலாளியை அதட்டவும், விபா உள்ளே சென்ருள். அங்கு எவரும் அவளைக் கவனிக்கவோ, வரவேற்கவோ இல்லை.

அறையினுள் அரசனும் ரமாயியும் இருந்தனர். விபா அரசனுடைய முகத்தைக் கண்டதுமே, அவன் கால்களில் விழுந்தாள்; அரசன் பரபரப்புடன், "யார்? பிச்சைக் காரியா? என்ன வேண்டும்?" என்ருன்.

விபா குனிந்த தலை நிமிர்ந்தாள். கண்களில் நீர் வடிய, "இல்லை, ஸ்வாமி! என்னுடைய சர்வத்தையும் தானம் செய்ய வந்தேன். பிறர் கையில் தங்களைக் கொடுத்து விடை பெற எண்ணினேன்" என்ருள்.

மோகனன் பொறுக்காமல் அருகில் வந்து, "அரசே! இவள் தங்கள் பத்தினி; யசோஹரின் ராஜகுமாரி" என்ருன்.

திடீரென்று அரசனுடைய உள்ளம் திடுக்கிட்டது. அதற்குள் ரமாயி சிரித்துக் கடுமையான குரலில், "ஏன்? அண்ணனைப் பிடிக்கவில்லையா?" என்ருன்.

அரசனுடைய உள்ளத்தில் இரக்கம் இருந்தது. ஆனால் அவளுக்கு இரங்குவது கேலிக்கு இடமென்று எண்ணி அவனும் சிரித்தான்.

விபாவின் தலையில் இடி விழுந்ததுபோல் ஆயிற்று கூச்சத்தில் அவள் மனம் புழுங்கினுள். "பூமிதேவி! இரண் டாகப் பிளந்து என்னை மூடிக்கொள்ளேன்" என்று மனமார வேண்டினுள். அவளுடைய பார்வை ஏக்கத்துடன் ராம மோகனன் பக்கம் சென்றது.

ராமமோகனன் ஓடிவந்து ரமாயியைத் தூக்கி அறைக்கு வெளியே தள்ளினுன். அரசன் கோபத்துடன், "மோகன்! என் எதிரேயா உன் கொற்றம்?" என்ருன்.

"மகாராஜா! நானு கொற்றம் அடிக்கிறேன்? உங்கள் அரசியை-என் தாயை-அவன் அவமானம் செய்தான். இது மட்டுமல்ல; மொட்டையடித்துச் சாண நீரைத் தலையில்

ஊற்றி ஊரைவிட்டு விரட்டுவேன். இல்லாவிட்டால் பெயர் ராமமோகனன் அல்ல" என்று சொல்லும்போ, அவனுடைய உதடுகள் துடித்தன.

அரசன் மோகனனை அதட்டினுன். "யார் என் அரசி? அவளை எனக்குத் தெரியாதா?" என்ருன்.

விபாவின் முகம் மாறியது. வாயைத் தலைப்பினு மூடிக்கொண்டாள். கால்கள் வெட வெடவென்று நடுங்க, அவள் மயங்கிக் கீழே விழுந்தாள். மோகனன் கைகூப்பி, "மகாராஜா! நான்கு தலைமுறையாக உன் வம்சத்துக் உழைத்தேன். உன்னைச் சிறுவயது முதல் வளர்த்தேன். இன்று என் தாயை நீ அவமானம் செய்தாய்! உன் ரா லக்ஷ்மியை நாட்டைவிட்டு ஓட்டினுய். நானும் உன்வேலையை இதோ விட்டேன். என் தாய்க்குப் பணிவிடை செய்து வாழ்வைக் கடத்துவேன். பிச்சையெடுத்தாகிலும் உண் பேனே தவிர, உன் அரண்மனைப் படியையும் மிதிக்கமாட டேன்" என்ருன். "வா, அம்மா! சீக்கிரம் வா. ஒரு கணமும் இங்கே நிற்கவேண்டாம்" என்று அவன் விபாவை தூக்கி, வாயிலில் நின்ற பல்லக்கு ஒன்றில் வை அப்படியே தோணிக்கு அழைத்துவந்தான்.

விபா உதயனுடன் காசிக்குச் சென்ருள். அ தானம், தியானம், தெய்வ பூஜை, அண்ணனுக்கும் அ களுக்கும் பணிவிடை முதலியன செய்து தன் மிகுதி களைக்கழித்தாள். ராமமோகனனும் சாகும்வரையில் அ களுடனேயே இருந்தான். சீதாராமன் தன் குடும்பத்துட உதயனிடம் வந்து சேர்ந்தான்.

சந்திரத்வீபத்தில் விபாவின் தோணி வந்து நின் துறைக்கு இன்றும் அவள் பெயர் நிலைத்திருக்கிறது.

முற்றும்

மறைமலை ... அவ்வை